ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 1 நவம்பர் 1937 கதிர் 4

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	தலையங்கம்	1
வந்தே மாதரம் என்றால் என்ன?	ராமேச நாத் கௌதமர் B. A.,	9
பிரிட்டன் தேசீய கீதம்	—	11
பிரெஞ்சு தேசீய கீதம்	—	12
வந்தே மாதர கீதம்	—	14
அமெரிக்க தேசீய கீதம்	—	16
உலகத்திலே என்ன நடக்கிறது?	(கார்ட்டூன்கள்)	18
சரஸ்வதி பவனம்	கே. வி. ரங்கசாமி ஐயங்கார் M. A., (ராவ்பஹதூர்)	22
அறிவும் நூல்களும்	எஸ். முத்து வீரப்பன் B.A.,	25
புதுவை ஆனந்தரங்க பிள்ளை	எஸ். சோமசுந்தர தேசிகர் (இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை)	29
கண்ணீர் விட்டுக்கதறும் கைம்பெண்கள் எத்தனை பேர்?	(ஸ்டேட்மெண்டு)	33
பத்ருத்தீன் தையாப்ஜி	"ஒரு காங்கிரஸ் வாதி"	34
விடுதலை—ஆனால் கட்டுப் பட்டேன்	"தேவ கவி"	37
சினிமா உலகில் புரட்சி	நமது ஹாலிவுட் நிருபர்	38

பள்ளிக் கூடங்களில் சினிமாக்கள்	—	43
பால் ம்யூனி யார்?	—	44
புதிய கல்வித் திட்டம்	மனு சுபேதார் B.A., B. Sc. (Lond) Bar-at-Law	45
கோரியா தேசத்தின் அரசியல் நிலைமை	செயுங்-ஹ்வா-ஆஹ்ன் (Seung-Hwa-Ahn)	49
கனகாவின் கடிதங்கள்	"சரசா"	52
பர்மாவை ஆண்ட முக்கிய அரசர்கள்	கு. கோ. கிருஷ்ணன் B. Sc., (Hons)	54
அசோகன் சாஸனங்கள்	"மௌனக்கல்யன்"	58
வீரப் பெண்மணியின் வீர வாசகம்	—	59
ஹமாரே பாத்ஷா ஹை!	ரா. பத்மநாப ராஜு	60
இங்கிலீஷ் தெரிந்தவர்கள்—சுதேச பாஷைகள் பேசுவோர் (ஸ்டேட்மெண்டு)		62
ஆபிரகாம் லிங்கன்	எஸ். குஞ்சிதபாதம் B. A., L. T.,	63
சரியான தீர்ப்பு	ஒரு சிறு கதை	73
இப்படியும் நடக்குமா?	—	75
நமது நிருபர்களுடன்—	—	77
சங்கீதத்தின் வளர்ச்சி— மோகலாயர்கள் காலத்தில்	"பாணன்"	79
கொடுக்கிறவனே வாழ்கிறவன்	வெங்கைக் கிழான்	81
வாயு மண்டலம்	"விஞ்ஞான போதகர்"	82
சமஷ்டி அரசியல் என்றால் என்ன?	கே. வி. ராமசுப்ரமணியம் B. A., B. L.,	89
எதியோப்பியா—இத்தாலிய ஆக்ரமிப்புக்குப் பிறகு	எல். பாரகோ (S. P. M.)	92
அன்றாட உலகம்	—	95
காதலா? வீரமா?—ஸதி சிந்தா	எஸ். மங்களம்மாள்	99

			[illegible] ஸ்பெயினிடமிருந்து ஜமைகா கைப்பற்றப்பட்டது. வட அமெரிக்காவின் அருகிலுள்ள மேரிலண்ட் என்ற பிரதேசம் பால்டிமோர் என்பவருக்கு மானியமாக அளிக்கப்பட்டது. பசிபிக் சமுத்திரத்திலுள்ள [illegible] கண்டுபிடிக்கப்பட்டது. காதரைன் அரசியின் சீதனப் பொருளாக பம்பாய் ஆங்கிலேயருக்குக் கிடைத்தது. 1639ம் வருஷம் சென்னப்ப நாயக்கனிடமிருந்து சென்னைத் துறைமுகம் தரும சாஸனமாகப் பெற்றது. டச்சுக்காரரிடமிருந்து நியு யார்க் பிரதேசம் கைப்பற்றிக்கொள்ளப்பட்டது. மேற்கிந்தியத் தீவுகளில் சில பிரதேசங்களை, ஆங்கிலேயர், டச்சுக்காரருக்கு விட்டுக் கொடுக்கவேண்டியதாயிற்று.	[illegible] ஸ்பெயின் தேசத்தாரிடமிருந்து [illegible] பிரதேசத்தைக் கைப்பற்றிக்கொண்டான். பின் பிரெஞ்சுக்காரர் இங்கு குடியேறினர். இங்கே நியு ஆம்ஸ்டர்டாம் என்ற நகரம் ஸ்தாபிக்கப்பட்டது.	[illegible] குடியேறினர். [illegible] பிரதேசத்தை அபிவிருத்தி செய்தனர். 1632ம் வருஷத்தில் டச்சுக்காரர் நதிக்கரையின்மீது நியு ஆம்ஸ்டர்டாம் என்ற பெயருடன் ஒரு நகரை ஸ்தாபித்திருந்தனர். (இதுவே தற்போது நியு யார்க் என்று வழங்கப்படுகிறது.) 1664ம் வருஷம் இது ஆங்கிலேயர் வசமாயிற்று. 1652ம் வருஷம் கேப் காலனியில் குடியேற்றம்.			
1700 வருஷத்திலிருந்து	ஆப்ரிக்கா கண்டத்தில் போர்த்துகேசியரின் அதிகமான குடியேற்றம்.		1795ம் வருஷம் டச்சுக்காரர் வசமிருந்து கேப்காலனி கைப்பற்றப்பட்டது. பிரெஞ்சுக்காரரிடமிருந்து கனடா கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. இந்தியாவில் பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் போராட்டம். ஆங்கிலேயரின் வெற்றி. பல பிரதேசங்களில் ஆங்கிலேயர் ஆட்சி பரவுதல். 1704ம் வருஷம் ஸ்பெயின் வசமிருந்து ஜிப்ரால்டர் துறைமுகம் கைப்பற்றப்பட்டது. டிரினிடாட்டும் மேற்கிந்தியத் தீவுகளும் பிரிட்டிஷார் வசமாயின. டச்சுக்காரரிடமிருந்து மலேயா தீபகற்பம் கைப்பற்றப்பட்டது. அமெரிக்காவில் குடியேறியிருந்தவர்கள், இங்கிலாந்துக்கு விரோதமாகக் கலகம் கிளப்பினர். 1783ம் வருஷம் அமெரிக்கா ஐக்கிய மாகாணம் ஸ்தாபிதமாயிற்று. ஆஸ்திரேலியாவும் நியுஜிலந்தும் கண்டுபிடிக்கப்பட்டன.	1721ம் வருஷம், மோரீசு தீவு கைப்பற்றப்பட்டது. நெப்போலியனுடைய படையெடுப்பு காரணமாக தனக்குச் சொந்தமாயிருந்த குடியேற்ற நாடுகள் பலவற்றை பிரான்ஸ் இழந்துவிட்டது. 1783ம் ஆண்டு அமெரிக்கா சுதந்திரப் போராட்டத்தின் விளைவாக, ஃபுளோரிடாவை, ஸ்பெயினுக்குக் கொடுத்து விட்டது. எனவே, இது முதல் வட அமெரிக்காவில் பிரான்ஸுக்குச் சொந்தமான பிரதேசம் ஒன்றுமே இல்லாமல் போய் விட்டது.	கேப் காலனி, மலேயா தீபகற்பம் முதலிய வற்றை இழந்து விட்டது.			
1800 வருஷத்திலிருந்து	ஆப்ரிக்காவின் வட பாகத்திலும், கிழக்குப் பாகத்திலும் ஜாம்பெஸி நதிக்கரையோரமாயுள்ள பிரதேசங்களிலும் இன்னும் போர்த்துகேசியர் ஆதிக்கம் இருக்கிறது. அப்படியே மேற்கு ஆப்ரிக்காவிலும் காங்கோவிலும் இதன் ஆதிக்கம் இருந்துவருகிறது.	முக்கியமான எல்லாக் குடியேற்ற நாடுகளும் கைவிட்டுப் போயின. அமெரிக்காவில் க்யூபாவும், போர்டோ ரிகோவும், மேற்கு ஆப்ரிக்காவின் இரண்டொரு குடியேற்ற நாடுகளும் பாக்கியிருந்தன. 1898ம் வருஷம் அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தோடு யுத்தம் தொடுத்ததன் பயனாக, ஸ்பெயின் எல்லாக் குடியேற்ற நாடுகளையும் இழந்து விட்டது.	ஆப்ரிக்காவின் உட் பிரதேசங்களில் பல யாத்திரை கோஷ்டியினர் சென்று பார்த்தனர், நைல் நதியின் ஆரம்பமும் பெரிய ஏரிகள் இடமும் கண்டுபிடிக்கப்பட்டன. கிழக்கு ஆப்ரிக்காவில் தங்களுக்குச் சொந்தமாயிருந்த நகரங்கள் முதலியவற்றைப் டச்சுக்காரருக்குக் கொடுத்துவிட்டு டச்சுக்காரருக்குச் சொந்தமான மேற்கு ஆப்ரிக்காவிலிருந்த நகரங்கள் முதலியவற்றை ஆங்கிலேயர் எடுத்துக் கொண்டனர். இந்தியாவின், மத்திய மாகாணம், சிந்து, பஞ்சாப் ஆகிய பிரதேசங்களில் பிரிட்டிஷார் ஆதிக்கம் பரவியது. பர்மா கைப்பற்றப்பட்டது. ஸிங்கப்பூர் விலைகொடுத்து வாங்கப்பட்டது. ஹாங்காங், சேர்த்துக்கொள்ளப்பட்டது. விக்டோரியா மகாராணி, இந்தியாவின் சக்ரவர்த்தினி என்ற பட்டம் சூட்டிக் கொண்டது. 1894ம் வருஷம் உகாண்டாவின் ஆதிக்கம். 1896ம் வருஷத்தில் நைஜீரியா பிரதேசத்தை அரசாங்க ஸ்வாதீனத்திற்குக் கொண்டுவந்தது. தென் ஆப்ரிக்காவில் நேடால், நாடேல், [illegible], பெசுனலாண்ட் முதலியவை சேர்த்துக்கொள்ளப்பட்டன. 1839ம் வருஷம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தோடு சேர்த்துக் கொள்ளப்பட்ட நியுஜிலந்தில் ஆங்கிலேயர் அதிகமாகக் குடியேறினர்.	வட ஆப்ரிக்காவிலுள்ள அல்ஜீரியா வெற்றி கொள்ளப்பட்டது. 1848ம் வருஷத்தில் மேற்படி பிரதேசத்தில் பூரண ஆதிக்கம். அன்னாமில் ஒருபாகமும் டோங்கிங் என்ற பிரதேசமும் பிரான்சுக்குச் சுவாதீனமாயின. ஆப்ரிக்காவில் டூனிஸ், அல்ஜீரியா மொராக்கோ முதலிய பிரதேசங்களில் பிரான்ஸின் பூரண ஆதிக்கம்.		1884ம் வருஷம் தென்மேற்கு ஆப்ரிக்காவில் வியாபாரக் கம்பெனிகள் பல ஸ்தாபிக்கப் பெற்றன. பின்னர், இவை அரசாங்கத்துடன் இணைக்கப்பெற்றன. உடன்படிக்கையின் மூலமாக 1890ம் வருஷம் கிழக்கு ஆப்ரிக்காவில் சில பிரதேசங்கள் ஜெர்மனிக்குச் சொந்தமாயின. மேற்கு ஆப்ரிக்காவில் உள்ள டோகோலாண்ட், காமரூன் முதலியவை ஜெர்மனிக்குச் சொந்தமாயின. பின்னர் ஹெலிகோலண்டை கைப்பற்றப்பட்டது. ஸ்பெயினிடமிருந்து கரோலின், மரியானா தீவுகள் முதலியன வாங்கப்பெற்றன.	சுமார் 1880ம் வருஷத்தில், ஆப்ரிக்காவிலுள்ள சோமாலிலாண்டைக் கைப்பற்றிக்கொண்டது. 1912ம் வருஷம் துருக்கியிடமிருந்து டிரிபோலி கைப்பற்றப் பெற்றது. 1936ம் வருஷம் அபிஸீனியா, வெற்றி கொள்ளப்பட்டு இத்தாலிய ஏகாதிபத்தியத்துடன் சேர்த்துக்கொள்ளப் பெற்றது.	காங்கோ பிரதேசம் பெல்ஜியத்தின் பாதுகாப்புக்கு உட்படுத்தப்பெற்றது.


ஜோதி
நவம்பர்
1937

ஜோதி

சுடர் 1 நவம்பர் 1937. கதிர் 4



வந்தே மாதரம்!

ஒவ்வொரு நாட்டிற்கும் தேசியகீதம் என்பதொன்றுண்டு. அஃது, அந்தந்த நாட்டு ஜனங்களின் மனப் பான்மைக்குத் தகுந்த படியும், அவர்களின் அபிலாஷைகளுக்கு ஒரு கண்ணாடியாகவும் அமைந்திருக்கும். இந்தத் தேசீய கீத மொன்றைக் கொண்டே ஒரு நாட்டார், சரித்திரத்தில் எத்தனை மேடு பள்ளங்களைத் தாண்டியிருக்கின்றனர் என்பதை நாம் ஒருவாறு திட்டப் படுத்திக் கொள்ளலாம். ஜனங்களுடைய உணர்ச்சிகளின் பிரதி பிம்பமாகவே இந்தக் கீதம் பொதுவாக அமைக்கப் படும். இதனாலேயே, இதற்கு ஒரு தெய்வ சந்நிதானத்தில் காட்டப் பட வேண்டிய மரியாதை காட்டப் படுகிறது. தேசத்திற்குப் பொதுவான காரியங்களைச் சுபமாகத் தொடங்கு முன்னரோ, அல்லது வெற்றி கரமாக முடிந்த பிறகோ இதனை அனைவரும் ஏகோபித்துப் பாடுவது எந்த நாட்டிலும் வழக்கம். தேசிய கீதம் என்று எப்படி ஒவ்வொரு நாடும் ஒவ்வொன்றை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறதோ அப்படியே, அந்தந்த நாடும் தனக்கென்று தேசியக் கொடி என்றும், தேசீய உடையென்றும், தேசீய புஷ்பமென்றும். பலபட வகுத்துக் கொண்டிருக்கிறது. இந்த மாதிரி யெல்லாம் நமது தாய் நாட்டில் இன்னும் ஏற்படவில்லை. அப்படி ஏற்படமுடியாதென்றும், ஏனென்றால் நமது நாடு பல பிரிவினர் அடங்கியுள்ள ஒரு கண்டமென்றும், எல்லாருடைய இதயத்தையும் ஒன்று படுத்தக் கூடிய ஒரு தேசிய கீதத்தையோ, தேசீயக் கொடியையோ காணமுடியாதென்றும் என்னென்னவோ சொல்லி, தேசீய சுதந்திர மென்கிற ஒற்றுமையும் உணர்ச்சியும் நிரம்பிய சிகரத்தினின்று சறுக்கி விழுந்துவிடுகிறோம். இப்படி விழாமல் தடுத்துக் கொள்வதற்கான முயற்சிகளில் நாம் இப்பொழுது ஈடுபட்டிருக்கிறோம். இந்தச் சந்தர்ப்பத்தில், நமது முஸல்மான் சகோதரர்கள், ஒருவர் காலை மற்றொருவர் பற்றி இழுக்கிற மாதிரி நடந்து கொள்வது பெரிதும் வருந்துதற்குரியது. இதைவிடக் கடினமான பாஷையை நாம் உபயோகிக்க விரும்பவில்லை.

வந்தே மாதர கீதத்தைப் பற்றி நமது இஸ்லாமிய சகோதரர்கள் இப்பொழுது ஒரு பெரிய புயற் காற்றைக் கிளப்பி யிருக்கிறார்கள். இந்தக் கீதமானது சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்னர், வங்க இலக்கிய மறுமலர்ச்சி வானத்தின் உதய தாரகையெனப் பிரகாசித்த பங்கிம் சந்திர சட்டர்ஜியால் பாடப் பட்டது. அது முதல் இந்தியாவின் மூலை முடுக்குகளில் நடை பெறும் எல்லாத் தேசியக் கூட்டங்களிலும் இது பாடப் பட்டு வருகிறது. இதைப் பற்றி இது வரை யாரும் எவ்வித ஆட்சேபத்தையும் கிளப்ப வில்லை. கிலாபத் கிளர்ச்சி மும்முரமாக நடந்த காலத்தில், ஹிந்துக்களும் முஸ்லீம்களும் சேர்ந்து நடத்திய எல்லாப் பொதுக் கூட்டங்களிலும் இந்த வந்தே மாதர கீதத்தை அனைவரும் மனமுவந்து தான் பாடினார்கள். 'அல்லா ஹூ அக்பர்' என்ற வீர வாசகத்தை எப்படி ஹிந்துக்கள் மனப் பூர்வமாகக் கூறினார்களோ, அப்படியே நமது முஸ்லீம் சகோதரர்களும் வந்தே மாதரம் என்கிற திருவாசகத்தை இதயத்திலிருந்து சொன்னார்கள். இப்படியெல்லாம் இருக்க, இப்பொழுது திடீரென்று இந்தக் கீதத்தில் ஏதோ ஆபத்திருப்பதாக நமது முஸ்லீம் சகோதரர்கள் மருள்வது ஆச்சரியமாயிருக்கிறது.

இந்தியாவிற் கென்று தனியான ஒரு தேசிய கீதம் இன்னும் வகுக்கப் படவில்லை யென்று இவர்கள் சொல்கிறார்கள். இதனை நாம் மறுக்கவில்லை. அப்படி வகுத்துக் கொள்ளக் கூடிய ஓர் அந்தஸ்தையும் நாம் அடையவில்லை. அதற்கான வழிகளைத்தான் தேடிக்கொண் டிருக்கிறோம். ஆனால் சென்ற ஐம்பது வருஷங்களாக, இந்த வந்தேமாதர கீதத்தையே தேசிய கீதமாக உபயோகித்து வருகிறோம். இது ஒரு சம்பிரதாயமாகவே நடந்து வருகிறது. இந்தச் சம்பிரதாயத்திற்காவது நாம் மரியாதை செலுத்தக் கூடாதா? புதிதான ஒரு தேசிய கீதம் நிர்ணயிக்கப் படுகிற வரை இதனை உபயோகித்து வருவதில் என்ன தடை இருக்கிறது? தவிர, சம்பிரதாயமாகப் பாடிவரும் ஒரு தேசிய கீதத்தையே பின்னடி உத்தியோக முறையில் ஏற்றுக்கொள்ள முடியாதா? ஏற்றுக்கொள்ளக் கூடாதா? உதாரணமாக, அமெரிக்காவின் தேசீய கீதம் இன்னதாகா மென்று 3-3-1931-ல் கூடிய அமெரிக்கன் காங்கிரஸில்தான் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் புதிய கீத மொன்றையும் அது சிருஷ்டி செய்துவிட வில்லை. அநேக வருஷங்களாகத் தேசீய கீத மென்று சம்பிரதாயமாகப் பாடிவந்த ஒன்றையே, உத்தியோக முறையில் ஏற்றுக்கொண்டது. அதுபோல், இந்த வந்தேமாதர கீதமும், பின்னடி உத்தியோக முறையில் ஏற்றுக் கொள்ளப்படலாகாதா? அதுவரை இதனையே தேசீய கீதமாகக் கொள்வதில் என்ன ஆட்சேபம்?

சில நாட்டுத் தேசீய கீதங்களில் வன்ம புத்தியும், தன் முனைப்பும், பிறர் அழிய நாம் வாழ வேண்டு மென்ற குறுகிய மனப் போக்கும், இன்னோரன்ன உணர்ச்சிகள் பிரதிபலிக்கும். அந்தந்த நாட்டுத் தேசீய கீதங்கள் எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பதை நமது வாசகர்கள் நேர்முகமாகத் தெரிந்து கொள்ள வேண்டு மென்பதற்காகவே, எல்லா நாடுகளிலும் பாடப்பெற்று வருகிற தேசீய கீதங்களின் ஆங்கில வாசகத்தையும் அதற்குச் சரியான தமிழ் வாசகத்தையும் தொடர்ந்து "ஜோதி"

யில் வெளியிடத் தீர்மானித்துள்ளோம். இந்தக் கதிரில் இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளின் தேசிய கீதங்களையும், அவற்றிற்கடுத்தாற்போல் வந்தே மாதர கீதத்தின் வாசகங்களையும் வரிசையாக வெளியிட்டிருக்கிறோம். இவற்றில் ஒன்றோடொன்றைச் சீர் தூக்கிப் பார்க்கிறபோது, வந்தேமாதர கீதத்தில், தெய்விக சக்தியும் மனிதத் தன்மையும் நிரம்பி யிருக்கின்றன வென்பதை அதனை ஊடுருவிப் பாராமலே மேற்போக்காகவே நாம் தெரிந்துகொள்ளலாம். இந்தக் கீதத்தில், பாரத நாட்டை, பிரகிருதி தேவதையாக வர்ணித்து, அப்படிப்பட்ட தேவியை வணங்குகிறோம் என்றுதான் சொல்லி யிருக்கிறதே தவிர, யாருடைய மனமும் புண்படக் கூடியமாதிரி ஒரு வார்த்தையும் இல்லையே. அப்படி யிருக்க ஏன் ஆட்சேபம்?

பிரார்த்தனை காலத்தில் ஏற்படுகிற உணர்ச்சி பாவங்கள், இந்த வந்தே மாதர கீதத்தைப் பாடுகிறபோது ஏற்படவில்லை யென்று ஒரு சிலர் கூறுகின்றனர். அப்படி எந்த விதமான உணர்ச்சி பாவங்களும் இதில் இல்லையென்றால், சென்ற ஐம்பது வருஷ காலமாக, இஃது இந்தியா வெங்கணும் பாடப்பட்டு வந்திருக்குமா? தமிழ் நாட்டில் எத்தனையோ கவிஞர்கள், தேசீய சம்பந்தமாகப் பல கவிகள் இயற்றி யிருக்கிறார்கள். ஆனால் பாரதியாரின் பாடல்கள் பரவி யிருப்பதைப்போல் மற்றவை பரவி யிருக்கின்றனவா? ஏன்? பாரதியாரின் பாக்களில் உணர்ச்சியும் உத்வேகமும் நிரம்பி யிருப்பதே இதற்குக் காரணம். அதனால்தான் எளிதில் எல்லா ஜனங்களுடைய மனதிலும் அவை பதிகின்றன. பங்கிம் சந்திரருடைய வந்தே மாதர கீதத்தில், இந்தத் தன்மை நிரம்பி யிருப்பதை நாம் நன்றாகக் காண்கிறோம்.

எந்த முகமாக, இந்த வந்தேமாதர கீதத்தை நாம் அலசிப் பார்த்தாலுங்கூட, அதில் எவ்வித தோஷமும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த நிலையில் நமது முஸ்லீம் சகோதரர்கள், அநாவசியமான ஆட்சேபங்களைக் கிளப்பிக்கொண் டிருப்பது, அந்நியருடைய பரிகாசத்திற்கு நம்மை ஆளாக்கிக் கொள்வதேயாகும்.

ஹிட்லரா?

வாழ்விலே தாழ்வு ஏற்படுவது சகஜம். ஆனால் அந்தத் தாழ்விலேயும், நாம் வாழ வேண்டுமென்ற எண்ணம் நமது சிந்தையை அலைத்துக் கொண்டிருக்க வேண்டாமா? அதற்காக எல்லா முட்டுப்பாடுகளையும் நாம் சமாளித்துக் கொள்ளவேண்டும். அப்படி சமாளித்துக் கொள்வதிலே ஓர் இன்பங்கூட இருக்கிறது. ஏன்? இந்தத் தாழ்விலிருந்து வாழ்வுப் படிக்கு ஏறப்போகிறோ மென்ற எண்ணமொன்றே, நமது தற்போதைய நிலைமை மறக்கடிக்கச் செய்து, நம்மையும் நிமிர்ந்து பார்க்கச் செய்கிறது. 'இன்பத்திலே இன்பம் இல்லை. இன்பத்தினை நுகர்வதற்காக நாம் செய்யும் முயற்சியிலேதான் இன்பம் இருக்கிறது' என்கிறான் ஓர் அறிஞன். இவை, வெறும் ஏட்டிலே படித்து மகிழ்வதற்குரிய வாசகங்களல்ல; அநுபவ சாத்தியமானவை.

தாழ்விலே வாழ்வு காணவேண்டிய நிலையில் இப்பொழுது நாம் இருக்கிறோம். அதற்காகவேதான், காங்கிரஸ் வாதிகளாகிய நாம் அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக் கொண்டிருக்

கிறோம். இதனையே ஒரு லட்சியமாக நாம் கொள்ளவில்லை. லட்சியத்தை அடைவதற்கு இதொரு சாதனந்தான். இந்தச் சாதனத்தை—அது எவ்வளவு சொள்ளையாயிருந்த போதிலும்—ஒழுங்காக உபயோகிப்பதில் நமது கவனத்தையெல்லாம் செலவழித்துக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், நமது மந்திரிகளைப் பற்றிச்சிலர், அதுவும் நமது தமிழ்நாட்டில், பொறுப்பின்றிப் பேசிக்கொண்டிருப்பதை நாம் சகிக்க முடியாது. நமது பிரதம மந்திரி ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரை, ஹிட்லர் என்றும், சர்வாதிகாரி போல் காரியாதிகளை நடத்துகிறாரென்றும் சிலர் கூறுகின்றனர். வக்கீல்களை இவர் ஏதோ தாழ்வாகப் பேசினாரென்று சில வக்கீல்கள் இவர் மீது வசை புராணம் பாட ஆரம்பித்திருக்கிறார்கள். போதாக் குறைக்கு, ஹிந்தி-தமிழ் சச்சரவு. இவர்களில் ஒவ்வொரு பிரிவினரும், தத்தம் குறுகிய எல்லைக்குள்ளிருந்து, சென்னை மந்திரிசபையாரின் செயல்களைக்கண்டு அலமருகின்றனர். தேசநன்மையை நாடிச்சிலகாரியங்களைச் செய்கிற போது, ஒரு சிலருக்கு அசௌகரியங்கள் ஏற்படத்தான் செய்யும். இதற்காக, மேற்படி காரியங்களைச் செய்கிறவர்களுடைய நோக்கத்தைத் திரித்துக் கூறுவது தருமமாகாது. நியாயந் தெரிந்தவர்கள் என்று பொது ஜனங்களால் கருதப்படுகிற வக்கீல்கள், தங்களுக்குச் சொல்லப்பட்ட சில நியாயமான யோசனைகளைக் கண்டு வெகுள்கின்றனர். பொது ஜனங்களின் பணத்தை அதிகமாகச் சுரண்ட வேண்டாம் என்னும் கருத்துப் பட ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் சொன்னதில் என்ன தவறு இருக்கிறதென்பது நமக்குப் புலப்படவில்லை. இன்னும் கடுமையான பாஷைகளை அவர் உபயோகிக்கவில்லையென்பதுதான் நமது குறை. ஸ்ரீ ஆச்சாரியார் திறமையான ஒரு வக்கீல். அந்தத் தொழிலில் ஏராளமான பொருள் சம்பாதித்தவர். அவர் சொன்னவை யாவும் அநுபவ உண்மை. அப்படியிருக்க, வக்கீல்கள் முகம் ஏன் சிவக்க வேண்டும்?

நல்ல பரிசு

காசி ஹிந்து சர்வ கலாசாலையைச் சேர்ந்த பெண்கள் கல்லூரியில் படிக்கிற, எல்லா வகைகளிலும் மற்றவர்களுக்கு வழி காட்டியாயிருக்கிற ஒரு ஹிந்து பெண்ணுக்கு ஒவ்வொரு வருஷமும் ஒரு தங்கப் பதக்கம் கொடுக்கப் படுமென்று ஸ்ரீ விரஜ நந்தன் பிரசாத் என்ற ஒரு வக்கீல், மேற்படி சர்வகலாசாலைக்கு ஆயிரம் ரூபாய் நன்கொடையாக அளித்திருக்கிறார். இதற்கு 'ஆரிய ஆதர்ச மஹிளா பதக்கம்' என்று பெயர். மேற்பார்வைக்கு இந்தப் பரிசும் இந்த நன்கொடையும் மிகச் சிறியதாக இருந்த போதிலும் இதில் ஆழ்ந்த தத்துவம் இருக்கிறதென்று நாம் கருதுகிறோம். மேனாட்டு நாகரிக மோகவலையில் ஆண்கள் விழுந்து சிக்கித் தவிப்பதை உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்தியாவுக்கு இன்னும் கொஞ்சம் நஞ்சம் வெளியுலகத்தாரிடையே மரியாதை இருக்கிறதென்றால் அதற்கு நமது சகோதரிகளின் தூய்மையான வாழ்க்கைதான் காரணம். இவர்களும் ஆண்களைப் போல் சிக்கிக் கொள்ளாமல் எச்சரிக்கையுடன் இருந்து கொள்வதற்காகவே ஸ்ரீ பிரசாதர் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார் என்று நாம் கொள்வோம். இதே மாதிரி பல இடங்களிலும் பரிசுகள் வழங்கப் பட வேண்டுமென்பது நமது விருப்பம்.

பரஸ்பரந்தானே!

முஸோலினிக்கும், ஹிட்லருக்கும், ஸ்பெயின் கலகப் படைத்தலைவனை தளபதி பிராங்கோ, 'கிராண்ட் நைட் அண்ட் தி காலர் ஆப் தி கிராண்ட் இம்பீரியல் ஆர்டர் ஆப் தி ரெட் ஆரோஸ்' (Grand Knight and the collar of the Grand Imperial order of the Red Arrows) என்ற கௌரவப் பட்டத்தை வழங்கியிருக்கிறான். பாசிஸமானது, பல முகங்களெடுத்து ஒன்றன் தலையை மற்றொன்று பரஸ்பரம் தடவிக் கொள்ள வேண்டியது தானே.

ஒழிய வேண்டும்.

பெண்களைக் கோயில்களுக்குப் பொட்டுக் கட்டி விடுகிற வழக்கம் இடைக் காலத்தில் ஏற்பட்டது. உலக வாழ்க்கையில் மனம் வையாது, துறவு நிலையில் ஆண்டவன் சந்நிதானத்திலேயே இருந்து அவனுக்குத்தொண்டு செய்த வண்ணம், அங்குக்கிடைக்கும் நிவேதனப்பொருள்களை உண்டு, காலங் கழிக்கும் பெண்களே தேவ தாசிகளாவார்கள். ஆனால் இந்த நோக்கம் அடியோடு போய்விட்டது. இப்பொழுதுள்ள தேவதாசி முறையானது, மானத்தை விற்கும் ஒரு தொழில் துறையாக அமைந்துவிட்டது. இதைச் சட்ட பூர்வமாக நிறுத்த வேண்டியது, காங்கிரஸ் மந்திரிகளின் முக்கிய கடமையாகும். ஸ்ரீ முத்துலட்சுமி ரெட்டி அவர்கள், சென்னைச் சட்ட சபையில் முன்னம் கொண்டு வந்த தேவ தாசித் தடுப்பு மசோதாவை உடனே அவசியமான திருத்தங்களுடன் சட்டமாகக் கொண்டு வர வேண்டுவது முக்கியம்.

வழி காட்டிகள்

காந்தியடிகள் தமது 'ஹரிஜன்' பத்திரிகையில் இப்பொழுது, காங்கிரஸ் மந்திரிகள் செய்ய வேண்டிய நிர்மாண வேலைகளைப் பற்றியே அடிக்கடி வற்புறுத்தி எழுதிக் கொண்டு வருகிறார். பீஹார்—ஒரிஸா மாகாணங்களில், வெள்ளப் பாழினின்று தங்களைக் காத்துக் கொள்ளும் பொருட்டு, ஜனங்கள் ஏதேனும் ஒரு தொழிலைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்றும், உழைப்பிலே இழிவில்லையென்றும், இதற்கு மந்திரிகள் வழி காட்டியா யிருக்க வேண்டுமென்றும் சொல்கிறார்.

> "கைப் பாடு பட்டு வேலை செய்வது கௌரவம் என்பதை முதலில் கற்றுக் கொள்ள வேண்டும். மந்திரிகள் தினந் தோறும் சிறிது நேரம் தங்கள் சட்டைகளைக் கழற்றி விட்டு, சாதாரண தொழிலாளர்களைப்போல வேலை செய்யட்டும். இது மற்றவர்களுக்கும் உற்சாகமா யிருக்கும்; தொழிலிலே இழிவில்லை யென்பதையும் ஜனங்கள் உணர்ந்து கொள்வார்கள்."

இந்த வாக்கியங்களை எல்லா மந்திரிமார்களுடைய கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறோம். முஸோலினி, தொழிலின் கௌரவத்தைக் காண்பிக்கும் பொருட்டு, அடிக்கடி விவசாயியைப்போல் கதிர் அறுப்பான்; கட்டை வெட்டுவான்; பல ஜோலிகளுக்கிடையே இதனையும் ஒரு முக்கிய அலுவலாகக் கொண்டிருக்கிறான். துருக்கி சர்வாதிகாரியான கமால் அதாதுருக், துருக்கிய பாஷையைச் சீர் திருத்துகிற முயற்சியில் ஈடுபட்டிருந்த போது, தானே ஒவ்வொரு கிராமத்திற்கும் கரும் பலகையுடனும் சாக்குக் கட்டியுடனும் சென்று ஆசிரியனாய் வேலை செய்திருக்கிறான். இவர்கள் அனைவரும் தொழிலில் இழிவில்லையென்னும் பாடத்தைத் தாங்களே ஜனங்களுக்குப் புகட்டினார்கள். நமது மந்திரிகளும் அந்த வழியைப் பின் பற்றல் நலம்.

என்ன செய்கிறது?

காங்கிரஸ் மந்திரிமார்கள் அந்தந்த மாகாணங்களில் சுறு சுறுப்பாக வேலை செய்வதைப் பார்த்து, பர்மாவிலுள்ள மந்திரிமார்கள் தேச நலனை முன்னிட்டு என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற கேள்வி, அடிக்கடி நமது செவிகளை வந்து முட்டுகிறது. பர்மாவில் ஒவ்வொரு மந்திரிக்கும பார்லிமெண்டரி காரியதரிசிகள், நல்ல சம்பளத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். வரி வருமான விஷயத்தைப்பற்றி விசாரிக்க ஒரு கமிட்டி நியமனமாயிருக்கிறது. கிராம நிருவாகத்தைப் பற்றி விசாரிக்க ஒரு கமிட்டி ஏற்பட்டிருக்கிறது. இந்த வேலை போதாதா? ஒரு கால், பர்மா மந்திரி சபையினர் விளம்பரப் பிரியர்களா யில்லாமலிருக்கலாம்; அமைதியாக வேலை செய்வதிலே ஆர்வ முடையவர்களாயிருக்கலாம்! பொறுத்துப் பார்க்கலாமா?

கட்டாயக் கல்வி

1938ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதி முதல், பீஹார் மாகாணத்தில் கட்டாய ஆரம்பக் கல்வி முறையும், தேச பாஷையின் மூலமாகப் பாடங்களைப் போதிக்கிற திட்டமும் அமுலுக்கு வருமென்று அறிந்து மகிழ்கிறோம். இது சம்பந்தமாக ஏற்படும் செலவுகளை அரசாங்கத்தாரே ஏற்றுக் கொள்வர் என்றும் தெரிகிறது. மற்ற மாகாணங்கள் எப்பொழுது இந்த வழியில் அடியெடுத்து வைக்கப் போகின்றன? இன்னும் ஒரு பத்து வருஷத்திற்குள் நமது தேசத்தின் கல்வி முறையையே அடியோடு மாற்றி, தேசீய மணங் கமழச் செய்ய வேண்டு மென்பது நமது பேராவல்.

மீண்டும்

பாலஸ்தீனத்தில் மறுபடியும் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. சில கொலைகளும் நடைபெற்றிருக்கின்றன. அராபியர்கள், பிரிவினையைப் பற்றித் தாங்கள் கொண்டுள்ள அபிப்பிராயத்தைப் பலாத்காரத்தின் மூலமாகவே தெரிவிக்க விரும்புகின்றனர் போலும். இந்த நிலையில், பிரிட்டிஷ் அரசாங்கத்தார், பிரிவினைத் திட்டத்தை நடைமுறையில் கொணர ஏற்பாடுகள் செய்து வருகிறார்களென்று தெரிகிறது. இது அராபியர்களுடைய எதிர்ப்பை அதிகப் படுத்துவதேயாகும். பொது ஜன அபிப்பிராயத்தைத் தழுவி ஒரு காரியத்தைச் செய்தலே ராஜதந்திரமாகும். அதை விடுத்து, காரியத்தைச் செய்து விட்டு, பிறகு அதற்குப் பொது ஜன அபிப்பிராய பலத்தைத் தேடுவது முறையன்று.

மகா நாடுகளில் மோகம்

பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு மகாநாடுகளிலுள்ள மோகம் எப்பொழுதுதான் விடுமோ தெரியவில்லை. மத்தியதரைக்கடல் மகாநாடு முடிந்தது; இப்பொழுது ஒன்பது வல்லரசுகள் மகாநாடு, சீன—ஜப்பான் தகராறைப்பற்றி விசாரிக்கக் கூடுகிறது. சர்வதேச சங்கக் கூட்டமும், தலையிடாத கமிட்டிக் கூட்டமும் கூடிக் கூடிக் கலைவதில் கைக்குவழக்கில்லை. இவற்றினால், உலக நிலையில் ஏதேனும் ஓரளவு மாறுதலாவது ஏற்பட்டிருக்கிறதா வென்று கேட்கிறோம். இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நடந்துகொள்கிற மாதிரிதான் வேடிக்கையா யிருக்கிறது.

"அபிசீனிய யுத்தத்தின்போது, பெரிதாகப்பேசி, சிறிதாக நடத்தையில்

காட்டும் பரிசோதனையைச் செய்து பார்த்தோம். அது பலிக்கவில்லை. மஞ்சூரியா தகராறின்போது, கொஞ்சமாகப் பேசிக் கொஞ்சமாக நடக்கும் பரிசோதனையைச் செய்து பார்த்தோம். பயனில்லை. மேற்கு மத்தியதரைக்கடல் சச்சரவின்போது, சிறிதாகப்பேசி, அதைக் கொஞ்சங்கூட நடவடிக்கையில் கொண்டுவராத பரிசோதனையைச்செய்து பார்த்தோம். அதுவும் பிரயோஜனப் படவில்லை. இந்த மேற்கு மத்தியதரைக்கடல் சச்சரவின்போது, பிரிட்டிஷ் அரசாங்கத்தார் கொஞ்சம் கண்டிப்பாக நடந்துகொண்டிருந்தால், ஐரோப்பிய அரசியல் நிலை இவ்வளவு நெருக்கடியா யிராது'.

இது வெர்னன் பார்ட்லெட் என்ற அறிஞனுடைய கருத்து. இதுதானே உண்மையா யிருக்கிறது.

'ஸ்பெயினில் அந்நியர்களின் தலையீடு, சர்வதேச அமைதிக்குத் தடையா யிருக்கிற தென்பதைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நன்கு உணர்ந்திருக்கின்றனர்'

என்று அந்நிய நாட்டு மந்திரி ஈடன், காமன்ஸ் சபையில் 21-10-37ல் பேசியிருக்கிறார். அப்படியானால், ஸ்பெயினில் அந்நியர் தலையீடு ஏற்படாதபடி இதுவரை பிரிட்டிஷ் அரசாங்கத்தார் என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கின்றனர்? முஸோலினியும் ஹிட்லரும் மிடுக்காகப் பேசியும் காரியங்களைச் சாதித்துக் கொண்டும் வருவதற்கு, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வழ வழப்புக் கொள்கைதானே காரணம்?

தற்போதைய நிலை

ஐரோப்பாவின் அரசியல் நிலை எப்படியிருக்கின்றது என்றால், வல்லரசுகள், ஒரு முகத்தினால் சமாதானம், சகோதரத்துவம், ஒற்றுமைத் திட்டங்கள் என்று என்னென்னவோ பேசுகின்றன. மற்றொரு முகத்தினால் யுத்த தளவாடப்பெருக்கத்திற்கு உத்திரவு கொடுத்துக் கொண்டிருக்கின்றன. சர்வதேச சங்க மென்கிற மரத்தின் மீது ஒவ்வொரு வல்லரசும் ஏறி நின்றுகொண்டு உதட்டிலே சிரிப்பும் உள்ளத்திலே பகைமையுங் கொண்டு பரஸ்பர சந்தேகப்பார்வையோடு பார்க்கின்றன. பாசிஸமும், அபேதவாதமும் ஒன்றுக் கொன்று போட்டியிட்டுக்கொண்டு யாரை யார் முந்துவது என்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன. இதை, பிரிட்டிஷ் ராஜதந்திரம், நடுநிலைமையுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. பாசிஸத்தின் தேவ தூதனைத் தன்னை நியமித்துக் கொண்டிருக்கும் முஸோலினி, போல்ஷ்வெஸ பூச்சாண்டி யென்று அரற்றிக்கொண்டே யிருக்கிறான். போல்ஷ்வெஸத்தின் பிரதிநிதியாகிய ஸ்டாலின், செயல் முறையில் பாசிஸத்தைத் தாக்கிய வண்ணமிருக்கிறான். இவையனைத்தையும் அடுத்த பக்கங்களில் சித்திரித்துக் காட்டியிருக்கிறோம்.

இரண்டு வருஷமா?

சீன ஜப்பானிய யுத்தம் இன்னும் இரண்டு வருஷத்திற்கு மேல் நீடிக்கும் என்று சில யுத்த நிபுணர்கள் கருதுகிறார்கள். நாம் அப்படிக் கருதவில்லை. ஜப்பானின் ஏகாதிபத்திய தேவதை, மெல்லிய பொருளாதார இழையின் மீது நகர்ந்து சென்று கொண்டிருக்கிற போது நீண்ட கால யுத்தத்திற்கு, அது தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கிற தென்ற சொல்லை அப்படியே ஏற்றுக் கொண்டு விடுவதற்கில்லை. தவிர சீனாவில் பலவித உரிமைகளை அநுபவித்துக் கொண்டிருக்கிற அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகள் அதுவரை சும்மாயிருக்குமா வென்

பதாங் கேள்வி. பெல்ஜியத்திலுள்ள ப்ருஸ்ஸெல்ஸ் நகரத்தில் கூடப் போகிற வல்லரசுகள் மகாநாடு என்னதான் செய்துவிடப் போகிறதென்பதை ஆவலுடன் கவனித்துக் கொண்டிருப்போம்.

வாதம்

ஜனாப் ஜின்னா, சிறந்த மனிதர்; பல வருஷகாலமாகத் தேசத் தொண்டில் ஈடுபட்டு உழைக்கிறவர். தேசிய வாதியுங் கூட. ஆனாலும் முஸ்லீம்களனைவரும் இவரை அப்படியே பின்பற்றுகிறார்களென்று சொல்லி விட முடியாதல்லவா? இவர், சிறிது காலமாக, காங்கிரஸை எதிர்த்துப் போராடி வருகிறார். இவரிடத்திலேயிருந்த தேசிய உணர்ச்சியை, சமூக உணர்ச்சி அமுக்கிக் கொண்டிருக்கிறது. இதனால் சில சமயங்களில் பொருத்தமில்லாத வாதங்களைக் கூட இவர் வெளியிட வேண்டியிருக்கிறது. ஒரு சந்தர்ப்பத்தில், இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஒரு கட்சியாகவும், அதனை எதிர்த்து நிற்கும் காங்கிரஸ் ஒரு கட்சியாகவும் இருந்து போராடுகின்றன என்று ராஷ்டிரபதி ஜவஹர் கூறினார். 'அப்படியில்லை; மூன்றாவது கட்சியொன்றிருக்கிறது. அது முஸ்லீம் கட்சி' என்கிறார் ஜனாப் ஜின்னா. இதென்ன வாதமோ நமக்குத் தெரியவில்லை. ஆள்வோர் ஒரு கட்சியென்றும், ஆளப்படுவோர் ஒரு கட்சியென்றும் பொருள்படவே பண்டிதர் கூறினார். இவ்விரண்டில் ஏதாவதொன்றில் முஸ்லீம்கள் சேர்ந்துதானாக வேண்டும். அப்படிச் சேருவது அவர்களுக்குப் பிடிக்காமலிருக்கலாம். ஆனால் பாகுபடுத்திச் சொல்லுகிற முறையில், முஸ்லீம்கள், ஆளப்படுங் கட்சியினராயல்லாது வேறெவ்விதமாயிருத்தல் முடியும்? பொதுவாகவே, இப்பொழுது சில முஸ்லீம் சகோதரர்கள், தேசிய விஷயங்களில் சிறிது பிற்போக்கான மனப்பான்மையையே காட்டி வருகின்றனர் என்பதை வருத்தத்துடன் நாம் தெரிவித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் இந்த நம்பிக்கையற்ற நிலைமையில், ஸர் வாஸிர்ஹஸன் போன்ற தலைவர்கள், முஸ்லீம்கள் அனைவரும் காங்கிரசில் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டுமென்று சொல்வது, ஒரு சூரிய கிரணம்போல் உற்சாகத்தைக் கொடுக்கிறது.

அறிவிப்பு

இந்தியாவிலிருந்து பர்மா பிரிக்கப்பட்டு விட்ட பிறகு, தபால் கட்டணங்களில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றனவென்பதை இந்தியாவிலுள்ள நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தியாவிலிருந்து பர்மாவுக்குத் தபால் எழுதுவதாயிருந்தால், கார்டுக்கு 2 அணா; கவருக்கு $2\frac{1}{2}$ அணா.

—மானேஜர்

வந்தே மாதரம் என்றால் என்ன?

——ராமேச நாத் கௌதமர்
B. A.,

இவர் ஒரு சிறந்த தேச பக்தர். பர்மா மாகாண காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசியாக அரிய தொண்டாற்றி வருகிறார். 'ப்ரஹ்ம தேஷ்' என்ற பத்திரிகையின் ஆசிரியருமாவார்.

பிறரைத் துன்புறுத்த வேண்டுமென்ற எண்ணம் சிறிதுமின்றி, பகைமையின் ரேகை கூட இல்லாமல், ஆனால் ஆனந்தமும் பக்தியும் நிரம்பியதாயுள்ள ஒரு தேசிய கீதம், வந்தேமாதர கீதத்தை விட வேறொன்று இருக்க முடியுமா? இது ஆத்மாவின் சங்கீதம்; ஆனால் இது பிறரைப் பற்றி ஒன்றுமே பாடவில்லை. தான் அடையும் ஆனந்தத்திலேயே மூழ்கி, தான் வணங்கும் தாயைப் போல் தூய தன்மையுடையதாய் இது விளங்குகிறது. மற்றவர்களுடைய தாய்—? அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. அவரவரும் அவரவர் தாயை அவர்கள் மனதுக்கிசைந்தபடி மனப் பூர்வமாகத் தொழ உரிமையுண்டு. பாரத மாதாவை, எப்படி நாம் வந்தேமாதரம் என்ற பாமாலையால் அலங்கரிக்கிறோமோ அப்படியே மற்றவர்களும் தங்கள் தாயை வணங்குவதிலே யாருக்கு என்ன தடை இருக்கிறது?

மற்றவர்களைப் பற்றி நாம் பாடுவதா? பாரத மாதாவின் பக்தன், பிற நாட்டைப் பற்றியோ அதில் வசிக்கும் ஜனங்களைப் பற்றியோ ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. அது அவனுடைய கடமையுமல்ல. நம்மைப் போல் பிறரும் வாழ வேண்டுமென்பதுதான் அவன் நோக்கம். மற்றவர்களுடைய விஷயங்களில் பிரவேசிக்க அவனுக்கு அவகாசமில்லை. 'உங்கள் வழியைப்பார்த்துக் கொண்டு நீங்கள் போங்கள்; நான் என் வழியைப் பார்த்துக் கொண்டு போகிறேன்' என்றுதான் அவன் சொல்கிறான்.

பாரத மாதாவின் உண்மையான மகன் எவனுக்கும் மற்ற நாட்டின் மீதோ அதிலுள்ள மக்களின் மீதோ ஆதிக்கஞ் செலுத்த வேண்டுமென்ற எண்ணம் கிடையாது. மற்றவர்களின் பெருமையைப் பற்றி அவன் கற்பனையில் கூடப் பொறாமை கொள்வதில்லை. அநேக நூற்றாண்டுகளாக இந்த வழக்கத்திலேயேதான் அவன் படிந்து வந்திருக்கிறான். இப்பொழுதும் அப்படியேதான் இருக்கிறான். இனியும் அப்படித்தான் இருப்பான். பாரத மக்களின் இந்த எண்ணந்தான், இந்தியாவுக்குத் தனிப் பெருமையைக் கொடுத்திருக்கிறது. இந்தச் சுபாவந்தான், மேனாடுகளின் ஆசையை இந்தியாவின் மீது திருப்பி விடுகின்றது. மேனாட்டார் நம்மைப் பரிகசிப்பதும் புறக்கணிப்பதுங் கூட இந்தக் காரணத்தினால்தான். ஆனால், பாரத மாதா, மானிட சமூகத்திற்குக் கொடுத்த அரிய நன்கொடை இது வென்று பின்னடித்தான் தெரியவரும்.

வந்தேமாதரம்! இதிலே என்ன சக்தியிருக்கிறது! ஒரு வங்காளி நாவலிலே யதேச்சையாக எழுதப்பட்ட இந்தச் சிறிய பாட்டு, லட்சக்கணக்கான மக்களின் உணர்ச்சியைக் கிளப்பி விட்டிருக்கிறது. இதற்கு முன்னர் பாடப் பெற்ற எந்தக் கீதமேனும் இங்ஙனம் உணர்ச்சியை உண்டு பண்ணியதா? இந்தியாவிலே தான் இங்ஙனம் நடைபெற முடியும். இந்

தியர்களின் மனத்தில் தான் இஃது ஆழமாகப் பதிய முடியும்.

வந்தே மாதர கீதம் இந்தியாவின் தேசிய கீதமாக எப்பொழுதும் ஏற்றுக் கொள்ளப் படவில்லை. அது தேசத்தின் உத்தியோகக் குரல் அல்ல. ஆனால் இந்தப் பாட்டிலே அடங்கியுள்ள உணர்ச்சி பாவங்கள், கவியழகு முதலியன சேர்ந்து, இதனைத் தேசிய கீதமாகவே ஜனங்கள் பாடி வருகிறார்கள்.

இங்ஙனம் பாடுவதற்கும் விக்கிரக ஆராதனைக்கும் என்ன சம்பந்தம்? தாய் நாட்டைத் தாய் என்று சொல்வது விக்கிரக ஆராதனையாகுமா? அப்படியானால் முஸ்லீம், சீக்கியர், யூதர் முதலிய எல்லாருமே விக்கிரக ஆராதனைக் காரர்கள் தான். ஏனென்றால், தனது தாய் நாட்டைப் பற்றிப் பெருமை கொள்ளாத இந்தியன் யார் தான் இருக்க முடியும்?

வந்தே மாதர கீதமானது, விக்கிரக ஆராதனையை ஆதரிக்கிறதென்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறதென்பதை என்னால் கற்பனை கூடச்செய்ய முடியவில்லை. இந்தக் கீதத்தில், துர்க்கையும் கமலையும் போற்றப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் இவ்விரண்டு பெயர்களும், சக்தியையும் செல்வத்தையும் குறிக்கும் பொருள்களாகவே கொள்ளப்பட வேண்டுமென்பதை யாருமே சொல்வார்கள்.

தனது சொந்த நாட்டைத் தாயாகப் போற்றுவது இந்தியாவில்தான் விசேஷம். தாய் என்ற சொல் வாயிலிருந்து உதிக்கிறபோது, சிறந்தவை, நல்லவை முதலியன அனைத்திற்கும் சுட்டுப் பொருளாகவே அது தொனிக்கிறது. தாய்மைக்காக நாம் ஏகாக்கிர சித்தத்துடன் பக்தி செலுத்தவும், அதற்காக எல்லாத் தியாகங்களைச் செய்யவும் தயாராயிருக்கிறோம். மேனாட்டாருக்கு இந்தத் தத்துவமே பிடிபடாது. இந்த மாதா லட்சியத்தை அடிப்படையாகக் கொண்டுதான், வந்தேமாதர கீதமாகிய கட்டிடம் அமைக்கப்பட்டிருக்கிறது.

பிறநாட்டுத்தேசிய கீதங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கிற போது, வந்தே மாதர கீதம் தலை நிமிர்ந்து நிற்கக் கூடிய தன்மையில் அமைந்திருக்கிறதென்பதில் என்ன ஆட்சேபம்?

மற்ற நாட்டாருடைய தேசிய கீதங்களைப் பற்றிக் குறை கூற வேண்டுமென்பது நமது நோக்கமில்லை. ஆனால் அந்தந்த நாட்டிலுள்ள, மனிதத் தன்மை வாய்ந்த பெரியார் அந்தந்த தேசிய கீதங்களில் காணப் பெற்றுள்ள சில அம்சங்களை வெறுக்கவே செய்கின்றனர். அமெரிக்க, பிரெஞ்சு, இத்தாலிய, ஜெர்மானிய தேசிய கீதங்கள் ஒவ்வொன்றையும் நாம் ஆராய்ந்து பார்த்தால், யுத்த வெறி, ரத்தப் பெருக்கு, பழி வாங்கும் எண்ணம் முதலியன நிரம்பி யிருக்கின்றன.

வந்தே மாதர கீதம் ஒரு தேசிய கீதமில்லை யென்றும் இது வங்காளி மொழியில் இயற்றப் பட்டிருக்கிறதென்றும், படியாதவர்கள் கூட அது பயித்துப் பாடுகிற மாதிரி இதன் ராக அமைப்பு இல்லையென்றும் சிலர் கூறலாம். இதே கருத்துக்களை இந்தியாவின் பொதுப் பாஷையாகிய ஹிந்துஸ்தானியில் எல்லாரும் ஏகோபித்துப் பாடக் கூடிய மாதிரியான ராகத்தில் அமைத்துத்தேசிய கீதமாக ஏற்றுக் கொள்ளப் படுகிற வரையில் இந்த வந்தே மாதர கீதத்தை இந்தியாவில் பிறந்த எவனும் இகழாமலிருக்கட்டும். வந்தே மாதரம்! வாழ்க நந்தாய்!

NATIONAL ANTHEM.

God save our gracious king
Long live our noble king
God save the king
Send him victorious
Happy and glorious
Long to reign over us
God save the king.

பிரிட்டன் தேசிய கீதம்.

கருணைசெய் அரசனைக் கடவுள் காக்க
ஞானமார் மன்னன் நாள்பல வாழ்க
அரசன்தன்னை ஆண்டவன் காக்க
வெற்றியும் மகிழ்வும் கீர்த்தியும் மேவி
எம்மை என்றும் ஆள்வதற் காக
அரசன்தன்னை ஆண்டவன் காக்க.

MARSEILLAISE HYMN

Ye sons of France, awake to glory!
Hark! hark! what myriads bid you rise!
Your children, wives and grandsires hoary,
Behold their tears and hear their cries!
Behold their tears and hear their cries!
Shall hateful tyrants, mischief breeding,
With hireling hosts, a ruffian band,
Afright and desolate the land,
While peace and liberty lie bleeding?

CHORUS

To arms, to arms, ye brave!
Th'avenging sword unsheathed
March on, march on! all hearts
resolved on victory or death

With luxury and pride surrounded,
The vile insatiate despots dare,
Their thirst for gold and power unbounded,
To mete and vend the light and air,
To mete and vend the light and air,
Like beasts of burden would they load us,
Like gods would bid their slaves adore;
But man is man and who is more?
Then shall they longer lash and goad us?

O Liberty! can man resign thee,
Once having felt thy gen'rous flame?
Can dungeons, bolts and bars confine thee?
Or whips thy noble spirit tame?
Or whips thy noble spirit tame?
Too long the world has wept bewailing
That falsehood's dagger tyrants weild;
But freedom is our sword and shield,
And all their arts are unavailing.

பிரெஞ்சு தேசீய கீதம்

(தமிழ் வாசகம்)

பிரான்ஸின் மக்களே! புகழ் பெற விழிமின்!
கேண்மின்! கேண்மின்!! வீரரே கேண்மின்!!!
எண்ணில் லாதோர் எழுமின் எனவே
உங்கட் குரைப்பதை உற்றுக் கேண்மின்!
புத்ரர் மனைவியர் புராதன முதியோர்
கண்ணீர் சொரிதல் காணீர்! காணீர்!!
அழுது புலம்பி அரற்றுதல் கேளீர்!
சாந்தமும் தூயசு தந்த்ரமும் ரத்தம்
கசிந்து வீழக் காணுறும் சமயம்
வெறுக்கத் தக்க தறுகணர் தீமை
விளைப்போர், கூலிக் குழைக்கும் பாதகர்
துஷ்டர் யாவரும் சூழ்ந்தே நாட்டை
பயமே காட்டிப் பாழ்செய் கின்றார்!
ஆயுதம் எடுமின்! ஆண்மை வீரரே!
பழிவாங் கும்வாள் வெளியிற் பற்றுமின்!
வெற்றியே கொள்வோம் மற்றெனின் மரணம்
என்றே எண்ணி முன்னணி செல்மின்!
ஆடம் பரத்தோ டகங்கா ரஞ்சூழ்
அதிருப்தியும் கீழ்மையும் அமையதி காரிகள்
ஆடக மீதினும் அதிகா ரத்திலும்
அளவில் லாத ஆவல் கொண்டே
வெளிச்சமுங் காற்றும் விலைக்கே விற்கிறார்
வெளிச்சமுங் காற்றும் விலைக்கே விற்கத்
துணிவுங் கொண்டார் சூனிய மக்கள்
பெருஞ்சுமை தாங்கும் பிராணிகள் போல
எம்மேல் மூட்டை யேற்றுவிக் கின்றார்
ஆண்டவன் என்றெமை வேண்டுவீ ரென்று
அடிமை கட்கே ஆணை யிடுவார்
ஆயினும் மனிதன் மனிதனே யன்றி
வேறியார் கொல்லோ விரிநீ ருலகில்
எத்தனை நாட்கள் எம்மை யடித்துத்
துன்ப முறுத்துவர் துயரஞ் செய்குவர்?
ஓ! சுதந் திரமே! ஒருமுறை உன்றன்
ஈண்டிய சுடரைத் தீண்டிய பின்னர்
மனிதன் உன்னை விட்டிடல் வல்லனே?
இரும்பும், தாழும், இருள்சூள் குகையும்
சிறைதான் உன்னைச் செய்திடல் ஆமோ?
சவுக்கடி, உணர்ச்சியைத் தணித்தல் இயலுமோ?
சவுக்கடி, உணர்ச்சியைத் தணித்தலும் இயலுமோ?
பொல்லாக் கொடியர் பொய்மை ஈட்டியை
உபயோ கிப்பது அகண்ட உலகின்
நெடுநாட் புலம்பல் இன்னும் நீங்கிலை
ஆயிற், சுதந்த்ரமே அமையும் எமது
வாளும் கவசமும்; மற்றவர் வித்தைகள்
பயன்பெறா இனியே; பயன்பெறா இனியே.

—சோ

வந்தேமாதர கீதம்

(பங்கிம் சந்திர சட்டர்ஜி)

ஸுஜலாம், ஸுபலாம், மலயஜ சீதலாம்
ஸஸ்ய ச்யாமளாம் மாதரம் (வந்தே)

சுப்ர ஜ்யோத்ஸ்நா புளகித யாமினீம்
புல்ல குஸுமித த்ருமதள சோபினீம்
ஸுஹாஸினீம், ஸுமதுர பாஷிணீம்
ஸுகதாம், வரதாம், மாதரம் (வந்தே)

த்ரிம்சத் கோடி கண்ட கலகல நிநாதகராளே
த்வித்ரிம்சத் கோடி புஜைர் த்ருத கரகர வாளே
கேபலே, மா துமி அபலே
பஹுபல தாரிணீம், நமாமி தாரிணீம்
ரிபுதள வாரிணீம், மாதரம் (வந்தே)

துமி வித்யா, துமி தர்ம,
துமி ஹ்ருதி, துமி மர்ம
த்வம்ஹி ப்ராணா, சரீரே
பாஹுதே துமி மா சக்தி
ஹ்ருதயே துமி மா பக்தி
தொமா ரேயி ப்ரதிமா கடி மந்திரே மந்திரே (வந்தே)

த்வம்ஹி துர்கா தசப்ரஹரண தாரிணீ
கமலா கமலதள விஹாரிணீ
வாணீ வித்யா தாயினீ, நமாமித்வாம் (வந்தே)

நமாமி, கமலாம், அமலாம் அதுலாம்
ஸுஜலாம், ஸுபலாம் மாதரம்
ச்யாமளாம், ஸரளாம், ஸுஸ்மிதாம் பூஷிதாம்
பரணீம், தரணீம், மாதரம் (வந்தே)

வந்தே மாதர கீதம்

(ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரின் மொழி பெயர்ப்பு)

நளிர்மணி நீரும், நயம்படு கனிகளும்
குளிர் பூந் தென்றலும், கொழும்பொழிற் பசுமையும்
வாய்ந்து நன் கிலகுவை, வாழிய அன்னை! (வந்தே)

தெண்ணில வதனிற் சிலிர்த்திடு மிரவும்,
தண்ணியல் விரிமலர் தாங்கிய தருக்களும்
புன்னகை யொளியும், தேமொழிப் பொலிவும்
வாய்ந்தனை யின்பமும் வரங்களும் நல்குவை (வந்தே)

கோடி கோடி குரல்க ளொலிக்கவும்
கோடி கோடி புயத்துணை கொற்றமார்
நீடு பல்படை தாங்கி முன் னிற்கவும்
கூடு திண்மை குறைந்தனை யென்பதென்?
ஆற்றலின் மிகுந்தனை, அரும்பதங் கூட்டுவை
மாற்றலர் கொணர்ந்த வன்படை யோட்டுவை (வந்தே)

அறிவுநீ, தருமநீ, உள்ளநீ, அதனிடை
மருமநீ, உடற்கண் வாழ்ந்திடு முயிர்நீ,
தோளிடை வன்புநீ, நெஞ்சகத் தன்புநீ
ஆலயந்தோறும் அணிபெற விளங்கும்
தெய்வச் சிலையெலாந் தேவியிங் குனதே (வந்தே)

பத்துப் படைகொளும் பார்வதி தேவியும்
கமலத் திதழ்களிற் களித்திடும் கமலையும்
அறிவினை யருளும் வாணியும் அன்னைநீ! (வந்தே)

திரு நிறைந்தனை, தன்னிக ரொன்றிலை!
தீது தீர்ந்தனை நீர்வளஞ் சார்ந்தனை
மருவு செய்களின் நற்பயன் மல்குவை
வளனின் வந்ததோர் பைந்நிறம் வாய்ந்தனை
பெருகு மின்ப முடையை, குறுநகை
பெற் றொளிர்ந்தனை, பல்பணி பூண்டனை
இரு நிலத்துவந் தெழுமுயிர் தாங்குவை
எங்கள் தாய் நின் பதங்க ளிறைஞ்சுவாம்! (வந்தே)

அமெரிக்க தேசீய கீதம்

(தமிழ் வாசகம்)

உஷத் காலந்தான் உதிக்கும் ஒளியில்
காணவும் இயலுமோ உதய கால
இறுதியின் ரேகை என்றே பெருமையாய்
வரவேற்றேமோ அதன்விரி வரைகள்
முற்றெளி நட்சத் திரங்கள் முதலிய
அச்சம் மிக்க அமரின் ஊடே
தெரிந்ததோ திகழ்கொத் தளங்கள் மீது
நின்றேம் வீரர் நீளணி கண்டோம்
புதைபா ணத்தின் சிவப்புப் பொழிவும்
ஆகா யத்தில் அதிர்வெடி குண்டும்
எமது கொடிதான் இரவும் இன்னும்
அங்கே திகழ்தற் கத்தா க்ஷியுறும்
சுதந்திர புருஷர் தோன்றிய நாட்டில்
வீரர் வாழும் விம்மித மனையில்
நக்ஷத் ரப்பிர காசக் கொடிதான்
பறக்கும் மாண்பு பகன்றிடு வாயே
பனிப்பட லத்தாற் பனிச்செனத் தெரியா
அக்கரை தன்னில் எதிரிகள் அச்சம்
மிக்கிடும் மௌனம் மேவுகின் றூர்கள்
ஆங்கே உயர்ந்த அக்குன் றின்மேல்
காண்பதும் யாதோ காற்றுவீசுங்கால்
பாதி மறைந்தும் பாதி தெரிந்தும்
தோன்றுது காலைத் துவக்கத் தொளிதான்
இப்பொழு தேயதன் மீதில் இலங்குது
அதன்பிர காசம் ஆற்றல்இப் போதே
பிரதி பலிக்குது பெரிதொளி வீசுதே
ஆஹா! நட்ச த்ரப்ர காசக்
கொடிதான் நெடுநாள் வாழ்குக! அக்கொடி
சுதந்திர புருஷர் தோன்றிய நாட்டிலும்
வீரர் வாழும் விம்மித மனையிலும்
அன்புறு மனைக்கும் அமர்புரி முனைக்கும்
ஊடே சுதந்த்ர வீரர் கூடுக!
வெற்றியும் சாந்தமும் மேவுமிந் நாடே
தேவதை மீட்ட திருநா டிதுவே
எம்மையோர் தேசமாய் இலங்கச் செய்து
பாதுகாத் திடுமச் சக்தியைப் பணிவோம்
நீதிசேர் கட்சியாய் நின்றிடும் யாங்கள்
வெற்றியே யடைவோம் வெற்றியே யடைவோம்
இறைவனை நம்பு என்பதெம் கொள்கை
சுதந்த்ர புருஷர் தோன்றிடு நாட்டில்
வீரர் வாழும் விம்மித மனையில்
நக்ஷத் ரப்ர காசக் கொடியது
ஓங்குக வெற்றிகொண் டோங்குக பெரிதே,

—சோ

THE STAR SPANGLED BANNER

O say can you see by the dawn's early light,
What so proudly we hailed at the twilight's
last gleaming,
Whose broad stripes and bright stars, thro'
the perilous fight,
O'er the ramparts we watched, were so gallantly
streaming,
And the rocket's red glare, the bombs bursting in air,
Gave proof thro' the night that our flag was still there.

Refrain.

O say does that Star Spangled Banner yet wave
O'er the land of the free and the home of the brave.
On the shore, dimly seem thro' the mists of the deep,
Where the foe's haughty host in dread silence reposes,
What is that which the breeze, o'er the towering steep,
As it fitfully blows, half conceals, half discloses,
Now it catches the gleam of the morning's first beam,
In full glory reflected, now shines on the stream.

Refrain.

'Tis the Star Spangled Banner, O long may it wave,
O'er the land of the free and the home of the brave.
O thus be it ever when freemen shall stand
Between their lov'd home and the war's desolation!
Blest with vict'ry and peace, may the heav'n
rescued land,
Praise the pow'r that hath made and preserved
us a nation!
Then conquer we must, when our cause it is just,
And this be our motto: In God is our Trust.

Refrain.

And the Star Spangled Banner in triumph shall wave,
O'er the land of the free and the home of the brave.

உலகத்திலே என்ன நடக்கிறது?



சேலம் ஜில்லா வாசி:

என்னமோ அடியோடு மூழ்கிப் போகாமல் சமாளித்துக் கொள்ள இந்த உதவியைக் கொடுத்தாரே மகானுபாவன் ராஜகோபாலாச்சாரியார். அவர் உண்மையிலேயே 'சக்ரவர்த்தி' தான் ஐயா!



ஐரோப்பிய வல்லரசுகள்!

அடடா! ஒருவருக் கொருவர் எவ்வளவு அந்நியோந்நியம்! முகத்திலே எவ்வளவு புன் சிரிப்பு! ஆனல் செய்கிற வேலையோ ?



வாய்ப் பேச்சாக ஆரம்பித்து



இப்படி வளர்ந்து



இப்படி முற்றுமா ?

ஐரோப்பாவின் இரண்டு முகங்கள்.

ஒன்று சமாதானப் பேச்சு பேசுகிறது; மற்றொன்று யுத்த தளவாடங்களுக்கு ஆர்டர் கொடுத்த வண்ணமிருக்கிறது.



முஸோலினி ஈ ஸ்டாலின்
பிராங்கோ ட காபல்லெரோ
ஹிட்லர் ன் லியோன் ப்ளம்

யார் கை வலுக்கப் போகிறது?

சரஸ்வதி பவனம்

—கே. வி. ரங்கசாமி ஐயங்கார்
M. A., (ராவ் பகதூர்)

இத்தலையங்கத்தின் பொருளை உணர்வது ஒருவாறு எளிதேயாகும். ஏனெனில் சற்று அக்ஷராப்பியாசம் பெற்றவர்களுக்கும்கூட சரஸ்வதியைப்பற்றி சிறிதாவது தெரிந்திருக்கும். பவனம் என வாசஸ்தலங்களுக்குப் பெயரிடுவதும் இக்காலத்தில் சகஜமே. ஆகவே சரஸ்வதி பவனம் என்பது கல்வித் தாயாகிய சரஸ்வதியின் உறைவிடமெனப் பொருள் தருகிறது. இக்கல்வித் தாயின் ஆலயமானது வாராணசி க்ஷேத்திரமாகிய வருணை—அஸ்ஸி எனப் பெயரிய இரு நதிகளுக்குமிடையிலிருக்கும் சுமார் 50 மைல் சுற்றளவுள்ள ஸ்ரீ காசி யென்னும் புராதன நகரில் விளங்குகிறது.

இப் புண்ணியப் பிரதேசமே சரஸ்வதியின் ஸ்திரமான வாச ஸ்தலமெனச்சொல்லலாம். புராணங்கள் பலவித மகிமைகளைக் காண்பித் திருக்கும் இக்காசி க்ஷேத்திரம் கிருத யுகம் முதல், தர்ம, அர்த்த, காம, மோக்ஷங்களை மிக எளிதில் கைக் கொள்ளக் காரணமான வித்தையையே உலகத்திற்கு உதவி வந்திருக்கிறது. ஞான வாவி என்னும் அறிவுக் களஞ்சியத்தின் இருப்பிடம் காசி அல்லவோ! ஆயுர் வேதத்தை இயற்றிய தன்வந்திரி உதித்த இடம் இதுவன்றி மற்றெது? சாக்கிய மகா முனியாகிய புத்த பகவான், ஞானக் கலையில், இச் சம்சார சாகரத்தின் அதி இரகசியப் பொருள்களையும் இதன் அநித்யத் தன்மையுடன் கூடிய கொடுமையையும், கயையில் ஈசனுல் அறிவுறுத்தப் பட்டுத் தான் கண்ட அக் காட்சியை உலகத்தவருக்கு முதன் முதலாக வெளிப் படுத்தத் தகுதியெனத் தேர்ந்தெடுக்கப் பட்ட இடம் இக் காசி க்ஷேத்திரமன்றோ! சென்ற சில நூற்றாண்டுகளில் எத்தனையோ இராஜ்யங்களும் அதன்பிரதாபங்களும் அழிந்தும் புதிதாக ஜெனித்து மிருக்கும் மிகக் கடினமான நாட்களிலும் அதன் முக்கிய இலக்ஷியமான கல்விப் பயிற்சியை விடா முயற்சியுடன் ஆற்றி வந்த திருநகரம் இதுவாகும்! மொகலாய அரசர்களில் இஸ்லாமிய மதத்தில் அதிகமும் பற்றுள்ள அவ்ரங்க சீப் அரசன், ஹிந்து மதத்தை வேரறுக்கத் தீர்மானங் கொண்டபொழுது, அம்மதத்தின் அபிவிர்த்திக் காதாரமாகிய அறிவாளிகளும், ஆச்சாரியார்களும் கூடியிருக்கும் புண்ணிய ஸ்தலமும் மதத்திற்கே சிகரம் போன்றதுமான நகரம் காசி யென்பதாகக் கருதியே இதையும் இதன் ஆலயங்கள், கல்லூரிகள் முதலியவற்றையும் அழிக்க முயன்றானென்றால் இதன் அக்காலத்திய பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ! வேறு அன்னிய நாடுகளில் மிக மேன்மை தங்கியதான ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் முதலிய பிரபல கல்லூரிகள் வித்யாபிவிர்த்திக்கு பிரதானமாக விருக்கின்றன. ரோமாபுரி, ஜெருசலம், மெக்கா முதலிய க்ஷேத்திரங்கள் பல மதங்களுக்குத் தலை நகரங்களாக விளங்குகின்றன. ஆனால் இவ்விரண்டு மகத்தான விஷயங்களும் ஒன்று சேர்ந்து விளங்கும் க்ஷேத்திரம் இக் காசி யென்னும் புண்ணிய பூமியே யாகும். தற்காலத்திற்குப் பொருத்தமான வித்யாஞானத்தையும் ஜவலிக்கச் செய்யக் கருதி இந் நகர ஸ்திரவாசியான சரஸ்வதி தேவி, விச்வ வித்யாலய மென்னும் மகத்தான கல்லூரியையும் (Hindu University) இந் நகரில் ஸ்தாபிக்க

பூஜ்ய மாளவியாஜீயைத் தூண்டினுள் போலும்.

முகமதிய சாம்ராஜ்ய காலத்தில் ஹிந்து மத அபிவிருத்தி குன்ருமல் இருந்ததற்குக் காரணம் கல்வியுடன் மதாபிமானமும் சேர்ந்திருந்ததாலேயே க்ஷேத்திரங்கள் பல சிதைந்தன; விக்கிரகங்கள் பொடிபட்டன; கல்வியிற் சிறந்தவர் பலர் மாண்டனர். ஆனுல் காசியிலோ சாகித்ய தத்வ உபதேசத்திற்கு ஒரு பொழுதும் பஞ்சமிருந்ததே யில்லை. கீர்வாண பாஷையிற் சிறந்த கிரந்தங்கள் ஆயிரக் கணக்காய், முகலாயர்கள் ராஜ்ய பாரம் நடத்தி வந்த காலத்திலேயே அவர்கள் சிம்மாதனத்தின் நிழலில் எழுதப்பட்டன.

ஸ்ரீ காசியின் மகிமையிற் சிறிது களங்க மேற்பட்டது, ஐரோப்பிய ஆட்சியில் தான் என்று சொல்லவேண்டும். ஏனெனில் எல்லா மதத்திற்கும் நடு நிலை வகித்துப் பக்ஷபாதமின்றி இருந்ததால் எல்லா அபிவிர்த்தியும் ஒருங்கே குன்றின. ஆயினும் பதினெட்டாம் நூற்ருண்டில் செங்கோல் செலுத்தி வந்த ஐரோப்பிய மன்னர்களின் நோக்கத்தை அனுசரித்து அவ்வழியில் பின் ஆண்டு வந்த கவர்னர்களும், மற்ற அதிபதிகளும் நடந்திருப்பாராயின் ஸ்ரீ காசிக்கு இவ்வித குறைவு ஆங்கில ஆட்சியில் வந்திருக்க முடியாது. வேலையிலும், பெருந்தன்மையிலும் எதிர்கால திருஷ்டியிலும் சிறந்த காரன்வாலீஸ் (Cornwallis) பிரபு இந்துக்களை ஆங்கில ஆட்சிக்கு உள்பட்டிருக்கச் சம்மதப் படுத்தும் வழி, அவர்கள் கலைகளை ஆதரிப்பதே என்று கருதி, கி. பி. 1791 ஆண்டில் காசியில் ஸமஸ்கிருத வித்யாலயம் ஒன்று ஸ்தாபித்தார். அதை நடத்த காசி மாகாணத்தில் வசூல் ஆகும் வரியையே உதவினுர். கீர்வாண பாஷையையும் நாட்டு பாஷைகளையும் அவைகளிலுள்ள காவ்யங்களையும், ஹிந்து தரிசன சாஸ்திரங்களையும் அபிவிருத்தி செய்தாலன்றி இந்துக்கள் அன்னிய அரசாட்சிக்கு மனக் குளிர்வுடன் உடன்பட மாட்டார்கள் என்று நன்ருய் உணர்ந்து இப் பிரபு, அந்த காசி வித்யாலயத்தை தன் (கவர்னர் ஜெனரல்) நேர் மேற்பார்வையிலேயே வைத்துக் கொண்டார். அவ்வாலயத்தில் நடைபெறும் பரீக்ஷைகள் அவர் உத்தரவுப் பிரகாரமே நடந்தன. ஒவ்வொரு உபாத்தியாயரும் அவரால் நியமிக்கப் பட்டனர். அக்காலத்தில் அரசாங்கத்திலுள்ள பல பிரபுக்களும் கம்பெனியாரின் நற்சாட்சிப் பத்திரமோ மற்ற கௌரவ விருதுகளோ பெறவேண்டுமானுல் இவ் வித்யாலயத்திற்குப் பண உதவி செய்வது வழக்கமாகவுமிருந்தது. பிறகு அதன் அபிவிர்த்தியைக்கோரி இந்நாட்டுப் பண்டிதர்களுக்கும் மேல்நாட்டு ஆராய்ச்சி வழிகளைக் காட்டிக் கொடுக்கக் கருதி, அதிக சம்பளம் கொடுத்து ஐரோப்பிய ஸமஸ்கிருத வித்வான்களை வரவழைத்தார். நான்கு வேதங்களையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த கிரிபித் (Griffith) என்பவர் இந்த வித்யாலயத்தில் அத்தியக்ஷம் வகித்தவர். வேதாந்தத்திற்கு அஸ்திவாரமான சங்கர ராமானுஜ பாஷ்யங்களுடன் கூடின பிரம்ம சூத்திரங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த திபோ (Thibaut) துரையும் ஒரு அத்யக்ஷரா யிருந்தார். ஆங்கிலத்தில் சமஸ்கிருத இலக்கணத்திற்கு முதல் முறையாகப்புத்தகம் எழுதின பாலன்டைன் (Ballantyne) மற்ருெரு அத்யக்ஷராவர். உலாந்தா தேசத்தில் (Holland) ஆசியா கண்டத்தின் ஸர்வ வித்தைகளையும்பயிர்செய்யஸ்தாபித்துள்ள, லேடன் நகரில் (Leyden) கெர்ன் இன்ஸ்டிட்யூட் (Kern Institute) என்ற வித்தியா மந்திரத்திற்கு மூல புருஷரான கெர்ன் என்பார் மற்ருெரு அத்யக்ஷர். அந்த

அறிவாளிகளுக்கு ஆசிரியர்களாக விருந்த பல மேதாவிகள் இவ்வாலயத்திலேயே உபதேசிகளா யிருந்தனர். இந்நாட்டு பண்டிதர்களுக்குக் கிடைக்காத ஸி. ஐ. இ. (C. I. E) விருது பெற்ற சர்வகலா நிபுணராகிய தென் தேசத்தைச் சார்ந்த மான வல்லி கங்காதர சாஸ்திரி இந்த வித்தியாலயத்தில்தான் உழைத்துக் கீர்த்தி பெற்றார். ஸாங்கிய வேதாந்த சாஸ்திரங்களில் நிபுணராகிய ராமமிஸ்ரா சாஸ்திரிகள் வேறொரு ஆசிரியர். ஹிந்து கணித சமுத்திரத்தை கையினால் நீந்திய பாபு தேவ் சாஸ்திரியும், சதாகர துவிவேதிகளும் இங்கே உழைத்தனர். இன்னும் நிகரில்லாத மகா வித்வான்கள் பலர் இந்த சமஸ்கிருத பாடசாலையிலிருந்து கீர்த்தி பெற்று உலகிற்கே பல நன்மைகளைச் செய்திருக்கின்றனர்.

வித்வான்களுக்குரிய கருவிகளான புஸ்தகங்களைச் சேர்க்க வேண்டுமென்று முயற்சித்து ஒரு புத்தகசாலையும் சேர்க்கலானார் காரன்வாலிஸ் பிரபு. ஒன்றரை நூற்றாண்டுகளாக இதற்கு உழைத்த வித்வ சிரோமணிகளின் முயற்சியால் இப்பொழுது இந்தப் புஸ்தகசாலையில் அபூர்வமான ஏட்டு நூல்கள் அரை லக்ஷமும், அச்சுப்பிரதி நூல்கள் இருபதினாயிரமும் இருக்கின்றன. தென்னாட்டில் தஞ்சையில் அனேக அரச வம்சங்கள் சேகரித்து வைத்த ஸரஸ்வதி விலாஸத்தை விட அதிக மாட்சிமை இந்தப் புத்தகாலயத்திற்கு இப்பொழுது கிடைத்திருக்கிறது. எக்காலும் வித்யாதேவி வசிக்குமிடம் என்று கருதி ஸரஸ்வதி பவனமென இதற்குப் பெயரிட்டுத் தனியாக ஒரு புதிய கட்டிடமொன்றைக் காலஞ்சென்ற ராஜா ஸர் மோதிச்சந்த் கட்டி நல்கினார்.

இந்த ஸரஸ்வதி பவனமென்னும் ஆலயத்தினால் நம் நாட்டிற்குண்டான உதவி அளவற்றது. நூறு வருஷங்களுக்கு முன், தற்காலத்தில் பாஷா ஸாம்ராஜ்யம் வகித்து வரும் ஹிந்தி பாஷையில் அவ்வளவு அதிக நூல்கள் கிடையா. இப்பொழுது ஹிந்தி பாஷையை விட நூல்கள் அதிகமாயிருக்கும் வேறு பாஷை இந்தியாவில் இல்லை. அந்த அபிவிருத்திக்கு முக்கிய காரணம் இந்த சமஸ்கிருத வித்தியாலயத்தாலுண்டான உதவியே. நிற்க, ஹிந்து மதத்திற்கு பூர்ண கிருஹணம் முகம்மதியர்காலத்தில் பிடிக்கவில்லை. அரசாங்க உதவியில்லாமலே ஆலயங்களும், கல்வி மடங்களும், கிராம சபைகளும், சிற்றரசாங்கங்களும் நல்கிய பண உதவியால் செழிப்புற்றோங்கின. இவைகளினுதவியில்லாதிருப்பின், ஹிந்து அரச சமஸ்தானங்கள் மாண்ட தருணமே, ஹிந்து மதமும் குன்றிப் போயிருக்கும். வட இந்தியாவில் பொது ஜனங்களுக்கு அதிக மத அபிமானமிருப்பது பெரும்பாலும் இந்த காசி வித்யாலத்தாலும், அதன் கீழ் கிளையாக தேசத்தின் பல பாகங்களிலுமிருக்கும் சுமார் ஆயிரம் சமஸ்கிருத வித்யாலயங்களின் உதவியாலன்றி வேறு காரணமுண்டோ! காரன்வாலிஸ் பிரபு முயற்சியினால் ஸரஸ்வதி தேவி வசித்த இடங்களெல்லாம் ஹிம சேது பரியந்தம் பாதுகாக்கப்பட்டன. ஸரஸ்வதி பவனம் காசியிலிருந்தாலும் இக்கல்வித்தாயின் பிரதாபம் நாடெங்கும் பரவியிருக்கிறது. இதற்கு அடையாளமாகவே சுமார் தொண்ணூறு வருஷங்களுக்கு முன்பு இரண்டு லக்ஷம் ரூபாய் செலவு செய்து நிறுவப் பட்ட மிகவும் அழகு வாய்ந்த கட்டிடம் இப்பொழுது சக்கரவர்த்தினி கல்லூரி (Queen's College) என்று வழங்கி வருகிறது. இந்தக் காசி கீர்வாண வித்தியாலயமே ஸரஸ்வதி பவனம் என்னும் ஸமஸ்கிருத கலாசாலையையும் பராமரித்து வருகிறது.

ஸ்ரீமான் ரங்கசாமி ஐயங்கார் இந்திய மேதாவிகளில் ஒருவர்; சரித்திரப் பேராசிரியர். முன்னர், திருவாங்கூர் சமஸ்தானத்தின் கல்வி இலாகா தலைவரா யிருந்தார். இப்பொழுது காசி ஹிந்து சர்வகலாசாலையின் 'பிரின்ஸிபாலாக' இருக்கிறார். தாய் மொழியின் வாயிலாகத் தமது புலமையை வெளிப்படுத்த இவர் இசைந்திருப்பது இதுவே முதல் தடவை யென்று கருதுகிறோம். அப்படி யானால் "ஜோதி" பெருமை கொள்ளலா மல்லவா?



ஸ்ரீ காசியிலுள்ள சரஸ்வதி பவனம்.
சமீபத்தில் ராஜா மோதிச்சந்து அவர்களால் கட்டப் பெற்றது.



ஸ்ரீ காசியிலுள்ள க்வீன்ஸ் காலேஜ்.
ஆதியில் லார்ட் கார்ன்லாலில் ஆரம்பித்தது.



ஸ்ரீ காசியிலுள்ள பாரதமாதா கோயில்

1936-ம் வருஷம் அக்டோபர் மாதம் மகாத்மா காந்தியினல் திறந்து வைக்கப் பெற்ற இந்தக் கோயிலைக் கட்டிப் புகழைப் பெற்றவர் பாபு சிவபிரசாத் குப்தர் என்னும் செல்வர்.

அறிவும் நூல்களும்

—எஸ். முத்து வீரப்பன் B. A,

'முயற்சி திருவினையாக்கும்' என்ற முது மொழிக்கு உதாரணமாக இருக்கிறவர் இந்தக் கட்டுரையாளர். தமிழ் நாட்டிலேயுள்ள நூலாசிரியர்களும் பத்திரிகாசிரியர்களும் கவனிக்க வேண்டிய சில விஷயங்களை இந்த வியாசத்தில் அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

அறிவென்பது ஒரு மகத்தான சமுத்திரத்தைப் போன்றது. அதன் ஆரம்பத்தையும் முடிவையும் வரையறுத்துக் கூறுவது அசாத்தியம். இதன் முதிர்ச்சியையே ஞானமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

ஐம்புலன்களில் கண்ணுக்குவிஷயமாவதை மிகச்சுலபமாய் அறிவின் உதவியால் அறிகிறோம். இவற்றில் மனதுக்கு விஷயமாகும் பொருள்களை அறிவது மிகவும் சிரமம். அவ்விதமிருக்க இவற்றையெல்லாம் அறியும் அறிவையே அறிவதென்றால் சாத்தியமென யாரும் சொல்லத் துணியவும் கூடுமோ! இது மனிதனில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு தெய்வீக சக்திகளில் பிரதானமானது. ஈசனென்ற சக்தி, ஒவ்வொருவருக்காகவும் கவலையெடுத்து மனிதருடைய சுக துக்கங்களில், கலந்து கொள்வதென்பது இயலாத காரியம். இதை முன்னிட்டுப் பாதுகாப்புக்காக, ஜீவிய மட்டும் பிரியாது உடனிருக்கச் செய்து ஒவ்வொன்றிலும் புத்திமதிகூறி, அவர்கள் செய்யும் நன்மை தீமைகளுக்கு பாத்திரர்களாக்க அறிவென்னும் மந்திரியை ஈசன் சிருஷ்டி செய்தனுப்பினானென்றே கருத வேண்டியதிருக்கிறது. இவ்வறிவென்பது ஒரு சிறிய ஆலம் வித்தைப் போன்று குழந்தையின் கர்ப்பத்திலேயே உடன் அமைக்கப் பட்டிருக்கிறது. நாளேற நாளேற இது அநுபவத்தினால் முதிர்ச்சி யடைகிறது. அநுபவ விருத்திக்குச் சந்தர்ப்பமோ, அதற்குரிய நூல்களைப் படிக்கும் ஆற்றலோ இல்லாவிடில் வளர்ச்சி குன்றி, கேவலம்மிருகங்களைப்போன்று தன் சரீரத்தைப் பாதுகாக்கும் அளவுடன் நின்றுவிடும். அறிவு அதிசூட்சுமமானதால் அதன் லட்சணம் கூறுவதும் அசாத்தியம். அறிவினின்றும் எண்ணம் உண்டாகிறது. எண்ணத்தை வெளியிட பாஷையும் அட்சரங்களும் அத்யாவசிய மாயின. தற்கால நாகரிக வளர்ச்சி எவ்வளவோ முன் சென்றிருப்பினும், எந்த ஒரு பாஷையும், நாம் கண்ட காட்சியையும் எண்ணத்தின் விசித்திரத்தையும் நாம் எண்ணியவாறே பிறருக்கு வெளியிடப் போதிய அளவு சக்தி யுடையனவாக வளர்ச்சி யடையவில்லை. அறிவின் விர்த்திக்கு பாஷா விர்த்தி மிக முக்கியமானது.

மனிதர்களின் ஒவ்வொரு செய்கைகளும் அறிவின் பலனேயாகும். அறிவு மங்கலான இளம் பருவத்திலும், முதுமையிலும் செய்யப்படும் செய்கைகளை மதமும், சமூகமும், ராஜீய சட்டதிட்டங்களுங் கூட செய்கைகளாக கணக்கில் எடுத்துக் கொள்ள வில்லை. பணத்தின் சக்தியாலோ, அல்லது செல்வாக்கின் சக்தியாலோ மனிதர்களைப் பெரியார் சிறியார் எனப்பிரிப்பதினின்றும் அறிவின் வளர்ச்சியாலேயே பிரிப்பது மிக மிக நியாயமும்

எல்லோரும் விரும்பத்தக்கதுமாகும். அறிவை நமக்கு அளித்ததின் லட்சியமாவது:—ஐம்புலன்களுக்குப் பாத்திரமாகும் விஷயங்களை, எவ்வித பாரபட்சமுமின்றி சம சிந்தையுடன் ஆராய்ந்து அதற்கு நேரும் இடையூறுகளுக்கிடையில் மானிட தேகத்தின் லட்சியத்தைத் தீர்மானிப்பதேயாகும்.

அறிவு ஒரு சுயம் பிரகாசமான தீபம். அத்தீப வெளிச்சத்தில் சாத்வீக நூல்களான திருக்குறள் முதலானவற்றையும் வாசிக்கலாம்; மனித வர்க்கத்திற்கே யமனான யுத்த தளவாடக் கருவி நூல்களையும் படிக்கலாம். இவ்விதம் நாம் செய்வது அறிவின் தோஷமல்ல. அறிவு எதற்காக அளிக்கப்பட்டதென்ற லட்சியத்தை அறியாத தோஷமே யாகும். இன்பங்தரச் சிருஷ்டித்த அறிவு துன்பந் தருவதானால், குறை யாரிடத்திலோ? மனிதனையணுகாத மற்றப் பிராணிகள் என்றும் போல இன்றும் அவற்றிற்குரிய இன்பங்களில் சற்றும் மாறுதலின்றி அனுபவித்தே வருகின்றன.

சிறு குழந்தைப் பருவத்தில் பதுங்கிக் கிடக்கும் அறிவென்னும் ஆலம் வித்தானது பூவோதயமான பின் முளைத்து வளர ஆரம்பிக்கிறது. அதன் வளர்ச்சிக்கு வேண்டிய சாதனங்கள் எவ்விதக் குறைவுமின்றிக் கிடைக்குமானால் முதிர்ச்சி யடைந்து பலன் தருவதில் சந்தேகமில்லை. மனிதனுக்குச் சக்தியும் பலமும் அறிவினாலேயே உண்டாகிறது. இவ்வளர்ச்சி பெரும்பாலும் ஜென்மத்திற்குப் பின்னே உலக அனுபவத்தினால் உண்டாகிறது. இரவில், தன் நிழலைக் கண்டு நடுங்கிய குழந்தை நடு நிசி இருட்டில் அநேக காடுகளைக் கடந்து கன்னமிடச் செல்கிறது. காலில் வரும் இரத்தத்தைக் கண்டு பயந்தழுத குழந்தை மரணத்தைத் துரும்பாக நினைத்து விரோதிகளின் பீரங்கிக்கு முன்னே தலை நிமிர்ந்து நின்று சிரிக்கிறது. இவ்வன்மையைத் தரத்தக்கது அறிவின்றி மற்றது யாதோ?

கர்ப்பத்தில், அறிவு ஒரு தீக்குச்சி போன்றிருக்கிறது. இம் மண்ணில் தோன்றியதும் அதில் நெருப்புப் பற்ற ஆரம்பித்து சக்தியுள்ள வரை பிரகாசிக்கிறது. சிறு குழந்தைகள் பெரும்பாலும் ஒன்றுபோல செய்கையில் அதிக வித்தியாசமின்றியே இருக்கின்றன. வளர்ச்சி யடைந்த பின் அச்சரீரத்திற்கு விலை மதிப்பு அவன் அறிவையும் அதன் பலனான செய்கையையுமே பொறுத்ததாயிருக்கிறது. மற்றப்பயிர்களின் வளர்ச்சிக்கு எவ்விதம் நிலம், வித்து, ஜலம், களை முதலானவைகளும் காரணங்களாகின்றனவோ, அதேபோல இவ்வறிவு வளர்ச்சிக்கும் வாசஸ்தலம், பெற்றோர், நூல்கள், சங்கம் முதலானவைகளும் காரணங்களாகும். சிறு குழந்தைகள், தங்கள் பெற்றோர்கள் செய்யும்விஷயங்களைச்சற்றும்மாறுதலின்றி ஸ்வீகரிக்கும் சக்தியுடையவர்களானதால் இவ்விஷயத்தில் பெற்றோர்கள் மிகக் கவலையுடையவர்களாக இருக்க வேண்டும். வாசஸ்தல வசதியின்மையால் எத்தனையோ பண்டிதர்கள் தங்கள் குக்கிராம எல்லை தாண்ட மாட்டாமல் மங்கிக் கிடக்கிறார்கள். மற்றொருபுறத்தில் மந்திரிகளின் பிள்ளைகள் மந்திரிகளாகவந்துவிடுகின்றனர். எழுத்து வாசக மறியாது மேதாவியானவர்கள் மிகச் சிலரே யென்பதையும் சகவாசத்தினால் முன்னடைந்தோரும், பின்னிழந்தோரும் எண்ணிறந்தோர் என்பதையும் யாரும் மறுப்பதற்கில்லை.

ஒவ்வொருவரும் அனுதினமும் படுக்கையில் படுத்துக்கொண்டு அன்று, அறிவுப்பொக்கிஷத்தின் இருப்

பைக் கணக்கிட வேண்டும். போதுமான அறிவு வந்து விட்டதென்ற திருப்தி யாருக்கும் வந்து விடக் கூடாது. இவ்வொரு விஷயத்தில் மட்டும் தம்மிற் பெரியாரைக் கண்டு பொறாமையடைவதும் நியாயமாகும். இப்பொறாமையே நமக்குத்தூண்டுகோலாகும். அறிவென்ற புருஷனுக்குக் கிழத்தன்மையேயில்லை. அவனுக்கு ஒரு அந்தமுமில்லை. ஒவ்வொரு நிமிஷமும் ஒரு சந்தோஷமான புது வருஷமேயாகும். 'இச்சிரம சாத்தியமான அறிவு வளர்ச்சி அவசியமா, இதில் படும் பாட்டிற்குப் பலனுண்டா?' என்ற கேள்விக்கு இல்லையென்ற பதிலளிப்பார் யாருமிரார். மற்றப் பிராணிகளுக்கு மிகச் சாதாரணமான இயற்கை அறிவினாலேயே அவற்றின் காலட்சேபம் திருப்தியாக நடந்து விடுகிறது. மனிதனுக்கோ அரை வயிற்றுக் கஞ்சிக்குங் கூட அவ்வியற்கை அறிவை செயற்கை யறிவில் விர்த்தி யாக்கி விசேஷத் துறைகளில் நானா விதமாகச் செலுத்த வேண்டியிருக்கிறது. மற்றப் பிராணிகளுக்கு தன்னைப் பற்றிய கவலை மட்டுமே. மனிதனுக்கோ அத்துடன் உலகத்தைப் பற்றிய கவலையுமிருக்கிறது. இவ்விஷயங்கள் ஒரு புறமிருக்க ஹிந்து தர்மமோ எதிரில் நிற்கும் இவ்வுலக விஷயத்தினின்றும், அதிகக்கவலையும் சிரத்தையும் இனிப்போக விருக்கும் பர உலகத்திற்கே காட்டியிருக்கிறது. அவ்வுலகத்தைக் கற்பனா சக்தியிற் காண்பதற்கோ அளவின்றிய அறிவு தேவைப் படுகிறது. ஆகவே இகபரமிரண்டிற்கும் அறிவே வழி காட்டியாக இருக்கிறது.

இதுவரை அறிவு யாதென்பதையும், அதன் குணதிசயங்களையும் ஆராய்ந்தோம். இனி அவ்வறிவு விருட்சத்தை எவ்விதம் வளர்த்துப் பலனடைவதென்ற பிரச்சினை எழும்புகிறது. எவ்வாறு சரீரத்திற்கு அன்னமும், கண்களுக்கு திவ்ய காட்சிகளும், செவிகளுக்கு இனிய கீதங்களும் ஆனந்தமான உணவாகிறதோ அவ்வாறே அறிவுக்கு இயற்கையின் சம்பந்தத்தால் ஆகும் விஷயங்களே உணவாகின்றன. இவ்வுணவினாலே அந்த அறிவு பூரண வளர்ச்சியடைகிறது.

இயற்கையின் எல்லா இரகசியங்களையும் ஒருங்கே எவரும் நேரில் கண்டு சுலபமாய்க் கண்டானந்திக்க வசதியில்லாததால் நூல்களின் உதவியை நாடவேண்டியிருக்கிறது. அறிவின் வளர்ச்சிக்கு நூல்களே உணவானதால் நூல்களினிடையே புதைக்கப் பட்டிருக்கும் அறிவு கொல்லனுலை இரும்புபோல் பிரகாசமாயிருக்கும். நமக்குப் போதுமான அறிவு வந்துவிட்டதென்ற திருப்தி நம் அருகில் அணுகா வண்ணம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அறிவின் வளர்ச்சிக்கு சுருங்கச் சொல்லில், இந்த ஒரு ஜென்மமே காணாதெனக் கூறுவது உண்மையாகும். ஒருவன் நூல் உணரானாகில் அவனறிவு மற்ற மிருகாதிகளைப் போன்று இயற்கையில் அமைந்த அவ்வளவே அவனிட மிருக்கும். ஒருவர் நூறுபேர்களின் நூல்களை வாசித்து சிந்தனா சக்தி மூலம் அவர்களின் இருதயத்தில் நுழைந்து பார்க்க ஹேது இருப்பதால் அந்தநூலாசிரியர்கள் எல்லோருடைய அறிவையும் ஒருங்கே சுவீகரிக்க ஹேது ஏற்படுகிறது. நூல்களின் மூலம் ஏக காலத்தில் உலகத்தின் எப்பாகத்திலும் விஷயங்களைத் தெரிந்து கொள்ளச் சௌகர்ய மிருக்கிறது. ஒரு நூலாசிரியரோ, ஒரு தேசத்தவரோ, ஒரு மத பண்டிதரோ அநேகம் அருவருக்கும் செயல்களைச் செய்தும், செய்யும் ஆற்றலு

டன் இருக்கலாம். ஆனால் அவர்களின் நூல்களோ, அவ்விஷயங்கள் யாதுமின்றி நன்மையே அடங்கியிருக்கும். இக் கருத்தை உற்றுநோக்கில், நேரில் பழகிக் கேட்பதினின்றும், பெரியோர் நூல்களை வாசித்தறிவதே நலமாகும். நேரில் கேட்க எல்லோருக்கும் வசதியிராது. அவர்கள் தயவை எதிர் பார்க்க வேண்டும். ஆனால் அவர்களின் நூல்களோ நமது சௌகரியத்தை எதிர்நோக்கி நமதுபடுக்கை அறைகளில் காத்துக் கொண்டிருக்கின்றன. ஆக எக்காலத்தும் நற்றோழர்கள், நூல்களேயின்றிமற்றில்லை. நூல்களென்பது அறிஞர்கள் அவர்கள் ஜீவியத்தில் கண்ட காட்சிகளில் மிக உன்னதமான விஷயங்களை மற்றோர்க்குப் பயன் படும்படியாக தயாரித்த ருசிகரமான உணவு. இது அவர்களின் எத்தனையோ வருஷ கஷ்டத்தின் பலனும். ஆகவே பொதுவாக ஒரு தேசத்தின் ஜனத் தொகையத்தனை நூல்கள் மிக சகஜமாக இருந்து வரலாம்.

நூல்களை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று நாம் இடைவிடாது எப்பொழுதும் வாசித்து நினைவிலிருத்தி நம் வாழ் நாளைத் திருத்துவதற்கு உபயோகமுள்ளது. மற்றொன்று உலக விஷயத்தையும் அதன் போக்கையும் தற்காலிகமாக உணர்ந்து சுக துக்கங்களையனுபவித்து நாளடைவில் நாம் அறியாமலே நழுவிப் போகக் கூடியது. அறிவின் உறைவிடமான மூளையும், ஒரு கணக்குக்கு உட்பட்ட சக்தியையேஉடையலதாதால் அமுக்கியமான விஷயங்களை மூளையிடையே விட்டு, அதைப் பலஹீனப்படுத்தாமல் பார்த்துக் கொள்வதும் அவசியமே. ஆகவே பெரும்பான்மையும் ஒவ்வொரு நூலாசிரியர்களும் இது விஷயத்திலும் சற்று கவனித்தல் நலம். நூலாசிரியர் தன் நூலில் குறிப்பிட்ட ஒரு விஷயத்தைச் சார்ந்தவற்றையே தான் எழுத முடியும். இவ்விஷயத்தில் பத்திரிகைகளின் ஆசிரியர்களோ வெனில் சற்று உயரிய சௌகர்யத்திலிருக்கிறார்கள். அவர்களுக்குப் பல தரப்பட்ட எல்லா விஷயங்களைப் பற்றியும் எழுதச் சந்தர்ப்பமிருக்கிறது. இப்பத்திரிகாசிரியர்கள் சற்று தங்கள் பொறுப்பை யுணர்ந்து உலக நன்மையே லட்சியமாகக் கொண்டால் அநேக தனி நூல்களின் விஷயங்களை சொற்பச்செலவில் பத்திரிகை வாயிலாக எல்லோருக்கும் வெளியிட்டு நன்மையைச் செய்யலாம். பத்திரிகை வாசிப்போரும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் சந்தாதாராகச் சேர்ந்து படித்தால் மட்டும் போதுமென்று சொல்ல முடியாது. அப்பத்திரிகையின் ஆரம்பத்திலிருந்து படிக்கவேண்டும். இது மிக சிரமசாத்திய மாகையால் பத்திராதிபர்கள் ஒவ்வொரு வருஷத்திற்கும் பொழிப்பாக அவ்வருஷ வெளியீட்டில் முக்கிய கருத்துக்களை அனுபந்தரூபமாக நல்லமுறையில் வெளியிட்டு நன்மை செய்தல் வேண்டும். இவ்வெளியீடுகள் சில காலத்திற்குப்பின் அரிய நூல்களாக விளங்கும் தன்மையுடையதாக இருத்தல் வேண்டும்.

கடவுளே! கர்வத்தையும் பொய்மையையும் என்னினின்று அப்புறப்படுத்து. எனக்கு வறுமையும் வேண்டாம்; செல்வமும் வேண்டாம். எனக்குச் சௌகரியமான உணவை எனக்குக் கொடு.

—சாலோமன்

புதுவை ஆனந்தரங்க பிள்ளை

——எஸ். சோமசுந்தர தேசிகர்

(இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை)

பரம்பரைப் புலமைப் பேறு பெற்றவர் ஸ்ரீமான் தேசிகர். பழைய காலத்துத் தமிழ் நாட்டை ஆராய்ச்சிக் கண்ணாடியில் பிரதிபலிக்கச் செய்கிற தமிழ் நாட்டு அறிஞர்களிலே இவர் ஒருவர். இவருடைய நூல்கள் பல, புலவர்களுக்கு விருந்தளித்துக் கொண்டிருக்கின்றன. சென்னைச் சர்வ கலாசாலையின் ஆதரவில் வெளியாகும் தமிழகராதியில் இவருடைய உழைப்பு குறிப்பிடத் தக்கது.

தென்னிந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி தொடங்கிய காலத்தில், செல்வத்திலும் செல்வாக்கிலும் திளைத்த தமிழர் பலர். அவர்களிலே ஆனந்தரங்க பிள்ளை ஒருவர். இவர் தமிழில் எழுதி வைத்துப் போயிருக்கிற தினசரிக் குறிப்பைக் கொணடு சுமார் இருநூறு வருஷங்களுக்கு முன்னே தமிழ் நாடு எங்ஙனம் இருந்த தென்பதை சலனப் படத்தில் காண்பது போல் காணலாம்.

ஸ்ரீ ஆனந்தரங்க பிள்ளையின் தினசரியை வெளியிட வேண்டு மென்று காலஞ் சென்ற வ. வே. ஸு. ஐயர் அதிக ஆவல் கொண்டிருந்தார். ஆனல் காலதேவன் அவர் மீது கருணை காட்டவில்லை. இந்தத் தினசரிக் குறிப்பின் மூலமாக, 'கும்பினி கால'த் தமிழ் நாட்டைப் படம் பிடித்துக் காட்ட வேண்டு மென்பது 'ஜோதி' யின் பேரவா., இது நிறைவேற, ஸ்ரீமான் தேசிகர் போன்ற அறிஞர்களின் துணை அவசியமல்லவா?

பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல பெரியார் தென்னாட்டிலே வாழ்ந்திருந்தார்கள். அவர்களுள்ளே ஆநந்தரங்க பிள்ளை யென்பவரும் ஒருவராவர். ஆநந்தரங்க பிள்ளையின் தாய் மாமனாகிய நயினியப் பிள்ளை யென்பார் அந்தக்காலத்திலே பிரஞ்சுக்காரருக்குச் சொந்தமான புதுச்சேரியில் அரசாங்கத்தினருக்குத் துபாஷாக இருந்தார். அக்காலத்திலே பிரஞ்சு ராஜாங்க கவர்னராக விருந்தவர் முசியே ஹேபர் என்பவர், வாணிபத் துறையை வளம்படுத்தும் நோக்கத்தோடு நயினியப் பிள்ளையை பின்னுஞ் சில வணிக மாக்களை யழைக்குமாறு வேண்டிக்கொண்டார். அவ் வேண்டுகோட்கிணங்க நயினியப் பிள்ளை தன் மைத்துனனை திருவேங்கடம் பிள்ளையையும் பின்னுஞ் சிலரையும் சென்னையி லிருந்து கொண்டு வந்து சேர்த்தார். வாணிபமும் ஓங்கி வளர்ந்தது.

நயினியப் பிள்ளைக்கும் கவர்னரான முசியே ஹேபருக்கும் உண்டான மனத்தாங்கலால், கவர்னர் நயினியப் பிள்ளைமேல் சில குற்றங்களை யுண்டாக்கி, நயினியப் பிள்ளையைச் சிறையிலடைத்துத் துன்புறுத்தினார். அவர் சிறையிலேயே மாண்டார். அக்காலத்திலே அவருடைய மகனான குருவப் பிள்ளையும் மைத்துனனான திருவேங்கடம் பிள்ளையும் சென்னைக்கு ஓடிவிட்டனர்; பிரஞ்சு வாணிபமும் குறையத் தலைப்பட்டது.

சென்னைக்கு ஓடின குருவப் பிள்ளை, கப்பலேறி இங்கிலாந்து சென்று அங்கிருந்து பிரஞ்சு ராஜ்ஜியத்தின் தலை நகரான பாரிஸ் நகர் சென்று, அப்பொழுதாண்ட லூயி அரசன் முன் தனது குறைகளை விண்ணப்பித்ததோடு கவர்

னரான முசியே ஹேபர் மேல் பல குற்றங்களைச் சாட்டினார். அவை களைத் தீர விசாரித்த ஓர்லியான்சு கோமான் (Duke of Orleans) ஹேபரை பாரிசுக்கு வரவழைத்துக் கொண்டு பிரேவேஸ்தியோர் என்பாரைக் கவர்னராக நியமித்தார். குருவப்பிள்ளையும் தந்தையாரது உத்தியோகம்பெற்று சீமையிலிருந்து புதுச்சேரி வந்து சிறிது நாளிற் காலஞ் சென்றார்.

புதிய கவர்னரான பிரேவேஸ்தியோர், குருவப் பிள்ளை பாரிசிலிருந்து புதுச் சேரி வருமுன்னர் திருவேங்கடம் பிள்ளையை மறுபடியும் புதுச் சேரி வருமாறு கேட்டுக் கொண்டிருந்தார். அவ்வேண்டுகோட்கிணங்க திருவேங்கடம் பிள்ளையும் தமதூரான பிரம்பூரை விட்டுப் புதுச்சேரி சென்று வாணிபத்தி லிறங்கினர். வாணிபத்தைப் பெருக்கும் பொருட்டுச் சென்னையில் தமக்கு நட்பினரும் நம்பிக்கையுடையவர்களுமான சில வணிக மாக்களையும் புதுச்சேரியில் குடியேறுமாறு செய்து, வாணிபத்தை வளம்படுத்தி முன்னிலைக்குக் கொணர்ந்தா ராயினும் அவர் 1726ல் பரகதியடைந்தார்.

அவ்வாண்டில் ஆவணி மாதத்தில் (செப்டம்பர்) கவர்னராக வந்த முசியே லெனுவார் (Lenoir), முன்னம் புதுச் சேரியில் உதவி உத்தியோகஸ்தராக இருந்தவர். திருவேங்கடம் பிள்ளை, குருவப் பிள்ளை முதலானவர்களை நன்கறிந்தவர். ஆனதாலே திருவேங்கடம் பிள்ளை இறந்த செய்தியைக் கேட்டவுடன் அவரது தனயனை ஆனந்தரங்க பிள்ளையைத் தந்தையின் காரியங்களைப் பார்க்கும்படி வேண்டிக் கொண்டார். அவரே நமது சரித்திர புருடர்.

ஆனந்த ரங்க பிள்ளை திருவேங்கடம் பிள்ளையின் தனயனெனக் கூறினோம். இவர் 1709ம் ஆண்டு பிரம்பூரிலே பிறந்தவர். தந்தை யிறக்கும்போது பதினேழாட்டைப் பிராயத்தராயினும் தீவிர புத்தியும் சுறுசுறுப்புமுடையவர். தந்தைக்கு உதவியாக விருந்து அவரது தொழின் முறைகளை நன்கறிந்திருந்தார். அதனாலே தன்னிடம் ஒப்புவிக்கப் பட்ட வேலைகளைச் சரிவரச் செய்து கொண்டு வந்தார். இவரது புத்தி சாமர்த்தியத்தைக் கண்ட கவர்னர் லெனுவார், இவரைப் பரங்கிப் பேட்டையிலுள்ள அரசாங்கத் தொழிற்சாலைத் தலைவராக நியமித்தார். அவர் எதிர் பார்த்தபடி ஆனந்தரங்க பிள்ளை அரசாங்க வியாபாரத்தைப் பெருக்கிய தன்றித் தானும் மிகுந்த ஊதியமடைந்து ஆர்க்காடு, லாலாபேட்டை முதலான விடங்களில் சொந்தத் தொழிற்சாலைகளும் நிறுவி வாணிபஞ் செய்து வந்தார். இவருக்கும் நற்காலமிருந்தது. செல்வம் ஓங்கத் தலைப் பட்டது.

1742–ம் ஆண்டிலே முசியே தூப்ளே என்பவர் கவர்னராக வந்தார். இவர் முன்னம் 1720 முதல் 1731 வரை புதுச் சேரியில் வேலை பார்த்தவர். ஆதலாலே மக்கள் எல்லோரையும் நன்கறிந்தவர். திருவேங்கடம் பிள்ளை முதலானவர்களை நன்கறிவர். மிக்க உழைப்புடையவரான ஆநந்தரங்க பிள்ளையின் வேலையைக் கண்டு மெச்சியதோடு 1747–ல் அவரைத் துபாஷாகவும் செய்தார். அந்த உத்தியோகத்தை 1756-ல் விட்டார். பின்னர் ஐந்தாண்டு கழித்து 1761ம் ஆண்டு ஜனவரி மாதம் 12–ம் தேதி இம்மண்ணுலக வாழ்வை நீத்தார். இது இவரது சரித்திரச் சுருக்கம். இவருடைய பல பெருமைகளும் சாமர்த்தியமும் விளங்க, தான்செய்து

வந்த காரியங்களையும் கண்டவைக ளையும் இவர் குறித்து வைத்துள்ளார்.

அந்தத் தினசரிக்குறிப்பு 1736-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6-தேதி முதல் இறக்கும் வரையில் எழுதப் பட்டுளது. அக்குறிப்பில் அக்காலத் திலே நடந்த போர்ச் செயல்கள், இராஜ தந்திரங்கள், தினசரி நட வடிக்கைகள் முதலாயின காணப்படு கின்றன. மாதிரிக்காக ஒரு சம்பவம் கீழே குறிக்கின்றேன்.

'அட்சயவருஷசித்திரை மீ 4உ ஏப் ப்ரல் மீ 13உ புதன்கிழமை காலமே ஒன்பது மணிக்கு துரையண்டை யிலே நடந்த சேதி முன்னே பத்தே சிங்கு வைக்கீல் கேசவராய னென் கிறவன் வந்திருந்தானே யவன் பத்தேசிங்கு காகிதம் வந்துதென்று தன்னண்டையிலே யிருக்கிற வீங் கல் பிராமணன் கையிலே கொடுத்து துரை யண்டைக்கு யனுப்பிவைத் தான். அந்தக் காகிதத்தை மத ஞந்த பண்டிதரும் தானப்ப முதலி யும் படித்துக் காண்பித்தார்கள். அதிலே எழுதியிருந்த வயணம்: தஞ்சாவூர் சகசிராசா நிமித்தியம் நபாபு அன்வர்த்திகானுக்கு தாக் கீது யெழுதியனுப்பி வைத்தோம். அவன் சட்டை பண்ணுமல் போ ஞன். அதினுலே யென்னமாச்சுது? நாமும் பவுஞ்சு கூட்டிக் கொண்டு வந்து அதற்கு யெப்படி நடக்க வேணுமோ அப்படி நடப்பிக்கி ரோம். இப்பவும் கேசவராயன் வந் திருக்கிருனே. இவ்விடத்திலே பவுஞ்சு வைக்கவேண்டி யிருக்கிற படியினுலே சிலவுக்கு வேண்டியிருக் கிறது. இருபதினுயிரம் ரூபா கொடு த்தால் தஞ்சாவூர் சம்மதியிலே யாகிலும் யல்லவென்றுல் சந்தா சாயபு பேரிலே வரவேண்டிய பணம் அவ்விடத்திலே செல்ல வேண்டி யிருக்குதே யந்தப்பணத் திலே வாங்கி உங்களுக்குச் சம்மதி பண்ணிப் போடுகிருே மென்றும் மைத்த சமாசாரங்களுக் கெல்லாம் நாங்கள் அவ்விடத்திலே வந்தால் சமட்சமாய்ப் பேசிக் கொள்ளச்சே தெரிய வருமென்று மிகுந்த உப சாரமாய் எழுதினபடிக்கு படித் துக் காண்பித்துச் சொன்ன விடத் திலே துரை யிருந்துகொண்டு இந் தக் காகிதமெழுதி யிருக்கிற சாடை யைப் பார்த்தால் அடித்தலத்திலே யிருந்து வந்ததாய்க் காணவில்லை. நடுவாந்தரத்திலே பிறந்த சாடை யாய்க் காணுதே யல்லாமல் அக வாய்க் காணவில்லை யென்றும் இந் தக் காகிதம் எப்போதும் எழுது கிற முனிசி எழுதினதாய்க் காண வில்லை யென்றும் அவர்கள் எழுது கிற பேச்சு வேறே இந்தக் கடு தாசி வேறே. இது பார்த்தால் சிறு பிள்ளைகள் எழுதினுப்போலே காணுது. அவர்கள் எழுதினுல் இத் தனை உபசாரம் எழுதார்கள் இத் தனை பஞ்சப் பாட்டு எழுதார்கள். ஆனபடியினுலே இந்தக் காகிதம் அவர்கள் காகிதமல்ல; வேறே இவ் விடத்திலே சிருஷ்டித்தாப்போலே இருக்குதென்று சொன்னதற்கு, துரையும், 'எனக்கு மப்படித்தான் தோத்துது' யென்று சொல்லி 'நாளைக்கு அந்த கேசவராயன் வந் தால் எல்லாம் பேசிக் கொள்ளுவோ மென்று அவனண்டையி லிருந்து வந்திருக்கிற வீங்கல் வக்கீலுக்குச் சொல்லி யனுப்பினுர்கள். இந்தச் சேதி யெல்லாம் மதனுந்த பண்டி தர் வந்து என்னுடனே சொன்னுர்.

பத்து மணி நேரத்திலே நட ந்த தென்ன வென்றுல்:—

வந்தவாசி திருவேங்கிட பிள்ளை காவலிலே யிருந்தவனையும் திருச்சிறுப் பள்ளி தளவாய்கஸ்தூரி ரெங்கய்யன் பெண்சாதியையும் அழைத்து வந்தார்கள். இருதிறத்தாரையும் அழைப்பித்து அவளாலல் கொடுத்தோமென்று சொல்கிறுள். நீயானால் வாங்கினதில்லையென்று சொல்லுகிறாய் நீ வாங்கின தில்லை யென்று வேதபுரியீசுவரன் கோயிலிலே தீபத்தை நிறுத்தி சத்தியம் பண்ணிக்கொடு யென்று சொல்லி வீரா செட்டி என்கிறவனையும் அழைப்பித்து 'நீ இந்தச் சீட்டு நான் எழுதினதில்லை யென்று விளக்கு நிறுத்தி சத்தியம் பண்ணிக் கொடு'யென்று சொன்னார். நல்ல தென்று திருவேங்கடமும் வீரா செட்டியும் சொன்னார்கள். அதன் பேரிலே திருவேங்கடத்தை பார்த்து கும்பினீர் உத்தியோகஸ்தனயிருந்து சத்தியம் பண்ணுகிறது நியாயமல்லவென்று சொல்லி சத்தியம் பண்ணினால் உனக்கு காரைக்காலிலே கும்பினீர் உத்தியோகம் கவையில்லையென்று துரை சொன்னதற்கு உங்கள் தயவினாலே உங்கள் உத்தரவான பிற்பாடே காரைக்காலுக்குப் போவேனென்று சொன்னாலும் அதுக்குச் சும்மாயிருந்தார். அதின் பிற்பாடு அந்தப் படிக்குப் போய் சத்தியம் பண்ணச்சொல்லி உத்தாரங் கொடுத்து தானப்பமுதலியார் மனிதன் ஆசாரப்ப முதலி மச்சான் முத்துக் குமாரனும் தளவாய் கிரிமாசி பண்டிதரும் அண்ணமலை நயினாரும் கூடிப் போய் கிட்டயிருந்து சத்தியம் பண்ணிவைத்து வரச் சொல்லி அனுப்பி வைத்தார்கள். அவர்கள்போகச்சே நானிருக்கிற பாக்குக் கிடங்கிலே வந்து நடந்த பூர்வோத்திர மெல்லாம் சொல்லி சத்தியத்துக்கும் போரோமென்றும் சொன்னார்கள். பள்ளங் கண்ட விடத்திலே தண்ணீர் நிற்கிறது உங்களுக்கு மனதிலே களங்கமில்லாமற் போனால் சங்கையென்ன விருக்குது. ராட்சிய மெல்லா மறியாதா வென்று சொல்லிப் போகச் சொன்னேன். அந்தப் படிக்கு வேதபுரி யீசுவரன் கோவிலுக்குப் போனார்கள். போய் சத்தியம் பண்ணச்சே வந்தவாசி திருவேங்கிட பிள்ளை சொன்னது. 'நானிவளுடனே மூணுதரம் போய் இருபத்தொன்பது பணமும் ரெண்டு வேளை படியரிசி எனக்குக் கொடுத்தது அறிவேனேயல்லாமல் மைத்தப் படிக்கு இவள் கையிலே நான் வராகன் வாங்கினதுமில்லை இவளுக்குச் சீட்டெழுதிக் கொடுத்ததுமில்லை' யென்று சொல்லித் தீபத்தை யணைத்து சீட்டையும் கிழிச்சான். வீரா செட்டி யென்கிறவன் இந்தக் கடன் சீட்டு நான் எழுதினதில்லை; இத்தச் சீட்டு வரலாறும் நானறியேன் என்று தீபத்தை யணைச்சான். அப்போ கஸ்தூரி ரெங்கய்யன் பெண்சாதி சொன்னது இப்படி முன் சொன்னதினாலேதான் நானிப்படி செய்தேன். இன்னும் வாய்க் கொழுப்புப் போகவில்லையென்று அந்தச்சபையிலே சொன்னாள். அதின்பிற்பாடு கஸ்தூரி ரங்கய்யன் பெண்சாதிக்கு வெளிக் காவலாய் பார்த்துக்கொண்டிருந்த இரண்டு தலையாரி சேவுகரிருந்தவர்களையும் நயினார் துரையவர்களுத்தாரப்படிக்கு வாங்கிவரச் சொன்னார். அந்தப்படிக்கு வாங்கிப் போனார்கள். திருவேங்கிடப்பிள்ளையும் சத்தியம் பண்ணினப்போலே

காவல் விடுதலையாய் விட்டே போனன். அந்த வியாச்சியம் துடர்ந்தது குரோதன வரு அற்பிசி மீ 7வ. சேவுகன் வந்து கஸ்தூரி ரெங்கய்யன் பெண் சாதி ஆயிரம் வராகனும் வட்டியும் கொடுக்கச் சொல்லி மதிப்பு வந்திருந்தது 25வ. மேலண்டைக் கோட்டை வாசல் படியிலே கொண்டுபோய்க் காவல்வைத்ததும் அதற்குப் பிறபாடு கிழண்டை வாசப்படியிலே சிறினநாள் காவலிலிருந்தும் அதன் பிறபாடு சாவடியிலே, காவலிருந்தும் இன்றைய தினம் விடுதலையான மட்டுக்கும் யாறு மாதத்துக்கு மூணு நாள் குறைச்சலாய் விடுதலை யாச்சுது. இந்த ஆறு மாசக் காவலிருக்கப் பிராப்தி யிருக்கச்சே இதற்கு முன்னேயே யென்ன பிரயத்தனம் பண்ணினாலும் நடக்குமா? சுவாமி சங்கல்பத்தை தள்ளுகிறதுக்கு ஒருத்தராலேயு மாகாது.'

ஆனந்தரங்க பிள்ளையின் வீடு ஒரு இராச சமூகம் போலவே காணப்படும். அவர் பல துறைகளிலும் வல்லவராக விருந்தார். இராஜ தந்திர நிபுணர் என்பது அவருடைய தினசரிக் குறிப்புக்களிலிருந்து நன்கு விளங்குகிறது. அநேக புலவர்களை யாதரித்து வந்தார். அதனாலே இவர் மேல் பாடிய பாடல்கள் பலவாகும். இவரால் ஆதரிக்கப்பட்ட புலவர்களும் பல்லோ ராவர். அவர்களைக் குறித்த விவரம் பின்னொரு முறை கூறுவோம்.

கண்ணீர் விட்டுக் கதறும் கைம் பெண்கள் எத்தனை பேர்?

இந்தியாவில் கைம் பெண்களின் துயரம் சில சில சமூகங்களில் மிகக் கொடுமையாக இருக்கிறது. இந்தச் சகோதரிகள், மொத்த ஜனத்தொகையில் 1000க்கு எத்தனை பேர் என்பதை, வயது வாரியாகக் கீழே காணலாம்:—

வயது					1000 பேருக்கு
1	வயதிலிருந்து	5	வயதுவரை	—	1
5	,,	10	,,	—	5
10	,,	15	,,	—	10
15	,,	20	,,	—	34
20	,,	30	,,	—	78
30	,,	40	,,	—	212
40	,,	60	,,	—	507
60	க்கு மேல்			—	802

பத்ருத்தீன் தையாப்ஜி

ஜனனம்—1844 மரணம்—1906

—ஒரு காங்கிரஸ் வாதி

காங்கிரஸ் மகாசபையின் பகிரங்கக் கூட்டத்திலே வாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் எல்லாத் தீர்மானங்களும் முதலில் விஷயாலோசனைக் கமிட்டியில் இரகசியமாக அலசிப் பார்க்கப்படுவது வழக்கம். இந்த வழக்கம் முதன்முதலாக ஏற்பட்டது மூன்றாவது காங்கிரசில். இது சென்னையில் 1887-ம் வருஷம் கூடியது. இந்தக் காங்கிரசிலிருந்துதான், ஒவ்வொரு வருஷமும், காங்கிரஸ் சபை கூடுவதற்கு இரண்டு மூன்று தினங்கள் முன்னாடியே மாகாணத் தலைவர்கள் 'விஷயாலோசனைக் கமிட்டி' யாகக் கூடி, என்னென்ன பிரச்னைகளை வாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அலசிப் பார்ப்பது வழக்கமாக ஏற்பட்டது.

மூன்றாவது காங்கிரஸ் சென்னையில் மக்கே தோட்டத்தில் கூடியது. 607 பிரதிநிதிகளும் சுமார் 3000 பார்வையாளர்களும் விஜயஞ் செய்திருந்தனர். ராஜா ஸர் டி. மாதவராவ், வரவேற்புக் கழகத் தலைவராயிருந்து மிகத்திறமையாக காங்கிரஸை நடத்தி வைத்தார்.

முதல் விஷயாலோசனைக் கமிட்டியில் யாரார் அங்கத்தினர்களா யிருந்தார்களென்பதைக் கேட்க நமக்கு எவ்வளவு ஆசையா யிருக்கிறது?

வங்காளம், அஸ்ஸாம், ஒரிஸா

1. உமேச சந்திர பானர்ஜி 2. டாக்டர் த்ரைலோக்யநாத் மித்ரா, 3. சுரேந்திரநாத் பானர்ஜி 4. நரேந்திரநாத் சென்.

பீஹார்

5. சாளிக்ராம சிங் 6. குரு பிரசாத் சென்.

பம்பாய், சிந்து

7. நாராயண சந்தாவர்க்கர் 8. காரே 9. துருவா 10. நாம்ஜோஷி 11. கோவிந்த பக்ஷி.

வட மேற்கு எல்லைப்புற மாகாணம், அயோத்தி

12. மௌல்வி ஹமீத் அலி 13. ராஜா ராம்பால் சிங் 14. ராமகாளி சௌதரி 15. பண்டித மதன்மோகன மாளவியா.

பஞ்சாப்

16. பண்டித சத்யானந்த அக்னிஹோத்ரி 17. லாலா முரளிதர்.

சென்னை

18. எ. ஓ. ஹ்யூம் 19. சபாபதி முதலியார் 20. சங்கரன் நாயர் 21. டப்ளியு. எஸ். காண்ட்ஸ்.

இந்த மூன்றாவது காங்கிரசுக்குத் தலைமை வகித்தவர் ஜனாப் பத்ருத்தீன்

தையாப்ஜி என்பவர். இவர் அந்தக் காலத்தில், இந்தியா முழுவதும் செல்வாக்குப் பெற்றிருந்ததோடு கூட, ஆங்கிலம் படித்த அறிஞர்களுள் ஒருவராகவும் மதிக்கப் பட்டார்.

தையாப்ஜி குடும்பத்தினர், பல நூற்றாண்டுகளுக்கு முன்னர், அரேபியாவிலிருந்து பம்பாய்க்கு வந்து குடியேறினார்கள். இந்தக் குடும்பப் பரம்பரையிலே தையாப்ஜி பாய் மியான் சாய்பு என்பவர், பம்பாயிலே செல்வாக்கான வியாபாரியாக இருந்தார். தவிர, நல்ல படிப்பாளி என்றும் பெரிய மனிதர் என்றும் பெயரெடுத்திருந்தார். இவருடைய திருக்குமாரராக 1844-ம் வருஷம் அக்டோபர் மாதம் 8-ந்தேதி பத்ருத்தீன் தையாப்ஜி பிறந்தார்.

பத்ருத்தீன் பாலியத்தில், தாதா மக்ரா மத்ரஸாவில் உருது பாஷையையும் பர்ஷிய பாஷையையும் கற்றுக் கொண்டார். பின்னர், எல்பின்ஸ்டன் கல்லூரியில் போய்ச் சேர்ந்து உயர்தரப் படிப்பில் கவனஞ் செலுத்தினார். ஆனால் தொடர்ந்து படிக்க முடியவில்லை. ஏனென்றால், இவருக்கு கண் நோய் ஏற்பட்டு அதிக உபாதைப் பட்டார். எனவே, இவர் தகப்பனார் இவரைக் கண் வைத்தியத்திற்கு பாரிஸுக்கு அனுப்பினார். அங்கே சிகிச்சை செய்து கொண்டு, லண்டனுக்குச் சென்று 1860-ம் வருஷம் நியுபரிஹைபார்க் காலேஜில் சேர்ந்து படித்து மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறினார். ஆனால், தேக அசௌக்கியம் காரணமாக மேற்படிப்புப்படிக்க முடியாமல், தாய்நாடு திரும்பினார்.

அந்தக் காலத்தில், இங்கிலாந்தில் ஏதேனும் ஓர் உயர்தரப் பரீட்சையில் தேறி வந்தவர்கட்குத் தான் உத்தியோகமும் பண வருவாயும் கிடைத்துக் கொண்டிருந்தன. எனவே, 1865ம் வருஷம் இவர் மறுபடியும் லண்டனுக்குச் சென்று பாரிஸ்டர் பரீட்சையில் தேறி, 1867ம் வருஷம் நவம்பர் மாதம் இந்தியா திரும்பினார். பம்பாய் ஹைகோர்ட்டில் ஒரு பாரிஸ்டராகப் பதிவு செய்து கொண்டு, தொழிலைத் துவங்கினார். இவருடைய தமையனான கமருத்தீன் தையாப்ஜி என்பவர் அப்பொழுது ஓர் அட்டர்னியாக இருந்து நல்ல சம்பாத்தியம் சம்பாதித்துக் கொண்டிருந்தார். இதனால் பத்ருத்தீன் தையாப்ஜிக்கு வக்கீல் தொழிலில் நல்ல பயிற்சி ஏற்பட்டது. அந்தக் காலத்தில், ஹைகோர்ட் பாரிஸ்டர்களாக இருந்தவர்கள் பெரும்பாலோர் ஐரோப்பியர். இதனால் பத்ருத்தின், அதிக சிரமப் பட்டு முன்னுக்கு வரவேண்டியிருந்தது. குறுக்கு விசாரணை செய்வதில் மகா சமர்த்தர் என்று இவர் பெயரெடுத்தார். ஒரு சமயம், பிரதம நீதிபதியாயிருந்த ஸர் மைக்கேல் வெஸ்ட்ரோப் என்பவருடைய முன்னிலையில் நடைபெற்ற கிரிமினல் வழக்கொன்றில் தையாப்ஜி ஆஜராகி, தம் கட்சிக்காரனை விடுதலை செய்வித்தார். மறுநாள், 'பம்பாய் கெஜட்' என்ற பத்திரிகை, தையாப்ஜியின் வாதத்தைக் கண்டித்து எழுதியிருந்தது. இதனைப் பார்த்த பிரதம நீதிபதி, கோர்ட்டிலேயே பகிரங்கமாக தையாப்ஜியின் வாதத்தைத் தாம் பெரிதும் மெச்சுவதாகவும், மேற்படி பத்திரிகை கூறியதைத் தாம் மறுப்பதாகவும் தெரிவித்தார்.

வக்கீல் தொழிலில் தம்மை ஸ்திரப் படுத்திக் கொண்ட பிறகு தான் இவர் பொது வாழ்வில் ஈடுபட்டார். அப்படி ஈடுபட்டது 1879ம் வருஷம் மே மாதம். அப்பொழுது பம்பாயிலுள்ள முக்கியஸ்தர்கள் சேர்ந்து

மான்செஸ்டரிலிருந்து வரும் ஜவுளி களுக்கு இறக்கு மதித் தீர்வை விதிக் கக் கூடாதென்று ஒரு கண்டனக் கூட்டம் போட்டார்கள். அப்பொழுது தையாப்ஜி நிகழ்த்திய சொற்பொழிவு பெரிதும் பாராட்டப் பட்டது. இவ ருடைய வயது அது காலை 35தான். இவருடைய நாவன்மையைக் கண்டு 1882ம் வருஷம் பம்பாய் கவர்ன ரான ஸர் ஜேம்ஸ் பெர்க்குஸன் என்பார், இவரை பம்பாய்ச் சட்ட சபைக்கு ஓர் அங்கத்தினராக நிய மனம் செய்தார். சட்ட சபையில் கொண்டு வரப்படும் எந்த மசோ தாவையும் அல்லது எந்தத் தீர்மா னத்தையும், இவர் அலசி ஆராய்ந்து பேசுவார். இவருடைய சாமர்த்தியத் தைக் கவர்னர் பன்முறை வியந்து பாராட்டினர். இது முதற் கொண்டு இவர் எந்தப் பொதுக் கூட்டத்திலும் பேசுமாறு கேட்டுக் கொள்ளப் பட் டார். இவருடைய பேச்சு என்றால் ஆயிரக் கணக்கான ஜனங்கள் கூட ஆரம்பித்தார்கள். இவருடைய நாவன் மைக்கு ஓர் உதாரணம் கூறுவோம்: இவருடைய காங்கிரஸ் தலைமைப் பிர சங்கத்தின் போது, மொத்தம் 54 தடவை, ஜனங்கள் கை கொட்டி ஆரவாரித்தார்களென்றால் இவரு டைய வாக்கு வன்மையில் அவர்கள் எவ்வளவு ஈடுபட்டிருக்க வேண்டு மென்பதை நாம் விஸ்தரித்துக் கொண்டு போக வேண்டுமோ?

பொது வாழ்விலே ஈடுபட்டு இவர் செய்த பொது நலத் தொண்டைப் பாராட்டு முகத்தான், மூன்றாவது காங்கிரஸுக்கு இவரைத் தலைவரா கத் தெரிந்தெடுத்தார்கள் பொது ஜனங்கள். சென்னையிலே அந்த வரு ஷத்தில் தான்—1887ம் வருஷம் முதன் முதலாகக் காங்கிரஸ் கூடியது. அந்தக் காலத்தில் முஸ்லீம்கள் காங்கி ரஸில் சேரலாமா கூடாதா என்ற பிரச்னை மும்முரமாக வாதிக்கப் பட்டு வந்தது. ஆனால், தையாப்ஜி, தேச நலமானது காங்கிரஸ் வளர்ச்சியிலே தான் இருக்கிறதென்பதை நன்றாகத் தெரிந்து கொண்டு, காங்கிரஸில் தீவி ரமாக ஈடுபட்டார்.

முஸல்மான்களிடையே ஆசார சீர் திருத்தம் செய்ய முன் வந்தவர் தையாப்ஜி. ஹிந்துக்களும், முஸல் மான்களும் அரசியலிலே அதிக கவ னஞ் செலுத்துகிறார்களே தவிர சமூக சீர்திருத்தத்திலும், கல்விச் சீர்திருத் தத்திலும் அதிக கவனஞ் செலுத்த வில்லையென்று இவர் அடிக்கடி கூறி வந்தார். 'ஒரு வழியிலேயே நம் கவ னமனைத்தையும் செலுத்திக் கொண்டு வருவதால் நாம் முன்னேற்றமடைய முடியாதென்று நம்புகிறவர்களில்நான் ஒருவன். நம்முடைய சமூக அந்தஸ் தையும் கல்வி அந்தஸ்தையும் நாம் உயர்த்திக்கொள்ள வேண்டும். நமது நாட்டாரில் பெரும்பாலோர் அறியா மையில் மூழ்கியிருக்கிறபோது, நமது தேசத்தின் தலைவிதி எதன்மீது நிர்ண யிக்கப் பட்டிருக்கின்றதோ அந்த உயர்தரக் கல்வியின் நன்மைகளை நமது ஜனங்கள் அறியாமலிருக்கிற போது, நாம் மிகவும் முற்போக்கான ஒரு பொறுப்பாட்சி முறையை விரும் புவதென்பது சரியாகாது' என்று இவர் ஓரிடத்தில் கூறியிருக்கிறார்.

ஆசார சீர்திருத்தஞ் செய்வதில் இவர் பேச்சளவோடு நிற்கவில்லை. தாமே அநுஷ்டானத்திற்குக் கொண்டு வந்தார். தமது குமாரத்திகளை மேற் படிப்புக்கு இங்கிலாந்துக்கு அனுப்பி னார். முஸ்லீம்களிடையே ஆங்கிலக் கல்வியைப் பரப்புகிற நோக்கத்தைக் கொண்ட ஒரு ஸ்தாபனத்தில் இவர் காரியதரிசியாகவும் தலைவராகவும் இருந்து பெரிதும் உழைத்தார். இப்

பொழுது, முகம்மதிய சகோதரர்களிடையே ஆங்கிலக்கல்வி அதிகமாகப் பரவி யிருக்கிறதென்றால் அதற்குக் காரணமாயிருந்தது தையாப்ஜியின் பேருழைப்புத்தான்.

தையாப்ஜியின் திறமையைக் கண்டு அரசாங்கத்தார் இவரை 1895ம் வருஷம் பம்பாய் ஹைகோர்ட் நீதிபதியாக நியமித்தனர். இவர், இந்த ஸ்தாபனத்திலிருந்து நீதி வழங்கியதை அனைவரும் பாராட்டினர். லோகமான்ய திலகர்மீது அரசாங்கத்தார் வழக்குத் தொடர்ந்தபோது, அவரை ஜாமீனில் விடுதலை செய்தது தையாப்ஜிதான்.

1903ம் வருஷம், தையாப்ஜி, அகில இந்திய முஸ்லீம் மகா நாட்டுக்குத் தலைமை வகித்தார். அலிகார் முகம்மதிய கல்லூரியின் வளர்ச்சியில் இவர் அதிகசிரத்தை எடுத்துக்கொண்டார்.

1906ம் வருஷம் இவருக்குப்பழைய கண் வியாதி வந்தது. உடனே சிகிச்சைக்காக இங்கிலாந்துக்குப் போனார். கொஞ்சம் சௌக்கியமும் அடைந்தார். ஆனால் திடீரென்று மாரடைப்பால் 1906ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 19ந் தேதி காலமானார். லண்டனில் இவருடைய ஞாபகார்த்தமாக நடைபெற்ற கூட்டத்தில் தாதாபாய் நௌரோஜி, கோகலே முதலியோர் கலந்து கொண்டு மிகவும் உருக்கமாகப் பேசினார்கள்.

விடுதலை—ஆனால் கட்டுப்பட்டேன்

—"தேவ கவி"

மதுரமான ஒரு சங்கீதம் என் செவிகளை நிரப்பியது. உடனே விட்டேன் வீடு வாசலை; துறந்தேன் பந்து மித்திரர்களை; ஓடினேன் வெளியே. தேவ லோகத்து அழகு ஒன்றைக் கண்டேன். பைத்தியம் பிடித்துவிட்ட தெனக்கு. அதன் பின்னாலேயே ஓடினேன்.

வாழ்க்கையின் லட்சியத்தை அடைந்து விட்டோம் என்ற உணர்ச்சி எனக்கு உண்டாயிற்று. சுக போகங்களையெல்லாம் உதைத்துத் தள்ளினேன். ஜன சேவை என்கிற விரதத்தை மேற்கொண்டேன்.

நான் நினைத்தேன் பந்த மற்றவனாகிவிட்டேன் என்று. ஆனால் எனது வாழ்க்கையின் பொக்கிஷமே! உன்னைத் தரிசித்தேன்; என் விரக்தி யெல்லாம் தலை கீழாகி விட்டது. உனது திருப்பாதங்களின் தொண்டனாகி விட்டேன். உனது காதல்கயிற்றால் என்னை இறுகக் கட்டி விட்டாய். எனது வாழ்க்கையை உன்னிடத்திலே அர்ப்பணஞ்செய்து விட்டேன்.

என் அன்பே! விடுதலை யடைந்தேன். ஆனால் உடனே கட்டுப்பட்டு விட்டேன். இல்லை; முக்தனும் கைதியும் ஒரே சமயத்தில் ஆகி விட்டேன்.

சினிமா உலகில் புரட்சி

—நமது ஹாலிவுட் நிருபர்

பல முள்ள அரசாங்கத்துக்கும் ஒரு தனி மனிதனுக்கும் போராட்டம். ராணுவத்தின் கௌரவம் பெரிதா? அல்லது நாட்டின் நீதி பெரிதா? என்பதில் அறிஞர்கட்குள் போராட்டம். கத்தியின் முனைக்கும் பேனாவின் முனைக்கும் போராட்டம். வஞ்சகனுக்கும் நிரபராதிக்கும் போராட்டம். தலைவனின் உத்தரவுக்கும் மனச்சாட்சிக்கும் போராட்டம். சுதந்தரத்துக்கும் அடக்குமுறைக்கும் போராட்டம்.

இப் போராட்டங்கள் ஒரு தனி மனிதனின் வாழ்க்கையிலே சில சம்பவங்களாக உருக்கொள்கின்றன. உண்மையில் நம்பிக்கையுடைய ஒரு தனி மனிதன், நாட்டின் பெருமையையும் நீதியையும் நிலை நாட்டுவதற்காக தனது வாழ்க்கையை அர்ப்பணம் செய்கிறான். இவன் யார்? பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பிரெஞ்ச் நாட்டிலே தோன்றிய எமில் ஸோலா (Emile Zola) எனும் சிறந்த ஆசிரியன்.

இவனுடைய வாழ்க்கையைச் சிறந்த சினிமாப் படமாகத் தயாரித்த பெருமை வார்னர் பிரதர்ஸ்க்கு (Warner Bros) உரியதாகும். கீழ்த்தரமான துப்பறியும் கதைகளில் கவனம் செலுத்தும் மக்கள், இப்பொழுது புதிய புத்தகங்களில், சிறப்பாக வாழ்க்கைச் சரித்திரங்களில் கவனம் செலுத்துவதைக் காண்கிறோமல்லவா? இப் புரட்சி புத்தக உலகில் மட்டுமல்ல, சினிமா உலகிலும் ஏற்பட்டு விட்டது. ஒரு தனி மனிதனின் வாழ்க்கைச் சரித்திரம், சினிமா உலகிற்குச் சிறந்த முறையில் வருவது இதுவே முதலாவதாகும்.

நியூயார்க் நகரிலுள்ள சிறந்த தியேட்டர் ஒன்றில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட ஜனங்கள் அமைதியாக உட்கார்ந்து இப்படத்தைப் பார்க்கின்றனர். எங்கும் நிசப்தம். எமில் ஸோலாவின் ஒவ்வொரு வார்த்தையையும் ஆர்வத்தோடு கேட்கின்றனர். பல சமயங்களில் இந்த ஜனங்களின் கண்களில் நீர் ததும்புகின்றது. சில சமயம் சந்தோஷ உணர்ச்சியால், சில சமயம் துக்கத்தினால், தங்களை மறந்து 130 நிமிஷங்கள் இப்படத்தைக் கண்டு மகிழ்கின்றனர்.

சாதாரணமாக ஒரு படம் 60 முதல் 75 நிமிஷம் வரைதான் காட்டப்படும். இப் படத்தின் தன்மையைக் கருதி இதனுடைய அளவை இரட்டித்துள்ளார்கள். ஆனால் ஒன்று மட்டும் உண்மை. இந்த 130 நிமிஷங்களில் ஒரு விநாடியாவது ஜனங்கள் சோர்வோ அன்றி ஆயாசமோ அடையவில்லை.

வறுமைக்கும் அறிவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டல்லவா? அறிஞனை எமில் ஸோலா வறுமையிலே பிறந்து வறுமையிலே சிறிது காலம் வாழ்ந்தான். இவன் 1840ம் வருடம் எய்க்ஸ் (Aix) எனுமிடத்தில் பிறந்தான். தந்தை இத்தாலியனுக்கும் கிரேக்கப் பெண்ணுக்கும் பிறந்தவர். தாய் பிரெஞ்சுக்காரி. எமில் ஸோலா இளமையிலேயே தனது தந்தையை இழந்தான். தாய் கஷ்டப்பட்டு வேலை செய்தாள். குடும்பத்தில் அரைக்காசு கூடக் கிடையாது. அன்றாட வேலை

யின் மூலம் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டுதான் வாழ்க்கை நடத்த வேண்டும். வேலை கிடைக்காவிட்டால் நாள் முழுதும் அக்குடும்பம் பட்டினி.

பாரிஸுக்குச் சென்றால் பிழைக்க வழியுண்டு என்று நினைத்தான் ஸோலா. பட்டணத்திற்குச் செல்பவர்கள் எல்லாம் பணக்காரர்கள் ஆவதில்லை யல்லவா? சிறிய குடிசையிலே தனது நண்பன் ஒருவனோடு வசித்தான் இவன். இச்சிறு குடிசைக்கு வாடகை கொடுக்க முடியாமல் இவன் பட்ட கஷ்டங்கள் பல. சில மாதங்கட்குப் பின்னர் ஒரு புத்தகக் கம்பெனியில் சிறு வேலை கிடைத்தது. அக்கம்பெனி இவனது முதலாவது புத்தகத்தை வெளியிட ஒப்புக்கொண்டது. புத்தகம் வெளியாயிற்று. ஆனால் விற்பனை மிகக் குறைவு. இப்புத்தகம் ராணுவத்தைத் தாக்கிய படியால் ராணுவ அதிகாரிகள் தங்கள் செல்வாக்கை உபயோகப்படுத்தி ஸோலாவுக்கு இன்னல் விளைத்தனர். புத்தகக் கம்பெனியின் முதலாளி ஸோலாவை வேலையினின்று நீக்கி விட்டான். பின்னர் புத்தகம் வெளியிட வழியில்லாததால் பத்திரிகைகட்கு எழுத ஆரம்பித்தான் ஸோலா. அந்நாளில் பிரான்சு, குடியரசாகவே இருந்த போதிலும் ராணுவத்தின் அதிகாரம் சிறந்து விளங்கிற்று. ராணுவம் புரிந்த கொடுமைகட்கு அளவே யில்லை. உண்மையை வெளியிட ஒரு சிறிதும் அஞ்சாத ஸோலா, ராணுவத்தின் தன்மையைக் குறித்துப் பல கட்டுரைகள் எழுதினான். இக்கட்டுரைகளில் உண்மையும், உணர்ச்சியும், தேசபக்தியும் ததும்பின. நாட்டின் உயிர் நாடியான விவசாயிகட்குத் தீங்கிழைத்தவர்களை அவர்கள் ராணுவ அதிகாரிகளாயிருந்தாலும் சரி, பணக்காரர்களாயிருந்தாலும் சரி, சுய நலங்கொண்ட கல்விமான்களாயிருந்தாலும் சரி—சிறிதும் அஞ்சாமலும் சலிக்காமலும் ஸோலாவின் பேனா முனை தாக்கிற்று.

ஸோலாவை உலகறியச் செய்த நூல் 'நானா' (Nana) என்பது. இந்நூல் ராணுவத்தின் ஊழல்களை பச்சையாகக் கூறுவது. இப் புத்தகத்தின் மூலம் ஸோலா, லட்சக் கணக்காகச் சம்பாதித்தான். என்றாலும் பத்திரிகைகட்கு எழுதுவதையும், புதிய புத்தகங்கள் வெளியிடுவதையும் இவன் விட்டபாடில்லை.

பணம், புகழ் இவை யிரண்டும் கிடைக்கும் பொழுது எத்தகைய சிறந்த மனிதனும் சிறிதாவது மாறுவது இயற்கை யல்லவா? தனது செல்வத்தைக் கண்டு பெருமை யடைந்தான் ஸோலா. தனது புகழைக் கண்டு இறுமாப் படைந்தான். 'வாழ்க்கையிலே எண்ணற்ற கஷ்டங்களை அனுபவித்தேன். இப்பொழுது போதிய செல்வம் கிடைத்திருக்கிறது. உண்மையை அஞ்சாமல் கூறுவதில் எனது வாழ்க்கையின் பெரும் பகுதியைச் செலவிட்டேன். சிறிது காலமாவது நான் அமைதியாக—சுகமாக—வாழக் கூடாதா? யார் எப்படியானால் எனக்கென்ன? நான் வேண்டுவது அமைதி—அமைதி. எனது வேலை ஒருவாறு முடிந்தது' என்று சில சமயம் கூறுவான். ஸோலா போன்றவர்களின் வேலை ஒரு காலத்திலும் முடியாது. ஒரு வேலை முடிந்தால் மறு வேலை தயாராயிருக்கும். அமைதி! வார்த்தை நன்றாகத்தான் இருக்கிறது. ஸோலா போன்ற சுதந்தர ஆசிரியர்கட்கு இவ்வுலகில் அமைதி ஏது?

கொடுமை! கொடுமை! அதற்கும் ஓர் அளவுண்டு. ஆனால் ராணுவத்தின் கொடுமைக்கு அளவே யில்லை. ராணுவத்தின் கொடுமைகள் எல்லாம் 'யுத்த தர்மம்' 'நாட்டுச்சேவை' 'தேச

பக்தி' 'வீரத்தனம்' என்ற போர்வைகளால் மூடப்படுகின்றன. அறிவின்றி, ஒருவரை ஒருவர் கொல்லும் மிருகத்தனம் வாய்ந்த இப் பித்தர்கட்கு 'வீரர்கள்' என்று பெயர். மனித உணர்ச்சிக்கும் இவ் வீரர்கட்கும் வெகுதூரம். ராணுவம் கட்டுப்பாடுடையது: என்றாலும் ஊழல்கள் பல. இந்த ஊழல்களைப் பொது ஜனங்கள் கண்ணிலிருந்து மறைப்பது கட்டுப்பாடு. என்ன கட்டுப்பாடு? உண்மையை வெளியிற் சொல்வதில்லை என்ற கட்டுப்பாடு!

பணம் ஒரு பொல்லாத வஸ்து. 'பணம் வந்திடப் பத்தும் பறந்து போம்.' தேசபக்தியும்கூடச் சிலசமயங்களில் பறந்து போகும். வெளிநாட்டிலுள்ள இந்தியர்களிற் சிலர் சிறந்த தேசபக்தர்கள். இவர்களிற் பலர் வறுமை வந்துற்ற பொழுது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சிறந்த உளவாளிகள் ஆகி விடுகின்றார்களல்லவா? இந் நிலை எக்காலத்திலும் எந்நாட்டிலும் உண்டு. பிரெஞ்சு ராணுவத்தைச் சேர்ந்த ஒரு கர்னல், ஜர்மனிக்கு உளவாளியானான். சில பீரங்கிகளை ரகசியமாக ஜர்மனிக்கு அனுப்புவதாக ஜர்மன் ஸ்தானீகருக்குக் கடிதம் எழுதினான். இக் கடிதம் எவ்விதமாகவோ பிரெஞ்சு ராணுவ அதிகாரிகளிடம் சிக்கிவிட்டது.

ராணுவ அதிகாரிகளின் அந்தரங்கக் கூட்டம். இந்தக் கர்னல், தான் கடிதத்தை எழுதவில்லையென்றும் ராணுவக் குழுவைச் சேர்ந்தபொறுப்புள்ள ஒருவன்தான் இதை எழுதியிருக்க வேண்டுமென்றும் சாதித்தான். ராணுவ அதிகாரிகளின் கையெழுத்துக்களும் வாழ்க்கை வரலாறுகளும் கொண்ட புத்தகத்தைப் பரிசோதித்தனர். காப்டன் டிரேபஸ் (Dreyfus) தான் இக்கடிதத்தை எழுதியிருக்க வேண்டுமென்றும் தீர்மானித்தனர். குற்றமற்ற டிரேபஸ், துரோகி எனக் குற்றஞ் சாட்டப்பட்டான். வஞ்சகமாக டிரேபஸை கைதியாக்கினர்; குற்றவாளியுமாக்கினர். ஆயிரக் கணக்கான மைல்கட்கப்பால் 'பேய்த்தீவு' (Devils Island) எனும் தனியிடத்தில் அவனைச் சிறை வைத்தனர்.

பாவம்! நிரபராதியான டிரேபஸ் கைதியானான். அவனது மனைவியும் மக்களும் ஏங்கினர். பொது ஜனங்கள் அவனைத் 'துரோகி' என்றே நினைத்தனர். பத்திரிகைகள் டிரேபஸைக் கண்டித்துத் தலையங்கங்கள் எழுதின. மூன்றாண்டுகள் சென்றன. ஜர்மன் ஸ்தானீகர் கர்னலுக்கு ஒரு கடிதம் எழுதினார். இக் கடிதம் பிரெஞ்சு ராணுவத்தாரிடம் சிக்கியது. கர்னல் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டார். ராணுவத் தலைவனுக்கும் ரகசிய இலாகாத் தலைவனுக்குந்தான் இவ்வுண்மை தெரியும்.

ரகசிய இலாகாவின் தலைவன் மனம் துடித்தது. டிரேபஸை விடுதலை செய்ய வேண்டுமென்றும் கர்னலைத் தண்டிக்க வேண்டுமென்றும் ரகசிய இலாகாத் தலைவன் வாதாடினான். ராணுவத் தலைவனின் கண்களில் தீப்பொறி பறந்தது.

'மூன்றாண்டுகளுக்கு மேற்பட்டு டிரேபஸை நாம் விடுவிக்க முடியாது. அவன் நிரபராதிதான். அவனை விடுவித்தோமானால் ராணுவத்தின் கௌரவம் அடியோடு பாழாகிவிடும். இந்த உண்மை உனக்கும் எனக்கும் மட்டுந்தான் தெரியும். இதை நீ வெளியிற் சொல்ல மாட்டாய். சொல்லக் கூடாது. இது உத்தரவு' என்றான் ராணுவத் தலைவன். ராணுவ கௌரவத்தின் முன்னே, **கேவலம்** நீதி எம்மாத்திரம்?

எவ்விதமாகவோ டிரேபஸின் மனைவிக்கு இக்கடிதத்தின் நகல் கிடைத்தது. மற்றும் பல முக்கிய கடிதங்களையும் எடுத்துக் கொண்டு ஸோலாவைப் பார்க்க ஓடினாள் டிரேபஸின் மனைவி. செல்வத்திலும் சுகத்திலும் புரண்டு கொண்டிருந்த ஸோலா, டிரேபஸின் மனைவி, தன்னைப் பார்க்க வந்திருக்கிறாள் என்பதை யறிந்ததும் தயங்கினான். 'என் கணவன் நிரபராதி. குற்றம் செய்தவன் ராணுவ உடையில் திரிகிறான். நிரபராதி தனித் தீவில் வாழ்க்கையைப் பாழாக்குகிறான். பிரெஞ்சு நாட்டில் நீங்கள் ஒருவர் தான் எனது கணவனைக் காப்பாற்றக் கூடும். நீங்கள் எனக்கு உதவி செய்வீர்கள். செய்யத் தான் வேண்டும்' என்று உருக்கமுடனும் உறுதியுடனும் கூறினாள் டிரேபஸின் மனைவி.

தர்ம சங்கடமான நிலை ஏற்பட்டது ஸோலாவுக்கு. டிரேபஸ் உண்மையில் துரோகி என்றும், துரோகி தண்டிக்கப்பட்டது நியாயமே என்றும் ஸோலா கருதினான். ஏன்? பிரெஞ்சு தேசம் முழுவதுமே அப்படித்தான் நினைத்தது. ஜர்மன் ஸ்தானீகர் கர்னலுக்கு எழுதிய கடிதத்தின் நகல், ஸோலாவின் மனதை அடியோடு மாற்றிற்று. வாழ்க்கையின் ஆரம்பத்தில், தான்பட்ட கஷ்டங்கள் எல்லாம் நினைவுக்கு வந்தன. ஒரு நிரபராதியின் வாழ்க்கை ஏன் பாழாக வேண்டும்? அவன் மனிதன் தானே? அவனுக்கு மனைவி மக்களும் உண்டல்லவா? ராணுவத்தின் பொய்யை, நாடு முழுதும் நம்புகிறது. ஆனால் நான் தனி மனிதன். ஆயினும் உண்மை எவ்வளவு பெரிது? உண்மையை யாரும் எப்பொழுதும் மறைக்க முடியாது. சில காலம் மறைந்ததுபோல் தோன்றும். ஆனால் உண்மையில் மறையாது' என்று கூறினான் ஸோலா. 'ல யூரப்' என்ற பத்திரிகையில் பிரெஞ்சு நாட்டின் குடியரசுத் தலைவருக்குப் பகிரங்கக் கடிதம் எழுதினான். இக்கடிதம் சரித்திரப் பெருமை வாய்ந்தது. உண்மை, வீரம், உணர்ச்சி முதலியவைகள் இக்கடிதத்தில் ததும்புகின்றன.

பொது மக்களிற் பலரும், ராணுவத்தால் தூண்டப் பெற்ற சிலரும் ஸோலாவை எதிர்த்தனர். இவ்வறிஞனின் அரிய நூல்கள் தீக்கிரையாக்கப்பட்டன. 'ல யூரப்' பத்திரிகாலயத்தை இடித்துத் தகர்த்தனர். ஸோலா, டிரேபஸ் ஆகிய 'இரு—துரோகி' களைப் போன்று உருவம் தயாரித்து அதனைக் கொளுத்தினர். ராணுவத்தார் ஸோலா மீது வழக்குத் தொடர்ந்தனர். நீண்ட நாள் வழக்கு நடைபெற்றது. நீதியும் ராணுவ அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டுவிட்டது. ஸோலாவும், அவன் வக்கீல்களும் டிரேபஸ் குற்றவாளி அல்லவென்றும் ராணுவம் குற்றமுடையதென்றும் நிரூபித்தார்கள். ஆயினும் என்ன பயன்? ஸோலாவைத் தண்டிக்கா விட்டால் தனது பதவியை ராஜிநாமாச் செய்வதாகப் பயமுறுத்தினான் ராணுவத் தலைவன். 'ஸோலாவைத் தண்டியுங்கள். ராணுவத்தின் கௌரவத்தைக் காப்பாற்றுங்கள்' என்று அலறினர் ராணுவ அதிகாரிகள். 'மனித உள்ளம்' படைத்த நீதிபதியும் பன்னிரண்டு ஜூரிகளும் 'ஸோலா குற்றவாளி' என்று ஏக மனதாய்த் தீர்மானித்தனர். ஒரு வருடச் சிறையும் மூவாயிரம் பிராங்க் அபராதமும். யாருக்கு? உண்மையை அஞ்சாது வெளிப்படுத்திய ஒரு சுதந்தர ஆசிரியனுக்கு!

ஸோலா, பிரான்சு தேசத்தில் மட்டுமல்ல, உலகிலே புகழ்படைத்தவன்.

அவன் நண்பர்கள் அவனை இங்கிலாந்து போய், பத்திரிகைகட்கு எழுதிப்போராடும்படி செய்தனர். மாதம் ஒன்றுக்குப் பத்து லட்சம் உணர்ச்சி ததும்பிய வார்த்தைகள் கொண்ட கட்டுரைகள் எழுதினான் ஸோலா. பிரான்ஸின் நீதி முறையை உலகம் எள்ளி நகையாடிற்று; ஏளனம் செய்தது. பிரெஞ்ச் அரசாங்கத்தில் மாற்றம் ஏற்பட்டது. புதிய யுத்த மந்திரிடிரேபஸின் வழக்கைஆராய்ச்சி செய்தான். உண்மை வெளியாயிற்று. கர்னல் தற்கொலை செய்து கொண்டான். ராணுவத்தலைவன் தனது பதவியை ராஜிநாமாச் செய்தான். மற்றைய அதிகாரிகள் சிறைப்பட்டனர்.

இங்கிலாந்தில் மறைந்து திரிந்த ஸோலாவுக்கு இவ்விஷயம் எட்டிற்று. ஒரு குழந்தையைப் போலத்துள்ளிக் குதித்தான். 'எனக்கு அறிமுகமில்லாத—எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத எந்த ஒரு மனிதனின் உரிமைக்காக எனது செல்வத்தை, நாற்பதாண்டுகள் சம்பாதித்த புகழைத் தியாகம் செய்து போராடினேனே, அந்த மனிதனின் கைகளை ஒருமுறையாவது நான் குலுக்குதல் வேண்டும்' என்று கூறி ஆனந்தக் கண்ணீர் பெருக்கினான்.

'சுதந்திரத்தின் பெருமையை நிலை நாட்டிய பிரான்சு தேசம் நீதியின் பெருமையையும் நிலைநாட்டி விட்டது. தேசத்தைத் துப்பாக்கியாலல்ல—எண்ணங்களினால் ஆள வேண்டும். உலகில் ஏன் ராணுவம் தலை விரித்தாடுகிறது? இக்கொடிய பேயை அடக்குவது அறிவுள்ள ஒவ்வொரு மனிதனின் கடமையல்லவா? இன்றிரவில் லட்சக்கணக்கான இளஞ் சிறுவர்களும் சிறுமிகளும் லண்டன், பாரிஸ், பெர்லின் முதலிய நகரங்களிலும் உலகின் ஏனைய பகுதிகளிலும் அமைதியாக உறங்குகின்றனர். இவ்விளங் கொழுந்துகள் பெரியவர்களான பின்னர் ஏன் ஒருவரை ஒருவர் கொல்ல வேண்டும்? ஒருவரையொருவர் கொல்வது தர்மமா? நீதியா? பெருமையா? இதனால் விளையும் பயன் என்ன? கோடிக்கணக்கான பணத்தை இம்மிருக உணர்ச்சியைப் பரப்புவதற்காக ஏன் செலவிட வேண்டும்?' என்றெல்லாம் பலவாறாக எண்ணுவான் ஸோலா. 'நீதி' எனும் பெயர்கொண்ட சிறந்த புத்தகத்தை டிரேபஸ் விடுதலைக்குப் பின்னர் 1902ல் எமில் ஸோலா எழுதினான்.

பேய்த்தீவில் தனிமையில் துன்பம் அநுபவித்த டிரேபஸ், அரசாங்க உத்தரவைக் கண்டு ஆச்சரிய முற்றான். சேனைகள் அணி வகுத்து நிற்க பிரெஞ்சு சேனையின் தலைமைப் பதவி அவனுக்கு அளிக்கப்பட்டது. எந்த ராணுவம் அவனைத் துரோகி என்று கருதி நாடு கடத்திற்றோ அதே ராணுவம் இன்று அவனைத் தனது தலைவனாகக் கொண்டது. ஓடிவந்த தனது மனைவியை அன்போடு கட்டித் தழுவினான். எல்லோரையும் உற்று நோக்கினான். 'ஸோலா—ஸோலா எங்கே' என்றான். அன்றைய பத்திரிகை யொன்றை அவன் கையில் கொடுத்தனர். தன்னை மறந்து கண்ணீருகுத்தான் டிரேபஸ். ஏன்? அப் பத்திரிகையின் முன் பக்கத்தில் பெரிய எழுத்துக்களில் காணப்படுவதென்ன?

'ஸோலா இறந்தான்.'

எதிர்பாராத விபத்தில் ஸோலா இறந்தான். ஆனால் அவன் புகழ் என்றும் இறவாது. உண்மை-உண்மை-உண்மை. இந்த ஒன்றுக்காகவே தனது சுகவாழ்க்கையை அர்ப்பணம் செய்தான்.

ஸோலாவின் வாழ்க்கை-அதிகாரத் திமிர் படைத்தவர்கட்கு—கேவலம் ஹானரரி மாஜிஸ்ட்ரேட் பதவி கிடைத்தால் வீதியிற் போகின்ற வண்டிக்காரனை அதட்டுகின்ற சுபாவம் படைத்தவர்கட்குப் புத்தி கற்பிக்கும். பணம், பதவி இரண்டிற்காகத் தேசத்தைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகளின் மனதை மாற்றும். தாங்களே அறிஞர்கள் என்று தற்பெருமை கொண்டிருப்பவர்களின் அறியாமையைப் புலப்படுத்தும். ஸோலாவின் தியாகம் இளைஞர்கள் உள்ளத்தில் புத்துணர்ச்சியை உண்டாக்கும். ஸோலா—சிறந்த மனிதன். அவனைப் போன்ற பலர் நம் நாட்டிலும் வாழ்ந்திருக்கின்றனர். அவர்களைப் பற்றி நாம் அதிகம் சிந்திப்பதில்லை. நாட்டுக்காக எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்த வீரர்களின் வாழ்க்கைச் சரித்திரம் என்றைய தினம் இந்தியச்சினிமாவில் தோன்றப் போகின்றது?

எமில் ஸோலாவாக நடித்தது யார்? பால் மியூனி (Paul Muni) எனும் தலை சிறந்த நடிகன். இப்படம் ஹாலிவுட்டில் வார்னர் பிரதர்ஸ் கம்பெனியாரால் சிறந்த முறையில் தயாரிக்கப் பெற்றது. எனவே ஒலிப் பதிவைப் பற்றியும் ஒளிப் பதிவைப் பற்றியும் கூற வேண்டிய அவசியம் இல்லை. என்ன ஆச்சரியம்? இந்தப் படத்தில் ஒரு பாட்டுக் கூட இல்லை. தமிழர்களாகிய நீங்கள் இதை எப்படி நம்பப் போகிறீர்கள்?

பள்ளிக்கூடங்களில் சினிமாக்கள்

பாட புத்தகங்களுக்குப் பதிலாக சினிமாக்கள் மூலமாகவே இப்பொழுது பிள்ளைகளுக்குப் பாடங்களைப் போதிக்கவேண்டுமென்று, இங்கிலாந்தில் எஸ்ஸெக்ஸ் மாகாணத்திலுள்ள ப்ரெண்ட்வுட் ஸ்கூலில் தீர்மானித்திருக்கின்றனர்.

சுமார் ஒரு வருஷ காலமாக மேற்படி பள்ளிக்கூடத்தில இது சம்பந்தமாக பரிசோதனைகள் நடத்தப்பட்டு வந்தன. பல விஷயங்களைத் தாங்கிய சுமார் இருநூறு படங்கள் வரை, ஒன்றன்பின்னொன்றாகப் பிள்ளைகளுக்குக் காட்டப்பட்டது. கடைசியில் இங்கிலீஷ், சாஸ்திரம், பூகோளம், பூதத்துவ சாஸ்திரம் முதலிய எல்லாப் பாடங்களையும் சினிமாப் படங்கள் மூலமாகக் காண்பிக்கலாம் என்ற முடிவுக்கு இப்பொழுது வந்திருக்கிறார்கள்.

பாடபுத்தகங்களுக்குப் பதிலாக சினிமாப் படங்களை உபயோகிப்பது இந்தப் பள்ளிக்கூடத்தில் தான் முதல் தடவை. சுமார் 700 படங்கள்வரை இந்தப் பள்ளிக்கூடத்தார் தயாரிக்கப் போகின்றனராம்.

பால் ம்யூனி யார்?

சினிமா உலகம் என்றழைக்கப் படுகிற ஹாலிவுட்டிலே பால் ம்யூனி இப்பொழுது ஒரு முக்கிய புருஷராக விளங்குகிறார். சினிமா நடிகைகளை 'நட்சத்திரங்கள்' என்று சொன்னால் இவரை 'சினிமா சூரியன்' என்று ஏன் சொல்லக் கூடாது?

பால் ம்யூனி ஆஸ்திரியா தேசத்தில் பிறந்தவர். இவருடைய மற்றொரு முழுப்பெயர் ம்யூனி வீஸென் ப்ரூண்ட் (Muni Weisen freund) என்பதாகும். இவர் பூரண அபேதவாதி. அபேதவாதக்கொள்கைகளை ஆராய்ச்சி செய்து அதன் நுட்ப திட்பங்களை நன்றாக அறிந்தவர்.

ரெய்னரும் பால் ம்யூனியும்

ம்யூனி, வறுமையிலே பிறந்தவர். வறுமை வாழ்க்கையைத்தான் நடத்தினார். அமெரிக்காவிலுள்ள ப்ரூக்லான்ட்ஸ் என்ற ஊரில் படித்தார். நியூயார்க் நகரத்திலேயுள்ள இட்டிஷ் ஆர்ட் தியேட்டரில், நடிக்கக் கற்றுக் கொண்டார். ஆனால் சினிமாவில் சேர்ந்து அதில் சிறப்பாக நடிக்க இவருக்கு நான்கு வருஷம் பிடித்தது. ஏதோ ஓரிரண்டு பாட்டுகள் தெரிந்து முகவெட்டும் இருந்து விட்டால் சினிமாவிலே வந்து சேர்ந்து விடுகிறார்களே நமது நாட்டில்; அந்த மாதிரியில்லாமல் இவர் தமது தொழிலில் பூரண கவனத்தைச் செலுத்தி அதில் நன்றாகப் பயின்றார். இவர் முதன்முதலாக நடித்த படம் 'ஸ்கார் பேஸ் (Scar Face) என்பது. இது 1932ம் வருஷம் பொது ஜனங்களின் முன்னிலையில் காட்டப் பெற்றது.

பின்னர் இவர் வார்னர் பிரதர்ஸ் என்ற சினிமா கம்பெனியுடன் ஒப்பந்தம்செய்துகொண்டு அதனால் தயாரிக்கப்படும் படங்களில் நடிக்கத் தொடங்கினார்.

இவர் நடித்த படம் ஒன்று 'நல்ல பூமி' (Good Earth) என்பது. இந்தப்படம் எடுக்க மீட்ரோ கோல்ட்வின் மேயர் கம்பெனியாருக்கு 75 லட்சம் ரூபாய் பிடித்ததாம். இதில்ம்யூனி, ஆறுவிதமானமாறு வேஷங்களில் தோன்றி நடிக்கிறார். இந்த வேஷங்களில் ஒவ்வொன்றையும் போட்டுக்கொள்ள ஒரு மணி நேரமும் கழற்றஒருமணி நேரமும் பிடிக்கிற தென்றால் வேஷப் பொருத்தம் எவ்வளவு அழகாக இருக்க வேண்டுமென்பதை நேயர்கள் ஊகித்துக் கொள்ள வேண்டியது தானே.

ம்யூனியோடு சேர்ந்து நடிக்கிறவர் லூயி ரெய்னர் (Louise Rainer) என்ற மாது. இவர்தான், மேலேயுள்ள போடோவில் காணப்படுகிறவர்.

ம்யூனியைப் பார்த்தால் உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? தென்னிந்திய பிராமணன் மாதிரியோ, சீனாக்காரன் மாதிரியோ இல்லையா?

புதிய கல்வித் திட்டம்

—மனு சுபேதார்
B. A., B. Sc. (Lond) Bar-at-Law

காங்கிரஸ் கட்சியினர், மந்திரிப் பதவிகளை ஏற்றுக்கொண்ட பிறகு, தேசத்தின்கல்வி முறையைஅடியோடு மாற்றியமைக்க வேண்டுமென்பதைப் பற்றிப் பல யோசனைகள் கூறப்பட்டு வருகின்றன. இது சம்பந்தமாக ஸ்ரீமான் சுபேதார், 'ஹரிஜன்' பத்திரிகையில் அரியதொரு கட்டுரை எழுதியிருக்கிருர். எவ்வித சிரமமுமின்றி, யாருக்கும் பாதகம் உண்டாகாமல், இந்தத் திட்டங்களை ஒரு தேசீய அரசாங்கம் விரைவில் நடைமுறையில் கொணர முடியும் என்ற முடிவுக்கு இதனைப் படிக்கும் வாசகர்கள் வருவார்கள் என்பது திண்ணம்.

'தனக்குத்தானே நிருவகித்துக் கொள்ளக்கூடிய கல்வித் திட்டம்' என்பதற்கு என்ன அர்த்தம் என்ருல், கல்விக்காகச் செலவழிக்கப் படும் தொகையானது, அந்த இலாகாவினுல் கிடைக்கும் வருமானத்தை ஏறக்குறைய ஒத்ததாக இருக்க வேண்டுமென்பதே யாகும். அதாவது, பள்ளிக்கூடச் சம்பளம், நன்கொடைகள் முதலியவைகளைக்கொண்டே, மேற்படி கல்வி இலாகாவுக்குச் செலவழிக்கப் படும் தொகையைச் சரிப்படுத்த வேண்டும். இப்பொழுது இந்த இலாகாவுக்காக அரசாங்கம் செலவழிக்கிற அவ்வளவு தொகையைச் செலவழிக்க வேண்டாம். இலாகாவை நிருவகிப்பதற்காகவும், மேற்பார்வை செய்வதற்காகவும் சொற்பத் தொகை செலவழித்தால் போதுமானது.

அரசாங்க பொக்கிஷத்திலிருந்து அதிகமான பணம் செலவழிக்கக் கூடாதென்கிற முறையில், இந்தத் திட்டம் அநுபவ சாத்தியமானதே. பூரண மதுவிலக்குத் திட்டம் அமுலுக்குவர வேண்டியிருப்பதால், கலால் இலாகாவின் வருமானம் இல்லாமலே போகும். இப்பொழுது இந்த இலாகாவிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் ஒரு பகுதிதான் கல்விக்குச் செலவழிக்கப்படுகிறது. இனி அந்த மாதிரி முடியாதல்லவா?

கல்வி இலாகாவுக்காகச் செலவழிக்கப்படுவதைப் பல அமிசங்களிலும் குறைக்க வேண்டும். எப்படியென்ருல்:—

(1) அதிகச் செலவு பிடிக்கக் கூடிய கட்டிடங்களிலிருந்து, குறைவான செலவு ஏற்படக்கூடிய கட்டிடங்களுக்குப் பள்ளிக்கூடங்களை மாற்றுதல்.

(2) ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் தவிர, மற்ற ஆசிரியர்களின் சம்பளங்களைக் குறைத்தல்.

(3) எந்த வயதில், கல்வி இலாகாவின் உயர்தர உத்தியோகஸ்தர்கள் பென்ஷன் பெற்றுக் கொள்ள வேண்டுமோ அந்த வயதில் அவர்களைப் பென்ஷன் பெறச் செய்தல். அவர்களுடைய ஸ்தானத்தைப் பூர்த்தி செய்யாமல், அவர்களுக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்களைக் கொண்டே மேற்படி உயர்தர உத்தியோகஸ்தர்களுடைய வேலைகளைப் பார்க்கச் செய்தல்.

(4) 'இந்தியன் எடுகேஷனல் சர்விஸ்' (I. E. S.) என்கிற உயர் தர உத்தியோகங்களுக்கு புதிய ஆட்களை நியமிக்காமலிருத்தல்; ஏற்கனவே நியமனம் செய்யப்பட்டுள்ள உத்தியோகஸ்தர்களை, அவர்களுடைய ஒப்பந்தப்படி, சாத்தியமான வரையில் விலக்கிவிடல்.

(5) கல்வி இலாகா உத்தியோகஸ்தர்களினால் ஏற்படும் பிரயாணச் செலவுகளைக் குறைத்தல்.

(6) தனிப்பள்ளிக்கூடங்களின் செலவைக் குறைத்துக் கொள்ளச் செய்தும், கட்டணங்களை அதிகப்படுத்தியோ, அல்லது நன்கொடைகளின் மூலமாகவோ, தங்கள் செலவைச் சரிப்படுத்திக் கொள்ளுமாறு செய்தும், மேற்படி தனிப்பள்ளிக்கூடங்களுக்குக் கொடுக்கப்படும் 'கிராண்டு'களைக் குறைத்தல்.

(7) விசேஷ காரணங்களுக்காக ஏற்படுத்தப் பட்ட பள்ளிக்கூடங்களை மூடி விடல்.

(8) தனிப்பட்ட நபர்களின் நன்கொடைகளின் மூலம் மிகத் திறமையாக நடந்து வரும் பள்ளிக்கூடங்கள் இருக்கப் பட்ட ஊர்களில் அரசாங்கப் பள்ளிக் கூடங்களையும் காலேஜ்களையும் எடுத்து விடல்.

(9) தங்கள் பெயரையோ அல்லது தங்கள் குடும்பத்தின் பெயரையோ ஞாபகார்த்தமாக வைப்பதற்குப் பெரிய தொகை நன்கொடையாகக் கொடுப்பதாக யாரேனும் முன் வருவார்களானால் அவர்கள் பெயருக்கு அரசாங்கப் பள்ளிக் கூடங்களை மாற்றி விடல்.

(10) பென்ஷன் பெற்றுள்ள அரசாங்க உத்தியோகஸ்தர்களையும் படித்த பெண் மக்களையும், கல்வி இலாகாவில் இலவசத் தொண்டு செய்யுமாறு கேட்டுக் கொள்ளல்.

(11) வேலையிலிருக்கும் எந்த நபரும், அரசாங்க உதவி பெறுவார்களானால், அங்ஙனம் உதவி பெறும் வரையில் தங்கள் நேரத்தைக் கல்விக்காகச் செலவழிக்க வேண்டுமென்று திட்டப் படுத்தல்.

(12) சனிக் கிழமைகளிலும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் மற்ற விடுமுறை நாட்களிலும் பள்ளிக்கூடங்களை வைத்து நடத்துதல். அதிகமான பள்ளிக்கூடங்கள் இல்லாத இடங்களில் இம்மாதிரி வகுப்புகள் நடத்ினால் கல்வியை ஜனங்களிடத்தில் சுலபமாகப் பரப்பலாம்.

(13) தேசத்தின் கல்வி அபிவிருத்திக்காக உதவி செய்ய வேண்டுமென்று பொது ஜனங்களைக் கேட்டுக் கொள்ளுதல்.

இவை சம்பந்தமான விவரங்களைப் பரிசீலனை செய்து நடைமுறையில் கொணர ஒரு மத்திய கல்வி போர்ட் நியமனம் செய்யப் படல் வேண்டும்.

நகரங்களிலே பணம் சம்பாதித்துப் பணக்காரர்களானவர்கள், தங்கள் தங்கள் கிராமங்களில் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்த ஒரு தொகையை ஒதுக்கி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப் பட வேண்டுமென்பதைப் பற்றியும், வேலையில்லாத நபர்களைக் கொண்டு கிராமங்களில் மூன்று மாதங்களில் பாடங்களை முடிக்கக் கூடிய மாதிரி வகுப்புகளை நடத்துமாறு ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதைப் பற்றியும் ஏற்கனவே பல அறிஞர்கள் யோசனை சொல்லியிருக்கிறார்கள்.

கிராமங்களில் ரேடியோக்களை வைத்து, காலையில் குழந்தைகளுக்கும் பகலில் பெண்களுக்கும் மாலை நேரங்களில் ஆண்களுக்கும் நல்ல விஷயங்களைப் போதிக்க வேண்டும். ஓரிடத்தில் ஓர் ஆசிரியர் மட்டும் இருந்து கொண்டு பல கிராமங்களுக்கும் இந்தப் போதனைகளைச் செய்யலாம். இதனால் எந்தெந்த ஆசிரியர்கள் எந்தெந்த விஷயத்தில் நிபுணர்களாயிருக்கிறார்களோ அந்தந்த ஆசிரியர்கள் அந்தந்த விஷயங்களைப் பற்றிப் பிள்ளைகளுக்குப் போதனை செய்தல் சாத்தியமாகும். இந்த ஆசிரியர்கள் தினம் ஒரு மணி நேரத்தை இந்த விஷயத்திற்காக இலவசமாகச் செலவழிக்குமாறு கேட்டுக் கொள்ளலாம். அல்லது தற்போது அரசாங்க உத்தியோகத்திலுள்ள ஆசிரியர்களைக் கொண்டு இந்த வேலையைச் செய்விக்கலாம். இதனால் ஒவ்வொரு கிராமத்திற்கும் 15 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை செலவு ஏற்படும். இது தவிர, ரேடியோ ஸ்தாபன சம்பந்தமான செலவுகள், இவற்றை மேற்பார்வை செய்தலினால் உண்டாகும் செலவுகள் முதலியவையே ஆகும்.

மேலே குறிப்பிடப் பட்ட திட்டங்களை ஊன்றிப் பார்ப்போமானால், கல்வி இலாகாவுக்குத் தற்போது ஏற்படுகிற செலவுகள் குறையுமென்பது நிச்சயம். அதிகச் செலவில்லாமல் கல்வி போதிக்கப்பட வேண்டுமென்று, காந்தியடிகள் கூறுவதனால், அரசாங்கமோ, தனி நபரோ கல்விக்காக ஒன்றும் செலவு செய்ய வேண்டியதில்லை யென்பது அர்த்தமல்ல. மற்றும், பிள்ளைகள், தங்கள் தேகப் பிரயாசையினால் சம்பாதிக்கிற பொருளைக்கொண்டு, அவர்களுடைய கல்விச் செலவைச் சரிப்படுத்திக் கொள்ள முடியுமென்று கூறுவதனால், சிறு பிள்ளைகளிடத்திலிருந்தே இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்பதும் அர்த்தமல்ல. பிள்ளைகளுக்குத் தொழிற் கல்வி பயிலுவிக்க வேண்டுமென்றும் இதனால் பல நன்மைகள் உண்டென்றும் இதுவரையில் நாம் கூறிக் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் இவையெல்லாம் வெறும் பேச்சாகத்தான் இருந்திருக்கிறது. இதுவரை, பிள்ளைகளின் அறிவு அபிவிருத்தியில்தான் அதிக கவனஞ் செலுத்தி வந்தோமே தவிர, அவர்களுடைய தேகம் நல்ல முறையில் வளர்ச்சி பெறவேண்டுமென்பதைப்பற்றி அதிக கவனஞ் செலுத்தினோமில்லை. இந்தத் தேகப் பயிற்சித் திட்டத்தை வியாபகமான முறையில் அமுலுக்குக் கொண்டு வருவோமானால் கல்விச் செலவு குறையும் என்பதில் என்ன சந்தேகம்?

ஃ ஃ ஃ

நல்ல சம்பளம் கொடுத்தபோதிலும் திறமையான ஆசிரியர்கள் அகப்படுவார்களா என்ற கேள்வி எழுவது சகஜந்தான். இந்தப் பிரச்னை ருஷ்யாவிலும் உண்டாயிற்று. இதை ருஷ்யா அரசாங்கத்தினர் எங்ஙனம் தீர்த்து வைத்தார்களென்றால், மேல் வகுப்பிலுள்ள பிள்ளைகளைக் கொண்டு, கீழ் வகுப்பிலுள்ள பிள்ளைகளுக்குப்பாடஞ் சொல்லிக் கொடுக்கச் செய்தார்கள். உதாரணமாக ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் நான்கு வகுப்புகள் இருக்கின்றனவென்று வைத்துக் கொள்வோம். நான்காவது வகுப்பில் படிக்கிற ஒரு பையன், முதல் வகுப்புக்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்க முடியாதா? முடியும் என்று நான் கருதுகிறேன். இந்த ஆசிரிய—மாணக்கர்கள், தங்கள் வேலையில் அதிக பெருமைகொள்வதோடு கூட, தங்கள் அறிவையும் கூர்மைப் படுத்திக் கொண்டவர்களா

வார்கள். இதனால் ஆசிரியர்கள் விஷயத்தில் செலவழிக்கப்பெறும் தொகைகளில் மூன்றில் ஒரு பங்காவது குறையும்.

நகரங்களிலே வீட்டு வேலை செய்யும் வேலைக்காரர்களுக்குக் கல்வி போதிக்கும் பொறுப்பை, அவர்களுக்குச் சம்பளம் கொடுத்து வேலை வாங்கும் எஜமானர்களிடத்திலே விட்டு விடலாம். ஜப்பானிலிருந்து வருஷந்தோறும் ஒரு லட்சம் பிள்ளைகள்—ஹைஸ்கூல்வரை படித்தவர்கள்—அமெரிக்காவுக்கு அனுப்பப் படுகிறார்கள். இவர்கள் அங்கே சென்று வீட்டு வேலைகளில் பழகுகிறார்கள். இவர்கள், இங்ஙனம் வீட்டு வேலைகளில் பழகுவதோடு கூட மேனாட்டுப் பாஷைகளையும் அவர்களுடைய பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொள்கிறார்கள். தவிர, தங்கள் தொழிலில் கொஞ்சம் பணஞ் சம்பாதித்துக் கொண்டு தாய் நாடு திரும்புகிறார்கள். இந்த மாதிரி, கிராமங்களிலுள்ள ஏழைப் பிள்ளைகளை, நகரங்களிலுள்ளவர்கள் வேலைக்கமர்த்திக் கொண்டு, அவர்களுக்கு நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொடுப்பதோடு, அவர்களுக்குக் கல்வி போதிக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளுமாறு செய்ய வேண்டும். இப்படிச் செய்வதனால், இந்தப் பிள்ளைகள் மீண்டும் கிராமத்திற்குப் போகமாட்டார்களென்றும், நகரத்திலேயே வசிக்க முற்படுவார்களென்றும், இதனால் நகரங்களிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டம் அதிகப்படுமென்றும் ஆட்சேபம் சொல்லப்படலாம். அப்படியிருந்தாலும், இப்பொழுதுள்ள மாதிரி, கிராமப் பிள்ளைகள் படிப்பில்லாமல் திரிவதைக் காட்டிலும் இங்ஙனம் படித்து விட்டுத் திரிவார்களல்லவா?

தற்போது நமது நாட்டில் தரும ஸ்தாபனங்களினுடையவும் கோயில்களினுடையவும் பணங்கள் ஏராளமாக இருக்கின்றன. இவற்றின் ஒரு பாகந்தான் மத விஷயத்திற்காக உபயோகப்படுத்தப் படுகிறது. மற்றவை அப்படியே தான் சும்மாயிருக்கின்றன. இந்தப் பொதுப் பணங்கள் ஒழுங்கான முறையில் உபயோகிக்கப் பெறவில்லை. இவைகளையெல்லாம் ஒரு முகப்படுத்தி, தேசத்தின் கல்வி அபிவிருத்திக்காகச் செலவழிக்கப்படச் செய்யலாம். உதாரணமாக:—

1 இந்தப் பொது ஸ்தாபனங்களை ரிஜிஸ்தர் செய்வித்து, கணக்குகளை ஆஜர்படுத்துமாறு செய்விக்கலாம்.

2 இந்தப் பொது ஸ்தாபனங்களுக்கென்று ஓர் உத்தியோகஸ்தரை நியமித்து, அவருடைய திட்டப்படி, இந்த ஸ்தாபனங்களின் பணத்தைச் செலவழிக்க வேண்டுமென்று திட்டப் படுத்தலாம்.

3 இந்தப் பொது ஸ்தாபனங்களுக்குச் சொந்தமான இடங்களையோ, இவற்றின் பணங்களையோ, பிள்ளைகளின் கல்விக்கென்றும், அவர்களுடைய சுகாதார வசதிகளுக்கென்றும், அல்லது அவர்களுக்குப் புத்தகம், பலகை முதலியன வாங்கிக் கொடுப்பதற்கென்றும் உபயோகப் படுத்துமாறு செய்விக்கலாம்.

இங்ஙனம் பொது ஸ்தாபனங்களின் பணத்தையும் செல்வாக்கையும் கல்வித் துறையில் திருப்புவது, மூன்று வருஷத்திலிருந்து ஐந்து வருஷத்திற்குள் சாத்தியமானதென்று நான் கருதுகிறேன். இது சம்பந்தமாக விரிவான திட்டங்களையும் நான் தயாரித்திருக்கிறேன்.

சீன—ஜப்பானிய யுத்தம்



நாங்கிங் நகரத்தின்மீது ஒரு ஜப்பானிய ஆகாய விமானி வெடிகுண்டுகளை வீசியெறிந்தபோது, ஓர் இங்கிலீஷ் கப்பலின் மீது வெடிகுண்டு ஒன்று பட்டுக் கப்பலையும் அடுத்தாற் போலுள்ள பாலத்தையும் தகர்த்தெறிந்து விட்டது.

லோக்-யே-காம் (Lok-ye-Kham) என்ற சீன ஆகாய விமானி.

இவன் ஒரே நாளில் ஐந்து ஜப்பானிய ஆகாய விமானங்களைச் சுட்டுக் கீழே வீழ்த்தினன்.

தோங்க்சு என்ற ஊரில் இந்தச் சம்பவம் நடந்தது.



தளபதி சியாங்கை ஷேக்கும் அவர் மனைவியும். அந்நிய நாட்டுப் பத்திரிகை நிருபர்களுடன் பேசிக் கொண்டிருக்கிற போது 24—9—37ல் எடுத்த படம்.

ஜப்பான் மந்திரி சபை.
இடது புறத்திலிருந்து மூன்றாவதாக இருப்பவர்
பிரதம மந்திரி கோனே.

கோரியா தேசத்தின் அரசியல் நிலைமை

—செயுங்-ஹ்வா-ஆஹ்ன்
Seung–Hwa–Ahn

இந்தக் கட்டுரையாளர் ஓர் அசல் கோரியர். கோரியா தேசத்தின் சுதந்திர இயக்கத்தில் கலந்து அரிய தொண்டுகள் ஆற்றியவர். அமெரிக்காவில் படித்துப் பட்டம் பெற்றவர். பல நூல்களையும் எழுதி யிருக்கிறார். கோரிய தேசீய இயக்கத்தின் பல அமிசங்களை நாம் அப்படியே அங்கீகரிக்க முடியா மலிருக்கலாம், ஆனால் இந்த இயக்கத்தில் சேர்ந்தவர்கள் அனைவரும் தாய் நாட்டின் சுதந்திரம் என்ற குறிக்கோளைக் கொண்டவர் என்பதை யாருமே மறுக்க முடியாதல்லவா?

கோரியா என்கிற சிறிய தேசம், ஆசியா கண்டத்தின் கிழக்குப் பாகத்தில், மஞ்சள் கடலுக்கும் ஜப்பான் கடலுக்கும் உள்ளே தலையை நீட்டிக் கொண்டிருக்கும் ஒரு தீபகற்பம். இதன் விஸ்தீரணம் 85,156 சதுரமைல். பல நூற்றாண்டுகளாக இந்த நாட்டின்மீது, சீனர்களும் ஜப்பானியர்களும் மாறி மாறிப் படையெடுத் திருக்கிறார்கள். கடைசியில் 1894ம் வருஷத்தில் சீனர்களும் ஜப்பானியர்களும் சேர்ந்து இந்த நாட்டின்மீது படையெடுத்தார்கள். சீனர்கள் தோல்வி யுற்றார்கள். ஜப்பானியர் வெற்றி பெற்றனர். கோரியா சுதந்திர நாடென்று நிர்ணயிக்கப் பட்டது. ஆனால் 1910ம் வருஷம், கோரியா தேசத்துச்சக்ரவர்த்தி, தன் ராஜ்ய அதிகாரங்களனைத்தையும் ஜப்பானுக்கு ஒப்புக்கொடுத்து விட்டான். அது முதல் இந்த நாடு, ஜப்பானிய ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்திருக்கிறது. ஜப்பானியர், இந்த நாட்டை 'சோ-ஸென் என்றழைக்கிறார்கள்.

உலகத்தி லுள்ள ஏகாதிபத்திய வல்லரசுகள் கடைசி வரையில் ஒரு கை பார்ப்பதென்று கச்சை கட்டிக் கொண்டிருக்கிற இந்தத் தருணத்தில், சுமார்இரண்டு கோடி கொரியர்கள், லௌகிகமாகவும் ஆத்மார்த்தமாகவும் அடிமைப் பட்டு கிடக்கிறார்கள். ஏனென்றால், ஆசியா கண்டத்தின் நுழைவாயில் போல் இருப்பதும், இயற்கை வளம் நிரம்பியதுமான இந்த நாடு, கீழ்த் திசை நாடுகளின் நிரந்தர யுத்தகளமாக இருக்கிறது.

செயுங்-ஹ்வா-ஆஹ்ன்

சுமார் நாலாயிரம் வருஷத்துச் சரித்திரப்பெருமை கொண்ட இந்த நாட்டை, ஜப்பானியமயமாக்க வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டு சென்ற முப்பது வருஷ காலத்திற்குள் இந்த நாட்டின் கலைஞானப் பெருமையை சுரண்டிக் கொண்டு வந்திருக்கிறார்கள்

ஜப்பானியர்கள். அடக்கு முறை என்கிற கருவியின் மீது ஏகாதிபத்தியப் பாட்டு பாடப் பட்டு வருகிறது. ஜப்பானிய நிலச்சுவான்தார்கள், முதலாளிகள் இவர்களுக்குச் சாதகமான முறையில் பொருளாதாரக் கட்டிடம் அமைக்கப் பட்டிருக்கிறது. கொரியத் தொழிலாளிகளுக்குக் குறைந்தகூலியே கொடுக்கப்படுகிறது. உயர்தர உத்தியோகங்களும் தொழில் துறைகளும் ஜப்பானியர்களுக்கென்று ஒதுக்கப் பட்டிருக்கின்றன. கொரிய தேச சரித்திரம் பள்ளிக்கூடங்களில் போதிக்கப் படக் கூடா தென்றும், கொரிய தேசபாஷை உத்தியோக சம்பந்தங்களில் உபயோகிக்கப் படாமல் இரண்டாம் பட்சமாகக்கருதப்பட்டும் வருகிறது.

இந்த நிலையில், கொரியாவின் எதிர்கால தேசிய வாழ்வுதான் என்ன? இதைத் தெரிந்து கொள்வதற்கு, கொரிய தேசியத்தின் பழமையிலும் கொஞ்சம் புகுந்து பார்க்கத்தான் வேண்டி யிருக்கிறது. கொரியாவின் சுதந்திரக் கிளர்ச்சி 1919-ம் வருஷத்தில் தொடங்கப் பெற்றது. இதன் பரிணமமே 'கொரிய தற்காலிக அரசாங்கம்' என்பது. இந்த அரசாங்கத்தின் வன்மையைப் புலப்படுத்த, இது 1937-ம் வருஷம் மார்ச்சு மாதம் முதல் தேதி வெளியிட்ட பின் வரும் அறிக்கையே சான்றாகும்:—

நமது அருமைத் தாய்நாட்டுச் சகோதரர்களே! தற்கால அரசாங்கக்கமிட்டியின் அங்கத்தினர்களாகிய நாங்கள், எங்களுக்கு முன்னேயுள்ள வேலையில் எங்கள் முயற்சிகளையும் மனத்தையும் ஒன்று படுத்திக்கொண்டிருக்கிறோம்.

ஜப்பானின் தோல்வி நிச்சயம். ஆதலின் 'பை-தாலி'ன் ஒவ்வொரு பிரஜையும், தேசிய தலைமை ஸ்தானத்திலிருந்து உத்திரவு வரும் போது யுத்தஞ் செய்வதற்குத் தயாராக இருக்க வேண்டும். எனென்றால் நாம் கடைசிவரையில் போராட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

(100 பேருக்கு மேல் கையெழுத்து)

எனவே, சுமார் இருபது வருஷகாலமாக இருந்து கொண்டிருக்கிற இந்தத் 'தற்காலிக அரசாங்கம்' இப்பொழுது மிகவும் சுறுசுறுப்பாக இருக்கிறது. இரகசியமாக நடைபெறும் இந்தத் 'தற்காலிக அரசாங்கக் கமிட்டி'யின் நடவடிக்கைகளைப் பற்றி ஜப்பானிய அரசாங்கத்திற்கு நன்றாகத் தெரியும். இதனை அடக்க அது பல கடுமையான முறைகளையும் கையாண்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான பேர் சிறையிலிருக்கிறார்கள். பலர் மரண தண்டனை விதிக்கப் பட்டனர். கொரியா, மேலுக்கு அமைதியாகக் காணப் பட்ட போதிலும் உள்ளே ஒரே குழப்பத்தில் இருக்கிறது.

கொரிய தேசிய இயக்கத்தின் மற்றோர் அமிசத்தின் வேலையை 'கொரிய தேச பக்தர்கள் சங்கம்' செய்து வருகிறது. இந்தச் சங்கத்தார், முக்கியமான ஜப்பானிய உத்தியோகஸ்தர்களைக் கொலை செய்வதென்று உத்தேசங் கொண்டுள்ளனர். இது சம்பந்தமாகச் சில சம்பவங்களும் நடைபெற்றிருக்கின்றன. சில கொரியர்களும் தண்டனையடைந்திருக்கிறார்கள்.

தற்காலிக அரசாங்கத்தின் மேற்பார்வையில் ராணுவக் கிளையொன்று

இருக்கிறது. இந்த ஸ்தாபனம் ஆயிரக் கணக்கான கொரிய இளைஞர்களுக்கு ராணுவப் பயிற்சி அளித்துக் கொண்டிருக்கிறது. இது தவிர, சைபீரியாவில் பல கொரியர்கள் ராணுவப் பயிற்சி பெறுகிறார்கள். இவர்களையெல்லாம் ஜப்பானியர்கள் கொள்ளைக் காரர்கள் என்று அழைக்கிறார்கள். இவர்களை அடக்கி விட்டதாக ஜப்பான் கூறிக் கொண்ட போதிலும் இந்த ராணுவப் படையினர் வலுத்துக் கொண்டுதான் வருகின்றனர். தவிர, 1936ம் வருஷத்திலிருந்து ஜிம் ஜி—ஹான் என்பவனுடைய தலைமையின் கீழ் மற்றொரு ராணுவப் படையும் தயாராகிக் கொண்டு வருகிறது.

1592ம் வருஷத்திலிருந்து கொரியா மீது ஜப்பான் படை யெடுத்துக் கொண்டு வந்திருக்கிறது. கடைசியில், தனது ஏகாதிபத்தியத்தின் கீழ் சேர்த்துக் கொண்டும் விட்டது. இந்தப் போராட்டங்களின் விளைவாகக் கொரியாவில் பல தேசிய வீரர்கள் தோன்றியிருக்கிறார்கள். இவர்களுடைய வீரச் செயல்கள், சரித்திர சம்பவங்களாகவே போற்றப்படுகின்றன. ஒரு விதவை ஸ்திரீக்கு ஒரே ஒரு மகன். இவன் தேகத்திலே மூன்று இடங்களில் குண்டு காயங்கள். தவிர, பன்னிரண்டு இடங்களில் ஈட்டிக்குத்துகள். இத்தனை காயங்களுடன் இவன் அருகிலிருந்த தாயாரிடத்தில் சொல்கிறான்:—'அம்மா! தயை செய்து என் காயங்களை எண்ணுங்கள். ஏனென்றால் இப்பொழுது நான் மோட்சத்துக்குப் போகிறேன். கடவுளிடத்தில், நம்மைத் தாக்குகிறவர்களுடைய குற்றங்களை எடுத்துச் சொல்வேன்.'

இங்ஙனமே, கொரிய தேசியக் கொடி பிடித்துக் கொண்டிருந்த பெண்கள், கொடுமைக்குள்ளாக்கப் பட்டதையும் அனைவரும் அறிவார்கள்.

கொரியாவைப்பற்றிய தேசிய உணர்ச்சி 'கொரிய தற்காலிக அரசாங்க' அங்கத்தினர்களோடு மட்டும் கட்டுப்பட்டிருக்க வில்லை. உலகத்தின் எந்தெந்த இடங்களில் கொரியர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் கொரிய தேசிய உணர்ச்சி இருந்து கொண்டுதான் இருக்கும்.

இப்பொழுது கொரியாவில் புதிதானதோர் இயக்கம் தோன்றிக் கொண்டு வருகிறது. இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், முதலாளித்துவத்திற்கும் ஏகாதிபத்தியக் கொள்கைக்கும் விரோதிகளாகக் கிளம்பியிருக்கின்றனர். இவர்களுக்கு, ஜப்பானிய ஜனங்கள் மீது எவ்வித குறையுமில்லை. இவர்களுடைய எண்ணமெல்லாம் ஜப்பானிய முதலாளி ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டுமென்பதுதான்.

ஆனால் எல்லாக் கொரியர்களும், எவ்விதக் கட்சி வேற்றுமையுமின்றி, தங்கள் தாய் நாட்டுச் சுதந்திரத்திற்காக உழைக்கச் சித்தமாயிருக்கிறார்கள்.

நான் ஓர் ஈயினுடைய தலையாக இருப்பதை விரும்புவேனே தவிர, சிங்கத்தின் வாலாயிருக்க விரும்பமாட்டேன்.

—விக்டர் ஹ்யூகோ

ஃ ஃ ஃ

இறந்த காலத்தைப்பற்றித் தெரிந்து கொண்டால் எதிர்காலம் தானாகப் புலப்படும்.

—கன்பூஷியஸ்

கனகாவின் கடிதங்கள்

— "சரசா"

கடிதம் III

17 நடுத் தெரு
கீழ வேளூர்
ஆகஸ்ட் 18

மாது ஸ்ரீ தாயார் குஞ்சம்மாளுக்கு பெண் கனகம் அநேக சாஷ்டாங்க நமஸ்காரம். அப்பா போட்ட கடிதம் கிடைத்தது. ஆனால் அது தட்டுக் கெட்டு இரண்டு நாள் கழித்துத் தான் கிடைத்தது. அப்பா, தனக்குத்தான் இங்கிலீஷ் தெரியுமென்று நினைத்துக் கொண்டு நடுத் தெரு என்பதற்கு 'நடு ஸ்டிரீட்' (Nadu Street) என்று அப்படியே இங்கிலீஷில் எழுதாமல் 'மிடில் ஸ்டிரீட்' (Middle-Street) என்று எழுதிவிட்டார். பட்டுக் கிடப்பான் போஸ்ட் மான் இதைத் தெரிந்து கொள்ளாமல் என்னென்னமோ முத்திரைகளைப் போட்டுக் கொண்டு வந்து கொடுத்தான். அதனால்தான் மேலே சரியான விலாசத்தை எழுதியிருக்கிறேன். அப்பாவின் கலெக்டர் ஜபர்தஸ்தி யெல்லாம எனக்கு எழுதுகிற கடிதத்தில் தானா காட்ட வேண்டும்?

அங்கிருந்து ஒரு வாரம் கடிதம் வரா விட்டால் எனக் கென்னமோ பித்துப் பிடித்தது போலாகி விடுகிறது. உன்னையும் அப்பாவையும் சேர்த்துத் திட்டிக் கூட விடுகிறேன். உன் கடிதம் இந்த வாரம் வரவில்லையென்று நான் பட்டபாடு எனக்குத்தான் தெரியும். 'என்ன, மூஞ்சியை ஒரு மாதிரியாக வைத்துக் கொண்டிருக்கிறாய்?' என்று என் மாமியார் கூட கேட்டு விட்டாள்.

தீபாவளிக்கு என்ன மாதிரியான சேலை வேண்டுமென்று அப்பா என்னைக் கேட்டிருக்கிறார். எனக்குச் சேலையும் வேண்டாம், என் மாமியாரிடத்திலே படுகிற தொல்லையும் வேண்டாம் போலிருக்கு. சுடச்சுட சிறு காராபூந்தி பண்ணியனுப்பினாயானால் பத்துப் புடவைகள் வாங்கியனுப்பின மாதிரி. என் நாக்கு அவ்வளவு மறத்துப் போயிருக்கு. இங்கே நல்ல பட்சணங்களுண்டா? இந்த ஊரிலே தான் நல்ல ஹோட்டல் இல்லையென்றால் ஆத்திலேயாவது புது மாதிரியாக ஏதாவது பட்சணங்கள் செய்யமாட்டார்களா அம்மா? திருப்பித் திருப்பி தேன் குழல், சீடை, பொருளங்காய் இவைகளைப் பண்ணி வைத்துக் கொண்டு தின்னு, தின்னு என்கிறாள் என் மாமியார். இந்தக் கர்நாடக பட்சணங்களை, நாகரிகமுள்ளவர்கள் கையால் தொடுவார்களா? இப்பொழுது தான் பேப்பர்களிலே, தினுசு தினுசு பட்சணங்களெல்லாம் பண்றதுக்கு மாதிரி சொல்லிக் கொடுக்கறாளே, அதுகளைப் பார்த்து ஏதாவது செய்யப்படாதா? உருளைக் கிழங்கு வடை, காப்பேஜ் ஸொஜ்ஜி, ரவை அடை இந்த மாதிரி பெயர்களை நினைச்சு நினைச்சு என் நாக்கிலே தண்ணீர் சொட்டிண்டிருக்கு. அது மட்டுமா? கண்ணிலேயும் தண்ணீர் வரது. அழ மாட்டாத குறை எனக்கு. வாய் ஊறுகிறது என்று யாரிடத்திலே போய்ச் சொல்லிக் கொள்கிறது? உன் மாப்பிள்ளையிடத்திலே தான் எப்பொழுதாவது சொல்வேன். அவர் இரகசியமாக ஏதாவது பட்சணம் வாங்கிக் கொண்டு வந்து கொடுப்பார். ஆனால் இந்த ஊர் ஹோட்டல் பட்சணம் மகாமோசம்.

அம்மா, இங்கே வந்தபிற்பாடு எனக்குத் தூக்கமேபோய்விட்டது. அங்கே

யிருக்கிறபோது காலையிலே எட்டு மணி எட்டரை மணிக்குத்தான் எழுந்திருப்பேன். குளிரா யிருந்தால், கொஞ்சம் 'பெட் காபி' (Bed Coffee) குடிச்சுப்புட்டு, மறுபடியும் போர்த்திண்டு படுத்துண்டுடுவேன். இங்கே அதெல்லாம் போச்சு. விடியற்காலம், 'எழுந்திருடி, எழுந்திரு' என்று என் மாமியார் வெளியேயிருந்து ஒரு கத்து போடுகிறாள். அறியாதவா, உள்ளே படுத்திண்டிருக்கிறபோது, இப்படி கொஞ்சங் கூட வெட்கமில்லாமல் எழுப்பலாமா? இதுதான் போகட்டுமென்றால், ராத்திரி எட்டு மணிக்கெல்லாம் 'படுத்துக் கொள்ளுங்கள்' என்று உத்திரவுபோடுகிறாள். நான் ராத்திரி 12—அல்லது 1—மணிவரை விழித்துக்கொண்டிருப்பேன். காலை9மணிவரை நிம்மதியாய்த் தூங்குவேன். இங்கே எல்லாம் தலைகீழ்ப்பாடமாயிருக்கு.

காலையில்தான் எழுந்து தொலைக்கிறேனே, பல் தேய்த்துக் கொண்டு காபி சாப்பிடலாமென்றால் அதுவும் முடிகிறதில்லை. நெற்றியிலே குங்குமம் இட்டுக்கொள்ள வேண்டும்; தலையைக் கோதிக்கொள்ள வேண்டும்; இந்த அலங்காரங்களெல்லாம் பண்ணிக்கொண்டால்தான், காபி உள்ளே இறங்குமாக்கும். என்னமோ என் தலைவிதி!

அப்பாவுக்கு இதையெல்லாம் சொல்ல வேண்டாம். அவர் ரொம்ப வருத்தப் படுவார். எவ்வளவோ செல்வமாக என்னை வளர்த்தார். ஆனால் இப்பொழுது படுகுழியிலே விழுந்து கிடக்கிறேன்.

இந்த ஆத்திலே அம்மா, கிராமபோனே இல்லை. தாத்தா காலத்து வீணையொன்றும், என் மாமனாருடைய தகப்பனார் வாசித்த புல்லாங்குழல் ஒன்றும் இருக்கிறது. இவைகள்தான் நல்ல வாத்தியங்களாம்! இந்தமாதிரி யாராவது நாட்டுப்புறமுண்டோ? இந்தக் காலத்திலே ஹார்மோனியம் இல்லாத வீடு உண்டோ? என் மாமனாருக்கு 'ஹார்மோனியம்' என்றால் அப்படியே அடிவயிற்றிலிருந்து பற்றி எரிகிறது. அது ஒரு வாத்தியமா? என்கிறார். அவருக்கு ஒரு பெண் பிறந்து, அது ஹார்மோனியம என்று நச்சுக் கொட்டிக்கொண்டிருந்தாலல்லவோ தெரியும். கிராமபோன் வந்தாலும் வந்தது, நமது தேசத்துச் சங்கீதமெல்லாம் பாழாய்ப் போய் விட்டதென்று கூச்சல் போடுகிறார்.

கிராமபோன் பிளேட்டுகள் கேட்டு ரொம்ப நாளாச்சு. இப்போ என்னென்ன பிளேட் வந்திருக்கிறது? அப்பா ஏதாவது வாங்கினாரா? காலட்சேப செட்டுகள் ஏதாவது வந்தால் வாங்கி வைக்கவும். பிளேட் கேட்கவாவது ஒரு முறை அங்கே ஓடி வரலாம்போல் இருக்கிறது.

அப்பளமும் வடாமும் இருந்தால், யாராவது வருகிறவர்களிடத்தில் கொஞ்சம் கொடுத்தனுப்பு. 'சீர் வந்துட்டதாக்கும்' என்று என் மாமியார் ஒரு நங்கு நங்குவாள். பரவாயில்லை. ஆனால் மடியாகக் கொடுத்தனுப்பு. என் மாமியார் ரெயிலிலே கொண்டு வந்ததைச் சாப்பிட மாட்டார். அதற்கு நான் என்ன செய்யட்டும்? எத்தனை நாள் மாமியாருக்கு மரியாதை? உன் மாப்பிள்ளைக்கு வேலையாகட்டும். அப்பொழுது சொல்கிறேன் இவளுக்கு வழி. அவ்வளவு ஆத்திரம் பொங்கி வருகிறது எனக்கு.

அடிக்கடி கடிதாசி போட்டுக்கொண்டிரு.

உன் பிரியமுள்ள

கனகா

பர்மாவை ஆண்ட முக்கிய அரசர்கள்

——கு. கோ. கிருஷ்ணன்
B. Sc., (Hons)

சுமார் கி. பி. 800ம் ஆண்டில் பர்மாவின் மத்திய பாகத்தில் பியு என்னும் வர்க்கத்தினர் அதிகமா யிருந்தனர். ஆனால் இப்பொழுது அவர்கள் பர்மியர்களோடு கலந்து போனதால் தனியாகக் காணப்படுவதில்லை. சீனா தேசத்தார்கள், பர்மாவில் வசித்தவர்கள் யாவரையும் 10ம் நூற்றாண்டு வரை பியு ஜாதியினர் என்றே அழைத்து வந்தனர். பியு ஜாதியாரின் பாஷை 13ம் நூற்றாண்டு வரை இருந்து மறைந்து போயிற்று. இவர்களின் முக்கிய பட்டணம் புரோம். இவர்களில் காலஞ்சென்ற பெரியோர்களைப் பெரிய கொப்பரையில் வைத்து எரிப்பார்கள். இப்பெரிய கொப்பரைகளில் எழுதியிருந்த எழுத்துக்களால், 8ம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்த விக்கிரம பரம்பரையினர் புரோம் நகரில் ஆண்டுவந்ததாக அறியக்கிடக்கிறது.*

புரோம், நாளடைவில் மறைய ஏற்பட்டு ஜனங்கள் வடக்கே பகான் என்ற ஊரில் குடியேறிய பிறகு பியு என்ற ஜாதியினர் பர்மிய ஜாதியினருடன் ஐக்கியமாகி விட்டனர். பகான் ஒரு பெரிய பட்டணமாகியது. பல சிற்றரசர்கள் தோன்றி இங்கே ஆண்டு வந்தனர். கி. பி. 849ல் பின்பியா என்றவன் இந்த நகரைச் சுற்றிக் கோட்டை யெடுத்து அதிகாரஞ் செலுத்திவந்தான். பின்பு தேய்ன்கோ என்பவன் ஆண்டான். இவன் ஒரு நாள் காட்டில் குதிரை மீது சவாரி செய்துகொண்டு போனான். போகும் மார்க்கத்தில் அதிகப் பசி யுண்டாகவே, வழியிலிருந்ததொரு வெள்ளரித்தோட்டத்தில் புகுந்து வெள்ளரிக்காய்களைப் பிடுங்கித் தின்றான். தன்னைக்கேளாமல் பிடுங்கித் தின்றதற்காகத் தோட்டக்காரன் வெகு கோபங் கொண்டு தேய்ன்கோவை மண் வெட்டியால் அடித்துக் கொன்றான். அதைக் கண்ட தேய்ன்கோவின் குதிரைக்காரன், தோட்டக்காரனைப்பார்த்து, 'குடியானவரே, யார் எங்கள் அரசனைக் கொலை செய்கிறாரோ அவர் எங்கள் அரசனாக வர வேண்டும்' என்று கூறி அரசனால் உண்டாகும் நன்மைகளையும் எடுத்துச் சொல்லி, கடைசியாகக் குடியானவன் சம்மதத்தின்பேரில் அவனை இராணியிடம் அழைத்துச் சென்றான். அவள் குடியானவனை மெச்சி அவனைப் பல நாள் வெளியேற்றாமல் வெந்நீரில் ஸ்நானம் செய்வித்து அசுத்தங்களைப் போக்குவித்தாள். அவனையே அரசனாகக் கொள்ளும்படி அனைவருக்கும் சொன்னாள்.‡

இவனை 'வெள்ளரிக்காய் அரசன்' என்பார்கள். இவன் பெயர் நியாங்கு—சாஹான். இவனை, குன்ஷா—சாங்பியு யென்னு மொருவன் வெளியேற்றி விட்டு, தான் அதிகாரம் நடத்தினான். சில நாட்களுக்குள் சாஹானின் இரு புதல்வர்களான சோக்கட்டி, சீசோ என்பவர்கள், குன்ஷாவை ஏமாற்றிப் புத்தர் மடத்தில் கொண்டுபோய் சாமி

* Harvey's 'History of Burma' P. 12.

‡ Hmannan I-225

யார் உடைதரிப்பித்து மனைவியுடனும் அனோரட்டா என்ற புதல்வனுடனும் வசிக்கச் செய்துவிட்டு, தாங்கள் ஆண்டுவந்தனர். பிறகு சீசோ என்பவன் அகஸ்மாத்தாய் அம்புபட்டு இறந்ததும் அனோரட்டா என்பவன் போப்பா என்ற குன்றுக்கருகில் சிறிய படைதிரட்டி சோக்கட்டியைக் கொன்று கி. பி. 1044-ல் பகான் ராஜ்ஜிய சிம்மாசனத்தில் ஏறினான்.

அனோரட்டா கி. பி. (1044:77)

அனோரட்டா முதல் வேலையாக சாமியாராயிருந்த தனது தந்தையைச் சிம்மாசன மேற்ற விரும்பினான். ஆனால் தந்தை மறுக்கவும் தானே ராஜ்ஜிய பாரத்தை ஒப்புக்கொண்டான். அனோரட்டாவுக்கு ஒரு மனைவியும், சாலு என்ற குமாரனுமிருந்தார்கள். ஆனால் அரசனான பிறகு தனக்கு இராணியாக ஒரு இராஜ குமாரத்தியைத் தேடிக் கொண்டு வர மந்திரிகளிலொருவனை அனுப்பினான். வேசாலி என்று அப்பொழுது அழைக்கப்பட்ட அஸ்ஸாம் தேசத்தைச் சேர்ந்த பஞ்ச கல்யாணி என்னும் இந்திய இராஜ குமாரத்தியை அவள் தந்தையின் இஷ்டத்திற்கொப்ப பல்லக்கில் வைத்து பெரும் பரிவாரத்துடன் அனோரட்டாவின் மந்திரி அழைத்து வந்தான். வழியில் அவன் அந்த மந்திரி பஞ்ச கல்யாணியிடம் காதல் கொண்டான். தனது துஷ்டச் செயலை மறைக்க, கூட வந்த பரிவாரங்களை தூரத்துக் கிராமங்களில் விட்டு வந்தான். அனோரட்டாவுக்கும் பஞ்ச கல்யாணிக்கும் விவாகம் நடந்தது. கலியாணத்திற்குப் பிறகு, பொறாமை கொண்ட மந்திரி, அனோரட்டாவிடம், பஞ்ச கல்யாணி இராஜ குமாரத்தியாயிருப்பது சந்தேகமென விளம்ப, அதை அரசன் மெய்யென்று நம்பி அவளை வெகு தூரத்திலிருந்த சகேய்ங் என்ற விடத்துக்கு அனுப்பிவிட்டான். அங்கு அவள் கியான் ஜித்தா என்றதொருபுதல்வனைப் பெற்றெடுத்தாள். இவன் அனோரட்டாவின் மந்திரிக்குப் பிறந்தவனென்றும் கூறப்பட்டது.

அனோரட்டா வீரமும், பராக்கிரமமும் பொருந்தியவன். இவன் மாந்தலே, மிக்டிலா, மீஞ்சான், சௌக்சே, எமதீன், மாக்வே, சகேய்ங், கத்தா வென்று தற்போது அழைக்கப்படும் மத்திய பர்மா முழுவதையும் அரசு புரிந்து வந்தான். இவன் சிறந்த பக்திமான். அநேக ஏரி, குளங்களை வெட்டினான்; ஆலயங்களைக் கட்டினான். இங்ஙனம், மத சம்பந்தமாய் வேலை செய்யுங் காலத்தில், தெற்கே வெகு தூரத்திலிருந்த தாட்டுன் என்ற ஊரை மூன்று மாதம் முற்றுகையிட்டுக் கைப்பற்றினான். வட அரக்கான் தேசத்தையும் ஜெயித்து அவ்வதிகாரியின் குமாரத்தி டிலேய்ங்புரு என்பவளையும் மணந்து திரும்பினான். பின்பு வடக்கே பாமோ வென்ற நகருக்குத் தூரத்தில் சீனு எல்லைக்குச் சென்று அங்கு நான்சவ் என்னும் சீன சிற்றரசனிடம் புத்தர் உருவம் பெற்று, ஷான் தேசத்து வழியாக வந்து அங்குள்ள சிற்றரசர்களைத் தனக்குக் கீழ்ப்படியச் செய்து, மோ என்ற ஒரு ஷான் பெண்ணையும் பெற்று வீடு திரும்பிய பின் மாந்தலேயில் அநேக புத்தர் ஆலயங்களைக் கட்டினான்.

ஷான் காரர்கள் பீகு நகரைக் கைப்பற்றுவதாகத் தெரிந்து அனோரட்டா, அப்பொழுது தனது பராமரிப்பிலிருந்து வந்த கியான்ஜித்தாவை ஒரு படையுடன் அனுப்பினான். அவன் தந்திரமாய்ப்போர் புரிந்துவெற்றி பெற்று திரும்புகையில், பீகு அதிகாரி அனோரட்டாவுக்குத் தனது கின்னூ என்ற குமாரத்தியை மனைவியாக அழைத்

துச் செல்லச் சொன்னான். அவ்வாறே வரும் வழியில் இருவரும் காதலித்ததை உணர்ந்த அநோரட்டா, கியான்ஜித்தாவைத் துரத்தி விட்டான்.

கி.பி.1071ல் விஜயபாகு 1 என்பவன் இலங்கையை ஆண்டு வந்தான். அப்பொழுது சோழ அரசர்கள் அங்கு படையெடுத்து வந்து கொள்ளையடித்துச் சென்றதால் புத்தமத ஆலயங்களைச் செம்மைப் படுத்த குருக்களையும், மதப் புத்தகங்களையும் இலங்கைக்கு அனுப்பிவைக்க அநோரட்டாவிடம் தூதனுப்பி விட்டான். அநோரட்டா மகிழ்ந்து அவ்வாறே அனுப்பியதோடு ஒரு வெள்ளை யானையும் அனுப்பினான். பிரதி உபகாரமாகத் தனக்கு 'புத்தரின் பல்லை' அனுப்பி வைக்கக் கேட்டு விட்டான். ஆனால் அதற்குப் பதிலாக வேறு பல்லொன்று கிடைத்தது. கி. பி. 1077–ல் அநோரட்டா, பக்கோகு ஜில்லாவில் வேட்டையாடச் சென்று, தனியாக ஒரு காட்டு எருமை யொன்றைத் துரத்திச் செல்ல அவ்வெருமை அநோரட்டாவை எதிர்த்துத் தாக்கிக் கொன்று விட்டது. அநோரட்டாவின் தேகத்தைக் கண்டெடுக்க முடியவில்லை.

அநோரட்டாவுக்குப் பின் அவன் முதல் மகன் சாலு என்பவன் ஆண்டான். அவனுக்குப் பின் கியான்ஜித்தா கி. பி. 1084–1112-வரை ஆண்டான். பல சிற்றரசர்களுக்குப் பின் பகான் இராஜ்ஜியம் க்ஷீண திசையடையவும் ஷான் இராஜ்ஜியம் உயர்ந்து கி. பி. 1531–வரை இருந்து வந்தது. கி. பி. 1287–1355–வரையில் ஆவா இராஜ்ஜியமும், கி.பி.1287-1339 வரை பீகு இராஜ்ஜியமும், கி. பி. 1280–1531–வரை டாங்கூ நகரும் பற்பல ஷான் சிற்றரசர்களால் அதிகாரஞ் செலுத்தப்பட்டு வந்தன.

அரக்கான் தேசம் பின்பு அதிகாரத்தில் உயர்ந்து வந்தது. அரக்கான் தேசத்துக் கொள்ளைக் கூட்டத்தினர் வங்காளத்தில் அடிக்கடி வந்து கொள்ளை யடிப்பது வழக்கம். கி. பி. 1761–ல் அரக்கானில் பெரிய பூகம்பம் ஏற்பட்டு பெருத்த நஷ்டம் உண்டாயிற்று. கி. பி. 1776-1782-ல் தகுந்த அரசனில்லாமல் அரக்கான் தேசத்தினர், பர்மா அரசனான போடவ்பையா என்றவனை அரசனாகக் கொண்டு அவன் ஆளுகைக் குட்பட்டு வந்தனர்.

கி. பி. 1551-81-வரை பாயின்னாங் என்ற அரசன் டாங்கூவைத் தலை நகராகக் கொண்டு பர்மா முழுவதையும் (அரக்கான் தவிர) அரசு புரிந்தான்.

அலாங்பையா (1751-84): அலாங்பையா என்பவன் ஓர் சிற்றரசனின் குமாரன். இவன் 1714-ல் சுவேபோ வென்ற இடத்தில் பிறந்தான். அநோரட்டாவைப் போல வெகு கீர்த்தி பெற்றான். அப்பொழுது தலேய்ங் ஜாதியார்கள் அதிகாரத்தில் உயர்ந்து ஆவா என்ற ஊரைக் கைப்பற்றி மத்திய பர்மாவை அரசு செலுத்த ஆரம்பித்தனர்.

அலாங்பையாவின் தந்தை, தலேய்ங் அரசனுக்குக் கீழ்ப்படிய நினைத்த போது. அலாங்பையா கூடாதென மறுத்து பெரிய படையொன்றைத் திரட்டி தலேய்ங் அரசனோடு போர் புரிந்தான். அலாங்பையா, தனது எதிரிகளை அவர்கள் தலை நகர் ஆவா நகரை யடையவிடாமலும் முறியடித்துத் துரத்தி விட்டான் கி. பி. 1753-டிசம்பர் மாதத்தில் அலாங்பையா ஆவா நகரைக் கைப்பற்றி வட பர்மா முழுவதையும் ஆண்டுவந்தான். முறியடிக்கப்பட்ட தலேய்ங் ஜாதியினர் அலாங்பையாவைப்பல தடவை எதிர்த்தும் பிரயோஜன மடையவில்லை.

அலாங் பையா, தென் பாகத்தையும் கைப்பற்ற பெரிய படையுடன் சென்று ஆங்காங்கு யுத்தம் புரிந்து யானை, குதிரை, இராஜ குமாரத்திகள் இவர்களைப் பரிசாகப் பெற்று கி. பி. 1755 மேயீ டகோன் (இப்பொழுது டல்லா) என்றவிடத்தைத் தலேய்ங்க் ஜாதியாரிடம் கைப்பற்றி 'யாங்கூன்' அதாவது 'யுத்த முடிவு' என்று பெயரிட்டான். அதுவே இப்பொழுது இரங்கூன் என வழங்குகிறது. அப்பொழுது இது மீன் பிடிக்கும் சிறிய கிராமமாயிருந்தது. அலாங் பையா, பின்னர் அரக்கான், மணிப்பூர் முதலிய வடமேற்குப் பாகங்களைக் கைப்பற்றிக் கொண்டு சயாம் தேசத்தையும் எதிர்த்தான். இவ்வாறு எதிர்த்த சமயத்தில் அலாங் பையா நோய்வாய்ப்பட்டு படுக்கையிலேயே தூக்கிச் செல்லப் பட்டான். ஆகவே சயாம் தேசத்தாரால் முறியடிக்கப் பட்டுத் திரும்பி வருகையில் தாட்டூன் ஜில்லாவில் கின்யுவா என்ற ஊருக்கு அருகில் விடியற்காலம் உயிர் துறந்தான். இறந்த தேகத்தை இரங்கூனுக்குக் கொணர்ந்து பிறகு ஐராவதி நதி வழியாக சுவேபோ தலைநகருக்குக் கொண்டு வந்து வெகு ஆடம்பரத்துடன் அடக்கம் செய்தனர் இவன் பரிவாரத்தினர்.

அலாங் பையா சுமார் எட்டு வருஷ காலம் ஆண்டு 46வது வயதுக்குள் இறந்து விட்டான். இவன் காலத்தில் வெள்ளையர், பர்மாவுக்குள் வந்து சேர்ந்தனர். பிரெஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் அலாங் பையாவின் முன்னிலையில் பயம், பக்தியுடனிருந்து உத்திரவு பெற்றிருக்கின்றனர்.

அலாங் பையாவுக்குப் பிறகு பர்மாவை ஆண்டவர்களில் முக்கியமானவர்கள்: போடவ் பையா (1782–1819); பாஜிடவ் (1819–37); பகான் மின் (1846–53), மிண்டன் மின் (1853–78); தீபோ (1875–85). தீபோ அரசனே பர்மிய அரசர்களில் கடைசியானவன். 1885ஆம் நவம்பர் மீ 14உ தீபோவின் தலைநகராகவிருந்த மாந்தலே நகரத்திற்கு பிரிட்டிஷார் பெருஞ் சேனைகளை யனுப்பி தீபோவையும், அவன் இரு மனைவிகள், சுபயாலட் என்பவளையும், அவள் சகோதரியையும், அவர்கள் அன்னையையும் கைது செய்து பம்பாய் மாகாணத்திலுள்ள இரத்தினகிரி நகரில் கொண்டு போய் வைத்துப் பர்மா முழுவதையும் தங்கள் சுவாதீனப் படுத்திக் கொண்டனர். தீபோ மன்னன் 1917ம் வருஷம் காலஞ் சென்றான்.

புத்தகம் என்பது என்ன? நமது உண்மையான தோழன்; மதி மந்திரி; உற்சாகத்தைக் கொடுக்கும் நண்பன்; ஆறுதலை அளிக்கும் துணைவன்.

—ஐஸக் பாரோ.

ஃ ஃ ஃ

மனிதன், அன்றாடம் பலவித உடைகளை அணிகிறான். ஆனால் அவன் இருதயம் மட்டும் அப்படியேதான் இருக்கிறது.

—எல்வி பவுரே.

ஃ ஃ ஃ

மிகச் சிறந்த வஸ்து எது? புத்தகம். ஆனால் அதனினும் சிறந்தது ஓர் அறிஞனுடைய நல்ல பேச்சு.

—டிஸ்ரேலி.

அசோகன் சாஸனங்கள்

—"மௌத் கல்யன்"

சாஸனம் 1

(வேறு வாசகம்)

ப்ரஹ்மகிரியிலுள்ளது.

சுவர்னகிரியின் அரசன், உயர்தர உத்தியோகஸ்தர்கள் முதலியோர்களின் உத்திரவின்பேரில் இசிலா (ஒரு நாடு?) வின் உயர்தர உத்தியோகஸ்தர்களுக்குக் குசலம் தெரிவித்து பின்வருமாறு கூறப்படுகிறார்கள் :—

தேவப் பிரியரான மகாராஜர் பின்வருமாறு கட்டளை யிடுகிறார்:—

இரண்டரை வருஷங்களுக்கு மேலாக, நான் அதிகமான உழைப்பை மேற்கொள்ளாமல் சாதாரண ஓர் உபாஸகனாக இருந்தேன்.

ஆனால் ஒரு வருஷத்திற்கு முன்னடி, நான் சங்கத்தில் சேர்ந்து கொண்டு, அது முதல் ஊக்கமாக உழைத்து வருகிறேன். இந்தக் காலத்தில், ஜம்புத்வீபத்தில் உண்மையானவர்களென்று கருதப்பட்டவர்கள் அத்தனைபேரும், அவர்களுடைய தேவர்களையும் சேர்த்துப் பொய்யர்களென்று நிரூபிக்கப்பட்டு விட்டார்கள். இதுதான் உழைப்பின் பயன். இந்தப் பயனை ஒரு பெரிய மனிதன் தான் அடைய முடியுமென்பதில்லை. உழைப்பிலே சிரத்தை கொள்கிற எந்தச் சாதாரண மனிதனுங் கூட மோட்ச சுகத்தைப் பெறலாம்.

இந்த நோக்கத்திற்காகவே இந்தக் கட்டளை இடப்பட் டிருக்கிறது:-

'இந்த நோக்கத்திற்காகச் சிறியவர்களும் பெரியவர்களும் உழைக்கட்டும்'.

என்னுடைய அந்நியர்களும் இந்தப் பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்களுடைய உழைப்பு நிலைத்திருக்கட்டும்.

இந்த நோக்கம் வளரும்—ஏன்? நன்றாக வளரும்: ஒன்றரை பங்குக்கு அதிகமாக வளரும்.

நான் யாத்திரையிலிருக்கும் போது 256 முறை இந்த உபதேசம் செய்யப் பட்டது.

சாஸனம் 2

தருமத்தின் சுருக்கம்.

(ப்ரஹ்மகிரியிலுள்ள வாசகம்)

தேவப்பிரியரான மகாராஜர் பின்வருமாறு கூறுகிறார்:—

தந்தையும் தாயும் வணங்கப் பட வேண்டும். அது போலவே, ஜீவஜந்துக்களிடத்தில் மரியாதை செலுத்த வேண்டுமென்ற கொள்கை உறுதியாக (நாடெங்கணும்) ஸ்தாபிக்கப் பட வேண்டும். உண்மையே (அனைவராலும்) பேசப்பட வேண்டும். (புத்த) தருமத்தின் சிறந்த அமிசங்களாகிய இவற்றை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வர வேண்டும். அப்படியே, குருவுக்குச் சிஷ்யன் மரியாதை செலுத்த வேண்டும். உறவினர்களிடத்தில் சரியானபடி நடந்து கொள்ள வேண்டும்.

இதுதான் தருமத்தின் புராதன சம்பிரதாயம். இதனால் (மனிதனுடைய) ஆயுள் அதிகமாகிறது. இதன்படி ஜனங்கள் நடக்கட்டும்.

பாதன் என்ற எழுத்தாளனால் எழுதப் பெற்றது.

சாஸனம் 3

தருமத்தின் முக்கிய கோட்பாடுகள்

(பாப்ரா சாஸனம்)

மகத நாட்டரசர் சங்கத்திற்கு அபிவாதனஞ் செய்து கொள்கிறார். சங்

கத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஐசுவரியமும் ஆரோக்கியமும் ஏற்பட வேண்டுமென்று கோருகிறார்.

வணங்கத்தக்க ஐயன்மீர்! புத்தரிடத்திலும் தருமத்தினிடத்திலும் சங்கத்தினிடத்திலும் நான் கொண்டுள்ள நம்பிக்கை நீங்கள் அறிந்ததே.

வணங்கத்தக்க ஐயன்மீர்! வணங்கத் தக்க புத்தரால் என்னென்ன கூறப் பட்டிருக்கின்றனவோ அவை யாவும் நன்றாகவே கூறப்பட்டிருக்கின்றன.

ஆனாலும், வணங்கத்தக்க ஐயன்மீர்! புத்தருடைய வாக்கியங்களில் ஒன்றை உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் பின்வரும் வாக்கியத்தையே எடுத்துக் காட்டுவேன்:—

'இதனால் இந்தத் தருமம் நீடித்து நிலைக்கும்.'

வணங்கத்தக்க ஐயன்மீர்! புத்தர் பிரானால் அருளப்பட்ட கீழ்க்கண்ட வாக்கியங்களை, அநேக பிக்ஷுக்களும் பிக்ஷுணிகளும் சிரவணம் செய்வதுடன் இவற்றைத்தியானமும் செய்ய வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அப்படியே சங்கத்தைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் செய்ய வேண்டும்.

வினய (பிதக)த்தின் உயர்வு.

ஆரியர்களின் அமானுஷ்ய சக்திகள்.

இனி என்ன நடைபெறும் என்பதைப்பற்றிய பயம்.

சந்நியாசியின் பாட்டு.

சந்நியாசியின் வாழ்க்கையைப் பற்றிய சம்பாஷணை.

உபதிஷ்யனுடைய கேள்விகள்.

பொய்மையிலிருந்து ஆரம்பித்தது.

ராதுலனுக்குச் செய்யப் பட்ட உபதேசங்கள்.

இந்தக் காரணத்திற்காக, வணங்கத் தக்க ஐயன்மீர்! ஜனங்கள் என் கருத்தைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு இதை எழுதுவித்தேன்.

வீரப் பெண்மணியின் வீர வாசகம்

சீனாவின் பிரதம ராணுவ தளகர்த்தரான சியாங்கை ஷேக்கின் மனைவியான ஸ்ரீமதி சியாங்கை ஷேக், சீன—ஜப்பானிய யுத்தத்தைப் பற்றி சீனா கொண்டுள்ள உறுதியான மனப்பான்மையைப் பின் வரும் வாசகங்களால் விளக்குகிறார்:—

"சீனாவின் அநேக வருஷங்களாகக் கஷ்டப்பட்டு வாழ்ந்த வாழ்க்கையைக் கூட ஜப்பான் மறுக்கிறது. சீனா, இப்பொழுது, தனது வீடு வாசல்களுக்காக, தனது மானத்திற்காகப் போராடிக்கொண்டிருக்கிறது. ஜப்பான், யுத்தம் செய்யும் ஓர் இயந்திரம் போல் இருக்கலாம். ஆனால் சீனாவோ, ஆத்ம சுதந்திரம் பெற்றிருக்கிறது. தனது உரிமைகளைக்காப்பாற்றிக் கொள்ள சீனா, கடைசிவரை யுத்தம் செய்தே தீரும்.

இப்பொழுது, சீனாவின் மீது ஜப்பான் தொடுத்திருக்கும் யுத்தமானது இயற்கைக்கும் கடவுளுக்கும் விரோதமான ஒரு செயலாகும். ஆயினும் சீனா சிறிதும் அஞ்சவில்லை."

ஹமாரே பாத்ஷா ஹை!

—ரா. பத்மநாப ராஜு

கல்கத்தாவிலிருந்து 'துபான் மெயில்' (Tufan Mail) புயற்காற்று வேகத்தில்போய்க்கொண்டிருக்கிறது. நானிருந்த வண்டியில் இன்னும் ஒருவரே யிருக்கிறார். அவர் ஆஜானுபாகு. ஆறடி உயரமும், அதற்குத் தகுந்த பருமனுமுள்ளவர். மேல் நாடுகளில் கல்வி கற்று வைத்தியத்தில் எம். டி (M. D.) பட்டம் பெற்று ராஜ புதனத்தின் சுதேச சமஸ்தான மொன்றில் பிரதம வைத்தியர் உத்தியோகம் வகித்து வருகிறார். பஞ்சாப் மாகாணத்து முஸ்லீம்; சூபி வகுப்பைச் சார்ந்தவர். இந்து மதத்தின் வேதாந்தக் கொள்கைகளுக்கும் சூபி மதத்தின் கொள்கைகளுக்கும் அதிக ஒற்றுமை யுண்டு.

நாங்களிருவரும் வெகுநேரம் மௌனம் சாதித்தோம். ஐக்கிய மாகாணத்தில் ஓர் ஜங்க்ஷனில் வண்டி வந்து நின்றது. பிளாட்பாரத்தில், பல சாமான்களைக் கூறிக் கொண்டு விற்பனையாளர்கள் திரிந்தார்கள். 'ஹிந்து—சாய்' என்றான் ஒருவன். 'முஸ்லீம்—பானி' என்றோர் சப்தம் கிளம்பியது. 'ஹிந்து பான்'—'ஹிந்து—பான்' என்றான் மற்றொருவன். என்னால் பொறுக்கக் கூட வில்லை. 'வெற்றிலையிலுமா ஹிந்து முஸ்லீம் பிரிவினை யேற்பட வேண்டும்' என்றேன்.

'ஆம், இது அநியாயம். ஐக்கிய மாகாணத்தில் ஹிந்து முஸ்லீம் சச்சரவுகள் எங்கள் மாகாணத்தைப்போல அவ்வளவு தீவிரமாயில்லா விட்டாலும் இந்தப் பிரிவினை மிகுதியும் காணப்படுகிறது' என்றார் நண்பர்.

'தங்கள் மாகாணத்தில் ஹிந்து முஸ்லீம் ஐக்கியம் எப்பொழுது ஏற்படும்? ஏதாவது விமோசனம் சீக்கிரத்திலுண்டாகுமா? சர்சிக்கந்தர் ஹையத்கானின் (பஞ்சாப் பிரதம மந்திரி) ஒற்றுமை மகாநாடு வெற்றி யுறுமா?'

'இரண்டு மூன்று வருடத்தில் விமோசன முண்டாகி விடும். பஞ்சாப் இளைஞர்களிடையே சமூக உணர்ச்சியில்லை. முஸ்லீம் வாலிபர்கள் தேசப் பற்று மிகுதியும் கொண்டுள்ளார்கள். தற்கால மந்திரி சபையால் பொது மக்கள்—சிறப்பாக முஸ்லீம் மக்களுக்கே—நன்மை ஏற்பட வழியில்லை. காங்கிரஸ் மந்திரி சபை இரண்டு ஆண்டில் ஏற்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை. எங்கள் மாகாணத்துக்குப் பிடித்தவர் ஜவஹர்தான். காந்திஜி ஓர் மகாத்மா. அவருடைய பாரமார்த்திகம் எங்கள் மாகாணத்திற்கு அவ்வளவு ஏற்றதில்லை. இயற்கையிலே நாங்கள் துடிப்புத் தன்மையுள்ளவர்கள். ஜவஹரின் துடிப்பே (Impetuosity) எங்கட்கு ஏற்றது' என்றோர் பிரசங்கஞ் செய்து விட்டார் நண்பர்.

பிறகு சுதேச சமஸ்தானங்களுக்குப் பேச்சு திரும்பியது.

'இதர இந்தியாவைவிட, சுதேச மன்னர்களின் இந்தியா, ஒரு நூற்றாண்டு பின்னடைந்திருக்கிறது. வறுமை எங்கும் தாண்டவமாடுகிறது. யதேச்சாதிகாரமே கொலுவீற்றிருக்கிறது. மைசூர் போன்ற சில சமஸ்தானங்களில் ராம ராஜ்யம் நடைபெறலாம். ஆனால் பெரும்பாலான சமஸ்தானங்கள் முன்னரே ஒழிந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும்' என்றார் அவர்.

பல விஷயங்களைப் பற்றிப் பேசினோம். கடைசியில் தனது வாழ்க்

கைத் தத்துவத்தைக் கீழ் வருமாறு முடித்தார்:—

'உலகத்தில் அழகான வஸ்துக்களையெல்லாம் நான் நேசிக்கின்றேன். எல்லாச் சுகங்களையும் அனுபவிக்க விரும்புகின்றேன். துறவு எனக்குப் பிடிப்பதில்லை. நான் நன்ருக வாழ விரும்புகின்றேன். அளவு கடந்த அஹிம்சைக்கு எங்கள் மாகாணத்தார் ஆட்களல்ல. எங்களை வருத்துவோரை நாங்கள் துன்புறுத்தவே செய்வோம்.'

காந்திஜியின் அஹிம்சையில் பற்றுக் கொண்டுள்ள என் மனதில் பல எண்ணங்கள் தோன்றின. மனத்தால், வார்த்தையால், செயலால் அஹிம்சையை இந்திய மக்களனைவரும் நிறைவேற்றி வைக்க முடியுமா என்ற சங்கையும் எழுந்தது. காந்திஜியின் தபோ பலத்தால், ஆங்கிலேயர்களிடமிருந்து இந்திய நாட்டை விடுவிக்க பாரத மக்களனைவரும் அஹிம்சையைக் கைக்கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை. எனினும் பிறநாடுகளின் படையெடுப்பிலிருந்து பரத கண்டத்தைக் காக்க, பஞ்சாபியர்களின் துடி துடிப்பும், மறலிக்கும் அஞ்சாத மறவர்களின் தீரமும், சிவாஜி வளர்த்த மராட்டியர்களின் வீரமும் வேண்டற்பாலதே. இல்லாவிடின் இன்றைய உலகில் அபிசீனியா, ஸ்பெயின், சீனு முதலிய நாடுகளுக்கு ஏற்படும் கதியே நம் நாட்டிற்கும் ஏற்படும்.

ஃ ஃ ஃ

என் எண்ணங்களோடு 'தூபான் மெயிலும்' பறந்து சென்று அலகாபாத் ஸ்டேஷனை அடைந்தது. ராஷ்ட்ரபதியின் ஊரை அடைந்து விட்டோமென்ற உணர்ச்சி மயிர்க் கூச் செறியச் செய்தது. காளிதாசன் வருணித்திருக்கும் திரிவேணியின் நினைவு வரவில்லை; மிதவாத சிகாமணி மகாகனம் சர் தேஜ் பகதூர் சாப்ருவின் ஊர் என்பதையும் மறந்தேன்; விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியைக் கைவிடாத பெடரல் கோர்ட்டு நீதிபதி அறிஞர் ஸர் ஷா சுலைமான் வசிக்கும் இடம் என்ற நினைவுமில்லை. அக்பர் வசித்த இடம்; பாரத்துவாஜர் தவஞ் செய்த ஸ்தலம்; ஐக்கிய மாகாணத்தின் பழைய தலைநகர்; எல்லாம் மறந்தேன். இந்தியர் தவப் பயன், மோதிலால் பயந்த ஜவஹர் சிங்கம் வசிக்கும் இடம் என்ற நினைவே ஓங்கி நின்றது. இந்த ஊரில்வசிக்கிற தோட்டி முதல் கொண்டைமான் வரை ராஷ்ட்ரபதியை அளித்த பெருமை கொண்டிருப்பதுபோற் றேன்றிற்று. ஜவஹர் பார்க்கு, மோதிலால் நேரு ரோட், கமலா நேரு ரோட், ஜவஹர் ஸ்கொயர் என்ற பெயர்களையுங் கொண்டு அலகாபாத் பட்டணம் விளங்குகிறது. சர்தாரனை மனிதனைப் பார்த்து ஜவஹரைப் பற்றிக் கேளுங்கள். யாரை வேண்டுமானாலும் கேளுங்கள். 'ஓ! ஹமாரா பாத்ஷா ஹை' (அவர் எங்கள் சக்கிரவர்த்தி) என்றே சொல்வார்கள். ஜவஹர்லால் ஆக்ஞையிட்டால், 'ஹமாரா ஜான் தேனேக்கி தயாரி ஹை' (எனது உயிரைக் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன்) என்பர். சுருங்கச்சொன்னல், அலகாபாத் மாத்திரமல்ல, நவீன இந்தியா ஜவஹர் மயமாயிருக்கிறது. அகில இந்தியாவின் காங்கிரஸ் ஆட்சி முறை சுயராஜ்ய பவனத்திலிருந்து நடைபெறுகிறது. காங்கிரஸ் ஆஸ்பத்திரி, கமலாநேரு ஆஸ்பத்திரி முதலியன சுயராஜ்ய பவனத்திலேயே உள்ளன. பாரதத் தாயின் அன்பைக் கொள்ளைகொண்டு விட்ட ஜவஹர் வாழ்க. ஹமாரா பாத்ஷா வாழ்க.

இங்கிலீஷ் தெரிந்தவர்கள்

இந்தியாவின் பொதுப் பாஷையாக இங்கிலீஷ்தான் இருக்க வேண்டுமென்று கூறுவோர், கீழ்க்கண்ட புள்ளி விவரங்களைச் சற்றுக் கவனித்துப் பார்ப்பார்களானல், இங்கிலீஷ் பேசுவோர் இந்தியாவில் இத்தனை பேர்தானு என்று தங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்வார்களென்பது நிச்சயம்.

சமூகத்தினர்		பதினுயிரம் பேருக்கு
ஹிந்துக்கள்	—	113
சீக்கியர்கள்	—	151
ஜெயினர்கள்	—	306
புத்தர்கள்	—	119
பார்சிகள்	—	5041
முஸ்லீம்கள்	—	92
கிறிஸ்தவர்கள்	—	919
யூதர்கள்	—	2636
மற்றச் சமூகத்தினர்	—	28

சுதேச பாஷைகளைப் பேசுவோர்

இந்தியாவிலே முக்கியமான சுதேச பாஷைகளைப் பேசுவோர் ஒவ்வொரு பாஷையிலும் பதினுயிரம் பேருக்கு எத்தனை பேர் இருக்கின்றனர் என்பதைக் கீழே காட்டியுள்ள புள்ளி விவரத்திலை் நன்கு தெரிந்து கொள்ளலாம்.

பாஷை		பதினுயிரம் பேருக்கு
ஹிந்தி	—	4080
வங்காளி	—	3050
தெலுங்கு	—	1506
மஹாராஷ்டிரம்	—	1192
தமிழ்	—	1166
பஞ்சாபி	—	901
கன்னடம்	—	640
ஒரியா	—	640
குஜராத்தி	—	619
மலையாளம்	—	528

ஆபிரகாம் லிங்கன்

——எஸ். குஞ்சிதபாதம்
B. A., L. T.,

லோகோத்தமர்கள் என்று போற்றத்தக்க பண்புடைப் பெரியார்களில், ஆபிரகாம் லிங்கனைப்போல் சமீப காலத்தில் யாருமே யிருந்த தில்லை. சுதந்திரம் விரும்பும் எல்லா நாடுகளும் எல்லா மாந்தர்களும் அவனைப்போற்று கின்றனர். ஜனநாயக தத்துவத்தை விளக்கிக்காட்ட வந்த பெரியார்களுள் ஓர் தலை சிறந்த லக்ஷிய புருஷனாய்த் திகழ்கின்றான். நீதி யமைந்தஆட்சிக்கு அடிப்படையா யிருப்பது ஆளப்பட்டோர் சம்மதமே யென்ற உண்மையை இக் காலத்தில் மறுப்பாரும் உளரோ? இனி வருங் காலத்தில், நாகரிக முன்னேற்ற மடைந்த மக்கள், லிங்கன் சித்திரித்துக் காட்டிய 'குடிகளுக்காக, குடிகளால் ஸ்தாபிக்கப் பட்ட குடியரசு' என்ற அரசியல் அமைப்பைத் தவிர்த்து மற்றொன்றையும் விரும்பி ஏற்றுக் கொள்வார்களோ?

'எந்த ஒரு மனிதனும் இன்னொரு மனிதனை அடிமை கொள்வதற்குத் தகுதி யுடையவனாக மாட்டான்; எந்த நாட்டாரும் வேறொரு நாட்டினரை யாள்வதற்கு அருகதை யுடையவர்களாக மாட்டார்கள். ஒருவன் தன்னையும், ஒரு நாட்டார் தங்களையும் ஆண்டு கொள்வதை சுய ஆட்சி, சுதந்திரம் எனலாம். ஆனால் தனி யொருவனோ, அல்லது ஒருமக்கள் தொகுதியோ, வேறுஒருவனையோ, நாட்டையோ, அடக்கி யாள்வ தென்பது கொடுங் கோலாகும். ஒரு நாட்டினர் இன்னொரு நாட்டின் சுதந்திரத்தை பலாத்காரத்தால் பறித்தார்களென்றால், தாங்கள் அனுபவிக்கும் சுதந்திரத்திற்கே தகுதி யற்றவர்களாகின்றனர். அறக் கடவுளின் ஆதீனத்தில் அவர்கள் தங்களது சுயேச்சையை நீண்டகாலம் காப்பாற்றிக் கொள்ள முடியாது.'

இப் பொன் மொழிகள் எழுபது ஆண்டுகளுக்கு முன்பு ஆபிரகாம் லிங்கனால் அமெரிக்கர்களுக்குச் சொல்லப்பட்ட தெனினும், எல்லா மக்களுக்கும் எக்காலத்தும் பொருந்துவதாகும். முன்னேற்ற மடைந்த ஒரு நாட்டினர் ஆட்சியின் கீழ் பிறிதொரு நாட்டினர் அடங்கிக்கிடப்பது அவர்களின் நன்மைக்கே யாகுமென்ற ஒருதலை வாதத்திற்கும் லிங்கனின் பதிலைக் கவனியுங்கள். சிகாகோ நகரில் நடைபெற்ற மாபெருங் கூட்டமொன்றில் பேச வந்த லிங்கன் இது பற்றிச் சொல்வதாவது:—

'இவ் வுலகில் பலப்பல காலங்களில் பொதுஜனங்களை அடிமைப் படுத்தி ஆட்சி செய்ய முற்போந்த அரசர்களும் சரி, ஆதிக்கம் விரும்பிய கூட்டத்தினரும் சரி, யாவரும், இதே காரணத்தைத் தான் கையாண்டிருக்கிறார்கள். ஜனங்களின் கழுத்து நோக அதிகார வாகனமேறுவது, அவ்விதச்சவாரியில் இவர்களுக்கு ஏற்பட்ட விருப்பத்தினாலல்லவாம்! அத்தகைய செயலால் ஜனங்கள் அதிக க்ஷேமத்தை யடைகிறார்கள் என்பது பற்றித்தானும்! நீ உழை, நான் உண்கினறேன்; நீ பணி செய்து கிட, நான் அப்

பணியினுல் வரும் பலனை யடைகின்றேன்; என்பது தான் இக் கொள்கையின் உட்கிடை. என்ன தான் திரித்துப் பேசினும், அவர்களின் தர்க்க முறையும் மாறுவதில்லை; அடிமைத்தளையும் அகல்வதில்லை'.

இங்ஙனம் மனிதனின் சுதந்திர வாழ்க்கைக்காக, மக்களின் பிறப்புரிமைக்காக, தன் வாழ்நாள் முழுதும் பாடுபட்ட ஆபிரகாம் லிங்கனின் ஜீவிய சரித்திரம், சுதந்திர தாகங் கொண்டோர் அனைவராலும் போற்றற்குரிய தன்றோ? லிங்கனின் குணப் பெருக்கை யுரைக்க வந்த எட்வின் மார்க்ஹாம் என்ற அமெரிக்கப் புலவர் சொல்வதைக் கேளுங்கள்:—¶

''நிலத்தின் செம்மை அவனிடம்,
ஆதிப் பொருள்களின் இசைபடு மணமதை
அவனுளங் கொண்டது;
நிமிர் வரை யுணர்த்தும் நேர்மையும்
பொறுமையும் அவனிடம்;
கதிரசைக் காற்றின் களிமனம் படைத்தவன்;
கடல் கடக்கமுனையும் கடுவிசைப் புள்ளின்
ஆண்மையன்;
வடுவெலாம் மறைக்கும் உறைபனியன்ன
இரக்கம்;
விகாரத் தோற்றம் விளங்கிடா வண்ணம்
வளைத்தெழும் சுவரின் அன்பு;
காற்றிற்கஞ்சாது தலைநிமிர் நோக்குடைத்
தளரா ஆலும்,
நடு நடுங்கி வணங்கும் நலிவுறு பூண்டும்,
இரண்டினும் கரவாது
எழில்படப் பொதுவொளி விரிக்கும் கதிரவன்
அன்ன,
பிறவுயிர் பேணும் பெற்றியும் நியதி
நன்னீர்மையும் பெற்றவன்.''

இத்தன்மை வாய்ந்தவன் புருஷ ரத்தினமல்லவோ? பிற்காலத்து மக்கள் யாவருக்கும் ஒப்பற்ற வழி காட்டியன்றோ?



ஆபிரகாம் லிங்கன் 1809 - 1865

இளமையில் வறுமை

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தென் பகுதியிலுள்ள கென்டக்கியில் (Kentucky) 1809ம் ஆண்டில் ஆபிரகாம் லிங்கன் பிறந்தான். அவனுடைய பெற்றோர்கள் எளியவர்கள். நெற்றி வேர்வை நிலத்தில் சிந்த உழைத்து ஜீவனத்தை நடத்தி வந்தனர். எனவே மகனைப் பள்ளிக்கும் கலாசாலைக்கும் அனுப்பி

¶ ***Edwin Markham on Lincoln:-***

The colour of the ground was in him,
the red Earth;
The tang and odour of the primal things;
The rectitude and patience of the rocks;
The gladness of the wind that shakes the corn;
The courage of the bird that dares the sea;
The pity of the snow that hides all scars;
The flowing kindness of the wayside wall;
The tolerance and equiy of light,
Giving as freely tc the shrinkihg weed
As to the great oak flaring to the wind-''

வைத்து கல்வி பயில்விக்கும் பெற்றி வாய்ந்திலர். ஆபிரகாம், தாய்ப்பாஷை யாகிய ஆங்கிலத்தை யெழுதப்படிக்கக் கற்றுக் கொண்டான். தற்காலத்தி லிருக்கும் புத்தக சாலைகளும், நூல் மலிவும் அக்காலத்தி லில்லை. அவனுக் குக்கிடைத்த இரண்டு புத்தகங்களை மாத்திரம் அவன் ஊன்றிப் படிப்பது வழக்கம். ஆனால் அவையிரண்டும் மகா காவியங்கள்; இரண்டு கவி ரத்தினங் கள். விவிலியமும் மகாகவி ஷேக்ஸ் பியர் இயற்றிய நாடகங்களு மாகும்.

இளமைப் பருவத்திலே ஏழை மக் கள் மத்தியில் வசித்தும், எளிய வாழ்க் கையை மேற்கொண்டும் இருந்ததின் காரணமாகவே பிற்காலத்தில் அவனு டைய ஆர்வமும் அனுதாபமும் அவர் கள் மாட்டே சென்றது. பாமர ஜனங்களின் மனப் பாங்கை நன் குணர்ந்தவன். அவர்களின் கஷ்ட நஷ்டங்களை அனுபவ பூர்வமாக அறிந் தவன். ஏழையாயிருந்துணர்ந்தவனு தலால் பிற்காலத்தில் ஏழை பங் காளனாய் விளங்கினான்.

ஆபிரகாமிற்கு ஒன்பது வயது நிரம் பும் தருணத்தில் அவனது அன்னை இறந்துபோனாள். தகப்பனும் பிள்ளை யும் மரப் பலகைகளினால் ஓர் சவப் பெட்டி செய்து பிரேதத்தை யடக்கஞ் செய்தனர். உத்தரகிரியை செய்து வைக்கத் தகுதியுள்ள பாதிரியார் 75 மைல்களுக் கப்பால்தான் இருந்தார். தகப்பனாருக்கு எழுத்துவாசனையில்லை. ஆபிரகாமே பாதிரியாரை வந்து சடங்குகளை நடத்திக் தர வேண்டி ஓர் கடிதம் எழுதினான். இதுவே அவன் எழுதிய முதல் கடிதமாகும். அன்னையிறந்த மறு வருஷம் ஆபிர காமின் தந்தை, ஏற்கனவே மூன்று குழந்தைகளைப் பெற்றிருந்த ஓர் விதவையை மணமுடித்தார். இவ் வம் மை மிகவும் நல்லவள்; சுறு சுறுப்பும் புத்தி கூர்மையும் படைத் தவள். தாயில்லாக் குழந்தையாகிய ஆபிரகாமையும் அவனது தங்கையை யும் தன் குழந்தைகளே யெனக் கொண்டு பேரன்புடன் ஆதரித்து வந் தாள். ஆபிரகாமே அவளுடைய செல்லப் பிள்ளை. அவனது கல்வி விஷ யத்தில் மிகுந்த சிரத்தை கொண்டு அவனுக்குப் போதிக்க ஆசிரியர்களை யமர்த்திக் கொடுத்தாள். இது காலம், ஆபிரகாமின் தந்தை முன்னர் வசித் திருந்த கென்டக்கியைவிடுத்து இண்டி யானா (Indiana) யென்னும் பிரதே சத்தில் குடியேறி யிருந்தார். அவர்க ளுடைய வீடு, முண்டும் முடிச்சுகளு மான மரக்கட்டைகளினா லாகிய குடிசை. மரங்களை வெட்டி, காடழித்து, நிலத்தைப் பண் படுத்து வதில் மகன் தந்தைக்கு உதவி புரிய வேண்டும். பள்ளிக்கூடமோ அவர்க ளிருப்பிடத்திற்குச் சில மைல்களுக் கப்பால் இருந்தது. கல்வி கற்பதற்குரிய சாதனங்களும் மிகச் சில. காகிதமும் எழுதுகோலும் கிடைக்காததினால் ஏழைச் சிறுவன், மண் வெட்டியின் அகன்ற தகட்டில் சீமைச் சுண்ணும்புக் கட்டியால் கணக் குகள் போட்டுப் பழகுவானும்! உண் மையில், வாழ்க்கையென்ற சர்வகலா சாலையில் படித்துப் பட்டம் பெற்றவ னென்பது ஆபிரகாமிற்கே பொருந் தும். அக்காலத்திலெல்லாம் அவனைத் தளர விடாது ஊக்க மூட்டுவித்த பெருமை அவனது மாற்றாந் தாயா ருடையதாகும். ஆண்டவன் அரு ளால் இவ்வம்மையும் தான் உள்ளன் புடன் ஆதரித்து வளர்த்த தனயன் உயர் பதவியெய்தி ஐக்கிய நாடுகளுக் குத் தனிப்பெருந் தலைவனாய்த் திகழ்ந் ததைத் தன் கண்ணாரக் கண்டு அக மகிழ்ந்தாள்.



லிங்கன் பிறந்தது இந்த மர வீட்டில்தான்

லிங்கனுக்கு வயது பதினாறாயிற்று. ஆறு அடி நான்கு அங்குலம் உயரம். கட்டு மஸ்தான சரீரம். ஆஜானுபாகு.

ஏதாவதொரு வழியில் இரண்டு காசு சம்பாதிக்க வேண்டுமென்ற முயற்சியில் புகுந்தான். அவன் செய்யாத வேலை கிடையாது. படகோட்டி; கசாப்புக் கடைக்காரனுக்குக் கையாள்; கிடைத்த காலத்தில் பயிர்த் தொழில் கூலியாள்; மரவெட்டி; சில்லரைக் கடை குமாஸ்தா; முதலிய பல வேலைகளில் அமர்ந்து உழைத்தான். அவனுடைய இருபத்தொன்றாவது வயதில் தந்தையார் மீண்டும் வேறொரு பிரதேசத்திற்குக் குடியேறினார். இண்டியானாவை விட்டு இப்பொழுது இலினாயில் (Illinois) வந்து சேர்ந்தார்கள். இங்கு வந்த இரண்டு மூன்று வருஷங்களுக்குப் பிறகுதான் லிங்கன் தொழிற்படிப்பு கற்கத் தொடங்கினான். அவனுடைய நண்பர் ஒருவர் ஸர்வேயராக விருந்தார். அவரிடமிருந்து அளவைக் கலையைப்பற்றிய சில புஸ்தகங்களை இரவல் வாங்கிக் கொண்டான். ஒரு ஆறு வாரங்கள், வேலை யொன்றும் கிடைக்காததினால் சும்மா விருக்க நேர்ந்தது. காலத்தை வீண் போக்காது, வாங்கிவந்த புஸ்தகங்களை இரவும் பகலும் படித்து, நிலப்பரப்பை அளவிடப் போதிய திறமையடைந்தான். அத் தொழிற்கு வேண்டிய ஒன்றிரண்டு கருவிகளை வாங்கிக் கொண்டு ஸர்வேயர் உத்தியோகம் செய்யலானான். திண்ணியர் எண்ணமும் விடா முயற்சியும் வீண் போகுமா? சீக்கிரத்தில் அவனுக்கு வேண்டிய அளவு வேலையும் கிடைத்தது. புதிய சேலம் (New Salem) என்ற ஊரில் இன்னொருவருடன் கூட்டாளியாக ஓர் கடையை வைத்தான். ஆனால் அவனுடைய கூட்டாளியின் மோசடியினால் கடையை மூட வேண்டியதாயிற்று. அவ்வூருக்குத் தபாலாபீஸ் சிப்பந்தியாகவும் சில காலம் இருந்தான்.

அரசியற் பிரவேசம்—
வழக்கறிஞன் வாழ்க்கை

லிங்கன் இலினாயில் குடியேறிய சில காலத்தில் அவனுடைய தூய்மையான குணத்தையும், இயற்கையில் அமைந்திருந்த அவனுடைய நாவன்மையையும், புத்தி நுட்பத்தையும் கண்ட பலர் அவனை அந்நாட்டு சட்டசபைக்கு அபேக்ஷகராய் நிறுத்தி வைத்தனர். முதன் முறை தோல்வியுற்றான் எனினும், 1834ம் வருஷத்தில் அவன் அச்சபைக்குத் தேர்

தெடுக்கப்பட்டான். சட்டசபை அங்கத்தினனாய் அவன்முற்போந்த காலத்திலிருந்தே அரசியல் வானில் ஓர் புதிய நக்ஷத்திரம் உதித்ததென்று பலர் மெச்சினார்கள். இக்காலத்தில் தான் ஒரு சில நண்பர்களின் தூண்டுதலின் பேரில் லிங்கன், சட்டப் பரிக்ஷையில் தேர்ச்சி பெற்று நியாய வாதியாவதென்று தீர்மானித்தான். ஒரே நாளையில் 22 மைல்கள் நடந்து சென்று புஸ்தகங்களை இரவல் வாங்கிக் கொண்டு பொழுது படுமுன்னர் வீடு திரும்பி விட்டானாம். அன்றியும், திரும்புகையில் ஒரு புஸ்தகத்தில் முதல் நாற்பது பக்கங்களை அநேகமாய் மனப் பாடஞ் செய்து விட்டானாம். என்ன அபார சக்தி! எத்தகைய தீவிர முயற்சி! இருபத்தெட்டாவது வயதில் லிங்கன் சட்டப் பரிக்ஷை கொடுத்து நியாயவாதியானான். இலினாயின் தலைநகரான ஸ்பிரிங் பீல்டில் (Spring Field) வழக்கறிஞனாக அப்பியாசிக்கத் தொடங்கினான். தனக்குக் கிடைத்த முதல் வழக்கின் ஊதியத்தைக் கொண்டு தனது தந்தை பயிரிட்டுவந்த நிலத்தை அவருக்கே சொந்தமாக வாங்கிக் கொடுத்தான். வழக்கறிஞன் என்ற முறையில் அவனிடம் மூன்று குணங்கள் தலை சிறந்து விளங்கின. ஒன்று சிந்திப்பதிலும் பேசுவதிலும் ஐயப்பாட்டிற்கு இடமேயிராது. வழக்குகளின் சிக்கல்களை அறுத்துக் கோவையாக விஷயங்களைத் தொடுப்பதிலும், சேகரித்த சாட்சியங்களில் இம்மியளவும் தவறு ஏற்படாதபடி ஆராய்ந்து கவனிப்பதிலும், தான் விரும்பிய ஓர் கருத்தை மிகவும் மந்த புத்தியுடைய ஒருவனும் எளிதில் அறிந்து கொள்ளுமாறு தெளிவுடனும் உணர்ச்சியுடனும் விளக்கும் நாவன்மையிலும் அவனுக்கு இணையாக விருந்தவர்கள் மிகச் சிலரே. இரண்டாவதாக அவனிடம் ஹாஸ்ய ரஸமும் கேட்போர் உள்ளங் கரையக் கதை சொல்லும் திறமையும் விசேஷமாக உண்டு. கடைசியாக, அவன் வாய்மை நெறியிலிருந்தும் தொழில் முறை யோக்கியதையிலிருந்தும் சிறிதும் பிறழமாட்டான். குற்றவாளி யென்று தான் தீர்மானித்த ஒருவனுடைய தரப்பில் வழக்காட ஒருக்காலும் சம்மதிக்க மாட்டான். வாய்மையும் வக்கீல் தொழிலும் ஒவ்வாது என்ற கொள்கையை எப்பொழுதும் கண்டிப்பான். உண்மை நெறியிலிருந்து சிறிதும் விலகாது, பொய்யும் புரட்டும் இம்மியளவும் சொல்லாது நியாயவாதியாயிருத்தல் கூடுமென்பதே அவனது துணிபு. இக்கொள்கைக்கு அவனே உதாரண புருஷனாய் விளங்கினான். ஊரிலும் நாட்டிலும் உள்ள மக்கள் யாவரும் அவனை யோக்கிய புருஷன் 'ஆபே' என்று பாராட்டினர்.

லிங்கனுக்கு முப்பத்து மூன்றாவது வயதில் விவாகம் நடந்தது. அவனது மனைவியார் மேரி டாட் என்ற கன்னிப் பெயர் கொண்ட அணங்கு.

1846ம் வருஷத்தில் ஆபிரகாம் லிங்கன் ஐக்கிய நாடுகளின் காங்கிரஸிற்கு அங்கத்தினனாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டான். நான்கு வருஷங்கள் சட்டசபை யனுபவம் உற்ற பின் மறு தேர்தலில் அபேக்ஷகனாய் நிற்க மறுத்து விட்டான். ஆயினும் கால சக்கரச் சுழல்களிலே அகப்படாதார் யார்? அக்காலத்தில் அமெரிக்காவில் முக்கியமாக ஐக்கிய நாடுகளில், பிரதான அரசியற் பிரச்னையாக விருந்தது அடிமைகளைப் பற்றியதாகும். இந்தப் பிரச்னையின் நிமித்தமாகவே ஐக்கிய சமஷ்டி ராஜ்ஜியமும் முறிந்து போகுமோவென்று பலர் பயந்தனர். இப் பிரச்னையின் விளைவை சரித்திர பூர்வமாய்ச் சிறிது ஆராய்வோம்.

அமெரிக்காவில் அடிமைத்தனம்

பதினெட்டாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில், இங்கிலாந்துக்குச் சொந்தமான அமெரிக்க குடியேற்ற நாடுகள் பதின் மூன்றிலும் அடிமை கொள்வது வழக்கமாயிருந்தது. ஆபிரிக்காவிலிருந்து ஆயிரக் கணக்கான நீக்ரோவர்களை அடிமை வியாபாரிகள் சிறை கொண்டு கப்பலேறி அமெரிக்காவிலுள்ள தோட்டக் காரர்களுக்கு விற்று வந்தனர். குடியேற்ற நாடுகள் பெரும் பான்மையும் அடிமைகளின் உழைப்பினாலேயே செழிப்புற்றன. ஆனால் நாளடைவில் மனிதனை மனிதன் அடிமை கொள்வது தவறு, மனிதத் தன்மைக்கு மாறு பட்டது என்ற உயரிய நோக்கம் பரவிக் கொண்டு வந்தது. அமெரிக்க குடியேற்ற நாடுகள் இங்கிலாந்துடன் முரண் பட்டு, 1776ம் வருஷத்தில் பூர்ண சுயராஜ்ய அறிக்கையை வெளியிட்டபொழுது, வட பாகத்திலிருந்த நாடுகள் அடிமைகளுக்கு விடுதலையளித்திருந்தன. 1783ம் வருஷத்தில் சுதந்தரப் போர் முடிவுற்று, இங்கிலாந்தும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசை அங்கீகரித்து பின்னர் அமெரிக்க ராஜீய அமைப்பில் அடிமைத்தனத்தை அறவேயொழிக்க வேண்டுமென்று ஒரு சாரார் விவாதித்து வந்தனர். ஆனால் குடியரசின் தென் பகுதியில் அடிமைகள் நிரம்பவிருந்தனர். அப்பகுதிகளில் ஆலைகளும், யந்திரத் தொழிற்சாலைகளும் அதிகம் கிடையா. விவசாயமே பெரும் பான்மையோரின் முயற்சி. பிரதான விளைபொருள் பருத்தி. பருத்தித் தோட்டங்கள் யாவும் விஸ்தீரணத்தில் பெரியவை. இப் பெருந் தோட்டங்களை நீக்ரோ அடிமைகளின் உழைப்பைக் கொண்டே பயிர் செய்தல் கூடுமென்பது இப்பகுதியினர் வாதமாகும். அன்றியும், கிறிஸ்தவர் வேதமாகிய விவிலியத்திலும் அடிமை கொள்வதை பஹிஷ்கரிக்க வேண்டுமென்று விதித்திருக்கவில்லையாதலின், அது சாஸ்திரசம்பிரதாய சம்மதம் படைத்ததேயென்று வாதித்தனர். ஆக, இப்பிரச்னைக்கு அப்பொழுது முடிவு கூறாது விடுத்தனர்.

இது பெருந்தவறாய் முடிந்தது. இதுவே வட பகுதிக்கும் தென்பகுதிக்கு மிடையில் வெறுப்பையும், அவநம்பிக்கையையும் விளைவிக்கும் வித்தாயிற்று. தென் பகுதியிலுள்ளோர் ஆறறிவு படைத்த ஆண்களையும் பெண்களையும் அடிமைகளாய் நடத்துவது தருமமா? தென் பிரதேசங்களிலிருந்து நீக்ரோ அடிமைகள் தப்பியோடி வட நாடுகளில் அபயம் புகுந்தார்களானால், அவர்களை அதிகாரிகள் கண்டு பிடித்து, மீண்டும் அடிமைக் கதிக்குள்ளாகும் வண்ணம் அவ்வப் பிரதேச அதிகாரிகளுக்குத் திருப்பியனுப்புவது தருமமா? அன்றியும், மிசௌரி நதிக்கு மேற்கில் உள்ள பிரதேசத்தில் ஜனங்கள் குடியேறி, காட்டை யழித்து, நாடாக்கிப் பண்படுத்திய புது இடங்கள், ஐக்கிய அரசாங்கத்தில் அங்கத்தினர்களாகவிருக்க விண்ணப்பித்துக் கொள்ளும் பொழுது, அவைகளினிடையே அடிமை வியாபாரமும் அடிமை கொள்ளலும் வழக்கிலிருக்க அனுமதி கொடுத்தல் முறையாகுமா? இவை போன்ற கேள்விகள் எழுந்து கொண்டே யிருந்தன. நாட்டில் இவ்விரண்டு கொள்கைப் போராட்டம் நிகழ்ந்து கொண்டேயிருக்கும் சமயத்தில், 1854ம் ஆண்டில் 'மிசௌரி மத்தியஸ்தம்' என்ற ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதின் காரணமாகப் பெருங்கிளர்ச்சி

யுண்டாயிற்று. அடிமைத் தனத்தை அடியோடு ஒழிக்க வென்றே ஓர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வியக்கத்தின் அடிப்படையான கொள்கையாகிய அடிமை விடுதலையை மேற்கொண்ட குடியரசுக் கட்சி (Republican Party) யென்ற ஓர் ராஜீய ஸ்தாபனம் ஏற்படுத்தப் பட்டது.

ஆபிரகாம் லிங்கனே இது விஷயமாகத் தீவிர முடிவிற்கு எற்கனவே வந்து விட்டிருந்தான். 'அடிமையென்பது அறமல்ல. இவ்வுண்மையை உணராததினல் ஒற்றுமையும் சகோதரத்துவமும் திகழ வேண்டிய ஓர் தேச மக்களிடையே பிளவும் பிணக்கும் பகைமையும் சண்டையும் கூத்தாடுகின்றன' என்று பொதுக் கூட்டங்களில் பறை சாற்றினன். ஆகவே, 1858ம் வருஷத்தில் ஐக்கிய நாடுகளின் காங்கிரஸில் செனேட்டார் பதவிக்கு, குடியரசு கட்சியின் சார்பாக அபேக்ஷகராய் நிறுத்தப் பட்டான். அவனுக்குஎதிரியாக வந்தவனும்சாமானியனல்ல. ஸ்டீபன் அ. டொக்லஸ் என்றபிரபலசெனேட்டரும், பல வருஷங்களாக ராஜீய வுலகில் அநுபவ முதிர்ந்தவனுமான ஒருவனுடன் போட்டியிட வேண்டி வந்தது. தேர்தல் காலத்து, மா பெருங் கூட்டங்களில் 'பிளவுபட்ட ஒரு வீடு நிலைத்து



லிங்கனும் அவன் குடும்பத்தினரும்

நிற்க முடியாது. இந்த அரசாங்கமானது, பாதி யடிமை, பாதி சுதந்திரமாக எக்காலத்தும் நீடித்திருக்க முடியாது. இதனல் ஐக்கிய சமஷ்டியானது முறிந்து போகுமென்று நான் எதிர் நோக்கவில்லை: வீடு தரையோடு தரையாய் விழுந்து விட வேண்டுமென்று நான் விரும்ப வில்லை. ஆனல் பிளவு பட்டிருப்பது இத்துடன் ஒழிய வேண்டுமென்பதையே விரும்பு

கிறேன்' என்று அஞ்சாது பேசினான். தேர்தலும் முடிந்தது. லிங்கனும் வெற்றிபெற்றான். இது முதற்கொண்டு அவன் அகில அமெரிக்க புருஷனானான். தலைவர் பதவிக்கு அவனே தகுந்தவனென்று பெருவாரியான ஜனங்கள் பேசலுற்றார்கள். இரண்டு வருஷங்கள் சென்றன. பொது ஜன மதிப்பும் பரிணமித்தது. ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சமஷ்டி அரசாங்கத்திற்குத் தலைவனாக நியமிக்கப்பட்டு பெருமிதமான வோட்டுக்களால் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

லிங்கனும் உள் நாட்டுப் போரும்

1860ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் லிங்கனது தேர்தல்; அடுத்த வருஷம் மார்ச்சு மாதம் அப்பதவியை மேற்கொள்ள வேண்டும். இதற்கிடையிலுள்ள நான்கு மாதங்களில், ஒன்றன்பின் ஒன்றாக தென் நாடுகளில் பல, சமஷ்டி ஆதிக்கத்திலிருந்து விலகிக் கொண்டன. பிரிந்த இந்நாடுகள் ஒன்று பட்ட அமெரிக்க நாடுகள் (Confederate States of America) என்று பெயர் கொண்டு ஜெபர்ஸன் டேவிஸ் என்பவரைத் தலைவராகத் தேர்ந்து கொண்டன. ஐக்கிய நாடுகளின் ஆட்சி பீடமாகிய வாஷிங்டன் நகரும் அடிமை கொள்வோர் வாழும் பகுதியிலிருந்தது. இலினாயிலிருந்து அந்நகருக்குப் போகும் பொழுதே லிங்கனைக் கொலை செய்ய ஓர் சூழ்ச்சி செய்தனர். ஈசன் அருளால் சூழ்ச்சி பலிக்கவில்லை. தான் பகைவர்கள் மத்தியில் பணியாற்ற வேண்டியிருந்ததைக் குறித்து சிறிதும் அஞ்சினானில்லை; அவர்கள் அறியாமையினால் பகைமை கொண்டொழுகினார்களே யென்று மட்டும் வருந்தினான். தெற்கும் வடக்கும் சண்டையிடாமலிருக்க வேண்டி மிகவும் முயன்றான். தேசத்தில் இருக்கும் அடிமைகள் யாவரையும், உரிமையாளர்களுக்கு நஷ்டம் ஏற்படாதவண்ணம், அரசாங்கமே விலை கொடுத்து வாங்கி விடுதலை செய்வது என்ற தீர்மானத்தையும் கொண்டு வந்தான். ஆனால் தென் பகுதியினர் பொறுத்துப்பார்த்தார்களில்லை. படை கொண்டு தாக்கி உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் விளைவித்தனர். கருணை நிரம்பிய லிங்கனும், ஐக்கிய ஆட்சியின் சட்டங்களையும் அற நெறியையும் நிலைநிறுத்துவதற்காக, வேறு வழியில்லாது போர் தொடுத்தான். மூண்டது வெம்போர். நீண்டது நான்கு வருஷம். நாடெங்கும் யுத்த முழக்கம். எங்கு பார்த்தாலும் அணிவகுத்த வீரர்களின் கூட்டம். இருதரப்பினர் கை கலப்பு. சிலகால் தோல்வி. சிலகால் வெற்றி. நீலமும் சாம்பலும் † வெட்டுண்டு மாண்டு, இரண்டும் பிடி சாம்பலான கோரக் காட்சி.

போர் நடந்து கொண்டிருக்கும் பொழுதே 1863ம் ஆண்டு ஜனவரி முதல் தேதியன்று ஆபிரகாம் லிங்கன், அவனுக்கு அழியாப் புகழையும் 'விடுதலை மூர்த்தி' யென்னும் நிகரில் பட்டத்தையும் தேடிக் கொடுத்த 'விடுதலை விளம்பரம்' எனும் உத்திரவைப் பிறப்பித்தான். அவ்வுத்திரவினால் அத்தேதியில் சமஷ்டி அரசாங்கத்திற்குக் கீழ்ப் படியாத நாடுகளிலுள்ள சமஸ்த அடிமைகளுக்கும் விடுதலை யளிக்கப் பட்டது. நாற்பது லட்சம் நீக்ரோ அடிமைகள் மீண்டும் மனிதத் தன்மை பெற்றனர். 'அடிமைக்குத் தளையில்லை; யாருமிப்போ

† இப்போரில் ஐக்கிய சமஷ்டிக் கட்சியினர் நீல நிற உடையும், தென்பகுதியினர் சாம்பல் வர்ண உடையும் அணிந்திருந்தார்கள்.

தடிமையில்லை: அறிக!' என்ருன். இடி பட்ட சுவர்போலே கலி விழுந்தான்.

இவ்வருஷத்திலேயே கெட்டிஸ் பர்க் என்னுமிடத்தில் இரு படைக ளும் மூன்று நாட்கள் இடைவிடாது சண்டை செய்தன. சண்டை ஓய்ந்து தென் பகுதியினர் பின் வாங்கிய பின் யுத்த களத்தில் ஒரு பாகத்தில் இறந்து பட்ட வீரர்களின் ஞாபகார்த்தச் சின் னம் ஒன்றை ஸ்தாபிக்கும் பொழுது லிங்கன் பேசிய மொழிகள் சொல் ரத்தினங்களாகும் :—

'எண்பத்தேழு வருஷங்களுக்கு முன்னர்* இக் கண்டத்தில் நமது தந்தையர்கள் ஓர் புதிய அரசை ஸ்தா பித்தனர். அவ்வரசு சுதந்திரவேட்கை யின் விளைவு. 'எல்லோருமொன்றென் னும்' திருமிக்க அருள் நெறியையே யடிப்படையாகக் கொண்டது. அவ் வரசும் அந்நெறியும் இவ்வுலகில் நிலைத்து நிற்கவேண்டி இன்று நாம் கடும் போர் வயப்பட்டு நிற்கின்ருேம்.

இப்போரின் படுகளமொன்றில், 'அறத்திலே யிளைத்து வீழ்ந்தார்' அழி விலாப் புகழைப் பெற்று துளக்கற ஓங்கி நிற்கத் தூலமாம் சின்னம் நிறுவப் பிழைத்திடும் நாம் கூடியுள் ளோம். இன்று நாம் இங்கு சொல் லும் இப்புன் மொழிகளை உலகம் சடு தியில் மறந்துவிடக்கூடும்; ஆனுல் நம் வீரர் இங்கு நிகழ்த்திக் காட்டிய வீரச் செயலை என்றும் மறக்காது. எந்த அறப்பணியின் பொருட்டு அவர்கள் இறந்து பட்டனரோ, அப்பணியை இனிதே பூர்த்தி செய்ய வேண்டி நாம் நமது அறிவையும், ஆற்றலையும், உயிரையும் தத்தஞ் செய்வதே நமது கடமையாகும். அவர்களின் உயிர்த் தியாகம் வீண் போகுமா? இவ்வேள் வியில் வீழ்ந்தொழிந்த வீரர்கள் இன் னுயிர் வீணேயோ? இல்லை. அவர் களின் மரணமே சுதந்திர அணங்கின் மறு பிறப்பிற்குக் காரணமாகட்டும். ஆண்டவன் அருளால் இந்நாடு சுதந் திரப் புனர் ஜன்மம் பெறுவதாக! குடி மக்கள் சொன்னபடி குடி வாழ்வு மேன்மையுறக் குடிமை நீதிக் குடிகொண் டோங்கும் குடியரசு உல கில் மறையாது நிலைத்து நிற்க' என்று முடித்தான்.

1864-ம் வருஷத்தின் இறுதியில் போர் முடிந்தபாடில்லை. ஆனுல் லிங்க னின் தலைவர் பதவிக்கு விதிக்கப்பட் டிருந்த காலம் முடிவுற்றது. அவ் வருஷ முடிவில் நடைபெற்ற தேர்த லில் லிங்கனே மீண்டும் வெற்றி பெற் ருன். வட நாடுகளின்ஜனங்கள் அவனை மகான் எனக் கருதி பூர்ண ஆதர வளித்தனர். லிங்கன் இரண்டாவது முறை தலைவனுன சிறிது காலத்திற் கெல்லாம் போரும் முடிவுற்றது. தென்னுடுகள் முறியடிக்கப்பட்டு சமா தானம் வேண்டி நின்றன. உடன் படிக்கையும் ஈடேறிற்று. ஐக்கிய நாடுக ளெங்கும் ஒரே குதூகலம். சமஷ்டியரசு முறிந்து போகாது, பாதுகாத்து, வாகை சூடிய வீரனைப் போற்றுவார் பலர். அறப் போர் தொடுத்து அற நெறியை ஸ்தா பித்த ஆன்ருேனை வாழ்த்தும் அறிஞர் குழாங்கள் பல. மனிதத் தன்மை யிழந்து அடிமைகளாய் அவதிப்பட் டிருந்து, லிங்கனின் பெரு முயற்சி யால் சுவாதீனம்பெற்ற லக்ஷக் கணக் கான நீக்ரோவர்களின் 'விடுதலையளி த்த மகான்', 'சுதந்திரம் வழங்கிய ஸத் புருஷன்' என்ற கோஷங்கள் ஓர் புறம். எல்லோரும் ஒருமித்து அன்

* 1776-ம் ஆண்டில் அமெரிக்க குடியேற்ற நாடுகள், தாய் நாடாகிய இங்கிலாந்தின் ஆட்சியினின்றும் விடுபட விரும்பி பூர்ண சுயராஜ்ய அறிக்கை யொன்றை விடுத்தன.

பின் பெருக்கால் அழைத்த 'அப்பன் ஆபிரகாமி'ன் வாழ்த்துக்கள் யாங்கணும் ஒலித்தன.

கொலைகார பூத்

ஐயகோ! ஈதென்ன? கலியாண வீட்டில் அழுகுரல் கேட்கிறதே? 1865ம் வருஷம் ஏப்ரல் மாதம் 14உ மந்திரிகள் சபையின் கூட்டமொன்று நிகழ்ந்தது. அப்பொழுது காருண்ய

லண்டன் பார்லிமெண்ட் ஸ்கொயரிலுள்ள லிங்கனின் உருவச்சிலை

புருஷனாகிய லிங்கன் யுத்தத்தில் பிடிபட்ட தென்னாட்டு வீரர்கள், கலகம் விளைவித்த காரண புருஷர்கள் எல்லோரையும் மன்னித்துவிடுவதே முறையென்று பேசி முடித்தான். கூட்டமும் கலைந்தது. வாஷிங்டன் நகரில் 'போர்ட்' நாடக சாலையில் சமாதானக் கொண்டாட்டம் வெகு விமரிசையாக நடைபெறுவதற்கான ஏற்பாடு நிகழ்ந்தது. ஆபிரகாம் லிங்கன் அன்றிரவு அங்கு விஜயஞ் செய்தான். விழாவி லீடுபட்ட லிங்கன் தனது ஆசனத்தில் வீற்றிருந்தான். அச்சமயம் அரைப்பைத்தியமான பூத் (Booth) என்ற ஓர் நடிகன் ஐக்கிய நாடுகளின் அரும் பெருந்தலைவனை, சுதந்திர தேவியின் தவப்புதல்வனை, அடிமைக்குத் தளையில்லையென்று அறிவித்த அறவோனை, கைத்துப்பாக்கி கொண்டு சுட்டான்; பாவி, கொலை புரிந்தான். குற்றுயிராய்க்கிடந்த தலைவர் பெருமானை அவனது வாசஸ்தலமாகிய 'வெண்மை வீட்டிற்'குத் § தூக்கிச் சென்றனர். மறுநாட் காலையில் அவனது பரிசுத்த ஆன்மா இறைவன் திருவடி யடைந்தது. அமெரிக்காவில் பிறந்த தனக்குவமை யில்லாத் தகைமையாளர்களில் ஒருவனும், அகில உலக சரித்திரத்தில் ராஜீய மகா நிபுணர்களில் ஒருவனுமாகிய ஆபிரகாம் லிங்கன் இறந்து போனான். தேசமெங்கும், வெற்றி நற்பகல், துயர் நள்ளிரவாக மாறிற்று. லிங்கன் மரித்ததை நினைந்து வருந்திய அமெரிக்கக் கவி திலகமாகிய வால்ட் விட்மன், (Walt Whitman) சொற்களால் துயரோவியம் வரைவதைப் பாருங்கள் :—

§ அமெரிக்க ஐக்கிய குடியரசுத் தலைவரின் வாசஸ்தலத்திற்கு (White House) என்று பெயர்.



தீபாவளி கொண்டாட்டமா அம்மணி! உங்கள் ராட்டினம்
நிரம்ப ஜோராகச் சுழல்கிறதே!

சரியான தீர்ப்பு—ஒரு சிறு கதை

ஒரு பிரயாணி. பாவம்! நல்ல வெயிலிலே நடந்து போகிறன். மேலே போக முடியவில்லை. நல்ல வேளையாக எதிரில் ஒரு பொதி மாட்டை ஓட்டிக் கொண்டு ஒருவன் வந்தான். இந்தப் பொதி மாட்டை ஓட்டிக் கொண்டு செல்கிறவன் எந்த ஊருக்குப் போக வேண்டுமோ அதே ஊருக்குத்தான் இந்தப் பிரயாணியும் போக வேண்டியிருந்தது. ஆகவே, தன்னை மாட்டின் மீது ஏற்றிக் கொண்டு செல்லுமாறும் அதற்கு நான்கு அணு கொடுப்பதாகவும் பிரயாணி சொன்னன். மாட்டுக்காரனும் அதற்குச் சம்மதித்தான். கொஞ்ச தூரம் இருவரும் சென்றார்கள். நல்ல வெயிலானபடியால் மாட்டுக்குக் கொஞ்சம் களைப்பு ஏற்பட்டது. எனவே, மாட்டுக்காரன், அதற்குத் தீனி போட்டுத் தண்ணீர் காட்ட வேண்டி, பிரயாணியை கீழே இறங்கச் சொன்னன். மாடும் தீனி தின்று விட்டுச் சிறிது நேரம் களைப்பாறியது. அதன் நிழலிலே பிரயாணியும் களைப் பாறினன். அப்பொழுது இவன் வாய் சும்மா இருக்கக் கூடாதா? 'அப்பாடா! என்ன சுகமாயிருக்கிறது!' என்றான்.

பிரயாணம் முடிந்தது. பிரயாணி, ஏற்கனவே பேசியபடி, மாட்டுக்காரனிடம் நான்கணுவை நீட்டினன். மாட்டுக்காரன், இது போதாதென்று இன்

---

* 'தலைவரே! என் அருந்தலைவரே!
நமது பயங்கரப் பிரயாணம் முடிவுற்றது.
கற்பாறை யொன்றிலும் மோதாது தப்பியது நற்கலம்; நாம் நாடிய விழுபொருள் பெற்று விட்டோம்.
துறைமுகம் அதோ; மணியோசை கேட்கின்றது; ஜனங்கள் பெருமிதமடைகின்றனர்;
உறுதியும் ஆண்மையும் ஒருங்கே படைத்த இந் நாவாயின் வருகையை நோக்கியே நிற்கின்றனர்;
ஆனல் ஐயோ, என் நெஞ்சே! உள்ளமே! மனமே! உதிரத் துளிகள் சிந்திய வண்ணம்,
மேற்றட்டு முகட்டில் என் தலைவர் கிடக்கை, உணர் வற்ற சவமே; உயிரற்ற உடலே!
தலைவரே! என் தலைவரே! எழுமின், மணியிசை கேளுமின்;
எழுமின்—உமக்கே காற்றசைக்கோடியும்—உமக்கே வீர சங்க முழக்கம்—
உமக்கே நறுமலர்ச் செண்டும் மணமுடைய மாலையும்—உம்மைக் காணவே கரையெலாம் ஜனத்திரள்—
அசையும் கூட்டத்தில் ஆர்வ முடைய முகங்கள் உம்மைத் தேடுகின்றன—உம்மையே யழைக்கின்றன.
இதோ தலைவரே! அருமைத்தந்தையே! என் கையே யணையாய்த் தலையை யுயர்த்துமின்!
கப்பற்றட்டில் இறந்தோ கிடக்கின்றீர்?
இல்லை, இது நனவில்லை, கனவே!
என் தலைவர் மொழியது பேசார்; தண்ணிய உதடுகள் அசைவில்லை:
என் கரங்கொண்டு தாங்கியதை உணர்ந்தாரில்லையே; நாடியும் அடங்கி எண்ணமும் ஓய்ந்ததே.

---

* இது வால்ட் விட்மன் எழுதிய "O Captain! My Captain!" என்ற கவிதையின் வசன மொழி பெயர்ப்பாகும்.

னும் அதிக தொகை கேட்டான். 'நீ மாட்டின் மீது ஏறிக் கொண்டு வருவதற்கு மட்டுந்தான் நான்கணு கொடுப்பதாய்ச் சொன்னுய். ஆனுல் இப்பொழுது என் மாட்டின் நிழலேயும் அநுபவித்திருக்கிருய். நீயே சொன்னுயல்லவா என்ன சுகமாயிருக்கிறதென்று? ஆகையால் அதற்காக நீ அதிகமாக நான்கணு கொடுக்க வேண்டும்' என்ருன். பிரயாணி, அதிக பணம் கொடுக்க முடியாதென்று விட்டான்.

இது பெரு வழக்காக முடிந்தது. கோர்ட்டுக்குப் போயிற்று. இரண்டு பேரும் வக்கீல் வைத்து வாதாடினர்கள். நீதிபதி, மாட்டுக்காரனுடைய வக்கீலேப் பார்த்து, இதற்கு முன் இந்த மாதிரியான வழக்கு நடைபெற்றிருக்கிறதா வென்று கேட்டார்.

வக்கீல் சொல்கிருர்:— 'பிரபுவே! இதே மாதிரி ஒரு வழக்கு நடந்திருக்கிறது. ஒரு சமயம், ஒரு பிச்சைக்காரன், பிச்சை எடுத்துக் கொண்டு வந்த சோற்றை ஒரு ஹோட்டலில் வைத்துச் சாப்பிட அந்த ஹோட்டல் சொந்தக்காரனே இடங் கேட்டான். அப்படியே ஹோட்டல் காரனும் இடங் கொடுத்தான். ஒரு மூலேயில் உட்கார்ந்து பிச்சைக்காரன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது, ஹோட்டலுக்குள்ளே பட்சணம் பண்ணுகிற நெய் வாசனே இவன் மூக்கிலே ஏறியது. இந்த வாசனேயைப் பிடித்துக் கொண்டே, பிச்சைக்காரன் தன் சாப்பாட்டை அதிக ருசியாகச் சாப்பிட்டான். கடைசியில் சாப்பாடு முடிந்ததும், பிச்சைக்காரன், ஹோட்டல் காரனுக்கு வந்தனமளித்து விட்டுப் போகப் பார்த்தான். ஹோட்டல் காரன் போக விடவில்லே. 'உனக்குச் சாப்பிட இடங்கொடுத்தேனே தவிர, ஹோட்டலில் செய்யப்படுகிற பட்சணத்தின் வாசனேயை அநுபவிக்க விடவில்லேயே. அதற்காக ஏதேனும் நீ பணம் கொடுத்து விட்டுப் போக வேண்டும். இந்த வாசனேயினுல்தானே நீ சுகமாகச் சாப்பிட்டாய்' என்ருன். பிச்சைக்காரன் ஒன்றும் கொடுக்க முடியாதென்று ஒரே பிடிவாதமாகச் சொல்லி விட்டான். கேஸ் நடந்தது. ஜட்ஜ் பார்த்தார். இரண்டு பேரும் திருப்திப் படும்படி தீர்ப்புச் சொன்னுர். பிச்சைக் காரனேப் பார்த்து, 'உன்னிடமுள்ள ஒரு காசை எடுத்து, ஹோட்டல் காரனுடைய மூக்கில் நன்ருகத் தேய். நீ அவனுடைய ஹோட்டல் பட்சண வாசனேயை நுகர்ந்தாய்; அதற்குப் பதில் அவன், உன்னுடைய காசின் வாசனேயை நுகரட்டும் என்ருர்.'

மாட்டுக்காரனுடைய வக்கீல் சொன்ன இந்த உதாரணத்தை நீதிபதி கேட்டு விட்டு, 'நிரம்ப சரி; ஒரு கண்ணுடி கொண்டுவா' என்று உத்திர விட்டார். கோர்ட் சேவகன் உடனே ஒரு கண்ணுடியைக் கொண்டு வந்தான். பிரயாணியைக் கூப்பிட்டு 'இந்தக் கண்ணுடி முன்னிலேயில் உன்னிடத்திலேயுள்ள நான்கு அணு துண்டைக் காண்பி' என்ருர். அவனும் அப்படியே காண்பித்தான். மாட்டுக்காரனே அழைத்து, 'அதோ கண்ணுடியில் தெரிகிறது பார்த்தாயா? அந்த நாலணுவை நீ வைத்துக் கொள். நீ உன்னுடைய மாட்டின் நிழலே இந்தப் பிரயாணிக்குக் கொடுத்து உதவினுயல்லவா? அதற்குப் பதில், நீ இந்த நாலணுவின் நிழலே அநுபவி' என்று தீர்ப்புக் கூறினுர். இவருடைய சாமர்த்தியமான தீர்ப்பைக் கண்டு எல்லாரும் கொல்லென்று சிரித்தனர்.

இப்படியும் நடக்குமா?

ஸ்ரீமதி ஹார்ட் காசில் என்ற ஓர் ஆங்கில மாது, சமீபத்தில் ஹிந்து மதத்தில் சேர்ந்து கொண்டாள்.

ஃ ஃ ஃ

ஜப்பானிய ஏகாதிபத்தியம் தோன்றி இற்றைக்கு 2600 வருஷங்களாகின்றன.

ஃ ஃ ஃ

சிந்து மாகாணத்திலுள்ள ஹரிஜன சேவா சங்கத்திற்கு, மேற்படி மாகாண கவர்னர் நூறு ரூபாய் நன்கொடை யளித்திருக்கிறார். என்ன ஆச்சரியம்!

ஃ ஃ ஃ

ஜிப்ரால்டர் 1704ம் வருஷமும், இலங்கை 1795ம் வருஷமும், மால்டா 1800ம் வருஷமும், கேப்டவுன் 1806ம் வருஷமும், மோரீசு தீவு 1810ம் வருஷமும் பிரிட்டிஷார் வசம் வந்தன.

ஃ ஃ ஃ

பதினாறு வயதுக் குட்பட்ட சிறுவர்கள், குற்றஞ் செய்து சிறைவாசத் தண்டனை அநுபவிக்கிறவர்கள் 1935ம் வருஷத்தில் இங்கிலாந்தில் 22425 பேர்.

ஃ ஃ ஃ

ருஷ்யாவில் ஒரு விறகு வெட்டி, ஏழ்மை காரணமாக, தனது மனைவியையும் இரண்டு குழந்தைகளையும் சுமார் மூன்றரை ரூபாய்க்கு விற்றுவிட்டான்.

ஃ ஃ ஃ

இரானிய (பர்ஷிய) அரசாங்கத்தார், வெளி நாடுகளிலிருந்து சாமான்களை இறக்குமதி செய்வோர், முதலில் அரசாங்க அநுமதி பெற வேண்டுமென்று ஓர் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

ஃ ஃ ஃ

1943ம் வருஷத்தில் உலகத்தில் குறைவான விவாகங்கள் நடைபெறுமென்றும் இதனால் ஜனன விகிதமும் குறையக் கூடுமென்றும் ஸர் வில்லியம் பீவரிட்ஜ் என்ற ஒரு பொருளாதார நிபுணர் கூறுகிறார்.

ஃ ஃ ஃ

எகிப்திலே முகம்மது காஜி என்ற ஒருவன் இருக்கிறான். இவன் 9 அடி 8 அங்குலம் உயர முடையவனாக இருக்கிறான். இவனுடைய உபயோகத்திற்காக, எகிப்து மன்னர் ஒரு படுக்கையை உதவியிருக்கிறார்.

ஃ ஃ ஃ

1940ம் வருஷம் ஜப்பானில் யாத்திரை செய்கிற அந்நிய நாட்டாருக்கு குறைந்த ரெயில்வே கட்டணம் வாங்கப் பெறுமென்று ஜப்பானிய ரெயில்வே மந்திரி சபையார் ஓர் அறிக்கை விடுத்திருக்கின்றனர்.

ஃ ஃ ஃ

பள்ளிக் கூடங்களில் பிள்ளைகளுக்குத் தேகப் பயிற்சி சம்பந்தமான பாடங்கள் எங்ஙனம் போதிக்கப் படவேண்டு மென்பதைப் பற்றி ஆலோசனை சொல்ல, பம்பாய் மாகாண அரசாங்கத்தார் ஏழு பேரடங்கிய ஒரு கமிட்டியை நியமித்திருக்கின்றனர்.

ஃ ஃ ஃ

1936–37ம் வருஷத்தில் இந்தியாவில் மொத்தம் 1,128,900டன் சர்க்கரை உற்பத்தியாயிருக்கிறது. 1935 36ம் வருஷத்தில் 912,100 டன்தான் உற்பத்தியாயிற்று. சர்க்கரையை உற்பத்தி செய்யும் தொழிற் சாலைகள் 36–37ம் வருஷத்தில் 140.

ஃ ஃ ஃ

1937ம் வருஷம் மார்ச்சு மாதத்தோடு முடிகிற ஒரு வருஷத்தில்

மைசூர் சமஸ்தானத்திலிருந்து மட்டும் சுமார் பத்து கோடி ரூபாய் பெறுமான பொருள்கள் ஏற்றுமதி செய்யப் பட்டிருக்கின்றன. இறக்குமதியானவை சுமார் $11\frac{1}{4}$ கோடி ரூபாய் பெறுமான பொருள்கள்.

ஃ ஃ ஃ

வியன்னு நகரத்தில் ஒரு மனைவி தன் புருஷனிடத்திலிருந்து விவாக ரத்து செய்து கொண்டு விட்டாள். காரணம் என்ன தெரியுமா? புருஷன், 3 நாய், 6 பூனை, 4 பாம்பு, 2 பன்றி, 1 ஆமை, 1 கிளி, இவை தவிர முயல்கள், தவளைகள், மீன்கள், எலிகள் முதலியவைகளை வீட்டிலே வைத்து வளர்த்துக் கொண்டிருந்தானும்.

ஃ ஃ ஃ

துருக்கியின் முக்கிய நகரங்களுள் ஒன்றுகிய இஸ்தாம்பூல் என்ற நகரத்தில் இப்பொழுது பிச்சைக்காரர் தொல்லையே கிடையாது. நகர சபையாரின் உத்திரவுப்படி, திடகாத்திரமுள்ள பிச்சைக்காரர்கள் கூலி வேலை செய்யுமாறு கட்டாயப் படுத்தப் படுகிருர்கள். நோயாளிகள் ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பப் படுகிருர்கள்.

ஃ ஃ ஃ

பிரான்சு தேசத்தில் ஒரு புதிய உத்திரவு பிறந்திருக்கிறது. அதாவது சிறுவர்கள் ஒன்பது வயது முதற் கொண்டு, ஆகாய விமானத்தில் பறப்பதற்குக் கற்றுக் கொள்ள வேண்டுமென்றும், 17வது வயதில் ஆகாய விமானத்தில் பறப்பதற்குத் தகுதியுடையவர்களாகச் செய்து கொள்ள வேண்டுமென்றும் இந்த உத்திரவு கூறுகிறது.

ஃ ஃ ஃ

1937ம் வருஷம் ஜூன் மாதம் 30ந் தேதியோடு முடிகிற ஒரு வருஷத்தில் ஜப்பானிலிருந்து இந்தியாவுக்கு 91,827,662 ரூபாய் பெறுமான சாமான்கள் இறக்குமதியாயிருக்கின்றன. அதே கால அளவில், இந்தியாவிலிருந்து ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு 231,623,349 ரூபாயாகும்.

ஃ ஃ ஃ

அமெரிக்காவில் ஆல்பர்டெஸ் வில்லியம்ஸ் என்ற ஒருவன் இருக்கிருன். இவனுக்கு வயது 70. இவன் சிறிது கூட சளைக்காமல் நீண்ட தூரம் நடப்பதில் பெயர் பெற்றவன். இவன், பதினேரு வயதிலிருந்து எவ்வித மருந்தும் சாப்பிட்டது கிடையாது. லாகிரி வஸ்துக்களை உபயோகிப்பது, சீட்டு விளையாடுவது முதலிய துர்ப் பழக்கங்களில் ஈடுபட்டதும் கிடையாதாம்.

ஃ ஃ ஃ

ஒரு நீதிபதி, தாமே தமது மோட்டாரை ஓட்டிக் கொண்டு சென்றுர். ஆனல் தவருன பாதையில் சென்று விட்டார். இதற்காக, தாமே தம்முடைய குற்றத்தை விசாரித்து 3 ரூபாய் அபராதம் விதித்துக் கொண்டார். இது அமெரிக்காவில் மாண்டியோ யெல்லோ என்ற ஊரில் நடந்தது.

ஃ ஃ ஃ

எல்லா முனிசிபல் பள்ளிக் கூடங்களிலும் முதலில் வந்தே மாதர கீதம் பாடப் பட வேண்டுமென்றும், ஒவ்வொரு பள்ளிக் கூடத்திலும் காந்தியடிகளின் படம் இருக்க வேண்டுமென்றும், சுதந்திர தினக் கொண்டாட்டத்தன்று எல்லாப் பள்ளிக் கூடங்களையும் மூடவேண்டுமென்றும், முனிசிபல் சிப்பந்திகள் இஷ்டமிருந்தால் காங்கிரசில் சேரலாமென்றும், பூனு நகர சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

நமது நிருபர்களுடன்—

இந்தப் பகுதியில், ஆசிரியருடன் வாசகர்கள் தாராளமாகச் சந்திக்கலாம். சிலருக்குக் குறைகள் நிறைய இருக்கும். அவற்றை வாய் விட்டுச் சொன்னால்தான் அவர்களுக்கு ஆறுதல் ஏற்படும். இதுபோல், வேறு சிலர், ஏதேனும் ஆச்சரியமான ஒரு விஷயத்தைப் பார்த்தோ, கேட்டோ விடுவார்கள். அதை வெளியே சொல்லாமற் போனால் அவர்களுக்கு வயிறு வெடித்துப் போகும். இந்தச் சங்கடங்களெல்லாம் ஏன்? நண்பர்கள் மனந்திறந்து பேசுவதற்குத்தான், இந்தப் பகுதி திறக்கப்பட்டிருக்கிறது.

மகாத்மா காந்தி

ஆசிரியரவர்களே,

மகாத்மா காந்தியைப்பற்றிப் பிரசங்கிகள் பேசுகிறபோது, 'பொக்கை வாய்க் கிழவர்' என்றும் 'தாதா' என்றும் பேசுகிறார்களே, அப்படியானால் இந்தியாவிலுள்ள தலைவர்களில் அவர்தான் வயதில் பெரியவரா? இன்னும் யாரார் அவரைவிட வயதில் பெரிய பிரபலஸ்தர்கள் இருக்கிறார்கள்?

—காந்தி திருவடி

காந்தியடிகளைக் கிழவர் என்று சொல்லிவிட்டதினாலேயே அவர் தான் எல்லோரையும் விட வயதில் பெரியவர் என்ற அர்த்தமில்லையே. அவரைவிட வயதில் பெரியவர்கள் இன்னும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். கவிஞர் ரவீந்திரநாத் டாகூர், ஸர் ஜகதீச சந்திர போஸ், பண்டித மாளவியா முதலியோர் எண்பதாவது வயதை எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்படி வயதைக் கணக்கிட்டுக்கொண்டு போவதுகூடத்தவறென்று நினைக்கிறோம். ஏனென்றால் இவர்கள் எப்பொழுதும் இளமை உள்ளம் படைத்தவர்களாகவே உழைத்துக் கொண்டிருக்கிறார்களல்லவா?

—ஆசிரியர்

தமிழ் டாக்கிகள்

ஐயா,

சென்ற மாத 'ஜோதி'யில் ஒரு 'கிராஜுயேட்' எழுதின கடிதத்தையும், அதற்குத் தாங்கள் கீழே கொடுத்திருந்த பதிலையும் பார்த்தேன். அதைக் கொண்டு, தமிழ் டாக்கிகளைப்பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்னவென்பதை நான் தெரிந்துகொள்ள முடியவில்லை. தற்போதுள்ள தமிழ் டாக்கிகளில், எது உங்களுக்குச்சிறந்ததாகப்படுகிறது?

—எஸ். ஜனார்த்தனம்

எந்த தமிழ் டாக்கியையும் நாம் தனியாகச் சிறப்பித்துக் காட்டமுடியாது. பொதுவாக, தமிழ் டாக்கிகள், பாராட்டப்படக்கூடிய முன்னேற்றத்துக்கு வரவில்லை. இதற்கு முக்கிய காரணம், சினிமா தொழிலில் ஈடுபட்டுள்ள அன்பர்கள் பலரும் பண வருவாயையே முக்கிய லட்சியமாகக் கொண்டிருப்பதாகும். கலை அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுக்காத வரையில் நமது தமிழ் டாக்கிகள் உருப்படவே படாது.

—ஆசிரியர்

மோடார் சப்தங்கள்.

ஐயா,

இப்பொழுது நாட்டிலே பணமில்லை யென்று சொல்கிறார்கள். ஆனால் தெருக்களிலே மோடார்கள் ஓடுவது குறையவில்லை. ஓடினாலும் ஒழித் தொலைகிறது; இவை 'ஹார்ன்' அடிக்கிற சப்தம் மட்டும் நம்மால் சகிக்க முடியவில்லை. ஒவ்வொன்றும் ஒவ்

வொரு தினுசாகக் கத்துகின்றன. சில வருஷங்களுக்கு முன், சென்னையில், மோடார் வண்டிகள் இரவில் செல்கிறபோது, மந்தமான பிரகாசத்தையுடைய விளக்குகளையே போட்டுக் கொண்டு செல்ல வேண்டுமென்ற ஓர் உத்திரவு போடப் பட்டது. இதனால் பல ஆபத்துக்கள் நேரிடா வண்ணம் பாது காக்கப் பட்டன. அதே மாதிரி மோடார் சப்தங்களும், இந்த தொனியில் இந்த அளவுக்குட்பட்டுத் தான் இருக்க வேண்டுமென்று ஒரு வரை யறைக்குட்படுத்த முடியாதா?

—இடறி விழுந்தான்

ஏன் முடியாது? சட்ட பூர்வமாக இவைகளை வரையறைப் படுத்துவது மிகவும் அவசியம். இங்கிலாந்து முதலிய இடங்களில் இதுமாதிரியான சட்டங்கள்செய்திருக்கிறார்கள். மாகாணப் பொறுப்பாட்சியின்கீழ் இம்மாதிரியான சீர்திருத்தங்கள் கொண்டுவரப் பட வேண்டியது மிகவும் அவசியம் என்பதை நாம் சொல்லத் தேவையில்லையல்லவா?

—ஆசிரியர்

உலக யுத்தம் வருமா?

ஐயா,

சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இப்பொழுது சண்டை நடக்கிறது. ஸ்பெயின் சண்டையோ, இப்பொழுது ஓயாதுபோ லிருக்கிறது. இதெல்லாம்சேர்ந்து உலக யுத்தமாக வருமா?

—சமாதானப்பிரியன்

இது விஷயத்தில் எவரும் துணிந்து சோதிடம் கூறமுடியாதென்று நாம் நினைக்கிறோம். ஐரோப்பிய வல்லரசுகள் ஒவ்வொன்றும், போட்டா போட்டியின்பேரில் ஆயுதங்களைப் பெருக்கிக் கொண்டிருக்கின்றன. அப்படியிருந்தும் லாயிட் ஜார்ஜ், வேர்னன் பார்ட்லெட் போன்ற ராஜ தந்திரிகளும், அறிஞர்களும் சீக்கிரத்தில் பிரமாதமான யுத்தம் ஒன்றும் வராதென்று கருதுகிறார்கள். ஆனால் பண்டித ஜவஹர்லால் போன்ற இந்திய தேசீயத் தலைவர்கள், எந்தச் சமயத்திலும் உலக யுத்தம், எதிர்பாராத விதமாகத் தோன்றலாம் என்று எண்ணுகிறார்கள். எப்படியும் ஒரு போராட்டம் நடந்தே தீர வேண்டும். அந்தப் போராட்டமானது, ஒரு தேசத்திற்கும் மற்றொரு தேசத்திற்குமா யிராது. ஒரு கொள்கைக்கும் மற்றொரு கொள்கைக்குமாகவே இருக்கும். முரண்பட்ட அந்தக் கொள்கைகள் தான் என்னவென்பதை நமது நண்பர் ஊகித்துக் கொள்வாரா? 'ஜோதி'யைத் தொடர்ந்து படித்திருந்தால் அது தெரிந்திருக்குமே.

—ஆசிரியர்

அடுத்த காங்கிரஸ் தலைவர்

ஐயா,

அடுத்த காங்கிரஸுக்கு யார் தலைவராக இருக்க வேண்டுமென்பதைப் பற்றி, ஏற்கனவே. "ஜோதி" பத்திரிகையின் இரண்டாவது இதழில் கூறியிருக்கிறீர்கள். பண்டித ஜவஹர்லால் நேரு, மறுபடியும் காங்கிரஸின் தலைவராக வருவதில் எல்லாருக்கும் திருப்திதான். ஆனால்இப்பொழுது,மௌலானா அபுல்கலாம் அஜாத், சுபாஷ் சந்திர போஸ் முதலியோருடைய பெயர்கள் பிரேரிக்கப் படுகின்றனவே, இவர்களில் யாரேனும் ஒருவருக்கு ஏன் சந்தர்ப்பம் அளிக்கக்கூடாது?

—காங்கிரஸ் வாலா

தலைவர்களுடைய தரா தரங்களைப் பற்றிப் பேச நாம் எப்பொழுதுமே தயாராயில்லை. பண்டித ஜவஹர்லால், ஏன் மறுபடியும் காங்கிரஸ் தலைவராக வரவேண்டு மென்பதற்கு நாம் ஏற்கனவே காரணங்களைச் சொல்லி யிருக்கிறோம். அதை மறுபடியும் நண்பர் ஊன்றிப்படித்தல் நல்லது. *—ஆசிரியர்*

சங்கீதத்தின் வளர்ச்சி—மொகலாயர்கள் காலத்தில்

——"பாணன்"

இந்தியாவின் தொன்று தொட்ட கலைகளில் சங்கீதமும் ஒன்று. இதனை, எவ்வளவு உயர்ந்த முறையில் பாது காத்து வளர்த்து வர வேண்டுமோ அவ்வளவு சிறந்த முறையில் நமது பெரியோர்கள் வளர்த்து வந்திருக்கிறார்கள். தவிர, அந்தந்தக் காலத்து அரச பரம்பரையினரும், சங்கீத வித்துவான்களைப் பல பட ஆதரித்து வந்து மிருக்கிறார்கள். இந்தக் கட்டுரையில், மொகலாய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் சங்கீத அபிவிருத்தி, எந்த நிலையில் இருந்து வந்தது என்பதைப் பற்றித் தெரிந்து கொள்ள முயற்சிப்போம்.

சங்கீதத்திலேயே, கர்நாடக முறையென்றும் ஹிந்துஸ்தானி முறையென்றும் இருவித கிளைக ளுண்டல்லவா? இதில்,கி.பி.15,16வது நூற்றாண்டில், ஹிந்துஸ்தானி சங்கீத முறை பெரிதும் முன்னேற்றத்தில் இருந்தது. ஏனென்றால் இந்த இரண்டு நூற்றாண்டுகளில், இந்தியாவில் முகம்மதியர்களின் ஆதிக்கம் வலுத்துக் கொண்டு வந்தது. முகம்மதிய மன்னர்கள் பலர், தங்கள் சமஸ்தானங்களில் சங்கீத வித்துவான்களை ஆதரித்து வந்தனர். இந்த இசைப்புலவர்களின் காலத்தில்தான், பார்சி மெட்டுகள் தலை யெடுத்தன. அல்லாவுதீன் கில்ஜி (1296-1316)யின் ராஜ சபையில் அமீர் குஸ்ரு என்ற ஓர் இசைஞானி இருந்தான். இவன் சில பார்சி ராகங்களையும் இந்திய ராகங்களையும் ஒன்று கூட்டிச் சில புது ராகங்களை உண்டு பண்ணினான். இப்பொழுது வட நாட்டில் பாடப்படுகிற ராக வகைகளில் பல, இவன் காலத்திலிருந்துதோன்றியவை தான். இந்த அமீர் குஸ்ரு, வீணையை வேறொரு வகையாக அமைத்து, சிதார் என்று அதற்குப் பெயரிட்டு அதில் முதன் முதலாக வாசிக்கத் தொடங்கினான்.

மொகலாயர்களின் ஆதிக்கம் தென்னாட்டில் பரவின பிறகு, இங்கிருந்து பல சங்கீத வித்துவான்கள் சென்று மொகலாயர்களின் சபையை அலங்கரித்து வந்தார்கள். மொகலாய சக்ரவர்த்தி பரம்பரையில் நடு நாயகமாக விளங்கிய அக்பர் காலத்தில், (1559-1774)சங்கீதத்திற்கு ஒரு புதிய கௌரவம் அளிக்கப் பட்டதென்று சொல்லலாம். இவன், பல நாடுகளிலிருந்தும் சங்கீத வித்துவான்களை வரவழைத்து ஆதரித்து வந்தான். இவன் காலத்தில், ராகங்கள், பல மாறுதல்களையடைந்தன. தர்பார் ராகம் இந்தக் காலத்தில் தான் உண்டாயிற்று.

அக்பருடைய ராஜ சபையை, தான்சென் என்ற மகா வித்துவான் அலங்கரித்தான். இவனது இசையும், புகழும் இன்னும் இந்தியா வெங்கும் ஒலித்துக் கொண்டிருக்க வில்லையா? தீபகம் என்ற ராகத்தை, இவனுக்குப் பின்னால் எவருமே பாட வில்லையே. ரபாப் என்ற சங்கீதக் கருவியைக் கண்டு பிடித்து அதனை உபயோகத்திற்குக் கொண்டு வந்தவன் தான்சென்.

தான்சென், குவாலியர் என்ற ஊரில் இறந்துபோனான். இவன் இறந்த இடத்தில் ஒரு ஞாபகச் சின்னம் கட்டப்பட் டிருக்கிறது. இதன் மீது

ஒரு புளிய மரம் வளர்ந் திருக்கிறது. இதன் இலைகளைத் தின்பவர்களுக்குச் சங்கீத ஞானம் உண்டாகு மென்று இப்பொழுதும் சொல்வதுண்டு.

அக்பருக்குச் சங்கீதத்தில் இருந்த அபார பிரேமையைப் பற்றி அநேக கதைகள் சொல்வது வழக்கம். ஒரு சமயம் அக்பர் சபையில் கொலுவீற்றி ருக்கிறன். தான்சென் உருக்கமாகப் பாடிக்கொண் டிருக்கிறன். அதிலே பூரணமாக ஈடுபட்டது அக்பரின் மனம். பாட்டு முடிந்தது. தான்சென் னைப் பார்த்து, 'தான்சென்! உன் னைப்போல் இந்த உலகத்தில் வேறு யாராவது பாடுவோர் இருக்கிறர் களா?' என்றன். 'இருக்கிறர் ஒரு வர். அவர்தான் என் குருநாதர் ஹரி தாஸ சுவாமி' என்றன் தான்சென். 'அப்படியானல் அவர் பாட்டை நான் கேட்க வேண்டுமே' என்றன் ஆவலோடு அக்பர். 'ஆனல் ஹரிதாஸ சுவாமி, யாருடைய கட்ட ளைக்கும் கீழ்ப் படியமாட்டார். தாங் கள் கூப்பிட்டாலும் அவர் வரக்கூடி யவரல்ல' என்றன் தான்சென். அக் பருக்கோ, சுவாமியினுடைய பாட் டைக் கேட்டுவிட வேண்டுமென்ற ஒரே ஆவல். எனவே, தான்சென் போகிறபோது, அவனுடைய வேலை யாளாக வாத்தியங்களைத் தூக்கிக் கொண்டு மாறுவேஷத்துடன் போ னன் அக்பர், ஹரிதாஸ சுவாமியிடம்.

குரு சந்நிதானத்தில் சென்ற தான் சென், அவரைப் பாடுமாறு பன் முறை வேண்டிக்கொண்டான். முடிய வில்லை. கடைசியில் தான்சென் ஒரு தந் திரம் செய்தான். தானே ஒரு பாட் டைப்பாடி, வேண்டுமென்றேசிலஇடங் களில் அபஸ்வரமாகப் பாடினன். தமது சிஷ்யன், இங்ஙனம் வழி தப் பிப் பாடுவதைக் கேட்டுக்கொண் டிருக்க ஹரிதாஸ சுவாமிக்கு முடிய வில்லை. தாமே பாடிக் காட்டினர். அக்பர், கேட்டு மெய் மறந்தான். பின்னர், மன்னனும் புலவனும் திரும்பி வந்துகொண் டிருக்கும்போது, 'தான் சென், நீயும் அவர்மாதிரி ஏன் பாடக் கூடாது?' என்று கேட்டான் அக்பர். 'மன்னாதி மன்ன! நான் தங்களுடைய கட்டளைக்கிணங்கிப் பாடுகிறேன்; அவ ரோ கடவுளின் ஆக்ஞைக்குக் கீழ்ப் படிந்து பாடுகிறர்' என்றன் தான் சென். அக்பர் மேலே ஒன்றும் பேச வில்லை.

அக்பர் காலத்தில் புகழ் பெற்றிரு ந்த மற்றொரு இசைப் புலவர் புண்ட ரீக விட்டலர் என்பவர். இவர் மஹா ராஷ்டிர தேசத்திலே பிறந்தவர். கான்டேஷ் மாகாணம், அக்பரின் ஆட்சிக் குட்பட்டபோது, 1599-ம் வருஷம் இவர், டெல்லிக்குப் போய், அக்பரின் சமஸ்தானத்தில் ஒரு வித்துவானு யமர்ந்தார். இவர் 'ஷத் ராக சந்திரோதயம்', 'ராகமாலை', 'ராகமஞ்சரி', 'நர்த்தன நிர்ணயம்' என்ற நான்கு அரிய இசை நூல்களை எழுதி யிருக்கிறர். இவை, இப்பொழு தும் பிகானீர் சமஸ்தான புத்தகசாலை யில் காப்பாற்றப் பட்டு வருகின்றன.

ஜிஹாங்கீர் சக்ரவர்த்தி (1605–1628) காலத்தில் 1625ம் வருஷம், 'சங்கீத தர்ப்பணம்' என்ற அரிய கிரந்தத்தை தாமோதர மிச்ரர் என்பவர் இயற்றி அருளினர். இந்த நூலில் ராகங்கள், படங்கள் மூலமாக விளக்கப் பட்டிருக்கின்றன.

ஷாஜஹான் சக்ரவர்த்தி (1628–1658) காலத்தில் பல சங்கீத வித்து வான்கள் இருந்தார்கள். ஜகந்நாத பண்டிதர், லால்கான், திரங்க கான் முதலியோர் சக்ரவர்த்தியின் நன் மதிப்பைப் பெற்றிருந்

தார்கள். ஒரு சமயம், ஷாஜஹான், ஜகந்நாத பண்டிதரையும் திரங்க கானையும் முறையே தராசில் நிறுத்து, அவர்களுடைய எடைக்குச் சமமான ரூபாய்களை அவர்களுக்குப் பரிசாக அளித்தான்.

அவுரங்கஜீப் சக்ரவர்த்தி (1658–1707) காலத்தில், சங்கீதம் நாதியற்றுப் போய் விட்டது. ஏனென்றால் அரசாங்க ஆதரவு இல்லை. அவுரங்கஜீப்புக்குச் சங்கீதமென்றால் பிடிக்காது. ஒரு சமயம், சங்கீத வித்துவான்கள் ஒன்றுகூடி, தங்களுடைய அதிருப்தியைத் தெரிவிக்க ஒருயோசனைசெய்தனர். பிணம்போல் ஒன்றைத் தயார் செய்து, அதைச் சங்கீத வித்துவான்கள் எடுத்துக் கொண்டு அரண்மனையின் வழியாகச் சென்றனர். அவுரங்கஜீப் 'என்ன விஷயம்?' என்று கேட்டான். 'சங்கீதம், அரசாங்க ஆதரவு இல்லாமல் செத்துப் போய் விட்டது; மயானத்திற்கு எடுத்துக்கொண்டு போகிறோம்' என்றார்கள் இசைப் புலவர்கள். 'அப்படியானால் நன்றாக ஆழத்தில் புதைத்துவிடுங்கள். அதன் குரல் ஒலி மறுபடியும் கேட்கப் போகிறது' என்றான் சக்ரவர்த்தி.

அவுரங்கஜீப்புக்குப் பின்னாடி வந்த முகம்மது ஷா காலத்தில், மொகலாய தர்பாரில் சங்கீதத்திற்குப் புத்துயிர் உண்டாயிற்றென்று சொல்லலாம். இவனுடைய தர்பாரில் அடாரங்கா, சதாரங்கா, நபிகான் முதலிய பெயரையுடைய பல வித்துவான்கள் இருந்தார்கள்.

பின்னர், பிரிட்டிஷ் ஆட்சி நிலைத்த பிறகு, சிற்சில சுதேச சமஸ்தானங்களில் மட்டுந்தான் சங்கீதம் பராமரிக்கப் பட்டு வருகிறது.

கொடுக்கிறவனே வாழ்கிறவன்

கொடு! மகனே! அனைவருக்கும் கொடு!
வலிமையை, எண்ணத்தை, செயலைக் கொடு;
அன்பை, கண்ணீரை, உன்னையே கொடு;
கொடு; எப்பொழுதும் கொடுத்துக் கொண்டிரு;
எவனொருவன் கொடுக்கவில்லையோ அவன் வாழவில்லை;
எவ்வளவுக் கெவ்வளவு மகனே! கொடுக்கிறயோ
அவ்வளவுக் கவ்வளவு வாழ்ந்தவனாகிறாய்.

—வெங்கைக்கிழான்

அறிவுத்துறை

வாயுமண்டலம்

——" விஞ்ஞானபோதகர் "

நீர் வாழ்வனவற்றை நீர் சூழ்ந்திருப்பது போல நிலத்தில் வாழ்வனவற்றை வாயு சூழ்ந்திருக்கிறது. நீரில் வசிப்பவைகளை ஆழத்திற்குத் தகுந்த வண்ணம் நீர் அமிழ்த்திக் கொண்டிருப்பதுபோல நிலத்தில் வாழும் நம்மை, வாயு பலமாக அழுத்திக் கொண்டிருக்க வேண்டுமல்லவா? நீர், கனமான வஸ்துவாதலால் அதற்கு அமுக்கும் சக்தி அதிகம் ஏற்படுவதை நாம் தெரிந்துகொள்ளலாம். ஆனால் வாயுவோ மிகவும் லேசான பதார்த்தம். நீரின் கனம் பதினாயிரமானால் அதே அளவுள்ள வாயுவின் கனம் பன்னிரண்டாயிருப்பதால் இதற்கு அமுக்கும் சக்தியுமுளதோ? அவ்வாறிருந்தாலும் நாம் உணர்வது சாத்தியமாவென நாம் சிறிதும் சிந்திக்கவும் வருகிறதல்லவா? இதனைத் தெரியுமுன் காற்றிற்குக் கன முண்டாவென்பதைத் தெரிந்து கொள்ளுவோம்.

காற்றிற்குக் கன முண்டா?

நன்றாய் அடைப்புத்திறப்புள்ளதோர் மெல்லிய கண்ணாடிக் கூட்டிலுள்ள காற்றை அதிகம் வெளியேற்றி, அடைத்து, நிறுக்கவேண்டும். அதனைப்பின் மெதுவாகத் திறந்தால் வாயு உள்ளே பாய்ந்தோடும். இப்பொழுது வாயை மூடி மறு

படியும் நிறுத்துப் பார்த்தால் கூட்டின் கனம் அதிகமாயிருக்கும். இதனால் காற்றிற்குக் கனமுண்டெனத் தெரிகிறோம். ஒரு சிறிய அறையில் தங்கி நிற்கும் வாயுவின் கனத்தைக் கணக்கெடுத்துப் பார்ப்போம். 280 அங்குல நீளம், 240 அங்குல அகலம், 200 அங்குல உயரமுள்ளதோர் அறையை எடுத்துக் கொள்ளுவோம். இது பிரஞ்சு ஸெண்டி மீடர் (C. M.) அளவில், முறையே 700, 600, 500 ஆகின்றன.



அறையின் உள்ளளவு (Volume) $=700 \times 600 \times 500 = 210,000,000$ Cubic C.M.

ஆனால் 1 C. M. முக்கோண அளவுள்ள காற்றின் கனம் $=0.0012$ கிராம்.

ஆகவே மேற்படி அறையிலுள்ள காற்றின் கனம் $= 210,000,000 \times 0.0012 = 2,52,000$ கிராம் $= 500$ பவுண்ட் $= \frac{1}{4}$ டன் (சுமார்)

இச்சிறிய அறையிலுள்ள காற்றின் கனம் $\frac{1}{4}$ டன் ஆனால் வாயு மண்டலத்தின் முழுக் கனத்தை என்னென்று சொல்லுவது?

வாயு மண்டலத்திற்கு அமுக்கும் சக்தியுண்டா?

நாம் முன்பு கூறியதுபோல வாயு மண்டலத்தின் அமுக்கும் அபார சக்தியைச் சொல்லிப் பயனில்லை. அதனைச்சில பரிசோதனைகளால் விளக்கின் தெற்றென விளங்கும்.

<u>பரிசோதனை 1</u>

ஒரு சிறிய விளையாட்டு ரப்பர் பொம்மையை எடுத்துக் கொள்ளுவோம். அதனுள்ளே காற்றிருக்கிறதல்லவா? அக்காற்றை 'பம்ப்' (Pump) என்ற கருவியால் அப்பொம்மையி லிருந்து வெளியேற்றி விட்டால் அப்பொம்மை சப்பளித்து படத்தில் காட்டியிருப்பதுபோல உரு மாறிப்போய்விடுகிறது. காற்றை வெளியேற்றுமுன் பொம்மைக்குள் ளிருந்த காற்றின் அமுக்கும் பலம், வெளியிலிருந்து வாயு மண்டலம் அமுக்கும் பலத்தை ஒத்திருந்ததால் பொம்மை உருவுடனிருந்தது. உள்ளிருந்த காற்றை வெளியேற்றிய மாத்திரத்தில் வாயு மண்டலத்தின் அமுக்கும் சக்தியால்

அமிழ்த்தப்பட்டு இவ்வித அனர்த்தத்தை அடைந்தது.

பரிசோதனை 2

ஒரு லேசான தகரப் பாத்திரத்தில் சிறிது தண்ணீரைக் கொதிக்க வைத்துஉள்ளேயிருக்கும் காற்றைமிகுதியாக நீராவியுடன் வெளிப்படுத்தி, பின்பு மேல் திருகால் நன்றாய் மூடி அடுப்பினின்று கீழே இறக்கி வைத்து, குளிர்ந்த ஜலத்தை அத்தகரப் பாத்திரத்தின் மீது தெளித்தால் அப்பாத்திரம் படத்தில் காண்பது போல் நொறுங்கி வளைந்து போய் விடுகிறது. அடுப்பினின்று பாத்திரத்தை எடுத்த பிறகு அதில் காற்றேயில்லாது முழுவதும் நீராவியால் நிரப்பப்பட்டிருக்கிறது. அப்பொழுது குளிர்ந்த ஜலம் பட்டதும் நீராவி முழுவதும் திடீரென நீராய் மாறி கீழே தங்கி விடவே, வெளியிலுள்ள வாயு மண்டலத்தின் பலத்தால் அமுக்கப் பட்டு அஃது அவ்வாறு நொறுங்கிப்போகிறது.



இப்பரிசோதனைகளில் உறுதியான உலோகங்களால் அல்லது வஸ்துக்களால் செய்யப் பட்ட பாத்திரங்களை உபயோகித்தல் நலமன்று; ஏனெனில் பாத்திரங்கள் உறுதியாயிருந்தால் அவைகளுக்கு வாயுமண்டலம் அமுக்கும் சக்தியைத் தாங்கிக் கொள்ளும் வலிமையிருப்பதால் பாத்திரத்தில் பழுதொன்றும் பார்ப்பதரிது.

பரிசோதனை 3

ஒரு சிறிய விளையாட்டு 'பலூன்' என்னும் ரப்பர் பையில் சிறிதளவு காற்றடைத்து ஒரு பெரிய கண்ணாடிப் பாத்திரத்தில் போட்டு காற்றுப் போகாமல் நன்றாக மூடி விட வேண்டும். பிறகு சிறிய துவாரத்தின் வழியாக அக் கண்ணாடிக் கூட்டிலுள்ள காற்றை வெளியேற்றிக் கொண்டேயிருந்தால் உள்ளே இருக்கும் ரப்பர் பை சிறிது சிறிதாகப்பெரிதாகிக் கொண்டே போய் கடைசியாக வெடித்தும் போகும். கண்ணாடிக் கூட்டிலிருக்கும் காற்று, ரப்பர் பையை அமுக்கிக் கொண்டிருக்கிறது. அந்நிலையில் அக் காற்றை வெளிப்படுத்தினால் அதன் ரப்பர் பை மீது அமுக்கும் பலம் குறைந்து விடுகிறது. அவ்வாறு குறையவே ரப்பர் பையிலுள்ள காற்று விம்ம ஆரம்பிக்கிறது. கண்ணாடிக் கூட்டிலுள்ள காற்றை அதிகமாக வெளியேற்றி விட்டால் ரப்பர் பையிலுள்ள காற்று மிகவும் விம்மி, அளவில் அதிகமாகி, ரப்பர் பை உள்ளளவு சிறிதாயிருந்தால் அதனை வெடிக்கச் செய்துவிடுகிறது.

இது போலவே புகைக்கூடுகள் வெடி

த்துப் போகா வண்ணம் முதலாவது மிகக் குறைந்த அளவு ஜலவாயுவை அடைத்து மேலே செல்லுகிறார்கள். உயரப் போகப் போக காற்று இலேசாகி விடுவதால் அதன் அமுக்கும் சக்தி குறைந்து போகிறது. இதனால் கூட்டிலுள்ள வாயு விம்மி உப்ப ஆரம்பித்து கடைசியாக கூடு முழுவதும் உப்பிக் கொள்ளும் உயரம் வந்தவுடன் அதிலுள்ள வாயுவை சிறிது சிறிதாக வெளிப் படுத்திக் கொண்டே மேலே போக ஆரம்பிக்கிறார்கள்.

பரிசோதனை 4

பாதி உருண்டையாயுள்ள இரு உறுதியான உலோகக்கூடுகளை எடுத்துக் கொள்ள வேண்டும். அவைகளை ஒன்று சேர்த்தால் ஒரே உருண்டையான கூடாகி, காற்று உள்ளே செல்லா வண்ணம் பொருந்திக் கொள்ளக் கூடியதாக அமைத்தல் வேண்டும். இவ்வாறு இரண்டும் பொருந்தி உள்ளே காற்றிருக்கும்போது அவைகளை வெகு இலகுவில் இரண்டு கைகளால் இழுத்து இரண்டாக்கி விடலாம். ஆனால் இரண்டையும் ஒன்று சேர்த்து அதிலுள்ள காற்றை எல்லாம் வெளியேற்றி விட்டால் முன்போல அவைகளைக் கையால் இழுத்து இரண்டாக்கி விடுதல் வெகு துர்லபம். கூட்டுக்குள் காற்றே யில்லாததால் வெளிப்புறத்திலிருந்து வாயுமண்டலம் அவ்வளவு பலமாக அமுக்கிக் கொண்டிருக்கிறது.

இப் பரிசோதனையை முதலாவது ஜெர்மன் தேசத்தில் மேக்டிபர்க் என்ற நகரத்தில் வான்குயெரிக் (Von Guericke) என்பவர், ஒரு அடி குறுக்களவுள்ள உருண்டையான கூடுகளால் 1651-ல் பெர்டினண்ட் சக்கரவர்த்தியின் முன்னிலையில் செய்து காண்பித்தார். அக்கூட்டைத் துண்டு படுத்த பக்கத்துக்கு 4 ஜோடி குதிரைகள் வேண்டியிருந்ததாம். இச் சரித்திர சம்பந்தமான பரிக்ஷையைப் படத்தில் காணலாம்.



வாயு மண்டலம் அமுக்குதலால் நமக்கு அசௌகரியமில்லையா?

இதுபோல இன்னும் எத்தனையோ பரிசோதனைகளின் மூலம் வாயு மண்டலத்தின் அமுக்கும் சக்தியை அறிய முடிகிறது. இவ்வளவு அபார சக்தி வாய்ந்த வாயு மண்டலம் நம்போன்ற மானிடர் மீதும் அமுக்கிக் கொண்டு தானே யிருக்கவேண்டும்? சாதாரணமாக ஒருவன் தேகம் சுமார் 10 சதுர அடி சுற்றளவா யிருக்கிறது. அவன் மீது வாயு மண்டலம் 4400 பவுண்டு (சுமார் 2 டன்) கனத்துடன் அமுக்குகிறது. இவ்விதம் அமுக்கும் பலத்

துடனேயே நாம் பிறந்து வளர்ந்து வருவதால் அதனால் ஏற்படும் அசௌகரியம் நமக்குத் தோன்றுவதில்லை. ஆனால் திடீரென்று வாயு மண்டலத்தின் அமுக்கும் பலத்தை வெகுவாகக் குறைத்து விட்டால் நமது தேகத்திற்குள் இருந்து வரும் இரத்தம், நரம்புகளுக்குள் விம்மி வெளியேறப் பார்ப்பதால் ஏற்படும் கஷ்டத்தை உணர்வோம். ஆகாய விமானிகளும், மலையுச்சி நாடிச் செல்வோரும் பூமிக்கு வெகு தூரம் உயரத்தில் சென்று விடுவதால் அவ்விடம் வாயு மண்டலத்தின் அமுக்கும் சக்தி வெகுவாகக் குறைந்து விடுவதால் அவர்களுக்கு மூச்சுவிட, போதிய வாயுவின்றித் திணறுவதோடு (இதற்காகப் போதிய பிராணவாயு சேர்த்துச் செல்லுகின்றனர்) மூக்கு, காது வழியாக இரத்தம் கசியவும் ஏற்படுகிறது. நமது தேகத்தி லுள்ள இரத்தம், பூமியின் மீது அமுக்கும் வாயு மண்டலத்தின் பலத்தால் சாதாரணமாக அமுக்கி, அதன் நிதான நிலையில் வைக்கப்பட்டு வந்திருக்கிறது. மனிதன் வெகு உயரம் சென்றவுடன் அவன் மீது அமுக்கும் வாயு மண்டலத்தின் பலம் குறைந்து போகிறது. அவ்வாறு குறையவும் இரத்தம், முன் குறிப்பிட்ட மூன்றாவது பரிசோதனையைப் போல், தன்னளவில் அதிகரிக்க ஆரம்பித்து உடலில் மெல்லிய, மிருதுவான பாகங்களாகிய மூக்கு, காது முதலியவைகள் மூலம் வெளியேற ஆரம்பிக்கிறது.

பீச்சாங் குழல் வேலை செய்வதேன்?

வண்டி ரப்பர் வளையத்தினுள் காற்றைச் செலுத்தும் ‘பம்ப்’, தண்ணீர் பீச்சாங் குழாய், கிணற்றி லிருந்து தண்ணீர் ஏற்றும் ‘பம்ப்’ முதலிய கருவிகள் வேலை செய்ய வாயு மண்டலத்தின் அமுக்கும் சக்தி அரிய உதவியா யிருக்கிறது. பீச்சாங் குழாய்



வேலை செய்யுந் தன்மை படத்தில் காட்டி யிருப்பதைப் பார்க்கலாம். குழாயைத் தண்ணீர்த் தொட்டிக்குள் புகுத்திய மாத்திரத்தில் அதினுள் தண்ணீர் ஏறுவதில்லை. ஏன்? தொட்டியி லுள்ள தண்ணீர் மீதும், குழாய்க்குள்ளும் வாயு மண்டலத்தின் அமுக்கும் பலம் ஏக சமயத்தில் அமுக்கிக் கொண் டிருப்பதால் தண்ணீர் தானாகவே எவ் வழியிலும் ஏறுவதற்கு வழியில்லை. குழாய்க்குள் தண்ணீர் ஏறவேண்டு மானால் அதற்குள்ளிருக்கும் காற்றை வெளியேற்ற வேண்டுமல்லவா? இதற்காகவே கைப்பிடியை மேலே இழுக்கிறோம். அவ்வாறு இழுத்துக் காற்றை வெளியேற்றவே வெளியில் வாயு மண்டலத்தால் அமுக்கப்பட்டுத் தண்ணீர், குழாய்க்குள் பாய்ந் தோடுகிறது. இப்பொழுது குழாயை வெளியே தூக்கிக் கைப்பிடியை அமுக்கித் தண்ணீரை வெளியேற்றுகிறோம்.

நாம் சோடா சாப்பிடும்போது ஒரு மெல்லிய, நீண்ட குழாய் கொடுப்பதைப் பலர் அறிந்திருக்கலாம். அக்

குழாயை சோடாப் போத்தலுக்குள் விட்டு மறு பக்கத்தில் வாயால் உறிஞ்சுகிறோம். நாம் முதலில் உறிஞ்சிய மாத்திரத்தில் அக் குழாய்க்குள்ளிருக்கும் காற்றை உட் கொள்ளுகிறோம். அவ்வாறு செய்தவுடன் வாயு மண்டலத்தால் அமுக்கப் பட்டு நீர் மேல் எழும்பி வாயினுட் செல்லுகிறது. அடுத் தடுத்து உறிஞ்சுவதானது அக்குழாய்க்குள் காற்றில்லா வண்ணம் செய்து கொண்டிருப்பதற்கே வாயு மண்டலம் எவ்வளவு உதவி செய்கிறது பாருங்கள்! வைத்தியர்கள் நமக்கு 'இன்ஜக்ஷன்' கொடுக்கும் சிறிய பீச்சாங்குழாயும் மேலே கூறிய தண்ணீர்க் குழாயைப் போலவே வேலை செய்கிறது. இது போல் வாயு மண்டலம் அமுக்கும் பலத்தால் ஏற்படும் உதவி பல உள.

வாயு மண்டலம் அமுக்கும் அளவென்ன?

1640ம் ஆண்டில் இத்தாலி தேசத்து டாரிசெல்லி (Torricelli) என்பவர் வாயு மண்டலத்தின் அமுக்கும் பலத்தைப் பின்வருமாறு அளவிட



முயன்றார். ஒரு பக்கம் மூடியும் மறு பக்கம் திறந்து முள்ள, சுமார் 3 அடி நீளக் கண்ணாடிக் குழலில் மெர்குரி என்ற பாதரசத்தை ஊற்றி நிரப்பி, பெருவிரலால் இறுக மூடி, மூடிய அப்பாகத்தை ரசம் நிறைந்துள்ள தோர் பாத்திரத்தினுள் வைத்து விட்டால் படத்தில் காட்டியிருப்பதுபோல் ரசம் கம்பமாய் நிற்கும். ஆனால் மூடிய நுனியில் சிறிது காலியாயிருக்கும். சமுத்திர மட்டத்தில் இந்த ரசக் கம்பத்தின் உயரம் சுமார் $2\frac{1}{2}$ அடி (பிரான்சு தேசத்து அளவில் 76 C. M.) ஆகிறது. ரசத் திராவகம் தண்ணீரைவிட 13.6 பங்கு கனமானது. ஆகவே வாயு மண்டலம் அமுக்கும் பலத்தை இந்த $2\frac{1}{2}$ அடி உயரமான ரசம் தாங்கிக் கொள்ளுகிறது. அதாவது ரசக் கம்பம் நிற்கும் திறவையான பாத்திரத்திலுள்ள ரசத்தை வாயு மண்டலம் அமுக்குகிறது. அந்த அமுக்கும் பலம் $2\frac{1}{2}$ அடி ரசக் கம்பத்தின் அமுக்கும் பலத்திற்குச் சரிசமான மாகிறது. ஆகவே வாயு மண்டலத்தின் அமுக்கும் பலம், $2\frac{1}{2}$ அடி ரசக் கம்பம் என்று கூறிவிடலாம்.

இக்குழாயின் நீளம் $2\frac{1}{2}$ அடிக்கு மேல் எவ்வளவு நீளமானாலும் ரசம் $2\frac{1}{2}$ அடி உயரமாகவே நின்று மீதியான மேற்பாகம் காலியாகவிருக்கும். ஆனால் $2\frac{1}{2}$ அடிக்குக் குறைவாயிருந்தால் குழாய் மறு பக்கம் முட்ட ரசம் நிற்கும். குழாயின் மூடிய பாகம் உறுதியாயிரா விட்டால் சில சமயம் அந்த நுனி வெடித்துப் போனாலும் போகும். ரசக் குழாயை ரசப்பாத்திரத்தி லிருந்தவாறு எவ்விதம் சாய்த்து நிறுத்தினாலும் ரசத்தின் நேர் உயரம் $2\frac{1}{2}$ அடியாகவே இருக்கும்.

ரசத்திற்குப் பதிலாகத் தண்ணீரை உபயோகித்தால் $2\frac{1}{2} \times 13.6$ அதாவது 34 அடி உயரமாக நின்று வாயுமண்ட

லத்தைத்தாங்கும். ரசம் அல்லது தண்ணீர் கம்பத்தின் காலியா யிருக்கும் மேல்பாகம் ஒன்றுமே யில்லாது (Vacuum) சூனியமா யிருக்கும். வாயு மண்டலத்தின் அமுக்கும் சக்தி சீதோஷ்ணத்திற்குத்தகுந்த வண்ணம் சிறிது கூடவும் குறையவுங்கூடும். அதற்குத் தகுந்தவாறு குழாயிலுள்ள ரசம் உயரத்தில் ஏறவும் இறங்கவும் செய்யும். தண்ணீரை உபயோகித்தால் 34 அடிக்கு மேற்பட்ட அவ்வளவு உயரக் குழாய் வேண்டும். அதற்காகவே சுமார் 3 அடி உயரமான ரசக் குழாயை உபயோகிக்கிறார்கள். இந்த ரசக் கம்பக்கருவியை ஆங்கிலத்தில் 'மெர்குரி பரோமீட்டர்' (Mercury Barometer) என்றழைக்கிறார்கள்.

இந்த ரசக்கம்பத்தின் உயரத்தைக் கொண்டு வாயு மண்டலம் அமுக்கும் பலத்தைக் கணக்கிடலாம். ஒரு சதுர அங்குலப் பரப்பும், ஒரு அங்குல உயரமுங் கூடிய ரசத் திராவகத்தின் கனம் $\frac{1}{2}$ பவுண்ட் ஆகிறது. ஆகலால் $2\frac{1}{2}$ அடி அதாவது 30 அங்குல் உயரத்தில் நிற்கும் ரசத்தின் கனம் $30 \times \frac{1}{2} = 15$ பவுண்ட். இதனால் வாயு மண்டலம் ஒரு சதுர அங்குல இடத்தின் மீது 15 பவுண்ட் கனத்துடன் அமுக்குகிறதெனத் தெரியக் கிடக்கிறது.

இப்பொழுது, 20 அடி நீளம், 16 அடி அகலமுள்ள ஓர் பரப்பின் மீது வாயு மண்டலம் அமுக்கும் பலத்தைச் சிறிது கணக்கெடுப்போம்.

விஸ்தீரணம் $= 20 \times 15$ சதுர அடி
$= 20 \times 15 \times 144$ சதுர அங்குலம்.

ஒரு சதுர அங்குலத்தின் மீது அமுக்கும் சக்தி $= 15$ பவுண்ட்.

$\therefore$ மொத்த அமுக்கும் பலம் $= 20 \times 15 \times 144 \times 15$ பவுண்ட் $= 289$ டன்.

இவ்வளவு சிறிய விஸ்தீரணத்தின் மீது அமுக்கும் பலம் சுமார் 300 டன் ஆனால், உலகப் பரப்பு முழுவதும் அமுக்கப்படும் பலத்தின் தொகையை என்னென்று சொல்லுவது? வாயு மண்டலம் இவ்வளவு பலம் பொருந்தியதாவெனத் திடுக்கிட்டு அதிசயிக்கும் சாமர்த்திய சாலிகளும் நம்மில் பலர் இருக்கவே செய்வார்கள்.

அமெரிக்காவிலுள்ள பாங்கிகளில் 5670 லட்சம் ரூபாய், ஜமால் பணமாகப் போடப்பட்டிருக்கிறது. இங்ஙனம் ஜமால் செய்திருப்பவர்களில், 5,646,000 பேர், மிகச் சிறிய தொகைகளையே பாங்கிகளில் போட்டு வைத்திருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

கொழும்புவில் ஒருவன், தன் சகோதரியின் நிலத்தை வாங்குவதற்காக, 100-க்கு 20% வட்டி விகிதம் எண்பது ரூபாய் கடன் வாங்கினான். பின்னர், இந்தக் கடனைத் தீர்ப்பதற்காக 18% வட்டி விகிதம் 200-ரூபாய் கடன் வாங்கினான். இந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் போகவே, 1000-ரூபாய் பெறுமான ஒரு ரப்பர் தோட்டத்தை 263-ரூபாய்க்கு அடமானம் வைத்தான். இப்பொழுது இந்த ரப்பர் தோட்டமும் இவன் கையிலிருந்து போய்விடும்போ லிருக்கிறதென்று, இலங்கை ஐக்கிய நாணயச் சங்க ரிஜிஸ்ட்ராரின் அறிக்கை கூறுகிறது.

விசுவ விசித்திரம்.

மண்ணிலே கிடக்கும் இந்த நாக்குப் பூச்சி ஐந்து அடி நீளத்திற்குமேல் இருக்கிறது.

அமெரிக்காவில் ரோவ்ஸ் லாண்ட் என்ற நகரத்திலுள்ள இந்தக் குதிரைக்கு, கனத்த மீசை உண்டு. ஒரு ப்ரஷ் மாதிரி இருக்கிறது பார்த்தீர்களா? நான்கு வாரத்திற்கு ஒரு தரம் இதற்கு க்ஷவரம் செய்யவேண்டும். இல்லாவிட்டால் இது நிரம்ப சங்கடப்படுகிறதாம்! இது ஒரு பால் வண்டியை இழுக்கும் குதிரை.



சமுத்திர அலைகளின் மீது வெகு வேகமாக நடந்து செல்லக்கூடிய ஒரு பட்சி.

இதன் தேகத்தில் அதிக மான எண்ணெய் சத்து இருக்கிறது.
இதனை, அடிக்கடி தன் மூக்கின் வழியால் கொட்டுகிறது.

பரஸ்பரம் உதவி செய்கிற சுபாவம் தவளைகளுக்குள் எவ்வளவு அதிகமா யிருக்கிறது! ஐரோப்பா கண்டத்தில்(Alytes Obstertricaus) ஒரு வித தவளை வர்க்கம் இருக்கிறது. பெண் தவளை, ஒரேசமயத்தில் வராளமான முட்டைகளை முத்துக் கோத்ததுபோல் வரிசையாக இடுகிறது. ஆண் தவளை, இவற்றைத் தன் முதுகின்மீது வைத்துக்கொண்டு சுமார் மூன்று வாரம் வரையில் காப்பாற்றுகிறது. பிறகுதான் குஞ்சுகள் பொரிக்கின்றன.

நடக்கிற தபால் பெட்டி!

சமீபத்தில் ஜெர்மனியில் மோட்டார் சைகிள் பந்தயம் ஒன்றுநடந்தது. அப்பொழுது சுமார் இரண்டு லட்சம் ஜனங்கள் கூடியிருந்தார்கள். அவர்கள், தபால் முதலியன போடுவதற்கு, அதிகாரிகள், இந்த நடக்கும் தபால் பெட்டிகளை ஏற்பாடுசெய்திருந்தார்கள்.





எவ்வளவு தூரம்வேண்டுமானாலும் நீங்கள்சைகிளில் பிரயாணஞ் செய்யலாம். வழியிலே களைப்பு வந்தால் படுக்கையை விரித்துக் கொண்டு படுத்துக்கொள்வதற்கு சைகிளின் பின்னால் இந்த வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

மிகவும் இலேசான மரத்தில் செய்யப்பட்டு மழை, காற்று, கொசு உபத்திரவம் இவைகளினின்று பாதுகாத்துக் கொள்ளும் வகையில் இஃது அமைக்கப்பட்டிருக்கிறது.

உலகத்திலுள்ள மிகச்சிறிய சைகிள். இதன் உயரம் ஒன்பது அங்குலம்; நீளம் பதினேழு அங்குலம். ஒரு மனிதன் தாராளமாக உட்கார்ந்து செல்லக் கூடிய அவ்வளவு கனமுடையது இது. லண்டனின் வீதிகளில் இஃது ஓடுவதை எத்தனை பேர் வேடிக்கை பார்க்கின்றனர்!

தேச பக்திக்குத் தகுந்த தண்டனை! எங்கே? ஸ்பெயினில் தான். கலகக்காரத் துருப்புகள் ஒரு வீதி வழியாகச் சென்று கொண்டிருந்தன. இந்த இரண்டு ஸ்திரீகளும் 'குடியரசு வாழ்க' என்று முழக்கம் செய்தனர். உடனே இவர்களைப் பிடித்து இங்ஙனம் மொட்டையடித்து விட்டனர் கலகக்காரர்.

சமஷ்டி அரசியல் என்றால் என்ன?

—கே. வி. ராமசுப்ரமணியம் B. A., B. L.,

இந்தியாவில் கையாளப் போகும் ஜனநாயக ஆட்சி முறையைப்பற்றியும், சமஷ்டி ஆட்சி முறையைப்பற்றியும் நாம் ஆராயுமுன், ஜன நாயக ஆட்சி முறையில் எத்தனைவிதம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வது நலம். ஜன நாயக ஆட்சி என்பது ஜனங்களே ஒரு தேசத்தை ஆளுவதைக்குறிக்கும். ஜனங்கள் அனைவரும் ஒரு தேசத்தை ஆளுவதென்பது அசாத்தியம். ஆகையால் பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஒருவரிடம் அல்லது சிலரிடம் ராஜ்ய பாரத்தை ஒப்புவித்தல் வேண்டும். இவர் அல்லது இவர்களைத் தேர்ந்தெடுப்பதில் இரண்டுவித முண்டு. இவைகளை ஆங்கிலத்தில் பார்லிமென்டரி டெமாக்ரஸி (Parliamentary Democracy) என்றும், பிரசிடென்ஷியல் டெமாக்ரஸி (Presidential Democracy) என்றும் கூறுவார்கள். அரசியல் சம்பந்தமான ஆங்கில பதங்களுக்குச்சரியான தமிழ்ப் பதங்கள் இன்னின்னவை என்று இன்னும் நிலைப் படுத்தாததால், ஆங்கிலப் பதத்தை உபயோகித்தாலேயே அனைவரும் எளிதில் புரிந்துகொள்ள முடியுமாதலால் நாம் ஆங்கில பதத்தையே இந்த வியாசத்தில் உபயோகப் படுத்துவோம்.

பார்லிமெண்டரி ஜனநாயக ஆட்சி

இந்த ஆட்சி முறைதான் பிரிட்டிஷ் ராஜ்யத்திலும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த குடியேற்ற நாடுகளிலும் அனுசரிக்கப்பட்டு வருகிறது. இந்த முறையின் முக்கிய அம்சம் அல்லது கொள்கை அந்தந்த தேசத்துப் பார்லிமெண்ட் அல்லது சட்ட சபையின் சர்வாதிகாரத்துவமே. இந்தத் தேசங்களுக்கு அரசர் என்ற ஒருவர் இருந்த போதிலும், சட்ட சபையின் ஆதரவை அடைந்திருக்கும் மந்திரிகளே எல்லா நிர்வாகப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறார்கள். எந்த நிமிஷத்தில் சட்ட சபையின் ஆதரவை மந்திரிகள் இழக்கிறார்களோ, அதே நிமிஷத்தில் மந்திரிகள் தங்கள் பதவியை ராஜீநாமாச் செய்ய வேண்டும். பொது ஜனங்களின் அபிப்பிராயத்தையே சட்டசபை மெம்பர்கள் வெளியிடுகிறார்கள் என்ற கொள்கையே இந்த ஆட்சி முறையின் முக்கிய அம்சமாதலால் மேற்படி சட்டசபையின் அபிப்பிராயம் பொது ஜன அபிப்பிராயத்துக்கு விரோதமாக இருக்கிறது என்று மந்திரிகள் அபிப்பிராயப் பட்டால் குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் மந்திரிகள் இந்தச் சட்ட சபையைக் கலைத்து, ஒரு பொதுத் தேர்தல் நடத்திப் புதுச் சட்ட சபை ஒன்றைக் கூட்டுவிக்கலாம். இந்தச் சட்ட சபையும் மந்திரிகளை ஆதரிக்காமற் போனால், மந்திரிகள் உடனே ராஜீநாமாச்செய்ய வேண்டும்; வேறு ஒரு மந்திரி சபை ஏற்படுத்த வேண்டும். இந்த முறையைத்தான் இந்தியாவில் கையாளப் போகிறபடியால் இதைப் பற்றி விவரமாகப் பின்னால் ஆராய்வோம்.

பிரசிடென்ஷியல் ஜன நாயக முறை

இந்த ஆட்சி முறை கையாளப் பட்டு வரும் முக்கிய தேசம் அமெரிக்க ஐக்கிய மாகாணம். இந்த

ஆட்சி முறையின் முக்கிய அம்சம் என்ன வென்றால் இந்த முறையைக் கையாளும் தேசங்களில் அரசர் கிடையாது. சகல நிர்வாக அதிகாரங்களும் பிரசிடென்ட் என்ற ஒரு தலைவரிடம் வந்து அடைகின்றன. இவரைப் பொது ஜனங்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். இவர் மந்திரிகளை நியமித்து,இந்த மந்திரிகள் மூலம் தேச நிர்வாகத்தை நடத்துகிறார். இவர் இஷ்டப் பட்டால் மந்திரிகளைநீக்கிவிடலாம். மந்திரிகள் சட்ட சபையின் ஆதரவைப் பெற்றிருக்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது. பிரசிடெண்டின் ஆதரவைப் பெற்றிருக்கும் வரையில் இவர்களைச் சட்ட சபையும் நீக்க முடியாது. நான்கு வருஷ காலம் வரை உத்தியோகம் வகிக்குமாறு பிரசிடெண்ட் பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் படுவதால், மேற்படி கால வரையறைக்கு முன் பிரசிடெண்டை நீக்க சட்ட சபைக்காவது மற்ற எவருக்காவது அதிகாரமில்லை

பிரான்ஸ் போன்ற சில தேசங்களில் இந்த இரண்டு முறையின் அம்சங்களும் காணப்படுகின்றன.

சமஷ்டி ஆட்சி முறை

இனி சமஷ்டி ஆட்சி முறையைப் பற்றிக் கவனிப்போம். சமஷ்டி என்பது 'பெடரேஷன்' (Federation) என்ற ஆங்கிலப் பதத்தின் மொழி பெயர்ப்பு. இதை 'சேர்க்கை' 'ஐக்கியம்' 'கூட்டு' என்றும் மொழி பெயர்க்கலாம். அரசியல் சம்பந்தமாக சமஷ்டி அல்லது ஐக்கியம் என்று சொன்னால், சில தேசங்கள் அல்லது சில சர்க்கார்கள் கூடி நிர்வகித்து வரும் ராஜ்ஜியாதிகாரத்தைக் குறிக்கும். அதாவது தனிவியக்திகளாகவும், சுயேச்சையாகவும், ராஜ்ஜியாதிகாரம் செலுத்திக் கொண்டிருக்கும் சில ராஜ்யங்கள் தங்கள் பொது நன்மையை யுத்தேசித்துப் பொதுவாக உள்ள சில விஷயங்களை நிர்வகித்து வருவதற்காகவும், அவை சம்பந்தமாகச் சட்டங்கள் ஏற்படுத்துவதற்காகவும் ஒரு மத்திய சர்க்கார், ஒரு மத்தியசட்ட சபை முதலிய ஸ்தாபனங்களை ஏற்படுத்தி, அந்த மத்திய ஸ்தாபனங்களிடம் சில அதிகாரங்களை ஒப்படைத்து, அவ்விதம் ஒப்படைக்கப்பட்ட விஷயங்கள் சம்பந்தமாக மத்திய சர்க்காரின் ஆளுகைக்கும் அதிகாரத்துக்கும் தாங்களும் உட்பட்டும், மேற்படி மத்திய ஸ்தாபனங்களிடம் ஒப்படைக்கப் படாத விஷயங்கள் சம்பந்தமாகத் தாங்களே சுயேச்சையாக நிர்வாகம் முதலிய அதிகாரங்களைச் செலுத்திக் கொண்டும் நடைபெற்று வரும் ஆட்சிதான் சமஷ்டி ஆட்சி என்று சொல்லப்படும்.

'சமஷ்டி ஆட்சி' என்ற பதத்திற்கு எதிரிடையான பதம் ஏகாதிபத்திய ஆட்சி (Unitary Government). இந்த ஆட்சி முறையில் எல்லா அதிகாரங்களும் ஒரு மத்திய ஸ்தாபனத்தால் செலுத்தப் படுகின்றன. ஒரு தேசம் பல பாகங்களாகப் பிரிக்கப் பட்டு ஒவ்வொரு பாகத்துக்கும் ஒரு தலைவரும் ஒரு சட்ட சபையும் ஏற்படுத்தப் பட்டாலும், இவைகள் மத்திய ஸ்தாபனமாகிய சர்க்காருக்குக் கீழ்ப் படிந்தவைகள். உதாரணமாக பிரிட்டிஷ் இந்தியாவிலும் பர்மாவிலும் 1920-ம் வருஷம் வரை அமுலிலிருந்த அரசியல், ஏகாதிபத்திய அரசியல். பிரிட்டிஷாரின் ஆதிக்கத்துக்குட்பட்ட பிரதேசமாகையால் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரின் பிரதிநிதியாகிய இந்தியா செகரடரி என்னும் அதிகாரிக்கு சகல அதிகாரங்களும் கொடுக்கப் பட்டிருந்தன. இவர் லண்டனி

விரும்பவர். இவருக்குக் கீழே இவருடைய உத்திரவுக்குக் கீழ்ப்பட்டு நடக்கக்கூடிய அதிகாரி இந்தியாவின் கவர்னர் ஜெனரலும் அவருடைய நிர்வாக சபையும். பிரிட்டிஷ் இந்தியா பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒரு தலைமை அதிகாரி (கவர்னர், அல்லது சீப் கமிஷனர்) நியமிக்கப் பட்ட போதிலும் இவர்கள் கவர்னர் ஜெனரலுடைய உத்திரவுக்குக் கீழ்ப்பட்டு நடக்கவேண்டும். மாகாணங்களில் சட்டசபைகள் சில விஷயங்கள் சம்பந்தமாகச் சட்டங்கள் ஏற்படுத்தினாலும் இதே விஷயங்கள் சம்பந்தமாகச் சட்டங்கள் ஏற்படுத்த மத்திய சட்ட சபைக்குப் பூர்ண அதிகாரமுண்டு. மத்திய சட்டசபை ஏற்படுத்திய ஒரு சட்டமும், மாகாண சட்ட சபைஏற்படுத்திய ஒரு சட்டமும்பரஸ்பர விருத்தமாக இருந்தால், மத்திய சட்டசபைஏற்படுத்திய சட்டமே ஊர்ஜிதத்திலிருக்கக்கூடியது. ஆகையால் ஒரு மத்திய ஸ்தாபனம் அல்லது சர்க்காரின் சர்வாதிகாரத்துவமே ஏகாதிபத்திய ஆட்சியின் முக்கியமான அம்சம். ஆனால் சமஷ்டி ஆட்சியில் மத்திய ஸ்தாபனத்துக்குச் சம்பந்தமான விஷயங்களில் மத்திய சர்க்கார் சகல அதிகாரங்களும் செலுத்துவார்கள். மற்ற விஷயங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் ஒவ்வொரு மாகாண சர்க்கார்களும், மத்திய சர்க்காரின் தலையிடுதல் அன்னியில் சுயேச்சையாகச் சகல அதிகாரங்களும் செலுத்துவார்கள்.

ஆகையால் ஒரு சமஷ்டி ஆட்சி முறையில் அடியிற் கண்ட அம்சங்களை நாம் காணலாம்.

(1) இந்த ஆட்சி முறை ஏற்படும் முன் சுயேச்சையாக இருக்கும் சில பிரதேசங்கள் அல்லது வியக்திகள் (Units) தங்கள் பொது நன்மையை உத்தேசித்து ஒரு மத்திய ஸ்தாபனத்தை ஏற்படுத்த ஒப்புக்கொள்ள வேண்டும்.

(2) இன்னின்ன விஷயங்களில் மத்திய சர்க்காரும் இன்னின்ன விஷயங்களில் மாகாண சர்க்காரும் அதிகாரம் செலுத்த வேண்டுமென்று தீர்மானம் செய்து, அந்தந்த சர்க்கார்களுக்கு அதிகாரங்களைப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும்.

(3) சமஷ்டி என்பது சுயேச்சையாக உள்ள பிரதேசங்கள் செய்து கொள்ளும் ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கையாதலால் அந்த விபரங்களை எழுத்தில் எழுதுவிக்க வேண்டும்.

(4) மேற்படி உடன்படிக்கை ஷரத்துக்களைச் சுலபமாக மாற்ற முடியாது. மாற்ற வேண்டும் என்று அவசியம் ஏற்பட்டால் அவ்விதம் செய்யும் முறையையும் எழுத்தில் எழுதி வைக்க வேண்டும்.

(5) மாகாண சர்க்கார்களுக்கும் மத்திய சர்க்காருக்கும் ஏற்படக்கூடிய விவகாரங்களைத் தீர்க்கவும், சமஷ்டி உடன்படிக்கையில் கண்ட ஷரத்துக்களை விவரித்து அர்த்தம் சொல்லவும், இவை சம்பந்தமாகப் பக்ஷபாதமில்லாமல் தீர்ப்புச் சொல்லவும் ஒரு நியாயஸ்தாபனம் அவசியம் ஏற்படுத்த வேண்டும்.

இந்த அம்சங்களைப் பற்றி விரிவாக அடுத்த இதழில் ஆராய்வோம்.

எதியோப்பியா—இத்தாலிய ஆக்கிரமிப்புக்குப் பிறகு

—எல். பராகோ
(S. P. M.)

இந்தக் கட்டுரையை எழுதியுள்ள ஸ்ரீ பராகோ என்பவர், எதியோப்பியாவில் பல வருஷகாலம் வசித்து ஜனங்களின் பழக்க வழக்கங்களை நன்கு அறிந்தவர். எதியோப்பியாவைப் பற்றி ஒரு நூலும் எழுதியிருக்கிறார். இத்தாலிய ஆக்ரமிப்புக்குப் பிறகு, எதியோப்பியாவில் ஒரே அமைதி குடிகொண்டிருக்கிறதென்றும், எதியோப்பியர்கள் இத்தாலிய ஆதிக்கத்தை அதிக சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டிருக்கிறார்களென்றும் ரோமாபுரியிலிருந்து அடிக்கடி சங்கு ஊதப்பட்டபோதிலும், உண்மையில் அந்நாட்டு நிலைமை வேறு விதமாக இருக்கிறதென்பதை ஸ்ரீ பராகோ நன்றாக இங்கு எடுத்துக் காட்டுகிறார். லண்டனிலுள்ள எதியோப்பிய மந்திரியாகிய டாக்டர் மார்டின் என்பவர், சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், எதியோப்பியர்கள், முஸோலினி கூட்டத்தார் கருதுசிறபடி அவ்வளவு சுலபத்தில் அடங்கி விடக் கூடியவர்களல்ல என்று குறிப்பிட்டிருக்கிறார், சர்வதேச சங்கத்தில் இன்னும் நம்பிக்கை வைத்துக் கொண்டிருக்கிற ஹெயிலி செலாஸி, மேற்படி சங்கத்திற்கு மூன்றாவது முறையாக விடுத்துள்ள விண்ணப்பத்திலும், ஸ்ரீ பராகோவின் தொனியிலேயே பேசியிருப்பது இங்குக் குறிப்பிடத் தக்கது,

எதியோப்பியாவைக் கைவிட்டுவிட வேண்டிய நிலைமை கட்டாயம் இத்தலிக்கு ஏற்படும். ஜிபூடியிலுள்ள பிரெஞ்சுக்காரர்களுடைய அபிப்பிராயம் இதுதான்.

எதியோப்பியா, இப்பொழுது அடைத்து வைக்கப்பட்ட ஒரு பிரதேசமாயிருக்கிறது. பாசிஸ்டுகள், அல்லது உத்தியோக அலுவலாகச் செல்கிறவர்கள் ஆகிய இவர்களைத் தவிர வேறு யாருமே—அவர் பிரயாணியாயிருக்கட்டும் அல்லது பத்திரிகை நிருபராயிருக்கட்டும்—எதியோப்பிய எல்லைப்புறத்தைத் தாண்ட முடியாது. இங்ஙனம் அந்நியர்களைத் தடுப்பதற்கு மூன்று முக்கிய காரணங்களுண்டு. முதலாவது, எதியோப்பியா இப்பொழுது குழப்பமான நிலைமையில் இருக்கிறது; இரண்டாவது, மெனலிக், ஹெயிலி செலாஸி ஆகிய மன்னர்கள் ஆண்டு கொண்டிருந்தபோது, வெள்ளையர்கள் பிரயாணஞ்செய்யுங் காலத்தில் ஏற்பட்டிருந்த ஆபத்துக்களைவிட இப்பொழுது அவர்களுக்கு அதிக ஆபத்து; மூன்றாவது தேச முழுவதும் ஒரே பஞ்சம்.

எதியோப்பியாவை, தான் ஜெயித்துவிட்டதாக இத்தலி சொல்லிக்கொள்கிறது. அஃது உண்மையில்லை. சில நகரங்களையும் அந்நகரங்களைச் சுற்றியுள்ள பிரதேசங்களையுமே இத்தாலியர்கள் சுவாதீனப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மற்றப் பிரதேசங்கள் எவ்விதமான நிருவாகத்திற்கும உட்படாமலே இருக்கின்றன. டெஸ்ஸி (இங்குதான் ஹெய்லி செலாஸி அதிக மும்முரமாகச் சண்டை போட்டது)க்கு 20 மைல் தொலைவில் அஸ்மாராவிலிருந்து அடிஸ் அபாபாவுக்குப் போகிற பெரிய ரோட் இருக்கிறது. இந்த

ரோட்டை ஓர் எதியோப்பியப் படை தான் காவல் காத்து நிற்கிறது. இங்கே எந்த இத்தாலியரும் செல்ல முடியாது.

தேச மெங்கணும் எதியோப்பிய கொள்ளைக் கூட்டங்கள் இருக்கின்றன. சில சமயங்களில் 50 எதியோப்பியர்கள் சேர்ந்து கொண்டு இத்தாலியர்களைத் துன்புறுத்துகிறார்கள். 'வெற்றி கொண்டவர்கள்' என்று ஜம்பம் பேசிக் கொள்ளும் இத்தாலியர்கள் எந்தப்பிரதேசத்திற்காவதுபோக வேண்டுமென்றால் முதலில் ஆகாய விமானங்களின் மூலமாகப் பரிசோதனை செய்து விட்டுப் பின்னர் பீரங்கிகளுடன் பெரிய படையினராகத் தான் செல்ல வேண்டியிருக்கிறது. யுத்த காலத்தில் கொல்லப் பட்ட இத்தாலியர்களை விட, யுத்தத்திற்குப் பிறகு கொல்லப் பட்ட இத்தாலியர்கள் அதிகம் என்று எனக்கு நம்பத் தகுந்த இடத்திலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது.

எதியோப்பியாவில் புதிய துருப்புகள் அடிக்கடி வந்து இறங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தத் துருப்புகளில் பெரும்பாகத்தினர் வயதானவர்களே. இந்தத் துருப்புகள் பிரெஞ்சு சோமாலிலாண்ட் வழியாகவே செல்ல வேண்டியிருக்கிறது. ஆனால் பிரெஞ்சு அரசாங்கத்தார், துருப்புகளின் இறக்குமதிக்கு அநுமதி கொடுக்க முடியாதென்று சொல்லி விட்டார்கள். எனவே, இவர்களைத் தொழிலாளர் என்று சொல்லி, இத்தாலிய அரசாங்கம் ஜிபூடியில் இறக்குமதி செய்து கொள்கிறது. இவர்கள் கையில் மண்வெட்டியும் கடப்பாரையும் இருக்கும். எதியோப்பியாவுக்குள் இவர்கள் வந்து சேர்ந்த பிறகு இவர்கள் கையில் துப்பாக்கி கொடுக்கப்படும்.

இந்தத் 'தொழிலாளர்' களை ஏற்றிக் கொண்டு ஓர் இத்தாலியக் கப்பல் ஒரு சமயம் ஜிபூடிக்கு வந்தது. ஆனால் இவர்களிடத்தில் போதுமான மண் வெட்டிகள் இருக்கவில்லை. எனவே, ஜிபூடியில் இவர்களை வரவேற்பதற்காக இருந்த இத்தாலிய உத்தியோகஸ்தர் அவசரம் அவசரமாக மார்க்கெட்டுக்குச் சென்று ஏராளமான மண் வெட்டிகளை வாங்க ஆரம்பித்தார். இதனால் ஓர் அரை மணி நேரத்திற்குள் ஜிபூடி மார்க்கெட்டில் மண் வெட்டிகளின் விலை, ஒன்றுக்குப்பல மடங்காக உயர்ந்து விட்டது.

ஒவ்வோர் இத்தாலியக் கப்பலும் குறைந்தது 1500 இத்தாலியர்களை இறக்குமதி செய்கிறது. இவர்கள் உடனே ரெயில் வண்டிகளில் ஏற்றி, உட்பிரதேசங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். கால் நடைகளை ஏற்றிச் செல்லும் ரெயில் வண்டிகள்தான் இந்தத் துருப்புகளுக்கு உபயோகப்படுத்தப் படுகிறது. ஒவ்வொரு வண்டியிலும் 40 பேர். இதைக் கண்டு சில இத்தாலியர் கூட 'ஒட்டகங்களை விடக் கேவலமாக வல்லவோ நாங்கள் நடத்தப்படுவோம்' என்று முணுமுணுக்கிறார்கள்.

எப்பொழுது பார்த்தாலும் ரெயில் வண்டிகளில் துருப்புகள்தான் ஏற்றிச் செல்லப் படுகிறார்கள். சாமான்களை ஏற்றிச் செல்வது மிகக் குறைவு. ஜிபூடி துறை முகத்தில் ஏராளமான பொருள்கள் குவிந்து கிடக்கின்றன. இவைகளை உட் பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்லக் குறைந்தது எட்டு மாதங்களுக்கு மேலாகு மென்று சொல்லப்படுகிறது.

டானகில் பாலை வனத்தின் வழியாக சுமார் 225 மைல் நீளம் சிமெண்ட் ரோட் போடும் வேலையில் இத்தாலியர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒரு

மைலுக்கு $2\frac{1}{4}$ லட்சம் ரூபாய் வீதம் செலவிட்டு சுமார் $7\frac{1}{2}$ மைல் வரை இப்பொழுது ரோட் போட்டிருக்கிருர்கள்.

எதியோப்பியாவில், பஞ்சம் கோர தாண்டவமாடுகிறது. யுத்தம் நடைபெற்ற இரண்டு வருஷ காலத்தில், எவ்விதமான பயிரும் செய்யப் படவில்லை. தவிர, இத்தாலியர் ஆக்ரமிப்புக் குட்பட்ட பிரதேசங்களில், நிலங்களைச் சாகுபடி செய்ய எதியோப்பியர்கள் மறுக்கிருர்கள். எனவே, இத்தாலிய ஏஜண்டுகள் செங்கடலோரமாயுள்ள பிரதேசங்களில் ஏராளமாக உணவுப் பொருள்களை வாங்குகிருர்கள். ஆனல் இவை ஜிபூடி துறைமுகத்தில் குவிந்து கிடக்கின்றன. எதியோப்பியாவின் உட் பிரதேசங்களுக்குச் சென்று, உணவுப் பொருள்களை வாங்கி வர ஓர் இத்தாலியப் படை முழுவதும், அப்படியே எதியோப்பியர்களால் நாசமாக்கப்பட்டது.

இத்தாலிக்குத் திரும்பிச் செல்ல அநுமதிக்கப்படுகிற படையினர், அடிஸ் அபாபாவி லிருந்து ஜிபூடிக்கு வந்து கப்ப லேறுகின்றனர். குழி விழுந்த கண்கள்; சுருங்கிய முகம்; மீசை தாடி; ஆகிய இந்தக் கோலத்துடன், மாடுகளை அடைத்து வரும் ரெயில் வண்டிகளில் இவர்கள் வந்திறங்குகின்றனர். இறங்கியதும், விற்பனைக்கென்று எதியோப்பிய ஏழைகள் வைத்துக் கொண்டிருக்கும் தின்பண்டங்களைப் பறித்துத் தின்கின்றனர். இத்தாலியப் படையினரே, தாங்கள் அநேக நாட்களாகவே, போதிய ஆகாரம் எடுத்துக் கொள்ள முடியாத நிலையி லிருந்ததை ஒத்துக் கொள்கிருர்கள்.

எதியோப்பியாவிலுள்ள சுதேசி ஜனங்களுக்குக்கூட தின்பதற்கு ஒன்றுமில்லை. ஆயிரக்கணக்கான பேர் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கிருர்கள். நகரங்களிலேயுள்ளவர்கள் எலி முதலியவற்றைத் தின்கிருர்கள். உணவுப் பொருள்களின் விலையோ மிகவும் ஏறி நிற்கிறது. இதனல், சுதேசிகள், கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து கொண்டு கொள்ளை யடிக்க ஆரம்பிக்கின்றனர். சில சமயங்களில் ஐரோப்பியர்களுடைய வீடுகளில்கூட புகுந்து விடுகின்றனர். இத்தாலியர்களும் இவர்களோடு சேர்ந்து கொண்டு, தங்களுக்கும் ஆகாரந் தேடிக் கொள்கின்றனர். இத்தாலிய அதிகாரிகள் இவர்களைத் தடுக்கவழியில்லாது திகைக்கின்றனர்.

எதியோப்பியாவில் இப்பொழுது செலாவணியிலிருக்கிற நாணயம் லைரா என்னும் இத்தாலிய நாணயம். ஆனல் எதியோப்பியர்கள், இதை உபயோகிக்க மறுக்கிருர்கள். முன்னம் அமுலிலிருந்த 'மேரியா தெரீஸா டாலரை'த் தான் உபயோகிக்கிருர்கள். இத்தாலிய அரசாங்கமே இதைச் செலாவணியில் கொண்டு வரக் கூடாதென்று தடையுத்திரவு போட்டிருக்கிறது. இதனல் வியாபாரம் ஒரே அடியாக நின்று விட்டது.

ரோமாபுரி அரசாங்கம் என்ன விதமான அறிக்கைகள் விட்டுக் கொண்டிருந்த போதிலும், ஒரு விஷயம் மட்டும் நிச்சயம். அதாவது எதியோப்பியா இப்பொழுது ஒரே குழப்பத்தில் இருக்கிறதென்பதுதான். எதியோப்பியாவில் நடை பெறும் விஷயங்களை ஜிபூடியிலுள்ள பிரெஞ்சு அதிகாரிகள் அதிக ஆவலோடு கவனித்துக் கொண்டிருக்கிருர்கள். இத்தாலிய ஆதிக்கம் எதியோப்பியாவில் சீக்கிரம் குலைந்து விடும் என்று அவர்கள் அஞ்சுகிருர்கள்.



1937

செப்டம்பர்

22 இந்தியாவுக்கு எத்தகைய அரசியல் திட்டம் வழங்கப்பட வேண்டுமென்பதைப் பற்றி நிர்ணயிக்கப்பொதுஜனசபைகூட்ட வேண்டுமென்ற தீர்மானம் மத்திய மாகாண சட்டசபையில் நிறைவேற்றப் பட்டது.

சிந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியாருக்குச் சொந்தமான ‘எல் மெடினு’ என்ற கப்பலானது இன்று கிளாஸ்கோ நகரத்துத் துறை முகத்தில் மிதக்க விடப்பட்டது.

23 சட்ட மறுப்புக் காலத்தில் பறிமுதல் செய்யப்பட்ட நிலங்கள் யாவும் சொந்தக்காரர்கள் வசம் திருப்பிக் கொடுத்து விடவேண்டு மென்ற தீர்மானம் பம்பாய் சட்ட சபையில் நிறைவேறியது.

24 தீண்டாதாருக்கு ஆலயப் பிரவேசஉரிமை அளித்ததற்காக திருவாங்கூர் மகாராஜாவைப் பாராட்டி, சென்னைச் சட்ட சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

விவசாயிகள் கடன் வஜா மசோதா இன்று சென்னை அரசாங்க கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டது.

அகில இந்திய பாலஸ்தீன மகாநாடு இன்று கல்கத்தாவில் ஜனுப் அப்துர் ரஹிமான் சித்திக் என்பவருடைய தலைமையில் கூடி, பாலஸ்தீனப் பிரிவினையைக் கண்டித்தது.

அரசாங்க ஊழியர்களுக்குச் சப்ளை செய்யப்படுகிற எல்லா உடுப்புகளும் கூடிய வரையில் கதராகவே இருக்க வேண்டுமென்று ஐக்கிய மாகாண சட்ட சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

வட ஷான்ஸீ மாகாணத்தில் நடைபெற்ற சீன-ஜப்பானிய யுத்தத்தில் ஜப்பானியப் படைகளில் ஐயாயிரம் பேர் கொல்லப்பட்டனர்; இரண்டாயிரம்பேர் சிறை செய்யப்பட்டனர்.

இந்தியாவுக்குப் புதிய அரசியல் திட்டத்தை நிர்ணயிக்கப் பொது ஜன சபை கூட்ட வேண்டுமென்ற தீர்மானம் பம்பாய் சட்ட சபையில் நிறைவேறியது.

25 சென்னைச் சட்ட சபையில் மது விலக்கு மசோதா ஆஜர்படுத்தப்பட்டு பரிசிலனைக் கமிட்டியின் ஆலோசனைக்கு விடப் பட்டது.

ஒரிஸா மாகாணத்திற்குத் தலை நகரம் கட்டக் என்று ஒரிஸா சட்ட சபையில் தீர்மானிக்கப்பட்டது.

இத்தாலிய சர்வாதிகாரியான முஸோலினியும் ஜெர்மன் சர்வாதிகாரியான ஹிட்லரும் இன்று ம்யூனிக் நகரத்தில் சந்தித்தார்கள்.

அரசாங்க உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்கும் வழக்கத்தை ஒழிக்க ஐக்கிய மாகாண அரசாங்கத்தார் ஒரு தனி உத்தியோகஸ்தரை நியமித்திருக்கின்றனர்.

26 சீனப் படைகளுக்கு சூ சோ லியான் என்பவர் சேனாதிபதியாக நியமிக்கப்பட்டார்,

குவெட்டாவில் இன்று மறுபடியும் பூகம்ப அதிர்ச்சி உண்டாயிற்று.

பாலஸ்தீனத்தில் மறுபடியும் யூத-அராபிய கலகம் தோன்றியது. இரண்டு ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் கொல்லப்பட்டார்கள்.

சீன-ஜப்பானிய யுத்தத்தில், சீனாவுக்கு அநுதாபங் காட்டி இன்று இந்தியா வெங்கணும் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன.

மின்சார பல்புகள் செய்யும் தொழிற்சாலை யொன்றை இன்று பெங்களூரில் திவான் திறந்து வைத்தார்.

27 மதுவிலக்குமசோதா சென்னைக்கீழ் சட்டசபையில் நிறைவேறியது.

ஹாங்காங் தேசத்திற்கு 80 மைல் தூரத்தில் கடலில் சீனப் படகுகள் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது ஒரு ஜப்பானிய நீர் மூழ்கிக் கப்பல் வந்து அனைத்தையும் மூழ்கடித்து விட்டது, இதனால் பலர்க்கும் உயிர்ச்சேதம்

நிரபராதிகளான சீனர்களின் மீது ஜப்பானியர்கள் ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகளைப் பொழிவது சரியல்லவென்று சர்வதேச சங்கக் கமிட்டியார் ஒரு தீர்மானம் நிறை வேற்றினர்.

28 துணி லைசென்ஸ் மசோதா சென்னைச் சட்ட சபையில் நிறைவேறியது.

பர்மா மந்திரிசபைக்குதாராவாடி ஊமாங் மாங் புதிய மந்திரியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். டாக்டர் பாமோ இனி பிரதம மந்திரியாகமட்டும் இருப்பாரே தவிர, அவர் கீழ் எந்த இலாகா நிருவாகமும் இராது.

29 முஸோலினி, ஹிட்லருடைய விருந்தினராக இருந்து விட்டு ரோமாபுரிக்கு மீண்டும் திரும்பினார்.

1922-24ம் வருஷங்களிலும் 1928-29ம் வருஷத்திலும் இந்தியா மந்திரியாக இருந்த லார்ட் பீல் காலமாகிவிட்டார்.

30 சென்னை மேல் சபையில் (கவுன்சில்) மதுவிலக்கு மசோதா நிறைவேற்றப்பட்டது.

விவசாயிகள் கடன் வஜா மசோதாவை தற்போது ஆஜர்படுத்த வில்லையென்று சென்னைச் சட்ட சபையில் ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் தெரிவித்தார்.

துணி லைசென்ஸ் மசோதா இன்று சென்னை கவுன்சிலில் (மேற் சபையில்) நிறைவேற்றப்பட்டது.

அக்டோபர் மாதம் இரண்டாந் தேதி மகாத்மா காந்தியின் பிறந்த நாளன்று நகர சபைப் பள்ளிக்கூடங்களை யெல்லாம் மூட வேண்டுமென்று சென்னை நகர சபையார் ஒரு தீர்மானம் நிறைவேற்றினர்.

ஸ்பெயின் சண்டையில் கலந்து கொண்டுள்ள ஸ்பானியரல்லாதார் அனைவரையும் அந்தந்த தேசத்தினர் வாபீஸ் வாங்கிக்கொள்ள வேண்டுமென்றும், அப்படிச்செய்யாவிட்டால் தலையிடாத் திட்டம் பயனடையாதென்றும், சர்வதேச சங்கக் கமிட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறது.

மத்திய மாகாண மந்திரிகள் இன்று ஷ்வேகான் கிராமத்தில் மகாத்மா காந்தியைக் கண்டு பேசினார்கள்.

அக்டோபர்

1 **சேலத்தில் மது விலக்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.**

சேலம் ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்வதற்காககனம் ராஜகோபாலாச்சாரியார், கனம் முனிசாமிப் பிள்ளை, கனம் ராமநாதன் ஆகிய மூன்று மந்திரிகளும் சேலம் போந்தனர்.

பாலஸ்தீனத்துத் தலை நகரமான ஜெருசலேம் நகரசபைத் தலைவரும் அராபிய ஹை கமிட்டியைச் சேர்ந்த மற்ற பிரபலஸ்தர்களும் இன்று கைது செய்யப்பட்டார்கள். பாலஸ்தீன முழுவதிலுமே அராபிய யூத உணர்ச்சி வலுத்து நிற்கிறது.

ஸ்பெயினிலுள்ள இத்தாலிய துருப்புகளை வாபீஸ் வாங்கிக் கொள்ள இத்தலி தயார் என்று தளபதி பிராங்கோ, பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் பிரெஞ்சு அரசாங்கத்திற்கும் தெரிவித்தார்.

2 மகாத்மா காந்தியின் 69-வது பிறந்த தினக் கொண்டாட்டம் இந்தியா, பர்மா, மலேயா முதலிய எல்லா நாடுகளிலும் கொண்டாடப் பட்டது. பிரபல ஆங்கில

நூலாசிரியரான பெர்னூர்ட் ஷா, ரவீந்திர நாத் டாகூர் முதலிய அறிஞர்கள் காந்தியடிகளுக்கு ஆசிச் செய்தி அனுப்பினார்கள்.

3 பம்பாய் அபேதவாதக் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ பாட்லிவாலா தலைச்சேரியில், இ. பி. கோ. 124வது பிரிவுப்படி கைது செய்யப்பட்டார்.

4 ஸ்பெயின் குடியரசு அரசாங்கத்தின் தலை நகரான வாலென்ஷியா மீது கலகக்காரர்கள் ஆகாய விமானக் குண்டுகளைப் பொழிந்தனர்.

உலக முழுவதும் சமாதானம் நிலவ வேண்டுமென்றும், ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளைப் பாதுகாக்க வேண்டுமென்றும் அமெரிக்க பிரசிடெண்டு ரூஸ்வெல்ட் பேசினார்.

புதுச்சேரி கல்வே காலேஜைச் சேர்ந்த சுமார் 50-மாணுக்கர்கள், காந்தி குல்லாய் தரித்துக் கொண்டு காலேஜுக்குச் சென்றபோது, காலேஜ் தலைவர், குல்லாயை எடுத்தாலன்றி உள்ளே வரக் கூடாதென்று தடுத்து விட்டார்.

6 புதிய மதுவிலக்குச் சட்டத்தின் படி, கள்ளத் தனமாக, அரக்கு, கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை வைத்துக் கொண்டிருந்த சிலர், சேலம் ஜில்லாவில் கைது செய்யப் பட்டுத் தண்டிக்கப் பட்டனர்.

சீனாவின் மீது தொடுத்துள்ள யுத்தமானது அநீதியானது என்று கண்டித்து ஜப்பானுக்கு அமெரிக்கா தெரிவித்தது.

சர்வதேச சங்க அஸெம்ப்ளி கூட்டம் ஜப்பான் செயலைக் கண்டித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

7 ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் போதிய போஷணை யற்ற பிள்ளைகளுக்கு பால் சப்ளை செய்ய பம்பாய் நகர சபையார் இரண்டு லட்ச ரூபாய் சாங்க்ஷன் செய்திருக்கின்றனர்.

பாலஸ்தீனத்திலுள்ள அராபியத் தலைவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருப்பதை ஈராக் அரசாங்கம் கண்டித்து, பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு ஒரு குறிப்பு அனுப்பியது.

பிரிட்டிஷ் அரசாங்கம் இத்தலியுடன் நேசப் பான்மையாக இருக்க வேண்டுமென்று பிரிட்டிஷ் கன்ஸர்வேடிவ் கட்சி மகா நாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

சீனாவின் பல பாகங்களில் ஜப்பானியர்கள் விஷப் புகையை உபயோகிக்கிறார்களென்று சீன அரசாங்கத்தார் சர்வ தேச சங்கத்திற்கு ஓர் அறிக்கை அனுப்பியிருக்கின்றனர்.

9 தளபதி பிராங்கோவின் படையில் சேர்வதற்கு ஐயாயிரம் பேர் இன்று ஜிப்ரால்டரில் வந்திறங்கினர். இவர்கள், எந்தச் சமூகத்தினர் என்று தெரியவில்லையாம்.

சர்வதேச சங்கம், ஜப்பான் சம்பந்தமாக நிறைவேற்றின தீர்மானத்திற்குப் பதிலாக, ஜப்பான் விடுத்துள்ள அறிக்கையில், சீனாதான், உலக சமாதானத்தைக் கெடுக்கிறதென்றும் தற்காப்பு நிமித்தமாகவே ஜப்பான் இப்பொழுது யுத்தம் செய்து வருகிறதென்றும் தெரிவித்திருக்கிறது.

தேவாலயங்கள், மடங்கள் முதலிய இடங்களிலுள்ள தென்னை மரங்களைக் கள் குத்தகைக்கு விடக் கூடாதென்று சென்னை தர்ம ஸ்தாபன போர்டார் ஒரு சுற்றறிக்கை விடுத்திருக்கின்றனர்.

ஜப்பானுக்குத் தான் எவ்விதத்திலும் ஆதரவு அளிக்கத் தயார் என்று இத்தலி, தனது ஸ்தானீகர் மூலம் ஜப்பானுக்குத் தெரிவித்திருக்கிறது.

10 புதுச்சேரியில் தேர்தல் கலகம். இரு கட்சியினரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொண்டனர். சுமார் 50 பேருக்கு காயம்.

சேலம் ஜில்லாவிலுள்ள எல்லாத் தாலுக்காக்களிலும் சுமார் பத்து தினங்கள் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டு இன்று ஸ்ரீ ராஜகோபாலாசாரியார், திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்தார்,

சோவியத் அரசாங்கத்திற்கு விரோதமாகச் சதியாலோசனை செய்ததற்காக இன்று பத்து பேர் மாஸ்கோவில் தூக்கி லிடப் பட்டனர்.

11 காந்தியடிகளை பிரபல டாக்டர்கள் பரிசோதனை செய்தனர். அவருக்கு அதிக ஓய்வு கொடுக்க வேண்டுமென்று அபிப்பிராயப் பட்டனர்.

முஸ்லீம்கள் அனைவரும் காங்கிரசில் சேரவேண்டுமென்று ஸர் வாஜிர் உசேன் அகில இந்தியா ஷியா அரசியல் மகா நாட்டில் கூறினார்.

சீன ஜப்பானிய யுத்தங் காரணமாக, சீனாவிலிருந்த சில்லரைக் கட்சிகளெல்லாம் தேசியக் கட்சியாக உருக் கொண்டன.

12 எதியோப்பியாவுக்கு ஆதரவு காட்ட வேண்டுமென்று, ஹெயிலிசெலாயி சர்வ தேச சங்கத்திற்கு மறுபடியும் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

சீனாவில் பிரிட்டிஷ் ஸ்தானீகர் காரியாலயத்தைச்சேர்ந்த மூன்று மோடார் வண்டிகளின்மீது, ஜப்பானிய ஆகாய விமானிகள் குண்டுகள் போட்டனர். சேதம் இல்லை.

தீபாவளி சமயத்தை முன்னிட்டு போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கு எவ்வித சன்மானமும் வழங்கக் கூடாதென்று பம்பாய் அரசாங்கத்தார் ஓர் அறிக்கை விடுத்திருக்கின்றனர்.

சிரியா தேசத்திலுள்ள பெய்ரட் என்ற நகரத்தில் அமெரிக்க ஸ்தானீகர் யாரோ ஒருவனால் சுட்டுக் கொல்லப் பட்டார்.

13 பெல்ஜியத்தின் பூரண சுதந்திரத்தையும் அதன் நாட்டுரிமையையும் அங்கீகரிப்பதாக ஜெர்மனி, பெல்ஜிய அரசாங்கத்திற்கு ஓர் உறுதிமொழி கொடுத்திருக்கிறது.

14 பாலஸ்தீனத்தில் பெரிய கலகம். துருப்புகளை ஏற்றிக்கொண்டு வந்த ஒருரெயில் வண்டியை சில அராபியர்கள் நிறுத்திச் சேதம் விளைவித்தனர். அராபிய ஹை கமிட்டியைச் சேர்ந்த ஐந்து முக்கியஸ்தர்களை அரசாங்கத்தார் தேசப் பிரஷ்டம் செய்து விட்டனர்.

விண்ட்ஸர் தம்பதிகள், பெர்லினிலுள்ள முக்கியமான தொழிற் சாலைகளைப் பார்வை யிட்டு விட்டு, ஜெர்மன் அரசாங்கத்தார் தொழிலாளர்களுக்குச் செய்து வரும் பலநன்மைகளைத் தாம் பெரிதும் பாராட்டுவதாகக் கூறினார்.

15 குழப்பங் காரணமாக, இரவு இத்தனை மணி நேரத்திற்கு மேல் யாரும் வீடுகளுக்கு வெளியே போகக் கூடாதென்ற தடை உத்திரவு ஜெருசலேத்தில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

16 ஜெருசலேம் நகரத்திலுள்ள 'கிராண்ட் மப்டி' என்ற அராபிய அதிகாரி இரகசியமாக ஓடிப் போய் விட்டார்.

சீன-ஜப்பான் தகராறைப் பற்றி ஆலோசிக்க ப்ருஸ்ஸெல்ட் நகரில் கூடும் ஒன்பது வல்லரசுகள் மகா நாட்டுக்கு அமெரிக்கா வர இசைந்திருக்கிறது.

17 ஷாங்காய் நகரத்தை சீன ஆகாய விமானங்கள் ஏழு முறை தாக்கின.

18 சீன ஜப்பான் யுத்தங் காரணமாக, உலகத்து வியாபாரம் பெரிதும் பாதிக்கப் பட்டிருப்பதாக சர்வதேச சங்கஅறிக்கையொன்று கூறுகிறது.

19 அபிசீனிய யுத்தத்தில் ஏற்பட்ட செலவைஒருவாறு சரிக்கட்டும்பொருட்டு இத்தலியில் புதிய வரிகள் போட வேண்டுமென்று இத்தாலிய மந்திரி சபை தீர்மானித்தது.

20 தலையிடாத கமிட்டியின் இன்றைய கூட்டத்தில், ஸ்பெயின் குழப்பத்தில் கலந்து கொண்டுள்ள அந்நியர்கள் எத்தனை பேர் என்பதைப் பற்றி விசாரித்துக் கமிஷன் அனுப்புவதைத் தான் அங்கீகரித்துக் கொள்வதாக இத்தாலியப் பிரதிநிதி கூறினார்.

சட்ட சபைகளில் பிரார்த்தனை எங்ஙனம் நடைபெற வேண்டுமென்பதைப்பற்றித் தெரிவிக்குமாறு சென்னைச் சட்டசபைத் தலைவர் ஸ்ரீ சாம்ப மூர்த்தி பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கும் மற்றக் குடியேற்ற நாட்டுப் பார்லிமெண்டுகளுக்கும் எழுதியிருக்கிறார்.

21 பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் அந்நிய நாட்டு மந்திரியாகிய ஸ்ரீ ஈடன், சர்வதேச அரசியல் நிலைமையைப் பற்றி விளக்கிப் பேசினார்.

ஸ்பெயின் சண்டையில், கிஜோன் என்ற நகரம் கலகக்காரர் வசம் பிடிபட்டது.

காதலா? வீரமா?—ஸதி சிந்தா

—எஸ். மங்களம்மாள்

இருநூறு வருஷங்கள் கழிந்து விட்டன. ஆனால் சிந்தா தேவியின் புகழ் மங்காமல் பிரகாசித்துக்கொண்டு வருகிறது. ராஜ புதனத்தில் புன்டேல்கண்ட் என்ற ஒரு நகரம் இருக்கிறது. இங்கே ஒரு சிறிய இடத்தில், இன்னும் செவ்வாய்க்கிழமை தோறும் ஆயிரக்கணக்கான ஸ்திரீ புருஷர்கள், சிந்தா தேவியைப் பூஜிப்பதற்காக வருகிறார்கள். அன்று, இந்த ஜன சஞ்சாரமற்ற இடம், எவ்வளவு கோலாகலமா யிருக்கிறது! இங்கேயுள்ள சிந்தா தேவியின் கோயில், உயரமான ஒரு குன்றின் மீது அமைக்கப்பட் டிருக்கிறது. கோயில் உள்ளே உருவம் ஒன்றும் இல்லை. ஒரு சிறிய ஹோமகுண்டம் மாத்திரம் இருக்கிறது. சிந்தா தேவி சதிகமனம் செய்தது இந்த இடத்தில்தான். உலக விவகாரப்படி இவள், தனது இறந்த புருஷனுடன் உடன் கட்டை ஏறவில்லை; அவனது ஆத்மாவுடன் சதிகமனம் செய்தாள்.

யமுனைக் கரையில் கால்பி என்பது ஒரு சிறிய பட்டணம். ராஜபுத்ரர்களில் ஒரு பிரிவினராகிய புந்தேலர் இங்கே அதிகமாக வசித்துக் கொண்டிருந்தனர். சிந்தா, இந்தப் பட்டணத்திலுள்ள ஒரு வீர புந்தேலின் புத்திரியாகப் பிறந்தாள். சிந்தாவின் தாய், அவளுடைய பாலிய பிராயத்திலேயே இறந்து போய்விட்டாள். அதனால் சிந்தாவை வளர்த்துக் காப்பாற்றும் பொறுப்பு தந்தையைச் சார்ந்துவிட்டது. அந்தச் சமயம், ராஜபுதனத்தில் சங்கிராம சிம்மனுடைய ஆட்சி நடைபெற்று வந்தது. சேனாதிபதிகளுக்கு, இடுப்பிலே வரிந்து கட்டிக்கொண்டிருக்கும் கச்சுப்பட்டைகளை அவிழ்க்கக்கூட சமயம் கிடைக்கவில்லை. அவர்கள், குதிரைகளின் முதுகின் மேலேயே இருந்து சாப்பிட்டும் உறங்கியும் வந்தார்கள். சிந்தாவின் பாலிய பருவம், பிதாவின்கூட யுத்த பூமியிலேயே கழிந்தது. தகப்பன், அவளை ஏதாவது ஒரு குகை அல்லது மரமறைவில் விட்டு விட்டு யுத்தத்திற்குச் சென்று விடுவான். சிந்தா, கவலையற்றவளாய் மண்ணினால் கோட்டை கட்டுவது, அதை அழிப்பது இப்படியாக விளையாடிக் கொண்டிருப்பாள். அவள் பொம்மைகளுக்குச் சிப்பாய்களின் போர் உடைபோட்டு அவைகளை யுத்த களத்தில் நிறுத்துவாள். இந்த மாதிரி தான் இவளுடைய விளையாட்டுகளெல்லாம் இருந்தன. சிலசமயம் சிந்தாவினுடைய தகப்பன் சாயந்திர வேளைகளில்கூட திரும்பிவர மாட்டான். ஆனாலும் சிந்தாவிற்குப்பயம் என்பது எள்ளளவும் இராது. நிர்மானுஷியமான இடத்தில் பசி, தாகத்தோடு இரவு பூராவும் உட்கார்ந்து கொண்டே இருப்பாள். ஒரு முறை சிந்தாவிற்கு மூன்று தினங்கள் வரை அவளுடைய தகப்பனுடைய சமாசாரம் ஒன்றுமே கிடைக்காமல் போயிற்று. சிந்தா, தனியாக ஒரு மலைக்குகையில் அந்த மூன்று தினங்களையும் கழித்தாள்.

மூன்றாவது நாள் சாயந்திரம் அவளுடைய தகப்பனுடன் போனவர்கள் திரும்பிவந்து, சிந்தாவைப் பார்த்ததும் அழத்தொடங்கினார்கள். சிந்தா ஆச்சரியப்பட்டவளாய் 'என் பிதா எங்கே? நீங்கள் ஏன் அழுகிறீர்

கள்?' என்று கேட்டாள். அவர்களில் ஒருவரும் பதில் சொல்லாமல் மேன்மேலும் அழத்தொடங்கினார்கள். அப்பொழுது சிந்தாவிற்கு, தன் தகப்பனார் வீரகதி அடைந்து விட்டார் என்று நிச்சயமாகிவிட்டது. பதின் மூன்று வயதினளான சிந்தாவின் கண்களிலிருந்து ஒரு துளி ஜலங்கூட வெளிவர வில்லை; முகத்திலும் சோகம் தென்படவில்லை. சிரித்துக் கொண்டே 'அவர் வீரகதி அடைந்தார். நீங்கள் ஏன் அழுகிறீர்கள்? வீரர்களுக்கு இதைத் தவிர்த்து வேறெவ்வித முடிவு நேரிடக்கூடும்? மேலும் இதைவிட வேறு கீர்த்தி என்ன வேண்டும்?' என்றாள். வீரர்கள், 'இல்லையம்மா, இப்பொழுது தாங்கள் எங்கிருப்பீர்கள் என்ற கவலை தான் எங்களுக்கு' என்றார்கள். 'இதற்கு நீங்கள் சிறிதும் கவலைப்பட வேண்டியதில்லை. என் பிதா தன் தாய் நாட்டைச் சத்துருக்களின் கையிலிருந்து மீட்கவே உயிரைத் தியாகம் செய்தார். அதே வேலையை நானும் மேற் கொள்வேன். எனக்கு ஒரு குதிரையும் உடை வாளும் தேவை. ஈசுவரானுக்கிரகத்தால் நான் திரும்ப முடியாமற் போகலாம். ஆனால் ஒரு கால் நான் யுத்தகளத்திலிருந்து புற முதுகிட்டு வந்தேனாகில் உடனே உங்களில் யாராகிலும் வாளினால் இந்த உயிரைப் போக்கி விடுங்கள். இஃது ஒன்றே உங்களிடம் நான் விரும்புவது' என்று கம்பீரத் தொனியுடன் சிந்தா சொன்ன இந்த வார்த்தைகளைக் கேட்டதும், வீரர்கள் ஆச்சரியப்பட்டு இந்த வீர பாலிகை கடைசிவரை தன் வார்த்தைப்படி நடக்க திட சித்தமுள்ளவளாக இருக்கமுடியுமா என்று எண்ணினார்கள்.

ஃ ஃ ஃ

ஐந்தாண்டுகள் கழிந்து விட்டன. எல்லாப் பிரதேசங்களிலும் சிந்தாவினுடைய கீர்த்தி பிரசித்தியடைந்திருந்தது. சத்துருக்கள் அடியோடு நாசம் செய்யப்பட்டார்கள். சிந்தா, வீர விஜய லக்ஷ்மியாக விளங்கினாள். அம்புகளுக்கும், குண்டுகளுக்கும் முன்னால் பயமற்று கம்பீரமாக நிற்கும் சிந்தாவைக் கண்டதும், அவளுடைய சிப்பாய்களுக்கு உற்சாகம் அதிகரிக்கும். அவள் எதிரில் அவர்கள் எப்படிப் பின்நோக்கி அடி எடுத்து வைக்க முடியும்? கோமளாங்கியான சிந்தா, எப்பொழுது முன் செல்கிறாளோ அப்பொழுது எந்த வீர புருஷன் பின் தங்குவான்? ரமணியின் ஒவ்வொரு சொல்லம்பும் வீரர்களை ஆத்ம தியாகத்திற்குத் தயாராக்கியது. அவளுடைய பார்வை, கோழைகளையும் புருஷத்துவத்தை அடையச் செய்தது. அவளுக்கு ஏற்பட்டிருந்த கீர்த்தி, அவளுடைய சௌந்தரியம், இவற்றிற்காக அவளை அநேக வீரர்கள் நறுமலர்களில் வண்டுகள் போல் சூழலானார்கள். ஒவ்வொருவரும், அவள் காணத் தங்கள் சௌரியங்களை வெளிப்படுத்தினார்கள். எல்லாம் வெளிவேஷம்! இதைச்சிந்தா நன்கறிந்தாள். இவர்கள் மத்தியில் உத்தம வீரன் ஒருவன் இருந்தான். இவன், யஜமான விசுவாச முள்ளவன். தேசத்தின் நலமே இவனுடைய குறியாக இருந்தது. அதற்காகத் தன் உயிரையும் கொடுக்கச் சித்தமாயிருந்தான். இவன் மனதிலும், சிந்தாவைப் பற்றிய எண்ணம் உண்டாகாமலிருக்க வில்லை. ஆனால் அதற்காக அவள் எதிரே வெற்று வேஷம்போட இவன் விரும்பவில்லை. இவனுடைய உண்மை உழைப்பையும் வீரத்தையும் அறிந்த சிந்தாவிற்கும் இவனிடம் அவளையறியாமல் ஒரு வித பிரேமை ஏற்பட்

டிருந்தது. ரத்னசிங் என்ற பெயருடைய இந்த ரஜபுத்ரன், சிந்தாவின் சிந்தையிலே ஒரு ஸ்தானம் பெற்று விட்டான்.

யுத்தகளம். நள்ளிரவு. எங்கும்ஒரே நிசப்தம். பாசறைகளில் யுத்தக் களைப்பினுல் தம்மை மறந்து சிப்பாய்கள் உறங்கிக் கொண்டிருக்கிருர்கள். சிந்தாவும் தன்னுடைய பாசறையில் களைத்திருக்கிருள். எதிரே அடர்த்தியான பெரிய காடு. காட்டை அடுத்து சத்துருக்களின் படைகள் கூடாரங்களடித்துத்தங்கி இருக்கின்றன. இந்தக் கூடாரம் ஒன்றிலிருந்து மூன்று ஆட்கள் சிந்தாவின் பாசறை நோக்கி வந்தனர்.

சிந்தாவின் சைன்னியத்தைச் சேர்ந்த பாராக்காரர்கள் முதல் சோர்வடைந்து தங்களையறியாமலே அங்கங்கே உறங்கிக் கிடக்கிருர்கள். ஆனுல் ஒரே ஒரு உருவம் சிந்தாவின் பாசறையின் பின்புறம் காவல் செய்து கொண்டு உட்கார்ந்திருந்தது. அது இன்று மாத்திரம் புதிதல்ல; தினந்தோறும் நடக்கும் விஷயமே. அது யார்? ரத்ன சிங்கைத் தவிர வேறு யாராயிருக்கக் கூடும்?

திடீரென்று காலடி சப்தம் கேட்டது. பார்த்தான் ரத்ன சிங் மூன்று காதகர்கள், கையில் வாளுடன் சிந்தாவின் பாசறைப் பக்கம் வருவதை. துள்ளி எழுந்தான். வாளைக் கையிலெடுத்துக் கொண்டு பகைவர்கள் மேல் பாய்ந்தான். ரத்ன சிங். ஒருவன்; பகைவரோ மூவர். ஆனுலும் அவர்களை வெட்டி வீழ்த்தினுன். தானும் படுகாய மடைந்து பிரக்ஞையற்று நிலத்தின் மீது சாய்ந்தான்.

விடியற் காலம். வழக்கம்போல் சிந்தா பாசறையைச்சுற்றி உலாவி வந்தாள். நான்கு மனிதர்கள் பாசறையின் பக்கத்தில் வீழ்ந்து கிடப்பதைப் பார்த்தாள். திடுக்கிட்டாள்; நெருங்கினுள்; மூவரின் முடிவு விளங்கியது. நான்காவதான ரத்ன சிங் ஒருவனுக்கு, சுவாசம் கொஞ்சம் மெதுவாக வந்து கொண்டிருந்தது. அவளுக்கு எல்லா விஷயங்களும் தெளிவாகி விட்டன. ரத்ன சிங்கினுடைய வீரத்தை மெச்சினுள். தன்னையே அவனுடைய வீரத்திற்கும் தியாகத்திற்கும் ஒப்படைத்து விட்டாள். ரத்ன சிங்கின் தலையை மடி மீது எடுத்து வைத்துக் கொண்டாள். தன் இருதய பூர்வமாக அவ்வீரனுக்கு அங்கேயே மானஸிகமாக ஜய மாலை யிட்டாள்.

ஃ ஃ ஃ

ஒரு மாத காலமாகி விட்டது. காயங்களடைந்ததன் காரணமாக ரத்ன சிங், கண் திறக்கவே யில்லை; சிந்தாவோ கண் மூடவேயில்லை. ஒரு க்ஷணங் கூட சிந்தா அவனை விட்டு நீங்கவில்லை. தன் காரியங்களையும் மறந்தாள். சத்துருக்களைப் பற்றியும் கவலை கொள்ள வில்லை. ரத்ன சிங்கினிடமே தன்னுடைய எல்லாச் சுக துக்கங்களையும் தியாகம் செய்து விட்டாள்.

ஒரு நாள், ரத்னசிங் திடீரென்று கண் திறந்தான்; பார்த்தான், தான் பாயின் மீது படுத்துக் கிடப்பதையும் சிந்தா அருகில் நின்று விசிறிக் கொண்டிருப்பதையும்.

'சிந்தா தேவி, விசிறியை என்னிடம் கொடுத்து விடுங்கள், உங்களுக்குக் கஷ்டமாக இருக்கும்'.

சிந்தாவினுடைய இருதயத்தில் இந்த வார்த்தைகள், ஸ்வர்க்கத்தினுடைய எல்லாச் சுகங்களையும் அளித்தன. ஒரு மாத முன்பாக, எந்தச் சரீரத்தின் தலைப் பக்கம் உட்கார்ந்து கொண்டு நிராசையுடன் அழுது கொண்டிருந்தாளோ, அது—அந்த ரத்ன சிங்-இன்று பேசுவதைக் கேட்

கவும் அவளுடைய சந்தோஷத்திற்கு அளவே இல்லை.

'பிராண நாதா! இது கஷ்ட மென்றால் சுக மென்பது என்ன?'

பிராண நாதா என்ற சம்போதனத்தைக் கேட்டதும் ரத்ன சிங்கினுடைய பார்வையில் ஒரு ஒளி வீசத் தொடங்கியது.

சிந்தா:—என் காரணமாகப் பெரிய கஷ்டங்களை அனுபவிக்க நேரிட்டது.

ரத்னசிங்:—தபஸில்லாமல் காரியம் சித்திப்பதில்லை.

சிந்தா:—இந்த லக்ஷியத்திற்காகவே தாங்கள் உதவி செய்ய வில்லை. தாங்கள் ஓர் அபலையைக் காப்பாற்றினீர்கள். அதே யிடத்தில் நானன்றி வேறு எந்த ஸ்திரீயாக இருந்தாலுங் கூட தங்கள் உயிரைக் கொடுத்தாகிலும் காப்பாற்றி இருப்பீர்கள். எனக்கு அந்த நம்பிக்கை உண்டு. நான் தங்களிடம் சத்தியமாகச் சொல்கிறேன். என் வாழ் நாள் பூராவும் பிருஹ்மசாரிணியாக இருக்கவே பிரதிக்ஞை செய்திருந்தேன். ஆனால் தங்களுடைய தியாகமானது, என் திட பிரதிக்ஞையை உடைத்தெறிந்து விட்டது. நான் வளர்ந்தது வீர புரஷர்களின் மடிகளின் மேல். என் இருதயம் அதேமாதிரியான ஒருவீர சிம்மத்தின் சரணங்களில் அர்ப்பணம் செய்யப் பட்டிருக்கிறது. கேவலம் விலாஸங்களிலோ, தேக வனப்பிலோ, பகட்டிலோ என் மனம் சிறிதும் ஈடு பட்டதில்லை.

ஃ ஃ ஃ

பூர்ணிமைச் சந்திரன், பால் போல் நிலவைக் கொட்டிக் கொண்டிருக்கிறான். இரண்டு பிரேமிகளின் இருதயங்களில் பலவித எண்ணங்கள் அலை மாதிரி மோதிக் கொண்டிருக்கின்றன. அவர்கள் அன்பில் மூழ்கி இனிமையாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். திடீரென்று, சத்துருக்களின் சைன்னியங்கள் தங்கள் கோட்டைக்குச் சமீபத்தில் முன்னேறி வந்து கொண்டிருக்கின்றன என்ற சங்கதி அவர்களுக்கு எட்டியது. சிந்தா திடுக்கிட்டாள். ரத்னசிங் எழுந்துநின்றான். உறையினின்றும் உடைவாளை எடுத்தான்.

சிந்தா:—பரிவாரங்களை அங்கே அனுப்பிவிடுங்கள்; தாங்கள் செல்வதற்கு என்ன அவசியம் இருக்கிறது?

ரத்னசிங்:—எனக்குப் பயமாக இருக்கிறது. இப்பொழுது சத்துருக்கள் அதிகமாக வருகிறார்களென்று நினைக்கிறேன்.

சிந்தா:—ஆனால் நான் கூட வரட்டுமா?'

ரத்னசிங்:—இல்லை. எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அவர்கள் என் முன்னால் நிற்கமுடியாது. எல்லோரையும் பறக்க அடிக்கிறேன்.

சிந்தா:—ஏனோ தெரியவில்லை என் மனம் திகிலடைகிறது? விடை கொடுக்கவோ மனம் வரவில்லை.

ரத்னசிங்: (சிந்தாவைச் சேர்த்து அணைத்துக்கொண்டே) நான் விடியற்காலை கட்டாயம் திரும்பிவிடுவேன்.

சிந்தா:—(ரத்னசிங்கினுடைய தோளின்மேல் சாய்ந்துகொண்டே கண்களில் நீர் பெருக) எனக்குப் பயமாக இருக்கிறது? தாங்கள் வெகுநாட்கள் கழித்து வருவீர்களோ என்னுடைய மனமானது எப்பொழுதும் தங்களுடன் கூடவே இருக்கும். போய்வாருங்கள். ஆனால் தினந் தவறாமல் சங்கதி சொல்லி அனுப்ப வேண்டும். வீர விஜயத்துடன் திரும்பி வாருங்கள்.

சிந்தாவின் இருதயம் மலினமடைந்து விட்டது. ஜெயத்தையே எப்பொழுதும் விரும்பியிருந்த இருதயமானது இப்பொழுது சோகத்தினால்

நிரம்பி விட்டது. குதிரை ஏறிச் சென்ற ரத்னசிங்கை கண் மறையும் வரை கற்சிலைபோல் பார்த்துக் கொண்டே நின்றாள் சிந்தா.

ஃ ஃ ஃ

ரத்னசிங்கின் கூடச் சென்றவர்கள் மொத்தம் நூறு சிப்பாய்களே. ஆனால் அவர்கள் தங்கள் உயிரைத் துரும் பாக மதிக்கக் கூடிய தீரர்கள். வீரர் களின் உற்சாக மளிக்கும் சங்கீதத் திற்குக் குதிரைகளின் காலடி ஓசை கள் தாளவரிசை கொடுத்தன. இப் படியாக இரவு கழிந்தது. சூரியன் தன் செவ்விய கிரணங்களை பூர்வ திசையில் பரப்பினான். ரத்தமயமான அந்தப் பிரகாசத்தில் சத்துருக்களின் சைன்னியங்கள் ஒரு மலையின் மேல் கூடாரமடித் திருப்பதைக் கண்டான் ரத்னசிங். இவன் தலை குனிந்தது; இருதயம் சிந்தாவின் வியோக வேதனையில் மூழ்கியது. இவன் உடல் முன்னே செல்கிறது; மனமோ பின்னிழுக்கிறது. இவன் வாழ்க்கையில் இதுவே முதல் தடவை யாக, தன் ஜீவனிடத்தில் அபிமானம் ஏற்பட்டது. யாரறிவார் சண்டையின் முடிவு என்ன ஆகுமென்று? எந்த ஸ்வர்க்க போகத்தை விடுத்து யுத்தத் திற்கு வந்தானோ அந்த—அவளு டைய—நினைவு வந்து வந்து இவனை வருத்தத் தொடங்கியது.

இந்நிலையில் ஒரு சேனாதிபதி வந்து 'ரத்னசிங்! அதோ பார். உயர்ந்த மலையின்மேல் சத்துருக்கள் கூடார மடித் திருக்கிறார்கள். இப்பொழுது உன் அபிப்பிராய மென்ன? அவர் கள் மீது உடனே யுத்தந் தொடுக்க வேண்டுமென்பது எங்கள் விருப்பம்.

'அப்படியானால் செய்யுங்கள்' என்றான் ரத்ன சிங். இவன் இப்படிச் சொல்கிறபோது இவன் உள்ளத்தில் பெரிய சோர்வு ஏற்பட்டிருந்தது. இதைப் போர் வீரர்கள் தெரிந்து கொள்ளவில்லை. ஒரு க்ஷணத்திற்குள் சேனை வீரர்கள் குதிரைகளின் மேல் ஏறிக்கொண்டு யுத்த கோஷத்துடன் சத்துருக்களின் மேல் பாய்ந்தார்கள்.

எல்லோருடைய கண்களும் திடீ ரென்று ரத்னசிங்கைத் தேட ஆரம் பித்தன. அவன் எங்கே?

ஃ ஃ ஃ

தலைவனில்லாக் காரணத்தினால்வீரர் களான புந்தேலியர்கள் சிதறுண்டு போய் சத்துருக்களின் கையில் அகப் பட்டு மடிந்தார்கள்.

ஃ ஃ ஃ

சிந்தா, ரத்னசிங்கின் வருகையை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறாள். சூரியாஸ்தமன சமயம். திடீ ரென்று பாகையில்லாத தலையும் செ ருப்பில்லாத காலுமாக ஒரு தூதன் சிந்தாவின்முன் தோன்றினான். சிந்தா வின் மனதில் இடியிடித்து விட்டது. ஒரு க்ஷணம் கற்சிலைபோல் உட்கார்ந் திருந்தாள். உடனே எழுந்தாள். மிருந்த திகிலடைந்துள்ள தூதனைப் பார்த்து 'இன்னும் யார் யார் பிழைத் திருக்கிறீர்கள்?' என்றாள்.

தூதன்: ஒருவருமில்லை.

சிந்தா: ஒருவருமில்லையா?

தூதன்: மராட்டியர்கள் சமீபித்து விட்டார்கள்.

சிந்தா: சமீபமாகவா?

தூதன்: ஆம். சமீபமாக.

சிந்தா: அப்படியானால், உடனே சிதைக்கு ஏற்பாடு செய்யுங்கள். சம யம் அதிகமில்லை.

தூதன்: எங்களால் முடிந்த மட்டும் கடைசி வரை யுத்தம் செய்வோம். உத்திரவு கொடுங்கள்.

சிந்தா: உங்கள் இஷ்டப்படி செய் யுங்கள். என்னுடைய வேலைகளின் முடிவு காலம் இதுவே.

ஃ ஃ ஃ

கோட்டை, சத்துருக்களால் சூழப்பட்டிருக்கிறது. சிந்தாவை ஸ்திரீ புருஷர்கள் சூழ்ந்திருக்கிறார்கள். எல்லோருடைய முகத்திலும் கவலைக் குறி. இதுவரை எந்த இடம் விவாக மண்டபமாக இருந்ததோ அதில் இன்று சிதை அடுக்கப் பட்டிருக்கிறது. தீ மூண்டு விட்டது. இதனைச் சூழ்ந்துள்ள பெண்மணிகள் அத்தனை பேருடைய ஸ்தூல சரீரமும் வெகு சீக்கிரத்தில் மறைந்து போகப் போகிறது. ஒவ்வொருவராகத் தீக்குழியில் இறங்கிக் கொண்டிருக்கிறார்கள். சிந்தாவும் இறங்கி விட்டாள்.

திடீரென்று ஒரு குதிரையின் மீது ஒரு ரஜபுத்ரன் வெகு வேகமாக வந்து தோன்றினான். ரத்ன சிங்!

சிதையில் தீ பிடித்து விட்டது. சிந்தாவின் புடவையிலிருந்தும் அக்கினி ஜ்வாலை கிளம்பி விட்டது. ரத்ன சிங், திடீரென்று சிதையிற் பாய்ந்தான். சிந்தாவின் கையைப் பிடித்து அதிலிருந்து அவளை மீட்க ஆரம்பித்தான். ஜனங்களும் சிதையின் கட்டைகளைக் கலைக்க ஆரம்பித்தார்கள். ஆனால் சிந்தாவோ தன் பதி—ரத்ன சிங்—இருந்த திக்கைக் கூட திரும்பிப் பார்க்கவில்லை. கைகளினால் அவனை அப்புறம் விலகிப் போகும் படி சைகை செய்தாள்.

ரத்ன சிங்:—(தலையிலடித்துக் கொண்டு,) 'ஐயோ பிரியே! உனக்கு என்ன நேரிட்டது? என் பக்கங் கூட திரும்பிப் பார்க்க மாட்டாயா? நான் உயிருடனிருக்கிறேனே.'

சிந்தா:—உன் பெயர் ரத்ன சிங்; ஆனால் நீ என்னுடைய ரத்ன சிங் அல்ல.

ரத்ன சிங்:—நீ என் பக்கம் திரும்பிப் பாரேன். நானே உன்னுடைய தாஸன்; உன்னுடைய பதி; உன்னுடைய உபாஸகன்.

சிந்தா:—என் பதி வீரகதி அடைந்தார்.

ரத்ன சிங்:—ஐயோ, எப்படி தெரிவிப்பேன்? சகோதரிகளே! எப்படியாவது தீயை அணையுங்கள்.

அக்கினி ஜ்வாலை சிந்தாவின் முகத்தைத் தடவிக் கொடுத்துக் கொண்டே எரிய ஆரம்பித்து விட்டது. நெருப்புக் குண்டத்திலிருந்து சிந்தாவின் குரல் கம்பீரமாகப் பின்வருமாறு ஒலித்தது:— 'நான் நன்றாய் அறிவேன். நீ என்னுடைய ரத்னசிங் அல்ல. என்னுடைய ரத்னசிங் உண்மையான வீரன். அவன், கேவலம் இந்த உடலைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத் தனது க்ஷத்திரிய தருமத்தைக் கைவிடக் கூடியவனல்ல. எந்த வீர புருஷனுக்கு என்னை அடிமையாக்கிக் கொண்டேனோ அவன் இப்பொழுது வீர ஸ்வர்க்கத்தில் இருக்கிறான். ரத்னசிங் என்ற அந்தப் புனிதமான பெயரைப் பாழாக்கி விடாதே.'

இதற்குமேல் சிந்தாவின் குரல் கேட்கவில்லை. அவள் தலைக்குமேல், தாமரை மொட்டுப்போல் அக்கினி குவிந்துகொண்டு எரிகிறது.

ரத்னசிங், அந்த ஜ்வாலையை உற்றுப்பார்த்துக் கொண்டே ஸ்தம்பிதமாகச் சிறிது நேரம் நின்றான். திடீரென்று, அந்த அக்கினியில் குதித்து விட்டான்.